முதற் பாகம்.

All Rights Reserved.

16 SEP 1922

12-31

உ

கடவுள் துணை.

# சகலகலா பூஷணம்.

## முதற்பாகம்.

இந்நூல்

காசிவாசி ஞானனந்த சொரூபசிஷ்ய

**வித்தியானந்த சுவாமிகளால்**

தொகுக்கப்பெற்று

சென்னை வேப்பேரி

குஹாஸ் மெடிகல் ஹாலின் தலைவரான

**ப. சுப்பிரமணிய முதலியாரவர்களால்**

தமது,

1 6 SEP 192

மூன்றும்பதிப்பு, காப்பி **1000.**

ஞானசம்பந்தா அச்சியந்திசாலையில் பதிப்பித்து

பிரசுரஞ் செய்யப்பட்டது.

1922.

இதன் விலை ரூபா **1.**

All Rights Reserved.

# விளம்பரம்.

இந்நூலை மஹாவித்வான் புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியாரவர்கள் மாணாக்கரும் சென்னை கிரிஸ்டியன் காலேஜ் தமிழ்த்தலைமைப் பண்டிதருமாகிய திரு. சின்னசாமி பிள்ளை யவர்களது மாணாக்கராகிய ம-ா-ா-ஸ்ரீ, ஆ. பு. தியாகராய முதலியாரவர்களிடம் நான 1914-ம் ஆண்டில் சகலகலா பூஷணம் என்னும் இந்நூலையும் இதன் காபிரைட் முதலிய சர்வ சுதந்தரங்களையும் கிரயத்திற்கு வாங்கியபடியால் இதை பிரசுரிக்க நேர்ந்தது. யாராவது எனது அனுமதியின்றி ஒருபாகத்தையேனும், பூரணமாக வேனும், மொழிபெயர்த்தேனும் அச்சிடுவோர்களாயின் சட்டப்படிக்கு குற்றவாளிகளாவார்க ளென்பதை அறிவிக்கிறேன்.

இப்படிக்கு,

**ப. சுப்பிரமணிய முதலியார்,**
**துஹாஸ் மெடிகல் ஹாலின் தலைவர்**
வெப்பேரி, மதராஸ்.

# சகலகலா பூஷணத்து...


கதை கெ.

சிறப்புப்பாயிரம்.

1 நூல் வரலாறு ... ...

2 இராஜவம்ச உற்பத்தி முறைமை ...

3 அரசன் நடக்கவேண்டிய முறைமை ...

4 பிராமண ரொழுக்கம் ... ...

5 க்ஷத்திரிய ரொழுக்கம் ... ... ... 17

6 வைசிய ரொழுக்கம் ... ... ... 18

7 சூத்திர தருமம் ... ... ... 18

8 ஆன்மலாபமாகிய நான்காச்ரமங்களின் ஒழுக்கம் ... 19

9 இல்லறத்தாசிரமம் ... ... ... 19

10 வானப்பிரஸ்தாசிரமம் ... ... ... 20

11 சந்நியாச ஆசிரமம் ... ... ... 20

12 அரசருடைய புண்ணியமகிமை யுரைத்தல் ... ... 21

13 அரசன் நடத்தும் நீதியுரைத்தல் ... ... 22

14 அரசன் சிற்றினஞ்சேர்தலால் வருந்துன்பமும் நன் மந்திரிகளைக் கூடின சுகமும் வருமாறு ... 25

15 துன்மந்திரிகளால் வந்த விபத்து ... ... 31

16 பெரியோரைத் துணைக்கொள்ளும் பயன் ... ... 37

17 கேள்வியற்றதனால் நேரிட்டவிபத்து ... ... 38

18 அபஜெயமடைந்த அரச பெரியவர்களால் மீண்டுகிடைத்தசரிதம் ... 40

19 விவேகமுள்ளவேடன் இராஜனுடை சரித்திரம் ... ...

20 விவேகமுள்ள தலையாயர் கட்டு ... ...

21 பகைத்தும் பதிவிரதா தருமத்தைக்காட்டிய புறாவின்கதை ... 46

22 கூடா நட்பு ... ... ... 54

23 அரசன் தன் துற்செய்கையால் மறுபிறப்பில் நரியாகப்பிறந்த சரித்திரம் ... ... ... 60

24 ஒழுக்கத்தினால் ஐயத்தை யடைந்த இந்திரன் சரித்திரம் ... 66

25 இராஜர்களின் செங்கோலியற்கையின் சட்டவிற்பத்தி ... 67

26 வணக்கமில்லாதவர்களுக்கு கேடுவருமாறு ...

27 முன்ஜாக்கிரதையுடை மும்மீன்கதை ...

28 சமுத்திரத்திற்கும் கங்காநதிக்கும் விஞவிடை ...

29 தருமசாஸ்திர வியல்புரைத்தல் ...

30 அநித்திய தேகிகளாகிய ஜீவர்கள் இல்லறத்திலிருந்து மு... யடைகின்ற விதம் ... ...

31 செல்வமுடையவர்களை வறுமையுடையவர்கள்...

ி.


பக்கம்.

...யும் உபாயம் ... ... 80

...டிவமென்ற, பஞ்சகோசமெய்யென்றும்
...ன் விபரம் ... ... 81

... ... ... ... 84

...மகிமை ... ... ... 90

...த்தின் திருமுகங்களின் மகத்துவம் ... 101

...லையாமையைப் பற்றி தேவேந்திரனுக்கும் மாபலிச்
...சக்கிரவர்த்திக்கும் லட்மிதேவி பேசிய சரித்திரம் ... 103

...0 கால அளவின் பிரமாண விபரம் ... ... 112

39 பூகோளசங்கிரகம் ... ... ... 118

40 விரைவிற் செய்யவேண்டிய பதி பசு புண்ணிய விபரம் ... 119

41 மெதுவில் செய்யத்தக்கவைகள் ... ... 120

42 தருமார்த்த காமமோக்ஷ மகிமையுரைத்தல் ... ... 123

43 தருமார்த்த காமமோக்ஷத்தைத் தழுவிய சரித்திரம் ... 124

44 உலகில் நன்மையான காரியத்தில் பிரவேசித்த பேர்களுக்கு
துன்பம் வந்து சப்பவிக்கும் காரணம் ... ... 129

45 பார்க்கவனுக்கு சுக்கிரனென்று பெயர்வந்ததற்குகாரணம் ... 131

46 சுகப்பிரம்மரிஷியின் சரித்திரம் ... ... 132

47 சுகருக்கு வியாசர் சொல்லுகின்ற ஜனகராஜன் கதை ... 138

48 ஜனகராஜன் சுகப்பிரம்மரிஷிக்குசெய்த ஞானோபதேசம் ... 141

49 ஞானிகள் உடலைவைத்திருக்கும் நிலை ... ... 143

50 நாரதர் சுகருக்குசெய்த ஞானோபதேசம் ... ... 147

51 நாரதர் பதரிகாச்சிரமத்தின் பெருமை யுரைத்தல் ... 152

...2 தருமங்களுக்கெல்லா மேலாகிய தருமமுறைத்தல் ... 154

...ரு ஜீவனுக்கு தற்செயலாய் நேரிடும் மரணவஸ்தையின் காரணம் 163

54 எ...ாதனேவென்ற கற்புடைய போகவதியின் சரித்திரம் ... 167

55 விசுவாமித்திரா பிம்மரிஷியான வரலாறு ... ... 176

56 க்ஷத்திரியன் பிராமணனான பிரகரணம் ... ... 176

57 தங்கள் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வது அவர்கள்
வல்லபமா அல்லது வினையின் வல்லபமா என்கிற பிரசினைக்கு
உத்தரம் ... ... ... 178

5... ...ருவருக்கு சுகமுள்ளபோது சிநேகமும் சுகம் நீங்கினபோது
...விரோதமும், உண்டாகிறதற்கு திருஷ்டாந்தம் ... 180

... பொருளென்ற நிச்சயங்கூறல் ... ... 183

...த்தின் மகிமை கூறல் ... ... 184

... பிரணவ மந்திரத்தை ஜபிக்கச் செய்ததனு
...யன் ... ... ... 185

...ணபகவானுடைய மாஹாத்மியம் ... ... 189

... என்ற பிரசினைக்கு உத்தரம் ... 191

உ

கடவுள்துணை.

# சகலகலாபூஷணம்.

## சிறப்புப்பாயிரம்.

ஆதியிலோர்காலஞ் சுவர்க்க மத்திய பாதலங்களி லமர்ந்த
பிராணிகள் வினை சம்பந்தத்தினா லளவுபடாத வேதங்களனைத்து
மாதி யந்தபதக் கிரமங்க டடுமாறிச் சிதறிய காரணத்தினாற் றேவர்
முனிவர்மருண்டு, திரிநேத்திரதாரியாகிய பரமசிவ னனுக்கிரகப்படி
மறைநன் முற்றோற்றியவாறே பரவிக்காட்ட விதியொழுக்கங்
1 களைச் சங்கையற வாராய்ந்தொழுங்குபெறக் கூறுவ தெவர்க்கு மரி
யன வாதலான், விண்ணவர் தவத்தவர் மானுடர் முதலாயினோ
ரறிவு விளங்காமல் வேதவாய்மைகளை யறியாது துஷ்கிருத்தியங்
களை யநுசரித்த சிலமோகன சாஸ்திரங்களை யுண்டுபண்ணிக்கொண்
டுலகின்கண் முக்கியமாக வழங்கி வருஞ் சத்கருமங்க ளனைத்துந்
தடுமாறிப் பாசபந்தவினைக் கேதுவாகிய மார்க்கத்தைக் கடைப்பிடி
யாக வெண்ணிச் சகலருமதனைத் தொடர்ந்தனுஷ்டித்து வருகிற
தைக் கருதியே, பிரமன் விஷ்ணு தேவர்கண்முதலிய ரிஷிகளும்
பரமசிவ கடாக்ஷமில்லாம லிந்த மாறுபாடு தவறுதென நிச்சயித்துப்
பிரமன் விஷ்ணு இந்திரன் முதலான தேவர்களுடன் திருக்கயிலை
யைச் சேர்ந்து, தம தாணையிற் செலுத்தியே வீற்றிருக்கு நந்தி
தேவரைச் சேவித்தெங்கள் வரவைப் பரமனுக்கறிவிக்க வேண்டு
மெனப்போற்ற வவர்கிருபையுற் றவர்களை யவ்விடத்தினிறுத்திக்
கர்த்தன் சந்நிதானத்திற் சென்று வணங்கித் தேவர்களின் வரவை
விண்ணப்பஞ்செய் தனுமதிபெற்றுவந்து, நீங்கள் சபைக்குவருக
வென்று பரமசிவங் கட்டளையிட்டாரென; அவ்வாக்கியதை கேட்
டானந்தப் பரவசராய்ச் சிவகணங்கள் காவல்கொண்டிருக்கும் பலவா
யில்களைக் கடந்து சிவபிரானைத் தரிசித்தவுடன் விழிகளினாநந்தவாரி
பெருகத் திருவடிகளிற் கற்பகமலரைச் சொரிந்து தீர்க்கதண்டன்
சமர்ப்பித்து, வேதாகம வாக்கியங்களினாற் போற்றிக் கரங்களைக்
கூப்பிநிற்க, அவர்தண்மீது கர்த்தன் கிருபாநோக்கம் பாலித்துக்கட்
டளை யிட்டவாறே, தத்தமக்குரிய விடங்களிலிருக்க பின்னருங்கள்

வருகின்றனவோவென்று வினவத்
...வரீர் திருவுளப்படிக் கடியோங்கள் உய்
...நடந்தேறிவருகின்றன வாயினும், பூமியின்க
...னர் முதலானோர் மோகன சாஸ்திரத்திற் கிடு
...ரப் பெரும்பாலும் பரனென வினையாது, சிலர்மாத்
...வயமெனக் கருதித் தொழுகின்றனர்; சிலர் மற்றத்தே
...ன் தேவரீரையும் சமமாகத் துணிவு கொண்டனர்; காலக்
கருமங்களைக் கடந்தவாதி மூர்த்தியு முண்டோவெனச் சில ரவமதிக்
கின்றனர்; கடவுள் வேறில்லை. நாங்கள்கற்ற சாஸ்திர வுணர்ச்சியே
சித்தியமெனச் செபிக்கின்றனர்; அநேகர் பாவ புண்ணியங்களை யின்
னதென் றறியாது, உண்ண லுடுத்தல் புணர்தல் துயிலல் களித்தலி
வைகளே மோக்ஷமெனவு மவைகளைத்தவிர வேறொறு முத்தியிருக்
கின்றதென்ப தஞ்ஞானமெனவு நினைக்கிறனர் இவ்வாறு பற்பல
விதங்களிற் சகலரு முறைதவறிய முயற்சிகொண்டு, பிறவிச்சாகரத்
தைக்கடக்கு முண்மையினையறியாதுழன்று வேதாகம வரம்பைக்
கடந்து பவநெறியை முக்கியமாகத் தொடர்ந்து, தீவினையிற் படர்ந்
தலைந்து மயங்குகின்றனர். இவைக ளனைத்துந் தேவரீர் திருவுளத்
தின் விளக்கமாயினு மடியோங்க ளறிந்தவற்றை விண்ணப்பஞ் செய்
தனம். இதனைத் திருவுளத்திற்கொண் டெங்களுக்காக விரக்கமுற்
றுச் சீவ ராசிகண் மயங்கு மயலை நீக்கித் தேவரீர் பாத கமலங்களைக்
கருதி முமூட்சுகளாய் மோக்ஷ வீட்டைச் சேரும்வண்ணங் கிருபை
...ய்தருள வேண்டுமென்றிரங்க, பரமசிவ மிவ்வாக்கியங்களைத்
திருவுளம்பற்றியே, சங்கு சக்கரபாணியாகிய மகாவிஷ்ணுவை
நோக்கி, நமது கலைகளி லொன்றைக்கொண்டு, பூமியின்கண் ணவத
ரித்து க்ஷீணப்பட்டுச் சிதறிக் கிடக்கும் வேதங்களைச் சேகரித்தே
நான்குவகைப் படுத்தித் தகுதியான விருடியருக்கவைகளைப் போ
தித்தவர்களா லுலகிலுள்ள வாத்ம கோடிகட்குச் சிற்றுணர்வை
மாற்றிப் புனிதராக்குவீர்; அவைகளை யோதப்பெறாத சூத்திராதிக
ளெளிதின் முத்திபெறத்தக்கதாக வேதங்களோடு விதிக்கப்பட்ட
வாகமங்களென்றும் நீதிமுறைகளென்றும் ஞானசாரங்களென்றுஞ்
சாஸ்திரங்களிருக்கின்றன; அவைகளி லனந்தவித முத்திமார்க்கமா
யும் வகுத்திருப்பதால், அவைகளை மார்க்கண்டேயர், துர்வாசமுனி
முதலிய ரிஷிகளாலு மினி யவதரிக்காநின்ற வாதராயணராகிய வேத
வியாசராலு நா மொவ்வோர் காலங்களிலு மாதேவிக்கு மனேக
லோகோபகாரமான விஷயங்க ளருளியிருக்கின்றனம்; அவைக
ளெல்லாம் வரன் முறையாக வுலகத்தில் போதிக்கப் போகிறார்க

ளென் றநுக்கிரகஞ்செய்ய வதற்கிசைந்து கேசவன், பிரமன், முதலானவர்களுடன் கர்த்தரைவணங்கி விடைபெற்று வைகுந்தத்துக் கெழுந்தருளிச் சகலருக்கும் செலவு கொடுத்தனுப்பிச் சிலகாலஞ் சென்றபின்பு, பூமியின்கண் பராசரரொருதினம் பிராதக்காலையிற் கங்கையைக்கடக்க வோடமேறினவரா யதைச்செலுத்தும் மச்சகந்தியினது சுந்தரத்தைக் கண்டோர் காரணத்தான் மோகித் தவளைச் சம்மதப்படுத்திச் சுகந்தகந்தியாக்கிப் புணர்ந்தபோ தக்காலத்தில் விஷ்ணுவானவர் பரமசிவத்தின் கட்டளையின்படி யவள் கருப்பத்தில் பிரவேசித்துத் தண்டகமண்டலத்துட னவதரித் தவர்களிடத்திற் செலவு பெற்றுக்கொண்டு, வதரிகாசிரமமென்னும் வனத்தில் வாசம்பண்ண யோக்கியமென் றெண்ணியவ்விடத் தமர்ந்த வக் காரணத்தினால் வாதராயணரென்னுந் திருநாமம் பெற்றுப் பரமசிவ கடாக்ஷத்தினால் வேதாகமங்களை யொருவரிடத் தோதாதுணர்ந்து, வேதத்தை நான்குவகைப் படுத்தினமையால் ஸ்ரீவேதவியாசரென்னுந் திருநாமமும் பூண்டு ஜநற்குமாரரிடத்திற் பதினெண்புராணங்களையும் வேதசாரங்களையும், மகத்துக்களுக்குப் போதனையாகத் தக்கதாக வேதாந்தங்களையுஞ் சூத்திரங்களாக்கிய பின்னர், பயிலவர், வைசம்பாயனர், ஜைமுனி, சுமந்தர், இந்நால்வருக்கும், வேத நான்கையு மறிவித் தவற்றிற் குரியவர்களுக்கு வரன்முறையாகப் போதிக்கக்கட்டளையிடவவர்க ளவ்வாறேபரிபகுவர்களுக் குணர்த்தினர். அதன்மேல் வேதாகம புராணங்களுலகின்கண் பரவின; அப்பொருளெலாம் வெளிப்பட்டிருந்தும், பெரும்பான்மையாய்த் தோற்றாமலிருப்பதாலும், தாயாரது கருப்பத்தின் முளைத்துப் பிரபஞ்ச வாழ்க்கையிற் றிளைத்துச் சமூகவிசாரணையினாற் களைத்துச் சஞ்சலத்திலிளைத்து, நாளும் வருந்தி, நானெனதென வினைவிளைத்து, நால்வரு நகைக்கக் களைத்து, நடுக்குந்தலையுடன் கூனும்வளைத்து, நரை மயிர் கிளைத்து, முகமுந் திரைத்து, நாடியு நரம்பு மோடித் தளர்ந்து, காற்றமொழிக் கண் பஞ்சடைந்து, காதுகேளாமற் கைக் கொட்டலுடன் முக்காலினராகி விக்கலு மிருமலு மென்மேலிட் டொக்கலுஞ் சுற்றமு முரியவரெவரும் பக்கமே நின்று பரதவித் திரங்க வோங்கிடுவாயு மொடுங்கி யுள்வாங்கி நீங்கும்போது நினைவுடனிருந்து, கண்ணுறும் பொருளின் கமலப்பதத்தை நண்ணும்படியே நமனையும் வெல்ல வல்லமையுள்ள நல்லனவிதனை, யாசிரியற் கரசி வாசியாஸன வவ்வித்தியாநந்த தேசிக னிதனை யுசிதமாயருளிய விசிதவிந்நூலை, வசியமாய் விளங்க வாண்டதோரெவரும் ஆண்டவனுடைய மகிமைவந் தெய்த உலக போகங்க ளுய்யும் வகையை விசையற நின்றவசனரூபியாகி, வெளியிடுவிதியின் முறைபதிந்திங்ஙனம், வித்தியாநந்த சுவாமிதன்மைந்த னெந்தைக்கடிமைத் தியாகராஜனனே.

## விநாயகர் துதி.

### வெண்பா.

தகவுதரும் வேதத் தனிப்பொருளைக் காட்டுஞ்
சகலகலா பூஷணத்தைச் சாற்றக்-கிகலறுக்கு
மொற்றைமருப் பைங்கரனு னொண்மலர்பூண் சேவடிகள்
பற்றுவாம் நாளும் பணிந்து.

## சுப்பிரமணியர் துதி.

மூவிரு முகங்கள்போற்றி முகம்பொழி கருணைபோற்றி
இயாவரும் துதிக்கநின்ற விராறுதோள்போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும்போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

## பரமசிவ வணக்கம்.

கங்கையைச் சடையிற்றாங்கிக் கபாலமு மழுவுமேந்தித்
திங்களங் கண்ணி சூடித் திருவிளை யாடல்செய்த
நங்கயற் கண்ணிபாக னல்லடி வணங்கிப்போற்றி
யங்கலா பூஷணத்தை யறைகுவா முலகத்தன்றே.

## சிவசத்தியின் துதி.

செறிதரு முயிற்றொரு திகழ்ந்து மன்னிய
மறுவறு மானிட மாபின் மேவியே
யறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
விறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.

## கண்ணன் துதி.

### விருத்தம்.

மாமேகனஞ்செய் முலைமானார்நிதம்பவலை தேறாதழுந்துமிடையும்
மாமோகமைந்தர்பொருள் வாழ்வாலயர்ந்து தடமாறுமயங்குமிடை
தாமோதரன்கமல மாதாள்பவன்கருதி தேறாதவன்றனதுதாள் [யும்
நாமோதவுந்தொழுதுளேகாணவும் பெறுகினுமேயனந்த விழியோர்.

## இலக்குமி துதி.

### விருத்தம்.

சங்கு சக்ராயுதத்தைத் தாங்கிய மாயோன்மார்பிற்
றங்கியே யுலகத்தோர்க்குத் தாழ்விலா வாழ்க்கைநல்கும்
பங்கஜ வ்தனமொத்த பகர்செல்வி பாதமேத்தி
யிங்கித கலாபூஷண மியற்றுவா மன்பின்மிக்கால்.

## சரஸ்வதி துதி.

### கலித்துறை.

உள்ளக்கமலத் தொருவாறுறைந் தருளோ வெடுக்கு
மள்ளற் பெருங்கடன் மேலுயரந்தன லருங்கதிர்போ
லெள்ளற்கருங்கலா பூஷண நன்னூ லியம்புதற்கு
வெள்ளைக்கமலத்து வீற்றருள்கின்ற விளங்கழலே.

## வியாசமுனிவர் வணக்கம்.

துக்கசாகரத்துக் கொருதோணியாய்ப்
பக்குவச்சுகனைப் பெறுபாக்கியத்
தக்கவான்மத வாபரனாகிய
மிக்கவேதவியாசனைப் போற்றுவாம்.

## குரு வணக்கம்.

அமலவாரணமடங்கலு மறியொணுமுதலாய்த்
தம்மகன்றபேரொளி திகழ்தருசுகதிநிலையாய்
முமலமாயையற் றேங்கு மூதறிவதா யிலகு
நிமலவித்தியாநந்தனை நிதம்பணிந்திடுவாம்.

## வேறு.

நித்தசுத்தஞானமா யுசிதமாயோங்குமேலா
மத்தியான்மீகவாழ்வை அங்கையிற்கனிபோனுயேற்
குத்தியாலனுபவத்தாலுதவு மெய்த்தேசிக னன்
வித்தியானந்த மைந்தனிணை யடிபோற்று வோமே.

## குரு துதி.

முத்தியாகி முழுப்பொருளாவது
சத்தியாகிச் சகலமுமாவது
சித்தமேவிச் சிவோகமதாவது
அத்தனே வேகாம்பர சரணமே.

## நூற்பெயர்.

### வேறு.

பொய்ப்புவி யதனிளுளும் பொருக்கெனத்தோன்றி மாடி
மெய்ப்பிலாவுயிர்கட் கெல்லா மெளிதினின் ஞானமெய்த
வப்பணிசடையோன் முன்ன ரறைந்தவாக மத்திற்சொல்லு
முப்பொருள் விளக்கஞ்சொல்ல முக்கணன ருளைக்கொண்டே.

### அவையடக்கம்.

முத்தமிழ்த்துறை யின்முறைபோகிய
உத்தமக்கவிகட் கொன்றுணர்த்துவன்
பித்தர்சொன்னவும் பேதையர்சொன்னவும்
பத்தர்சொன்னவும் பன்னப்பெறுபவோ.

ஐவித விலக்கணங்களை யுணர்ந்து நவரச வலங்காரமாய்ச் செய்யுள் புனைய வல்லவருக்குமுன், இந்த சகலகலாபூஷணந்தனை அடியேன் கூறத்தொடங்கிய தெத்தன்மைத் தெனின், அரிவருக்க மெழுதி அறிவதன்முன், சிறந்த திருமுறையை வரையக் கருதியதையும், வண்டுகளைப்போ லற்ப மசகமானது ரீங்காரம் பண்ணுவதையும், சூரியப்பிரகாசத்தை மழுங்கச்செய்து வான்மீனனது புவியைவிளக்க நினைத்ததையு மொக்கும்.

இது பெருமையான வேத முதலிய அறுபத்து நான்கு கலைகளையும் விரிக்காநின்ற ஸ்ரீ சிவபெருமானாலும் தேவர்களாலும் முநீஸ்வரர்களாலுந் திருவாய்மலர்ந்தருளிய புண்ணிய பரிபக்க வேதுவான விந்நூல் மெல்லிய சொல்லாயினும் வெற்றுரையாயினும் வியர்த்தமாகிய புன்சொல்லாயினும் பரமசிவத்தின் திருவருளைப் பெறுகின்ற மேன்மையோர், எல்லாச்செயலும் சிவன்செயலென்றுணர்கின்றமையால், இதுவுஞ் சிவன்செயலென் றேற்றுக் கொள்வர்க ளன்றிக் கட்சிசெய்யார்களென வடியனு மிங்கு வெளியிடத் துணிந்தமையறிமின்.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

# சகலகலா பூஷணம்.

## நூல் வரலாறு.

தருமபுத்திர மஹாராஜன் பட்டாபிஷேகம் செய்துக் கொண்டு, பூபாலகரை விசுவாசித்து நீதி செலுத்தி வருநாளில் ஒரு நாள் பார்த்தசாரதியாகியும் பக்த பராதீனராகியும், ஸ்ரீகிருஷ்ண சுவாமி யுடனே, சரசயனத்தி லிருக்கும் வீஷ்மரிடத்திற்குப் போய் வருவோமென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் தருமராஜனும் கலந்துபேசிக்கொண்டு, மந்திரி பிரதானிகளுடன் தேர்மீ தேறிப்போய் இறங்கி அங்குள்ள தேவரிஷிகளும் பிரம்மரிஷிகளும் மற்றவர்களும் சூழ்ந்துகொண்டிருக்க, திவ்வியகுணமங்கள ரூபமாய்ப் பிரம்மதேஜசு விளங்கத் தேகாபிமானமற்று யோகநித்திரையுற்று வீற்றிருக்கின்ற வீஷ்மாசாரியரைக் கண்டு தரிசித்து, இருகரங்களையுஞ் சிரமேற்கொண்டு தீர்க்கதண்டன் சமர்ப்பித்து வணங்கியபோது, சமீபத்திலிருக்கும் பரிச்சாரகர்கள் கையைக்கொட்டி வணங்கி எங்களாண்டவனே! இதோ தருமபுத்திர மகாராஜன் துவாரகாபுரி வாசனுடன் வந்திருக்கிறாரென்றார்கள்; அந்தச் சொல்லைக் கேட்டவுடனே அவர் கருணைக்கண் விழித்துப்பார்த்து, மேலான சந்தோஷத்துடன் மகிழ்ந்து, அப்பா தருமநந்தனு? இந்த முகுந்தனையும் இவ்வுலகத்தையும் பட்டாபிஷேகத்தையுங் கைப்பற்றிக்கொண்டு உம்முடைய எண்ணங்களை யெல்லாம் நிறைவேற்றிக் கொண்டீரா? அது மிகவும் நல்லகாரியம், நீங்களிருவரும் அருகில்வந்து இவ்விடத்திலமைந்திருக்கின்ற ஆசனத்தி லிருங்களென்றார். அப்படியே அங்குள்ள ஆசனத்திலிருந்து அங்கு நெருங்கி இருக்கின்ற தவமுனிவர்களை நோக்கி நமஸ்காரஞ் செய்தார்கள். அம்முனிவர்கள் முகமலர்ந்து இவர்களை ஆசீர்வதித்தார்கள். தருமபுத்திரர் எங்களுக்குதவியாகி இந்தக் கிருஷ்ணபகவானும் பிரியாவிடையாய் எங்களுடன் வந்தது அருமையின் மிக்க அருமையென்று உபசாரஞ் சொல்லிக் கூட்டமாக நிற்குஞ் சமயத்தில், துளபமாலையைத் தரித்தருளிய

ஸ்ரீகண்ணபிரான் வீஷ்மாசாரியரை நோக்கி ஆசைகொண்டு சில வார்த்தை சொல்லுகின்றனர்.

ஐயா; சந்திரகுலத்தி லவதரித்த தருமபுத்திரர், நீருரைத்த நன்னீதிவசனத்தைத் தலைமேற் கொண்டு கடல்சூழ்ந்த காசினி முழுமையும் தோள்மேற்கொண்டு, பட்டாபிஷேகமுந் தரித்துத் தாயை நாடிய சேயைப்போலும், பசுவைத் தேடிய கன்றைப்போலும், ஆசைகொண்டு இங்குவந்து தேவரீருடைய திவ்வியதிருவாக்கினால் பற்பல தருமங்களை விற்பனமாகக் கேட்கவேண்டு மென்னும் விருப்பங்கொண்டு, உலகத்தாரும் அவ்விஷயங்களைக் கேட்டு கொண்டாடுங் கீர்த்தியையும் அடைய அதிக ஆவலுடன் பந்து ஜனங்கள் சூழப்பட்டு வந்திருக்கின்றார்கள். பிரம்மாவினு முயர்ந்த மஹாரிஷிகளும் தத்வக்கியானமுள்ள முனிவர்களும் இன்னமுள்ள பெரியோர்களும் உம்மைச்சூழ்ந்து காத்திருக்கின்றார்கள். ஆதலால் வேதப்பொருளினுறைந்து மறைந்திருக்கும் மகத்துவங்களும் தருமமுதலிய நீதிகளெல்லாவற்றையும் இவர்கட்குக் குறைவில்லாமல் நிறைவாக உமது திருவாக்கினால் தேன்பொழிவது போல் மொழிந் தருளுஞ் அருட்செல்வனே, உமக்கு இனிவேறு உபசாரஞ் சொல்லவேண்டிய தொன்றுமில்லை யென்று ஸ்ரீகிருஷ்ணபகவான் மகிழ்ச்சியுடன் புகல, அம்மொழிகேட்டு, வீஷ்மர் நகைத்து மேகவண்ணனாகிய அண்ணலே! ஆதிமத்தியாந்த ரகிதமான வள்ளலே! நீர் அறியாத மகத்துவங்களும் நீதியுந் தருமமும் நீணிலத்திலுண்டோ? சரசயனத்தின் மீதிருக்கின்ற எனக்கு மிகுந்த தள்ளாண்மையும் ஆயாசமும் களையும் அதிகரித்திருக்கின்றது. மேலும் என்னுவினிடத்துப் பசையும் ஈரமுமில்லாமல் உலர்ந்திருக்கின்றது. ஆகையால் தேவரீரே திருவாய்மலர்ந்தருளல் வேண்டுமென்று சொல்ல, திருமாலானவர் ஐயா வீஷ்மாசாரியரே! உம்முடையவாக்கினாற் கேட்கவேண்டுமென்று மகிழ்ச்சியுற்று வந்தவர்களுக்கு இன்னொருவர் சொன்னால் அதனால் அவர்கள் இன்பமடைவார்களோ? அது அவர்கட்குத் திருப்தியாயிராது; அவர்களாசைகொண்டு வந்த ஆவலடங்காது. ஆனது பற்றி உமதுதேகமானது யோகத்தால் மேன்மைப்பட்டிருப்பதால், நீர்பால்யத்தில் எத்தன்மையாயிருந்தீரோ அத்தன்மையான மனோதிடமுடன் மாசற்றிருந்து போர்முகத்திற் பட்டபுண்ணெல்லா மாறி உடல் வருத்த முதலிய ஆயாசமுந் தீர்ந்து, திடகாத்திர

தேகதைரியம் பெறும்படிக்கு அநுக்கிரகம் பண்ணினோம். நீர் இது முதலாகத் திடங்கொண்டு உச்சாகத்துடன் அருமையான தருமங்களை யெல்லாம் ஆராய்ந்த வண்ணஞ் சொல்லுமென்று, பணமகுடப் பாம்பணையும் பாற்கடலுட்டங்கிய பரந்தாமன் அருள் செய்யவே, வீஷ்டுமாசாரியருக்கு மனோ வாக்குக் காய மூன்றும் வலுவேறி வருத்தந் தீர்ந்து மனங் குளிர்ந்து, வாசுதேவனை ஆச்சிமாருடன் குலாவிய நேயனைத் தோத்திரஞ்செய்து, செந்தாமரைக் கரத்தைக் கூப்பி வணங்கி, இருதய கமலத்திலிருத்தி உள்ளன்பு கூடிய ஒளிக்கண்ணாற்கண்டு முக மலர்ந்து அக மகிழ்ந்து மொழிபுகன்று துதிக்கின்றனர்:—

இன்னமும் உயர்ந்தோரி லுயர்ந்தோராலும் எட்டப்படாத கனியே! பொன்னாசை பெண்ணாசை பூவாசை வெறுத்த பெரியோர்களுக்கு உறவே, பெருமையாகிய தரும சாஸ்திரத்தில் ஒட்டாதவனாகியும், ஒட்டினவனாகியும், ஆத்மகோடிகள்தோறும் கிட்டினவனாகியும், கிட்டாதவனாயும், ஓரிடத்துந் தட்டாதவனாகியும், தன்னைத்தானறிந்த தலைவருக்குத் தானறியுந் தலைவனாகியும், ஆணவப் பேய்கொண் டலைவார்க்குக் காணக்கிடையாக் கரும்பொருளாகியும், உள்ள கண்ணனே! நிர்மல நிரந்தர வஸ்துவாகிய தேவரீர் மகத்துவத்தை அடியேன் மதிக்குந்தரமோ! துதிக்குமதியோ! மிகவும் மயிர்க்குச் செழாகின்றேன் தேவரீர் திருவடி யநுக்கிரகஞ் செய்து தமது திருநாமத்தையும், திவ்ய திருவுருவத்தையும், எல்லா வஸ்துவுமா யிருக்கிற இன்பத்தையும், நான் எடுத்துப்பேசி ஏற்றிவணங்கி இறைஞ்சும்படிக்கு அநுக்கிரகஞ் செய்யவேண்டும் ஈசனே! தேவரீர் முத்தலைச் சூலமும் தண்டு கமண்டலமும் சங்கு சக்கரமும் அன்னவாகனமும் கருடவாகனமும் ரிஷபவாகனமும் கயிலைமலையும் கமலமலரும் கடலிற்றுயின்ற யோகநித்திரை செய்யும் புண்ணியனே! எல்லாப் பொருட்களின் சம்பந்தமுமாய் ஐம்பூதமுமாய் ஐம்புலனுமாய் அவ்வைம்புலன்களினால் மயங்குகின்ற மயக்கமுமாய் அம்மயக்கங்களை மாற்றுகின்ற பேரறிவுமாய் இருளுமாய் ஒளியுமாய் உயிருமாய் இகமாய்ப் பரமாய் அருளுமாய் அன்புமாய்த் தலைவனுமா யிருக்கும் ஆதிமூலப்பொருளும் தேவரீரானால், உம்மை யாவரறியப் போகின்றார்கள், ஐயனே! ஆதிமூலமுமாய் நான்மறையாய் முக்குணமுமாய் ஐந்தெழுத்தாய் எட்டெழுத்தாய் எல்லா வற்றிலும் பாலில்நெய்போல் விளங்கிப் பிரதிபலித்துக் கொண்டிருப்பது என்னவிளையாட்டோ? நரகரி முரகரியென்னும்

திருநாரணனே என்று, வீஷ்மாசாரியார் அனேகவிதமாகத் தோத்திரஞ்செய்து தொழுது வாழ்த்தியபோது, தன்னந்தனியே தனக்குத்தானே யொப்பான பெருமானாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் சற்றே நகைத்தருளித் திருக்கண்மலர்ந்து கருணைகூர்ந்து, உவமானஞ் சொல்லுவதற்கு ஒப் பொருவருமில்லாத உண்மையான வீஷ்மாசாரியரே! உமது உடலைவிட்டு உயிர்போங்காலத்தில் பேசுதற்கரிய எட்டாம் வசுவின்பதங்கிடைக்கும். குறைவில்லையென்று அருள் புரிந்தருளினார். இவ்வண்ணமாகத் துளபமாலை யணிவோன் திருவாய் மலர்ந்தருளிய திவ்யமொழியானது வீஷ்மாது செவியிற் புகுந்து நிறைந்து புளகாங்கித முண்டாக்க, அதனால் அழகிய அரவிந்தம்போன்ற அரியினுடைய திருவடிகளைத் துதித்து, பக்தவத்சல பரந்தாமனது அருள்மொழியைக்கொண்டு, தனது பக்கத்திலிராநின்ற ஸ்ரீ வேதவியாசர் நாரதமஹாமுநி முதலான முநிவர்கள் இன்னமுள்ள மகாரிஷிகளின் அருள்வாக்கியமும் பெற்றுக்கொண்டு, தமது குலத்திற் சுமதியெனப் பிறந்த தருமராஜனாகிய பேரனுக்கும், மற்றவர்களும் சகல தரும சூக்ஷங்களையுந் தடையறவாலோசித்துச் சொல்லத்தொடங்கினார்.

கேளும் இராஜராஜர்களுக்குப் பெரியவனாகிய தருமராஜனே உட்காரும் இவ்விடத்தில் நிறைந்திருக்கின்ற முநீஸ்வரர்களின் கிருபையினாலும், நீருண்ட மேகவண்ணனாகிய கண்ணன் எனக்கெதிரிலிருந்து காட்சி தருகின்ற மாட்சிமையினாலும், புண்ணிய ஆட்சியாகிய சாஸ்திர புராண தருமங்க ளெல்லாவற்றையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல், ஐயந்திரிபு அறியாமை முறியச் சொல்லுகின்றேம். நீ உன் மனத்தில் தெரிந்துகொள்ளக் கூடாத சந்தேகமுள்ளவைகளனைத்துஞ் சிறப்புடன் யோசித்துக் கேட்டுக் கொள்ளும். கருணைக்கு வித்தாகும் ஓர் முதல்வனாகிய வீஷ்மர் சொல்ல, தருமராஜன் மகிழ்ச்சியடைந்து, கலைகற்ற நிலைபெற்ற தலைவரைத்தொழுது முகுந்த கோவிந்த வைகுந்தபதத்தைக் கருத்திலிருத்தி, இருகரத்தையுஞ் சிரத்திற்பொருத்திப் பொற்பிரகாசம் பொருந்திய வீஷ்மரைப் பணிந்து, அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்று, அவருக் கருகாசனத்திலிருந்து, தனது பரிசுத்தமான மனத்தில் அடைபட்டிருந்த சந்தேகங்களை யெடுத்துக் கேட்கத் தொடங்கினார்.

## 2. இராஜவம்ச முறைமை விளக்கல்.

ஐயா! பெரியோர்களால் புகழ்ந்து பேசப்பட்ட பூலோகத்தில் அனேகங்கோடி புத்திமான்களும் பலவான்களு மிருக்க, ஒருவன் மாத்திரம் இராஜாவாகிப் பூமியிலுள்ள பேர்கள் யாவரும் வணங்கவுந் தண்டனை கண்டனை அபராதம் விதிவிலக்கு வருணாச்சிரமதருமம் வெற்றிமாலை வீரகண்டாமணி இவைகள் முதலிய வெல்லாங் கிடைத்துச் செங்கோல் செலுத்தவேண்டி வந்த திறமென்ன? ஆதியில் இந்த இராஜவம்சம் எப்படி யுண்டாயிற்று? இந்தச் சந்தேகம் என் சிந்தையைவிட்டு நீங்காமல் நெடுநாளா யிருக்கின்றது. இதற்குக் காரணம் அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று வினவ, வீஷ்டுமாசாரியர் புன்னகை கொண்டு பெருமையாக மதித்து வாசனை பெற்ற மலர்களிலிருக்குந் தேனை வண்டினங்கள் கண்டு களித்துண்பதுபோல், மகிழ்ந்து சொல்லத் தொடங்கினார்.

ஓ முரசகேதனா! மனோ திடகாந்தி கிருபை சத்தியம் பொருமை இவைகளினால் நிலைபெற்றிராநின்ற ஒருவன், யாவனோ அவன் உலகிற்கு அரசனாவன். அவ்வாறமைந்த அரசன் ஐம்புலன்களையும் சேட்டை செய்யவொட்டாம லடக்கி, மிஞ்சி சேட்டை செய்தால் காவலில் மடக்கிக் குற்றமில்லாதவனாயும் பூலோக தேவர்களாகிய பிரம்மரிஷிகளாலும், மேலுலக தேவர்களுக்கும், யாகாதிமுதலிய பாகாதி பணிவிடைகளிலிருந்து பரிந்து அவர்களைப்பணிந்து அன்பு பாராட்டி விசுவாசித்துவரும் நன்னெறியின் வல்லமையினால் தேச முழுவதும் பூசித்து நேசித்துத் துதித்துக் கொண்டாடும்படியானவன் உலகத்தை ஆளுவான். இத்தன்மைய நடுநிலைமை வாய்ந்த மன்னவன், மும்மூர்த்திகளாகிய சிவபெருமான், விஷ்ணு, பிரமா, தேவர்கள் முதலினோரைப் பார்க்கினும், பிரம்மரிஷிகளே மேதக்க, பிராம்மணரினு மதிகமென்று, உண்மை மதித்து, உள்ளத்திற் துதித்து ஊழியம் புரிந்து அன்பு பாராட்டி வருவானாகில், அவ்வரசன் ஒரு பிழையு மில்லாதவனாய்த் தீர்க்காயுளும் தரும விருத்தியும் பெறுவான். அவனாளுகைக் குள்ளாகிய உயிர்களுக்குத் துர்சோபம் துர்ப்பயங்கரம் துர்மரணம் துர்வியாதிமுதலிய துயரஞ் சேராது. பயிர்களுக்குச் சப்த மேகங்களுமுழங்கி மழை பொழியச்செய்யும் யாகாதி தருமங்கள் மேன்மேலாக நடக்கும். பிரம்ம தேஜசு உண்டாம். பலம் பிரபலமாகும். தைரியமேப்பலத்து சத்துரு ஜய முண்

டாம். நெறியே முறையாம். தானமே தனமாயோங்கும். குல கோத்திரங்களின் குற்றமெல்லா நீங்கும் மேற்கூறிய ஐம்புலன்களும் சொன்ன வண்ணம் ஒருவழிப்பட்டிருக்குமாகில், இகழ்ச்சியில்லாத புகழ்ச்சியையுடைய இராஜ ராஜாக்களின் சம்பத்து வல்லமை முடைய வெல்லாம் இவ்வுலகிற் றெய்வமாய் இருக்குவேத முணர்ந்த வேதியர்களின் ஆசிர்வசன பிரதாபத்காற் கைகூடி வந்ததென்றும், கதியோடி வாத்தக்கதென்றும், உன்கருத்தி விருத்துவாய். கருணைப்பிரவாகமுள்ள தருமராஜனே ? என்றுரைக்கத் தருமரும் ரிஷிகளும் ஐயா ? இத்தன்மையான மங்களாகர மகத்துவம் பெற்ற மறையவர்கள் இராஜ தண்டனைக் குட்படுவானேன்? என்று வினவிய இவர்களைப் பார்த்து, அப்பா ! ஒப்பில்லாத ஆயுதமுதலிய தநுர்பாணங்களைக் கைக்கொண்டு, யுத்தமுனையிற் பிரவேசித்தால் வெற்றிபெறுகிற வீரத்திலும், உயிர்க்கொலை முதலாகிய பொல்லாத மகா பாதகங்களைச் செய்தகாலத்திலும், பிராமணகிர்த்திய காமத்தை நித்தியாநுஷ்டான தருமத்தை விட்டுவிட்டபோதிலும், இராஜன் பிராமணர்களைத் தண்டிக்கலாம. அதனால் அரசனுக்கு இன்பமேயல்லது, ஒரு துன்பமுமில்லை. ஆகையால், பிராமணர்களின் ஆசிர்வசன மகத்துவம் இத்தனமையுடையது. இன்னமும் இராஜ தர்மங்களைச் சொல்லுகிறேன். கேளுங்களென்று மனமுருகச் சொல்ல தொடங்கினர்.

ஓ சத்தியத்தை தழுவும் சாந்தத்தன்மை யுடையவர்களே! மண் பொதுத் தந்தையாகிய பிரமதேவன் பிறந்தபோதே ஆஞ்ஞைப்படி இவ்வுலகத்தைப் பாங்காகப்படைத்து ஆத்மகோடிகளை யுண்டாக்கி தேவர்களையும் அளித்தான். அப்படியாகப் பிறந்த தேவர்கள் மூவுலகத்திலும் போய்ச் சஞ்சரித்து பாபம் இப்பேர்ப்பட்டதென்றும், புண்ணியம் இத்தன்மையுடையதென்றும், நிதானித்து அவைகளைப் பகுத்தறிந்து நடத்துவதற்கு வழி தெரியாமல் விசாரப்பட்டு, பிரமதேவரிடத்தில் வந்து நமஸ்காரம் பண்ணி, சுவாமி பாபபுண்ணியம் இப்பேர்ப்பட்டதென்று எங்களுக்குத் தெரியவில்லை ! அதைத் தெரியச் செய்ய வேண்டுமென்று வருந்திக் கேட்கவும், அப்போது பிரம தேவர் லக்ஷம் அத்தியாயமாய்த் தரும சாஸ்திரம் பண்ணிப் பிரம தருமமென்று பெயரிட்டு, தேவதைகளிடத்திற் கொடுத்தார். அந்தத் தருமசாஸ்திரத்தின் அருத்தமும் தர்ம சூக்ஷமமும் தெரியாமல் மயங்கிக்கொண்டிருக்குஞ் சமயத்தில், பிரமாவினுடைய நெற்றியிலிருந்து பதினொரு உருத்திரர்பிறந்தார்கள். அவர்கள் பதினொரு

பேரும் இந்தத் தருமசாஸ்திரத்தைப் பார்த்துச் சுருக்கி உலோ
கோபகாரமாய்ப் பதினாயிரம் அத்தியாயமாக உருத்திர தருமமே
னப் பெயர் கொடுத்துப் பிரபலப்படுத்தினார்கள். அதனாலும் தேவ
தைகளறிந்து கொள்ளமாட்டாமல் அலையும்போது, தேவராஜனா
கிய தேவேந்திரன் ஆசையுடன் அந்தப் பதினாயிரம் அத்தியாயத்
தைச் சுருக்கிச் சகலருக்கும் வெளிப்படையாய்த் தெரியும்படிக்கு,
ஐயாயிரம் அத்தியாயமாக ஏற்படுத்திக் கொடுத்தான். அதை அப்
படிச்செய்தும் தருமசூக்ஷ்மந் தெரிந்துகொள்ள சக்தியற்றவர்க
ளாய் மயங்கினார்கள். அதைத் தேவகுருவாகிய பிரகஸ்பதி மூவாயி
ரம் அத்தியாயமாக முடித்தருளினார். பின்பு அதனைச் சுக்கிராசா
ரியர் சுருக்கி ஆயிரம் அத்தியாயமாக ஏற்படுத்திவைத்தார். அதைப்
பார்த்துச் சகலதேவதைகளுக்குஞ் சந்தேக நிவாரணமாகித்தேறும்
அறிவில்லாமல், கலங்கித்துயரமடைந்து பாபத்தையே யநுசரித்து
மனமிருளடைந்து அக்கியானிகளாய் விசனமுற்று, இயாவரும்
ஒருபெருங் கூட்டங்கூடித் தர்மத்தை நடத்திவைப்பதற்கும் தர்மந்
தப்பி நடந்தவர்களைத் தண்டிப்பதற்கும் ஒரு கர்த்தனிருக்கவேண்டு
மென்று யோசித்து, மகாவிஷ்ணுவி னிடத்திற்குப்போய் முறை
யிட்டார்கள். அந்த விஷ்ணுவானவர் பூலோகத்தில் யாவரும் புண்
ணியத்தை மேற்கொண்டு நடப்பிக்கும்படியாய்த் தம்முடைய்
நினைப்பினாலே ஒரு மகாபுருடனை யுண்டாக்கி, அவனுக்கு விரசு
என்று பெயரிட்டு அவனை நோக்கி நீ இவ்வுலகத்துக்கு ராஜனாயி
ருந்து, தருமபரிபாலனம், பாபபுண்ணியம், பக்குவா பக்குவம்
பார்த்து நடப்பியும். அவ்வாறு உன்சொல்லுக்கடங்கி நடவாதபே
ரைத் தகுதியாகிய தண்டனைசெய்யு மென்று ஆக்ஞாபித்து, அனுப்
பிவைத்தார். அந்த விரசு என்கின்ற இராஜன் இராச்சியபரிபால
னம் பண்ணாமல் கருத்தமனென்கிற ஒரு பிள்ளையைப் பெற்று அவ
னுக்குப் பட்டங் கட்டிவைத்து, இப்பிரபஞ்ச வாழ்வை வெறுத்துத்
தபசு பண்ணி மேன்மை பெற்றான். அவனுடைய குமாரன் கருத்த
மனென்பவன் தந்தை யெவ்வழி அவ்வழி புதல்வனென்பதுபோல்,
சம்பத்தை விரும்பாமல் பெரும்பாலும் தவமே தனமாகக் கொண்டு
தவஞ் செய்யப்போய் விட்டான். அவனுடையபிள்ளை அநங்க
னென்பவன் கடல் சூழ்ந்த காசினிமுழுமையும் திடமிகுந்த தீரத்து
டன் ஆளுகைசெய்து, தருமபரிபாலன சக்கிரம் நடத்தி, மாசற்ற
மனைவியைப் புணர்ந்து நெடுநாளிருந்து, நாலெட்டு தருமங்களுங்
குறையாமல் நவ்விலையை குன்றாமல் பூமிமுழுதுங் கொண்டாடும்

படிக்குப் புகழ்தேடி ஒரு பிள்ளையைப் பெற்று அவனுக்கு நன்னீதி யென்னும் பெயரிட்டுச் சாஸ்திரபயிற்சி செய்வித்துப் பட்டாபி ஷேக முடிகட்டிவிட்டு, எட்டாம்பதத்தை விரும்பித் தவஞ்செய்யப் போனான். அப்போது நன்னீதியென்னும் இராஜன் சத்தியம் சாந் தம் பொறுமை தயை தர்மம் இதுகளெல்லாவற்றையு மறந்து, காம க்குரோத லோப மோக மத மார்ச்சரியங்களிலே வீழ்ந்து, அவ் வாறு பகையையும் நீறுசெய்ய மாட்டாமல், அதற்குள்ளகப்பட்டுக் கொண்டு உலகமெல்லாம் பொல்லாதவனென்று சொல்லத் தக்கவ னாய் நிலைகடந்து நெறிதப்பி நடந்தனன். அப்பால், இராச்சிய பரி பாலனம் பண்ணுவதற்கு தக்க இராஜனில்லாமல் அநேக முநீஸ்வ ரர்களும் மந்திரி முதலிய வெகுஜனங்களும் மனவருத்தமடைந்து நாட்டுக்கு நலமுள்ள இராஜனில்லாமற்போனால் தர்மங்கள் ஒன் றும் நடவாது, வர்ணாச்சிரம தருமந் தப்பிப்போம், வரம்பு கடந்து போம், காட்டில் மிருகங்கள் மிஞ்சிப்போம், நமக்கெல்லாம் உபத்தி ரவமுண்டாகும். பூமியை ரக்ஷிக்கிற கடமை மகா விஷ்ணுவுக்குச் சொந்தம், "மகாவிஷ்ணு பிரிதிவுபதே" என்று சுருதிவாக்கிய முண்டு; ஆகையால், அவர் முன்னிலையில் வந்த இராஜ வருக்கத்தா ரில், இந்த நன்னீதியென்பவனுடைய வலதுதொடையைத் தர்ப்பை நீக்கோலினால் கடைவோமாகில், நமக்கு இராஜன் கிடைப்பானெ ன்று, ஒரே மனதாய் நிச்சயித்துக்கொண்டு வேதமந்திர விதிப்பிர காரங் கடைந்தார்கள். கடையும்போது அவன் தொடையிலிருந்து குடெழுந்து ஒருவன் பிறந்தான். அவ னெப்பேர்ப்பட்டவனென் றால், தீப்பொறிக் கிடமாகிய பொல்லாத கண்களின் காச்சலும், புலிபாய்ச்சலும், அண்டம் பிளக்கும்படியான பெருங்கூச்சலும், திசையளாவும் கைவீச்சலுமாகப் பிறந்தான். அதனைக்கண்டு அப்பா? நீ காட்டுக்கெல்லாம் மேட்டிமையாயிருந்து தர்மந் தவறாமல் வேடர் களுக்கு அரசாகி நீதியுடன் ஆண்டுவரத் தக்கதென்று அவனைப் போக்கிவிட்டு, அப்பால் பரம கருணாநிதியாகிய சிவபெருமானை தியானித்து அந்த நன்னீதியின் வலதுபுயத்தை மறுதரங் கடைந்தார் கள். அதிலிருந்து புண்ணிய தேகமும் விண்ணின் மின்னலிலிருந்து வருவதுபோல், ஆரகேயூர மணிமகரகுண்டல கிரீடத்துடன் கரத் தில் தனுவும்பாணந்தரித்துத் தபாகரத்துடன் பரமாகார னென்கிற இராஜ னொருவன் பிறந்தான். அப்போது தோன்றிய பரமாகார னென்னும் பார்த்திபன், பிராமணர் முதலாகிய ரிஷிஸ்வரரைக் கண்டு அதிசயப்பட்டு ஆச்சரியமடைந்து ஆநந்த சித்தனாய் பிரத

கூதண நமஸ்காரம் புரிந்து ஆசிர்வசன மேற்று சுவாமிகளே ! அடியேன் செய்ய வேண்டிய ஊழிய மின்னதென்று கட்டளையிட்டால் அப்படிச் செய்து வருகிறேனென்று வணங்கி நின்றான்.

—∘○✧○∘—

## 3. அர்ச்சன் நடக்கவேண்டிய முறைமை தெளிவித்தல்.

அப்படி வணங்கிய பரமாகாரமான பார்த்திபனை மகாரிஷிகள் பெரியவர்கள் முதலியபேருங் கட்டியணைத்துக் கடாக்ஷித்து ஓ! இராஜகுலதீபமே? இப்பூமிக்கு நீ இராஜாவாகியிருந்து வெள்ளைக் குடை நீழலில் கொள்ளையாகிய புகழைத்தேடி அரசாளவேண்டுமென்று, சகல சாஸ்திரங்களையும் தருமங்களையும் நீதியும் தநுர்வேதமும் சொல்லி நல்ல முகூர்த்தத்தில் மகுடாபிஷேகம் பண்ணிவைத்து, தீர்க்காயுளும் திரவிய விருத்தியும் திடகாத்திரமும் உண்டாகும்படி ஆசிர்வதித்தார்கள். அந்தப் பரமாகார மகாராஜன் சத்தியத்துடனே தர்மந்தப்பாமல் இராச்சியபாரம் பண்ணிக்கொண்டிருக்கும்போது, இப்பரமாகார இராஜனுக்கு வல்லமையுள்ள புருஷர்கள் துணையாகவேண்டுமென்று நிச்சயித்து மூன்றாந்தரம் முன் சொல்லிய கன்னீதிமனுடைய தொடையைக் கடைந்தபோது அதிலிருந்து இருவர் பிறந்தார்கள். அவர்கள் மிகுந்த சொந்த தைரியத்தைப்பொருந்தி, தாதா, விதாதா, என்னும் பெயர் பெற்றவர்கள். அவர்க ளிரண்டுபேரும் பரமாகார மகாராஜனுக்குத் துணையாயிருந்தும் அக்காலையில் சுக்கிராசாரியர் குருவாகவும் மந்திரியாகவுமிருந்து. இரத கஜ துரக பதாதிகளான நால்வகைச் சேனைகளையும் விஸ்தாரமாக வைத்துக்கொண்டு பிரம்மாண்டமாகிய சுற்றுமதில் கோபுரம் அகழி மலை ஆறு காடு அரண் நகரமுதலிய பட்டணமும் கோட்டையும், ஒன்றிற்கொன்று குறைவில்லாத சம்பிரம, மங்கள கரமா யிருக்கத்தக்கதாகச் சபாமண்டபத்திலமைந்த சிங்காசனத்தில் வீற்றிருந்து, அசத்திய முதலிய பகை ஆறுங் கடந்து சத்திய நித்திய தருமத்தின்வழி நடத்தி முறை நெறிதப்பிய மூடரைத் தண்டித்து, முத்திக்கு வித்தாகிய முதல்வரைக் கும்பிட்டு எல்லாவுலகும் நல்லவனென்று சொல்லும்படிக்கே வல்லமையுடன் ஆண்டு வந்து யாகாதி அவிர்ப்பாகங்களால் இந்திரன் முதலாகிய அந்தர தேவதைகளும் மந்திரதேவதைகளும் கொண்டாடும்படியாய் ஆக்

னா சக்கரத்தாணை செலுத்தினான். அவ்வரசனுடைய கால்வழியின் தவத்தால் வந்த அரசர்களியாவரும் சத்தியமும் சகலதர்மங்களும் மேற்கொண்டு மேலாகிய வேதமுணர்ந்த பிராமணர்களைப் பூசித்து வாழ்ந்து வந்தார்கள். மேலும் இராஜன் உலகத்தைக்காத்துரக்ஷிக்கவும், ஆறிலொருகடமை வாங்கிக்கொள்ளவும், இப்படிக்கெல்லாம் சில நிபந்தனையைப் பிராமணர்கள் ஏற்படுத்திவைத்து, எங்களேற்பாட்டின் படிக்கு நடந்தால், உனக்குச் சத்தியமும் நீதியும் ஜயமுமுண்டு. சத்தியந்தப்பி அசத்தியத்திற் பிரவேசித்து அதிக ஆசைப்படுவையாகில், தரித்திரமும் சாபனையும் ஆயுசு குறைவும் அபஜயமும் நேரிடும். இதன்றியும் எப்போதும் சத்துருஜயமே செய்து எதிரி தன்னை வணங்கவும், கப்பணம் கட்டவும் பண்ணிக்கொள்ளும் பாக்கியத்தில் கண்வைக்கவேண்டும். ஏமாறப்படாது. குடிகளும் படைகளும் கொழுத்திருக்கவேண்டும். தன்னிடத்தில் நெருங்கிய நேசமான பேர்களானாலும், வயதில் முதிர்ந்தோர்களானாலும் இராஜன் கொலுவிருக்கும்போது வித்தியாசமில்லாமல் வணங்கிப் பணியவேண்டும். இராஜனுக்கு நேசமானவர்கள் பணியாவிடில் மற்ற மோசமான சத்துருக்கள் மதியார்கள். இராஜன் மகாவிஷ்ணுவின் சொரூபமென்று மறைகளிற் சொல்லப்பட்டிருக்கின்றது; ஆதலால் அந்த அம்ச மிருப்பவனுக்கே இராஜாங்கம் வருமென்று வேத மநுநீதி உரைக்கின்றது.

இராச்சியத்திற்கு இராஜனிருக்கவேண்டும். இல்லாமற் போனால், பூமி அனாதரணையாய்ப் போகும். தருமம் நடவாது. நன்மை தீமைகளும் விடுபட்டுப்போம். வருணாச்சிரமமும் மறையாசிரமமும் கெட்டுப்போம். இவைகளெல்லாம் நல்ல இராஜாங்கத்தினால் அழியாமலிருக்கவேண்டும். இராஜ பயமிருக்கவேண்டும். பயந்து நடக்கவேண்டும் ஆகையால் இராஜனில்லாம லிருக்கும் நாடு மிருக முலாவுங் காடு எனப்படும். முக்கியம் வேதமுணர்ந்த பிராமணர் மீது விசுவாசமுள்ள இராஜனிருக்கவேண்டு மென்றுசொல்ல, ரிஷிகள் யாவருங் கேட்டுச் சந்தோஷித்து, பணிந்து, ஓ! கருணாநிதியே வருணாச்சிரம மென்பதும், மறையாச் சிரமமென்பதும், விபரமா யறியும்படிக்கு விரித்துரைக்க வேண்டுமென்று கேட்க பீஷ்மாச்சாரியானவர் மேலுஞ் சொல்லத்தொடங்கினார்.

“ காக்ஷிக்கேளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்னனிலம்.”

## 4. பிராமண ரொழுக்கம்.

### வருணாசிரமமும் மறையாசிரமமும் இன்னதெனப் போதித்தல்.

கேளும், தருமநந்தனா? பரிசுத்தமாகிய பிராமணர் வருணாசிரரமென்று சொல்லப்பட்ட நான்கு ஜாதிகளுக்கும் முதற்குலத்தோர். அந்த மேலான குலத்தோராகிய பிராமணர், செய்யவேண்டிய கிரமங்களைப் பொதுவிதியாகப் பேசி யிருக்கின்றார்கள்; அவற்றை நான் எடுத்து உமக்குச் சொல்லுகிறேன் கேளும்.

வேதியரென்போர் குற்றஞ் செய்யாமலும், கோபம்வையாமலும், சத்தியந்தப்பாமலும், ஆசையில்லாமலும், தருமமறவாமலும் பூததயை ஈஸ்வர கியானத்துடன் பதிவிரதா யோக்கியதையுள்ள கன்னிகையைக் கலியாணம் பண்ணிக்கொண்டு சுசியாசாரத்துடன் நித்தியஸ்நானம் ஜபம் தப கரும தருமாக்கினி, காயத்திரி முதலிய காரியங்களில் வழுவில்லாமற் பழியில்லாமல், நல்வழியாய் நடத்துவது பிராமணர்விதி. இன்னமும் வேதமோதல் வேதமோதுவித்தல் யாகஞ்செய்தல். யாகம் பண்ணுவித்தல் தபசுசெய்தல் தெய்வத்தைப் போற்றல் தேவாராதனை முதலிய சத்கிருத்திய தருமம் பண்ணுதல், ஔபாசனம் புரிதல் அக்கினி சாக்ஷியாகக் கலியாணஞ் செய்தல், அரசர்களுக்கு விவாகம் நடத்தி வைத்தல், அரசர் முதலிய எவர்கள் கொடுத்தாலும் தானம் ஏற்றல் தானமீதல் அதிதி அப்பியாசிகளுக்கு இரங்கி அன்புடன் அன்னம்படைத்தல், ஆக இத்தியாதி உத்தம குணங்களும் உடையவன் பிராமணன். இவர்களுக்கு நீரின்முன் ஜபமும் நெருப்பின்முன் தவமுஞ் செய்து நன்றியில் முக்கியமான ஒழுக்கமாகும்.

"அந்தண ரென்போரறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை புண்டொழுகலான்."

## 5. க்ஷத்திரிய ரொழுக்கம்.

இனி, இராஜமுறைமை சொல்லுகிறேன். கேளும்; அரசனானவன் அவயவங் குறையாதவனாய் அழகுடையவனாய், சூரிய சந்திர க்ஷத்திரிய குல கோத்திரக் கொழுமை பெற்றவனாய் வேதாத்தியயனஞ்செய்து பீராமணரைக்கொண்டே யக்கியஞ்செய்வித்து, வில்

வித்தை யானை ஏற்றம் இரதம் குதிரை தேர் கத்தி கேடயம் பாங்கு வரிசை இவைமுதலியதும் பழகி, நால் வகைச் சேனைகளையுங் காப்பாற்றி நன்மந்திரியைக்கொண்டு சத்துருவின் பேரில் சண்டைக்குப் போய் ஜயம்பெற்று, தன் தாரமேதாரம் பரதாரம் சகோதரம், காவிடமில்லாமல் மன்னுயிரைத் தன்னுயிர்போல் மதித்தும் சத்தியமாய் நடுநிலைமையும் காக்ஷிக் கெளியனுமா யிருந்து திரவியஞ் சேகரித்துப் பரதேசிமுதலிய யாசகர்களுக்கு முன்பின் பாராமற் கொடுத்து; பக்ஷபாரமில்லாமல் பராஜ பயங்கரனு யிருந்து, அரசாள்வது க்ஷத்திரியருக்கு முக்கிய தருமமாகும்.

"காக்ஷிக்கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்."

## 6. வைசிய ரொழுக்கம்.

வைசியதருமந் தப்பாமல், நல்வழியில் திரவியஞ் சம்பாதித்து, உழவுவாணிபஞ் செய்து பசுவினங்காத்து, நாணயமில்லாரிடத்தில், கொடுக்கல் வாங்கல் செய்யாதிருந்து, பொய்பேசாமல் பரதாரம் விரும்பாமல் சத்தியவழியினின்று புண்ணியந்தேடி நாவுதவறுமல், பிராமண பூஜை புரிந்து, அன்னதானமிட்டு சமய தீக்ஷையுடன் தேவாராதனை முதலிய நோன்பு சுபசோபனுதிகளில் பொருட் செலவழித்துப் பூரணமாக முடித்துப் பற்றுவரவு கணக்கிற் சற்றும் பிசகாமல், சித்த மொருமித்துக் கோபத்தைபடக்கிப் பொறுமையுடனிருந்து, அரசனது சன்மானம் பெற்றுக் காணியாட்சிக்குரியவர்களாகி பிதுர் கருமமுதலிய தெய்வம் விருந்து வொக்கலும் தானும் வழுவாமல் வாழ்தலே வைசியதருமம் என்று அறிக.

"வித்துமிடல் வேண்டுங் கொல்லோ
விருந்தோம்பி மிச்சின்மிசைவான் புலம்."

## 7. சூத்திர தருமம்.

மேற்கூறிய பிரம்ம க்ஷத்திரிய வைசியர்களாகிய மூன்று ஜாதிகளுக்கும் பணிவிடை உபசாரம் பண்ணி உழுதுப் பயிரிட்டு பூமிக்

குக் காணியாகூலிக்காரனுயிருந்து சந்நியாசி தரித்திரன் பாலர் பிதுர்க்கள் சகலமானபேருக்கும் உதவிசெய்து தேவதாபக்தி ஆசாரிய வைதீககிருத்திய குருத்துவ பக்தி பூண்டு, பெரியோரைப் பணிதல் பசுகாத்தல் இவை முதலாகிய தொழில்களில் ஆளாகியிருப்பது சூத்திர தரும மாகும்.

"செய்த்தக்கவல்ல செயக்கெடுஞ்
செய்த்தக்க செய்யாமையானுங்' கெடும்."

## 8. பிரமசரியம்.

ஆன்ம லாபமாகிய நான் காசீர்மங்க ளொழுக்கம்.'

இதில் பிரமச்சாரி நடக்கவேண்டிய முறைமை என்னவெனில் குருவணக்கம் வேதாகமப்பயிற்சி, ஜபம் தபம் விதிவழிக் கருமம், ஒருவேளை பிக்ஷை, தருப்பை சமுத்து புட்பம் இவை முதலியன கொண்டுவந்து ஆசிரியர் பணிவிடைக்கு உபயோகப்படுத்தல், சந்தன சுகந்தபரிமள கந்த தைல தாம்பூலாதிகள் விலக்கல் எண்ணெயிட்டு முழுகாமல் சுத்த ஜலத்தில் ஸ்நாநம்பண்ணல், கோவணத் தனித்தவனாய் நித்திரையிலும் புத்தகம்மறவாது கைப்பற்றிருத்தல், ஜீவகாருண்ணிய முடைமை கோபத்தை யடக்கல் முதலிய வெல்லாம் முதலாசிர்மத்தின் செய்கை.

## 9. இல்லறத்தாசீர்மம்.

இல்லறத்தன் நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களையும், இனிய குரலோசையும் கற்புடைமை வாய்ந்த நற்குண நற்செய்கை தோய்ந்த பதிவிரதாகன்னிகையை கலியாணம் பண்ணிக்கொண்டு அவளை விட்டு வேறு வழியிற் புகாமல் அவளுடன் கூடிவாழ்ந்து தாய்தந்தையரைப்பூசித்து, மகிழ்வன். பாலர்கள் பெண்கள் நோயினர் முதலியோரை ஆதரித்து அதிதி அப்பியாசி பிதுர்த்தேவதைமுதலிய பெயர்களுக்கு இனியவசனத்துடன் விருந்தமுதூட்டி ஜீவஹிம்சை செய்யாமல் பொய்சொல்லாமல் வஞ்சனை கபடம் பொறாமை இல்லாமல் பிறருடைமையின்பேரில் ஆசை

படாமல், தீழ்மை முதலாகிய சுவரும் கள்ளுண்ணுமல் மண்ணிலிருந்து பெண்ணோஞ் சொல்லாமல் பக்ஷபாரமாய் வழக்கழிவு உரையாமல் பரதேசிகளுக்கு உபசாரத்துடன் பிக்ஷைவைத்து, பந்துக்கள் சுற்றத்தாரை நிந்தனைசொல்லாது, பாதுகாத்து, தேவதாபூஜை பூரித்து நோன்பு முதலிய விரதமிருந்து, தேவதர்ப்பணம் ரிஷிதர்ப்பணம் பிதுர்ப்பணம் ஆசாரியதருப்சணமுஞ் செய்து, தேவதா பக்தி பிராமண விசுவாசம் பந்துஜந நேசம் சுப சோபன சந்தோஷங்களுடன் இருக்கவேண்டியவன், கிரஹஸ்தனென்னும் இல்லறத்தானாகும்.

## 9. வானப் பிரஸ்தா சிர்மம்.

வாநப்பிரஸ்தன் பெண்ஜாதியுடனேயும் அக்கினியுடனேயும் காட்டுக்குப்போய்ப் புனித மாகிய வனத்தில் ஆசிரமங் கட்டிக் கொண்டு, போஜனத்தை யொழித்து கந்தமூலம் காய் இலை சரகு கனி முதலியவற்றைப் புசித்து, வீண்காலம் போக்காமல், சூரியகலையில் நின்று பிரம்மநிஷ்டை கூடி காற்றுக்கும் பனிக்கும் மழைக்கும் வெய்யலுக்கும் பயப்படாமலிருந்து, பஞ்சாக்கினி மத்தியில் தபசு பண்ணுகிறதுமன்றி, தன்வசமாய் எல்லாவற்றையும் அடைக்கிக் கொள்ளும் ஐம்புலன்களையும் ஆறு பகையாகிய காமகுரோத, லோப மோக மதமாச்சரியங்களையும் அடக்கித் தன்வசப்படுத்திக் கலைக்ஞானங்களும் கைவல்லியமாய்த் தேர்ந்து கர்மபூமியின் வாசனை விஷயத்தைக் கனவிலுங்கருதாம லிருந்து கர்த்தனைப்பணிவதே வானப்பிரஸ்தமாகிய மூன்றாவது ஆசிரமத்தின் முறைமை.

## 10. சந்நியாச ஆசிர்மம்.

நான்காவதாகிய சகலமுநாசமென்பது சந்நியாசிசம் என்னும் ஆசிர்மத்தைக் கேளும், அதாவது:—பெண்டு பிள்ளை பண்டுபதார்த்தமாகி பாசபந்த மறுத்து ஒரிடத்திலிராமல் உலகமெங்கும் சஞ்சரித்தல். கிடைத்தபோது உண்ணல், உடுத்தல், படுக்கை முதலிய பக்குவம்; அறுசுவை சிங்காரம் பாராமல் அனுபவித்து, ஒருவருடன் பேசால் மௌனமாதல், நல்லதென்றும் தீயதென்றும் நாடாதிருத்தல், சிகை பூணு நூல் இதைச் சார்ந்த தருமக்கிரியைகளை நீக்

கல். காவிகாம்பரம் போர்த்துதல் தண்டுகமண்டல மேற்றல் வேத சாஸ்திர புராணமுதலிய நூலெல்லாம் ஐயந் திரிபு அறவறிதல், மூன்றுகாலமும் முழுகல் சகலமும் பிரமார்ப்பணம் பண்ணல், நான் எனது என்னும் செருக்கறுத்தல் பொறுமை யாதல் விருப்பும் வெறுப்பும் முறைமையாகிய ஒப்புர வறிதலும் விட்டு விடல் இன்னமுள்ள அநுஷ்டானங்கள் சீலங்கள் பலவுண்டு இவையெல்லாம் உடையவர்களை அதிதி யென்றுரைக்கலாம். ஆனால் இந்த நான்காம் அதிதி ஆசிர்மம் தபோபலமுள்ள பிரம்மக்ஞானிகளாகிய பிராமணர்களுக்குத் தகுமேயல்லது மற்ற மாய்ஸ பக்ஷணமுள்ள பேர்களுக்குக் கைகூடாது. கடினம் ஆகிலும் ஒரு பரிகாரமாய்க் கூடியிருந்தாலும் நெறியுடனிருக்கலாம். வைசியசூத்திரருக்கு இல்லறமே நல்லறமாகையால் மற்ற மூன்று ஆசிரமமும் அனுசரிக்க வேண்டியதில்லை. அப்படிக்கு மேலாகிய காரியங்களை அபேக்ஷித்துத் தாங்களும் பெரியவர்களாகி உயர்ந்த பதத்தைப் பெறவேண்டுமென்று வக்கங்கொண்டு சற்சிலரா யிருப்பதே மேலாகிய பதத்திற் சேர்த்துவிடுமென்று பீஷ்மாசாரியர்சொல்ல தருமராஜன் தேவரீர்! திருவாய்மலர்ந்த தருமமானது தேவாமிர்தத்திலுஞ் சிறந்த இனிமையைத் தருகின்றது, என்று துதித்து நின்று தருமகருமங்களை யனுசரித்து தகுதியாக நடந்து கடைத்தேறுதற்கு இராஜன்தவிர வேறொருவரால் இயலாதோ வென்று என்மனஞ் சந்தேகத்தைத்தழுவுகின்றது அந்த சந்தேக நிவிர்த்தியாகத் தயைசெய்யு மென்றுகேட்க வீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"தவஞ்செய்வார் தங்கருமஞ்செய்வார் மற்றல்லா ரவஞ்செய்வா
ராசையுட்பட்டு."

## அரசருடைய புண்ணிய மகிமை யுரைத்தல்.

கேளும் தருமநந்தனா? பூர்வபுண்ணிய கிருத்தியத்தினால் மேலுலகில் தேவபோகமனுபவித்து மீண்டும் பூலோகத்தில் வரும் இராஜனே பிராமணன். இராஜனே பூலோகதருமதேவதை இராஜனே உலகத்திற்குத் தெய்வம். இராஜனே லோகரக்ஷகன் இராஜனே சம்மாரகர்த்தன். இராஜனே இத்தன்மையாகிய குணங்களை வாய்ந்த இராஜன். இராஜனில்லாவிட்டால் தருமம், புண்ணியம், சத்தியம், யாகம், வேதம், தவம், தானம், மழை, கோயில், குளம், சத்திரம்,

சாவடி, ஒன்றுமுதவாது கிரமமாய் நடவாது. ஸ்திரீகள் முறை தப்பிப் போவார்கள். கருப்ப வுற்பத்தியில்லாமற் குறையும் புருஷர்கள் குலாச்சாரம் சத்தியம், சாந்தம், இவைகள் முதலியவற்றை விட்டுத் தப்பி நடப்பார்கள் மழைபெய்யாது மாடுபலியாது, குடி, படைநோயும், கோத்திரமாயும், இராஜன் உலகத்திற்குப் பிராணனாவன். இராஜனே சமஸ்தமான உயிர்களுக்கும் நடுவு நிலையிலிருந்து கிருபையுடன் ஆளுங் கடவுள் போலாம், மேலும் சத்தியந் தப்பாமல் செங்கோல் செலுத்துவானாகில், வானமும்மாரி பெய்து மேற்கூறிய மூன்றுமாசிரமத்தின் பலனும், தபோபலனும் வேள்விப்பலனும் வேந்தனுக்குண்டாம். தேவாலயம் பிரம்மாலயம். ரிஷியீஸ்வரர்கள் முதலானவர்களின், யாகம், யோகம், முதலிய வெல்லாம், அவனாலே நடக்கவேண்டுமாதலால், இராஜன் கிருபையினால் உலகத்திலுள்ள பேர்களுக்குத் தாய் தந்தையை விட்டு பிரியாதிருப்பதுபோல் அன்பு பொருந்தி ஆதரிப்பன். மற்ற ஆசிரமத்தவர்களெல்லாம் அந்த இராஜாவுக்குச் சகலமரியாதையும் நடத்தும் இனிமையான அன்பர்களென்று வேதத்திற் சொல்லியிருக்கின்றது. இன்னம் இராஜனில்லா நாடு சந்திர சூரியர் நுழையாக்காடு புத்திரச்செல்வ மில்லாதவீடு, பிராணன்போக்கிய பெருஞ்சடக்கூடு. என்றுரைத்த காங்கேயனை மூன்றுதரம் வலம்புரிந்து, பணிந்து, நிற்கின்ற தருமராஜனைநோக்கி ஆசீர்வசனம்புகன்று, ஆசைப்பெருக்குடன் ஆசனத்திலிருக்க உத்தரவுசெய்து, அப்பனே! இன்னமும் நீகேட்கவேண்டிய தருமசந்தேகங்களைக் கேளென்று சொல்லத் தருமராஜன் வணங்கி கேட்கத் தொடங்கினர்.

## 11. அரசர் நடத்தும் நீதியுரைத்தல்.

ஐயா! பூலோகத்திற்குத் தேவாம்சம்பெற்ற இராஜன், இராச்சியபாரம் பண்ணவேண்டிய முறைமை யெப்படி? அதை யெனக்கு விரித்துரைக்க வேண்டுமென்று கேட்க. வீஷ்மர் சொல்லத் தொடங்கினர்:— விவேகப்பெற்ற வேந்தனே? அரசனுக்கு குடை, கொடி, முரசு, வாத்தியம், அஸ்திரந் தொடுத்தபடை, விஸ்தாரமாகியகுடி, செழிப்பாகிய பயிர், நீதி தெரிந்த மந்திரி சேதி யறிந்த தந்திரி, மீதிலுயர்ந்தமதில், மதிலுருப்பு முத்திரையமைந்த கோட்டை செடி நிறைந்த மலை, வெற்றிமாலை, வேலாயுதம், கரி, பரி, தேர், காலாள், இரத்தினாபரணங்கள் நவரத்தினகசித குண்டலம், ஆரகே

யூர, கிரீடம், சந்தன பரிமள குங்கும, கதம்ப கஸ்தூரி புனுகு, சவ்வாது, அஸ்திரசஸ்திரம், அனேகபூமி, பொக்கிஷ நிரம்பல் கொடிபடர்ந்த மேடு, குடிகளடர்ந்தநாடு, கொலுக்கூடமமைந்த நகர், குறைவில்லா வெள்ளநிறைந்த ஆறு, வேத மந்திரதொந்தமுள்ள கேள்வி, உயிருக்குயிராகிய தோழன், நான்கு வேதம் ஆறுசாஸ்திரம், பதினெண் புராணம், உபநிடதம், அறுபத்துநான்கு கலைஞானம், தனுர்வேதம், தருமசாஸ்திரம், நீதிசாஸ்திரம் புருடலக்ஷணம், ஸ்திரீலக்ஷணம், இதுகளெல்லாம் உடைத்தாயிருக்க வேண்டும். இன்னம் சாதுசங்கம், தடைபடாக் கேள்வியோர், சாதுரியவான்கள் இவர்களுடன் பெரியாரைத்துணைக் கொள்ளவேண்டும். நல்லமனத்தினளாய், மிருதுவசனமுடையவளாய் அதி ரூபவதியும் சிறுகுரானும் கற்பில்சிறந்த மாசற்றமனைவியும் புகழாபரணம் பூணும் பிள்ளையும், சத்தியவாக்கும், தனக்கு சிரோமணியாகிய மேன்மையைக் கோறப்பட்டபந்து ஜனங்களும், அன்பு பாராட்டிய அண்ணன் தம்பிகளும் பிராணனை விரும்பாத மானமுள்ள வீரரும், ஆசாரந்தப்பாதிருப்பவனும் சோர்வு மடிமை அதயிரிய மில்லாதவனுமாய், சத்துருவின்பேரிற் சண்டைக்குப் போங்காலமும் போகத்தகாத காலமும், தன்பலமும் துணைபலமும் எதிரியின் பலமும் காலபலமும் அப்போதைக்கப்போதே வேவுகாரரால் தெரிந்துகொள்ள வேண்டும். செங்கோல்செலுத்துந் திறமையும் முறைமையும் காக்ஷிக்கெளியனும் கண்ணிற் கணிகலமாகிய கண்ணோட்டமும் எண்ணித்துணியுங் கருமமு மிருக்கவேண்டும். வரும் விருந்தினர்களுக்கு பரிசைதந்து உபசரித்தலும், ஆபத்துவந்த காலத்தில் தயிரியம் விடாமலும், மநுவிக்ஞான மார்க்கமும், திரவியம் சேர்ப்பிக்குந் திறமும், ஆறிலொருகடமை வாங்கும் அறமும், குடியானவர்கள் பெற்ற ஐந்துகூறில் ஒருகூறு போஜனமும், ஒருகூறு விரை முதலும் போக, மற்றவை தருமத்தின் வழியே தென்புலத்தார்க்கும் தேவதைகளுக்கும், விருந்தினர்களுக்கும் சுற்றத்தார்களுக்கும் குறைவின்றி செலவழிக்க அதைப்பார்த்துத் திட்டமாய் நடத்தி வரவேண்டிய, செல்வமும், சாம, பேத, தான, தண்ட, மென்னும் உபாயம் நான்கில்; தண்டம் தவிர, மற்றமூன்றினும் பார்த்து முடியாமன் போமாகில், நான்காவது தண்டம் நாட்டி விடவேண்டும். அவசரப்பட்டு நிதானமின்றி கோபாக்கிரமமாய் கொள்ளப் படாது. அப்படி செய்யில் அதனால் பழியும், பாவமும், பட்டத்திற்கு இடையூறும் பாராமல்

வருவதுமன்றி மறுமையில் இழிந்தோர்குலத்தில் தள்ளிவிடும் இந்த நான்கு உபாயத்தை ஒரு சத்துருவினிடத்தில் மாத்திரமல்ல, சினேகனிடத்திலும் செலுத்திப் பார்க்கவேண்டும். பின்னும் குத்துக்கால், கொடுங்கை, அச்சுமச்சு, வண்ணமுதலிய, இருசு, சிகர கலசம், குடை, கொடி, தோரணம், ஆலவட்டம், இதுகளமைந்ததேரும், இரத்தினங்கள் பதித்த, தங்கக் கட்டு, வெள்ளிக் கட்டு, செப்புக் கட்டு, இருப்புக் கட்டு. முதலிய பூண்களிட்டு, குச்சுகள் மாட்டிக் கத்திகள்பூட்டி, கும்பமத்தகம்பெற்று, மும்மதம் பொழிந்து, இறுமாந்து, எழு உறுப்பும் உயர்ந்து, இருக்கப்பட்ட, அரச குஞ்சரமும், அஞ்சுகதிகளும், பின்னிட்டுப்போக, முன்னிட்டோடும் குதிரைகளும், சண்டை யென்று கேட்ட வுடனே சந்தோஷங் கொண்டு சம்பிரமங்களங் கொண்டாடுங் கால்பலங்களும், இந்தக் கால் பலங்களில் வில்காரரென்றும், வேல்காரரென்றும், வாள்கார ரென்றும், மூன்று பிரிவுண்டு, முன்சொன்ன இம்மூவகைச் சேனையுஞ் சேர்த்து ஆறுவிதப்படை யென்பாருமுளர். இதல்லாமல் ஆறுவிதப் படையாவது; பந்துக்களின் மிருந்தவர் படை, இப்போது எதிர்க்கப்போகிற சத்துருவின்பேரில், முன் எதிர்காட்டி சண்டைக்குப் போய்ச் செயிக்கமாட்டாமல் இளைத்துவந்து விட்டவர்கள், நானும் வருகிறேனென்று சேர்ந்தபடை, பகையில்லாமல் சவுக்கியமாய் அரசுபுரியும் அவர்களின் படை, தீவு தீவாந்திரங்களில் பெருக்கமாய் வைத்திருக்கிற படை, பகைநேரிட்டகாலத்தில் பொருட் செலவு செய்து நூதனமாய் வைத்துக்கொள்ளும் கால்படை, தன்னிடத்திலிருக்குஞ் சொந்தப்படை, இவை ஆறுவிதப்படையாகும்; இவைகளையெல்லாம் அரசன் தன் பிராணனைப்போல் காப்பாற்றவேண்டும். பழமையாய்ப் பூர்வாபூர்விகமாயிருந்து அநுபோகந் தெரிந்தவர்கள், அற்ப உத்தியோகத்திலிருந்தாலும் உயர்ந்தவேலையிலிருந்தாலும், வேலையில்லாதிருந்தாலும், அவர்களை சொற்பகுற்றங்களால் நடுவின்றி தள்ளிவிடலாகாது. புதிதாய் ஒருத்தன்வந்து எத்தனைவித நன்மைகளைக்காட்டி அநுபோகந் தெரிந்தவனைப்போற் பேசி, இரவும் பகலும் பாடுபட்டாலும், அவனுடைய குணாதிசயங்களையும் பிறந்தவிடமுதலிய குடும்ப காரியா காரியங்களையும் விசாரிக்காமல் அவனைச் சேர்த்து, உத்தியோகத்தில் வைத்துக்கொள்ளக் கூடாது. உயர்ந்தவர்க் குயர்ந்த உத்தமனே; இதற்கொரு திருஷ்டாந்தஞ் சொல்லுகிறேன்கேளும்.

## 14. அரசன் சிற்றினஞ் சேர்தலால் வருந் துன்பமும் நன் மந்திரிகளைக் கூடின சுகமும்.

கேளும் தருமராஜனே! இராஜன் அற்பமனிதரைச் சோக்கலாகாது, அவர்களால் பெரியகாரியம் ஆகமாட்டாது. தீமைவிளையுமல்லது நன்மைவிளையாது. அவர்களுக்கு என்ன உபகாரஞ் செய்தபோதிலும் எவ்வளவு சகாயம் பண்ணின போதிலும், இவர்களாலே சீர்படுவோமென்று ஒருக்காலுஞ் சொல்லார்கள். பலனாளுதவி செய்து ஒருநாளுதவாவிட்டால் பலநாளுஞ் செய்த உதவி பாழாய்ப்போம்; சமுகமரம், நித்தியந் தண்ணீர்விடாமற் போனால் எப்படி வாடுமோ, அப்படிப்போல் முகம்வாடி வம்பு வார்த்தைகளாடி அபகாரம் பண்ணுவார்கள். நமக்குப் பகையாயிருப்பவருடன் உறவாடி நமது உண்மைகளை வெளியிட்டு நமக்கு கேடு விளைவிப்பார்கள்.

அதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு கதை சொல்லுகிறேன் கேளும் தருமசொரூபியே! ஒரு வனத்தில் பர்ணசாலைகட்டிக் கொண்டு அநுபமரென்கிற ரிஷீஸ்வரர் தபசுபண்ணிக் குற்றமற்றவராய் இடையூறுகளெல்லாவற்றையுங் களைந்து விரதத்திற் சிறந்து வெகுநாளிருக்கிற நாளையில். அந்தக்காட்டிலிருக்கின்ற மிருகங்களெல்லாம் அவரண்டையில் வந்து நமஸ்காரம் பண்ணிக்கொண்டு பேதமில்லாமல் பயமற்றிருந்து அவருக்கு வேண்டிய உபசாரங்கள் தங்களாலியன்ற மாத்திரம் உபகாரஞ் செய்துக்கொண்டு வரும், அந்த அநுபமரென்கிற ரிஷீஸ்வரர், அம்மிருகங்களிடத்தில் நிரம்பிய தயவாய் அவைகளுக்கு ஒருதுன்பமும் வரவொட்டாமல் பாதுகாத்துக் கொண்டு, தன்னுயிர்போல் பக்ஷம்வைத்து வருவர். இப்படிக்கிருக்க, அந்தந்தக் காட்டிலுமுள்ள மிருகங்களெல்லாம் இவருடைய பர்ணசாலையைச் சூழ்ந்துக்கொண்டு, தங்கள் தங்களுக்கிச்சையான இரையைப்புசித்து ததேச்சையாய் இந்த ரிஷீஸ்வரனை வணங்கிக்கொண்டு பிரியாமலிருக்கிறபோது, ஒரு ஆண்நாயானது காட்டிலிருந்து சிறுமை யடைந்து காட்டிற் புகுந்து கிருபைக்கடலாகியும் தயாரசமாகியும், சீவகாருண்யமாகியும், இராநின்ற இந்த அநுபமரென்கிற மகாரிஷியினிடத்திற்கு வந்து வாலைக்குழைத்து, வாய்விட்டிரைந்து, அவரை வணங்கிக்கொண்டது. அந்த மகாநுபாவர் இதன் விஷயத்திலும் அன்புடையவராயிருந்தார். அவரெழுந்து போனால்

இந்த நாயும் கூடவே போகிறதும். அவர் உட்கார்ந்தால் அவருக்
கெதிரில் இந்நாயும் இருக்கிறதும். அவர் படுத்தால் இதுவும் படுக்
கிறதும். அவர் எழுந்தபோது சீக்கிரம் எழுந்து விழுந்து தெண்ட
னிடுகிறதும். அவருடைய பாதங்களை மூகந்து நாவினால் நக்குகிற
தும். நேருக்கு நேர்நின்று உடம்பை குலிக்கி சந்தோஷக்குறிப்பு
குரைக்கிறதும். இப்படிக்கு இரவும்பகலும் நீக்க மில்லாமலும் தூக்க
மில்லாமலும். அதிகப் பிரீதியாய்க் காத்துக் கொண்டிருந்த நாயின்
பேரில் அந்த ரிஷிக்கு ஆச்சரியம் பிறந்து, அற்புத மடைந்து அந்த
குணங்களிடத்தில் மிகுந்த தயவுடையவரா யிருந்தார். இப்படி யிரு
க்கிறபோது தவ சிரேஷ்டராகிய அந்த முனியை யடுத்திருந்த ஒரு
கலைமான் தங்களினத்துடன் பிள்ளை குட்டிகளும் வெருண்டு, தன்
கொம்பைப் பூமியிற்றாழ்த்தி மருண்டு கும்மாளமிட்டு, இந்த நாயைக்
குத்திக் கொல்லவேண்டுமென்று எழுந்து வருங்காலையில், அதை
அந்த மகாரிஷிகண்டு இரக்கமுடையவராய் பயந்து தன்னைச் சரண
மடைந்த பெரிய நாயைக்காக்க வேண்டுமென்று கருதி, தன் கம
ண்டலத்திலிருந்த சலத்தைத் தெளித்து கையிற் பிடித்திருந்த தண்
டினால் தட்டினார். அப்படித் தட்டவே அவருடைய தபோ பலத்தி
னால் அந்த நாயானது வாயுதேவனுக்கு வாகனமாகிய கலைமான்
போல் மேன்மேலாக உயர்ந்து தலை நிமிர்ந்து கொம்புகள் பணைத்
துப் பரந்து உயர்ந்து நெளித்து முறித்துக் குறித்து பாய்ந்து, எதி
ர்த்து வந்தமானின்பேரில். அதிர்த்துச் சண்டைசெய்ய விட, மெய்
ம்மான் ஓடிப்போகவும், நாயாகியமான் செயிக்கவுஞ் செய்து, அந்த
மானுருவத்துடன் சில நாள்வைத்துக் கொண்டிருந்தார். அப்படியா
யிருந்த அந்த நாயானது, சிலநாள் வரைக்கும் மகாரிஷியின் கால்
மாட்டிலே படுத்துக்கொண்டிருந்தது. இவ்வாறு தன்னைவிட்டு நீங்
காதிருக்கிற இந்த நாயாகியமானை ஒருவராலும் செயிக்கப்படாத
பதினறடி வேங்கை பாய்ந்து தண்டெடுத்து மயிர்சிலுப்பி தனிக்
குரலிட்டுக் கண் சிவந்து கடைவாய் நக்கி மீசைதுடிக்க மேல்விழ
நெருங்கிவந்தது. அந்தநாயாகிய மான் வேங்கைக்குப் பயந்து பெரி
யவரை நயந்து, அவர் பின்புறத்தி லொதுங்கியது. அதை யந்தப்
பெரியவர்பார்த்து முன்போல் கமண்டலத்துச் சலத்தை தெளித்
துத் தண்டினற் றட்டி முப்பத்திரண்டடி வேங்கையாக்கி முடுக்கி
னர். இந்த மாயவேங்கையைக்கண்டு ஞாயமாகிய வேங்கை ஓடி
யொதுங்கிப்போய் விட்டது இந்த நாயானது வேங்கைரூபமாகவே
யிருந்து மேலோருக் குபசாரம் பண்ணிக்கொண்டிருக்கு நாளில்,

ஒருமதயானை ஒரு கரந்தூக்கி இருகொம்பாட்டி, மும்மதம் பொழிந்து, நால்வாயசைத்து, மிருகங்களனைத்தும் அஞ்சும்படியாக ஆருக்கோபத்துடன் அடர்ந்து முப்பத்திரண்டடி வேங்கையை மோதியபோது, காடெல்லாம் அதிர்ந்து; கண்கலங்கிகாலடியில் வாலடித்துச்சுழ்ழிய நாயாகிய புலியை முன்போலவானமளாவிய மதயானையாக்கி விட்டார். இந்தப்போலியானையைக் கண்டு வந்தயானைமனம் வெந்து நொந்து ஓடிப்போய்விட்டது. பிறகு மிருகராஜனாகிய ஒரு சிங்கம் வந்து எதிர்த்தது. அப்போது இந்தபோலியானையை பஞ்சாநநமாகச் செய்து பகையாட அனுப்பினார். இந்தப்போலிசிங்கத்தைக் கண்ட அந்தமெய்ச்சிங்கம் அந்தஞ் சிந்தி சிந்தைநைந்து வந்தவழியோடி பிந்திப்போய் விட்டது. அப்பால் எண்காலுள்ளசரபம் வந்தெதிர்த்து அது அட்டகாசம் விளைவிக்கும்போது, இந்தத் தபோமுனியானவர் தயையுடையவராய்த் தனது தபோமகிமையால் நாயாகிய சிங்கத்தைச் சார்த்தூல சரபமாக்கி போர்விளைத்துவிட்டார். இரண்டுசரபமும் புரண்டு விழுந்து நாயாகிய சரபமேலிட்டுத் தாக்கும்போது, வந்தசரபம் எந்தவழியோ இளைத்துப்போய்விட்டது. அப்பால் நாயான சரபரூபத்துடனிருந்து தனக்கு ஒருவரு நிகரில்லாமல் காடெல்லாந்திரிந்து மிருகங்கள்யாவுந் தனக்குப்பயப்படும்படியாய், ரிஷீஸ்வரனிடத்திற் பொருந்தி அவரருளாலே தான் மேன்மையடைந்தது. இப்படிப் பிரதிஷ்டையுடனே இருக்கப்பட்ட பொய்ச்சரப நாயானது, தன்னை யிவ்வளவுக்குப் பெருமைப்படுத்தி வைத்த மகாரிஷியை தன்னிஷ்ட தெய்வமென்று எண்ணவேண்டுமல்லவா? தானுஞ்சுகப்பட்டுத் தன்னைச்சுகப்படச்செய்த தவசியாலாளப்பட்டு மெருமையடையாமல் குலத்தளவேயாகுங் குணமென்பதுபோல் இந்த அற்பசெந்தாகிய நாயானது ஒருவஞ்சகமான எண்ணம் எண்ணிற்று, அவ்வெண்ணத்தை நானென்னென்று சொல்லுவேன். அந்த நாய் நினைப்பு என்னவெனில்:—நாமோ சாதியில் நாய் இவருடைய தவமகிமையால் உயர்ந்த அந்தஸ்தை யடைந் திருக்கின்றோம். ஒருவேளை நமது துற்குணத்தால் இந்த மகாநுபாவராகிய ரிஷிக்குக் கோபம்வந்து விட்டால் நம்மை முன்போல் நாயாக்கிப் போடுவரே, அப்படிக்கு இவர் கோபத்தினுலகப்பட்டு அனியாயமாய் பழைய நாயாவதைப் பார்க்கிலும், முன்சாக்கிரதைப்பட்டு இவரையடித்து உயிரை முடித்து உதிரங்குடித்து, நாமும் கர்வப்பிடித்து இந்தக் காட்டிலிருப்போம்; என்று கருதி மகாரிஷியைக் கொல்லத்தருணம் பார்த்துக்கொண் டிருக்கிறநாய் சரபத்தில் எண்ணத்தையும்

முதவல்லாசத்தையுங் கெலிப்பையும் இறுமாப்பையும் திரிகாலக் ஞானியாகிய அருபமனென்னும் ரிஷியறிந்து சாக்கிரதையா யிருக்கும் போது, ஒருநாள் இந்நாய் சரபமானது மகாரிஷியைக் கொல்லுகிறதற்கு தன் வாயைத்திறந்து நகத்தை விரித்துப் பறந்து வருங் காலையில், ரிஷி தண்டேன்றுப் பார்த்து ஏன்பழையநாயே.? இப்படிக் கெட்டாயே யென்றார். அப்படி யவரழைத்த உடன் எப்போதும் போல் நாயாகிப்போயிற்று. மூன்றுகாலமுந் தெரிந்த முதன்மை முனிவராகையால், தனக்குத்துன்பம் நேரிடுவதற்குமுன் தப்பித்துக் கொண்டு, சின்னமனிதனையுந் தன்னிலை தன்னைக் காக்கும்படிக் கொண்டுவந்து விட்டார். கேளும் தருமனந்தனா? இன்னொருத்தரானால் எப்படி தப்பிப்போகலாம். நீர்சொல்லும், ஆனதால், என்றென்றைக்கும் இராஜாக்கள் சிற்றினங்களைச் சேர்க்கலாகாது, என்றிசைத்து, இன்னமும் அரசுசெய்யும் நாட்டில் நெற்பயிர்கள் கரும்பு போல்வளர்த்து செழிப்படையும் படியான நீர்வளமு நிலவளமும் ஆற்றுக்கால் பாய்ச்சலும் ஏரி குளம் கால்வாய் கேணி கயம் தடாகம் தோப்பு ஊர்சூழ்ந்த சோலை இவைகளின் விருத்தியில் அரசன் ஞாபகம் வைத்திருக்கவேண்டியது. இது முக்கியகாரணம். இவ்வாறு நிலவளம் நீர்வளமுடைய பூமியை நடுவுநிலைமையுடைய இராஜன் ஆண்டு வருவானாகில், அந்தப்பூமியில் தவமோங்கும், தானமோங்கும், மும்மழைபெய்யும், பூமிதேவியும் மனங்களிந்து வஞ்சனையில்லாமல் பலபண்டங்களையும் விருத்திபண்ணிக் கொடுப்பாள். இராஜன் சத்தியந்தப்பி நடப்பானாகில், எத்தனை, செழிப்பாகிய பூமியும் விழுப்பாகிப்போம். பலப்பிராப்தி கிடைக்கமாட்டாது பூமிதேவியும் நடுங்கி யொடுங்கி யோடிப்போவாள், இராஜனுக்கும் குடிகளுக்கும் தரித்திரமுண்டாம். அந்நியதேச இராஜபகைமேலிட்டுவரும். ஆகையால், இராஜன் நெறிமுறை தப்பாமல் தருமத்தை யனுசரித்து நடுநிலைமையாய் ஞாயஞ்செலுத்தித் தேவதாபக்திவைத்துச் செங்கோல் செலுத்துவானாகில் அவனிராச்சியத்தில் மிகவுஞ் செழிப்பாய் தானிய விளைவுண்டாம் பூமிவளங்கொடுக்கும் பொழியு மழையடுக்கும், குடிபடைகளுந் தழைக்கும், கோயில் பூஜைகள் செழிக்கும். சத்தியமும் தைரியமுங்களிக்கும், அவ்வரசனுக்குச் சத்துருசெயமுண்டாகும். ஒருகாலத்தில் மாரிவறண்டு க்ஷாமகால நேரிடுமாகில், குடிகளெல்லாங் குன்றிப்போம். அக்காலத்தில் அரசன் கிலேசப்படாமல் நமக்கென்ன குறைவென்றிராமல், பொருட்செல

வென்று பின்னடையாமல் குடியானவர்களுக்குத் திடஞ்சொல்லி, வருணயாகஞ் செய்வித்து, சிலவு முதலிய பொருள் விதை, மாடு, இவைகளெல்லாம் துணைக்கருவி உதவிபண்ணி எரு, தழைமுதலானவைகளிட்டு ஏரி, குளங்கள் தூறு வாரி பார்வையிட்டுக் கீழ்நீர்கொண்டிறைப்பித்து பூமியைச் சேடைசெய்து உழுது பயிரிடும்படிக்கு முயற்சிபண்ணி, அந்த வருஷத்தில் வந்தபலனைக் குடியானவர்களே அநுபவிக்கும்படிக் கொடுத்து, மறுவருஷப் பலனில் பாதியிறை வாங்கி, அப்பாலோங்கியபோது தன் கடமையைப் பெறவேண்டும். அரசருக்குப் பூமியே ஆதரவு. பூமியே, பிராணன் பூமியே சாமி பூமியேகதி, இதுவே அரசருக்கு விதி. இதை உன்னுள்ளத்திற் பதி, ஓ அதிபதியாகிய அரசனே? தரித்திரமில்லாமற் காப்பது பூமி, பசித்தவர்க்கு பாங்காயளிப்பது பூமி, இயாகாதிவேத முதலியவற்றிற்கு ஆதாரபூதம், பூமி. ரோகம் பிணி பீடைமுதலியவற்றை நீக்கிவைப்பதுபூமி, வேறொருசம்பத்தாலில்லாமல் சகலசம்பத்தையுங் கொடுக்கிறதுபூமி. பஞ்சபூதாந்திரிய விஷயராகிய பேர்களுக்குப் போகத்தையுண்டாக்குவது பூமி, பஞ்சேந்திரிய நிக்கிரகம் பண்ணியபேர்களுக்குப் பதிவிபெறுதற்காதாரமாகிய தபசை வளர்ப்பது பூமி. மும்மூர்த்திகளும் வந்து தங்களுக்காக வேண்டிய காரியத்தை முடித்துக்கொண்டு போவதற்கு முக்கியமாயிருப்பது பூமி, இப்பேர்ப்பட்ட பூமியை யாளுகிற இராஜன் சகலகீர்த்தியும் பிரதிஷ்டையும் அடையப்பெறுவான், இன்னம் இந்தப்பூமியின் பெருமையைச் சொல்லுகிறேன், அருமையாய்க் கேளும்! பொன் வெள்ளிமுதலான நவலோகங்களு முண்டாக இடமாயுள்ளது; பொன்மலை, வெள்ளிமலை கருப்பொன்மலை இது முதலிய வெகுமலைகளிருக்கின்றது. பற்பல கோடி மரங்கள், கொடிகள், செடிகள், ஔஷதாதிகள் சஞ்சீவிகள் பிரபலமான காடுகளுள்ளது இரண்டுகதிர், மூன்றுதேவர், நான்குதிசை ஐந்துபூதம் ஆறுமதம் ஏழுசமுத்திரம் எட்டுமலை ஒன்பதுகிரகம் பத்துதிக்குப் பதினொரு உருத்திரர், பன்னிரண்டு சூரியர், இதுகளுடனே மூன்றுகோடி அறுபத்தையாயிரந் தீர்த்தங்களையும் அநேகம்பறவை மிருகங்களையும், தன்னிடத்தி லுண்டாயிருப்பது இராஜராஜர்களுக்குக் கோட்டை, கொத்தளம் கொம்மை, அகழ் முதலியவற்றை தன்மேல் வைத்துக்கொண்டு இராசாக்கள் தன்தேகம் போல் காப்பது. எவரெவரெப்படி நினைத்தாலும் அவரவருக்கு அனந்தம் விளைப்பது. சகலபண்டங்களுந் தன்னிடத்திலுண்டாக்கித் தாய்போலருந்திவைத்து, எண்பதினாயிரம் யோசனை கனத்தை

யுண்டயது. இப்பேர்ப்பட்ட பூமியை ஆளுகிற அரசனுக்கு என்ன குறையுண்டாகும். அமராவதி அளகாபுரிக்குச்சரியாயிருந்து அரசாட்சிசெய்ய உதவிபண்ணியிருக்கும், பூமியை உழுது பயிரிடுங் குடிகளை தன் பிராணன்போல் காப்பாற்றிக்கொள்ளல், இராஜன் கடமை. இவ்வாறு காக்கின்ற அரசனுக்கு கோட்டை, கொத்தளம், கொடி, முடி, வாழ்வு சம்பத்து, எல்லாம் நன்றாய்ப்பலிக்கும். பூமியைப்பாழ்ப்படுத்தி பூபாலகரை வருத்தப்படுத்தினால் பொக்கிஷங் குறையும். இலட்சுமி விலங்கிவிடுவாள். பூதயவுடைய இராஜனே, புண்ணியவானென்று பேரெடுக்கவேண்டும். மேலும் தர்மதான சாமர்த்தியத்தில் மேற்பட்ட அரசனாகயிருந்தாலும், செல்காலம் நிகழ்காலம், எதிர்கால மூன்றுகாலமு மறிந்து மொழியும் பொருள் மொழியாப் பொருள் தெரிந்து பரிந்து சொல்லத்தக்க நன் மந்திரியிருக்கவேண்டும். மந்திரியைவிட்டு இராச்சியபாரம் பண்ணுவானேயாகில், மைதீட்டிய கண்களையுடைய கன்னிகையானவள் கலியாணம் பண்ணிக்கொள்ளு முன்னமே பெற்றபிள்ளை, குலவழி நிறையிலுங் கோத்திரமுறையிலும் ஏற்றுக்கொள்ளும் யோக்கியமில்லாமல் எப்படி யிழிவுபடுவானோ, அப்படிப் போலாவான். மந்திரியில்லாதமன்னவன் தந்தியற்றவீணையைப்போல் அரசாக்ஷி பிரயோசனப்படாது. மந்திரித்தனத்திற்கு நூலாராய்ச்சி சாந்தகுணமில்லாத பிராமணனும், க்ஷத்திரியனும் வைசியனுங் கூடாது. சகலகலைவல்லவனாய் ஞாயாஞாயந் தெரிந்த நல்லவனாய், விவேகமுயர்ந்த கல்விமானாய் முன்பின் யோசிக்கத்தக்க சாந்தஸ்தனாய்ப் புத்தி-யுத்தி பொருண்மை பெருமையுடையவனாய்ப் பெரியவர்களை நேசித்திருப்பவனாய்க் குலதோஷங் கூறாதவனாய்க் குணபூஷணனான வைசியனே மதிமந்திரி கிடைப்பானாகில், அந்த அரசன் ஆகாமிய, சஞ்சிதத்தி லழுந்தாமல், பிராரத்துவ கன்மத்தை உடனுடனே புசித்து, பூமண்டலமெல்லாம் ஒரு பொற்குடையிலாண்டு, நல்ல கதியைப் பெறுவான். ஆனது பற்றி, மந்திரியைத் தாய்போற் பரிந்து அரசுபுரிந்து வருவானாகில், அவ்வரசன் சேய்போல் மகிழ்ச்சியாய் வளர்ந்து வருவான். தாய் வேறு பிள்ளைவேறா யிருந்தாலும், இவ்விருவருக்கு மத்தியில் பட்சமுள்ளமனதே சாக்ஷியா யிருக்கவேண்டும். மேலும் இராஜன்புருடனைப்போலும், மந்திரி நல்லபதிவிரதையுடன் கூடிவாழும் பாங்குடைய ஸ்திரியைப்போலும் இருந்து, தாழ்வில்லாபாக்கியமோங்கி சுகபோகத்தை யநுபவித்துக் குடிபடைகளென்னும் புத்திரசம்பத்துடன் வியாதியாகிய சத்துரு செயம்பண்ணி நல்ல கதியைப்பெறு

வார்கள். பதிவிரதையல்லாத துர்க்குணமுள்ள பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொண்டு இல்லறதருமமுங் கெட்டு, இன்பசுகத்தையும் விட்டு, தரித்திரமேலிட்டு, நோய்க்குடன்பட்டு, விரகத்திலழுந்தி, நரகத்தில் விழுவார்கள். இத்தன்மைபோல் புராணசாஸ்திரந் தெரியாமல் உலக நடை, நொடி பாவனையுணராமல், வஞ்சநெஞ்சமுடைய மனத்தரை பொருள்வாக்கொண்ட பித்தரை புண்ணியத்திற்குகேடு நினைக்கும்பேரை பொருளறியாமற் பேசும் பெருவாயரையும் குருடன் நொண்டி மூடம் செவிடர்களை மந்திரிகளாகவைத்துக் கொள்ளக்கூடாது. அப்படிவைத்துக் கொண்டால் அடங்காப் பிடாரியைப் பெண்டு வைத்துக்கொண்ட அல்லலாய் முடியும். அப்பேர்ப்பட்ட மந்திரியையுடைய அரசனுக்கு அபஜயமும் வறுமையும் மனோவியாதியும், அருப்பிணியும், தேருத்துணிவும் நேரிட்டு அப்பூமியாளுகின்ற இராஜனும் மந்திரியும் நரகத்தி லழுந்தி மறுமையி லீனப்பிறவியை யடைவார்கள். ஆதலால், இதற்குத் திருஷ்டாந்தமாக ஒருகதை சொல்லுகிறேன் கேளும்.

"அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கோளல்."

## 15. துன்மந்திரிகளால் வந்த விபத்துவ முரைத்தல்.

தருமக்கடவுளின் தனயனே? சகல வளப்பமுந் தழைத்திருக்கும் கோசலதேசத்தை யாண்டுவந்த கேமதரிசியென்னும் இராஜன் நீதி செலுத்தி இராச்சியபாரம்பண்ணி வருகிறனாளில், அவனிடத்தில் துன்மந்திரிகள் சேர்ந்து மிகுந்த பாபிகளாய்த் தெளிவில்லாதவர்களாய்த் தெரியாதவர்களாய் பொறுமை, ஆசை, கோபம், லோபம், இவைகள்மேலிட்டு அதர்மங்களைச்செய்து இராஜனுக்குத் துர்ப்புத்தி கற்பித்து, உலகமெல்லா நிந்திக்கும்படியாய்க் குடிபடைகள் அழுதகண்ணீரும் சிந்தையுமாய் அலையும்படிக்குச் செய்து, வழக்கழிவுபேசி இலஞ்சம் பரிதானம் வாங்கி ஊரையடித்து உலையிற் போட்டு, மரத்தாலி கட்டி, வாயாற் பகட்டி, இராஜனுடைய பெருமை புகழ்முதலியவற்றைப் போக்கடித்து, அரசனை அபகீர்த்திக்கு ஆளாக்கி, ஆழமாகிய பாழும் பாவக்குழியிலே அழுத்தி விட்டார்கள். அதனால், மழை பெய்யாமல் மாதவங் குறைந்து மகங்களடங்கிப் பயிர்களுங், தீய்ந்து குடி, படைகளு மோய்ந்து, பதிவிரதா

மார்க்கமும் கெட்டுப் பிராமண கிருத்தியமும் விட்டுப் பல பண்டகளுங் குறைந்து, பாபம் மென்மேலும் மிறைந்து, பயம் வியாதிசோபம் துர்மரணமேலிட்டு நாலெட்டறமும் நலிந்து நாடும் நகரமும் பட்ட பாட்டை நாம் சொல்லிமுடியாது. இத்தனை யிடையூறும் விதரணையில்லாத மந்திரிகளால் விளைந்தது. அப்படி யிருக்குங்காலத்தில், இந்தக் கேமதரிசியென்னும் இராஜனுடைய தந்தையி னிடத்தில் மந்திரியாயிருந்த காவலனென்பவன், தன்னுடைய இராஜனிறந்தபிற்பாடு கூடவிருந்து ஈமவிதிக்கடன் முதலிய கருமங்களை நடாத்தி இந்தக் கேமதரிசியென்னும் பிள்ளைக்குப் பட்டங்கட்டிவைத்துவிட்டு, இனி யொருவரிடத்திலும் தான் உத்தியோகம் பண்ணத்தக்கதல்ல வென்று, பிரபஞ்ச ஆசையை வெறுத்துத் துறவறத்தையடுத்து, மகாபெரியவராய்க் காமாக்கினியை யவித்துத் தாபாக்கினியை வளர்த்து, காட்டிலே தவமிழைத்துக் கொண்டிருந்தார். அந்தப் பெரியவர் ஒருநாள் கண் விழித்து நமது ராஜாவின் பிள்ளை எப்படி யிருக்கின்றானோ, இராஜாங்கம் எவ்விதமாய் நடத்துகின்றானோ, நாடு நகரம் செழிப்பாயிருக்கிறதோ; நால்வகைச்சேனைகளும் நானிலத்தவரும் நன்மைகொண்டாடுகிறார்களோ இல்லையோ, அதைப்போயறிந்து வருவோமென்று சிலதபசிகளுடன் புறப்பட்டுக் கோசல நாடு குலாவிய அயோத்தியாபுரி பட்டணத்துக்கு வந்து, மந்திரிமாரிடத்திலேயும் பிரதானிக ளிடத்திலேயும் சேனாபதிகளிடத்திலேயும் பூர்வீகமா யிருக்கும் பெரியவர்களிடத்திலேயும், பிராமணக் குருக்கள் சாஸ்திரிகளிடத்திலேயும் போய்ப்பழகி சஞ்சரித்து, அனுபவங்களினாலேயும் கேள்விகளினாலேயும் விசாரிக்கு மிடத்தில், எல்லோரும் பாவிகளாய் அன்னியாயக்காரர்களாய், பாரபக்ஷம் பேசும் பதிதர்களாய், கனவிலுந் தருமத்தைக் கருதாதவர்களாய், நீதி நிறையையடுத்த இறையைக் கெடுத்து தாங்களு முறையைவிடுத்து, துறைதப்பி யிருக்கின்ற மந்திரிகளின் துர்குணத்தை யறிந்து துயரமடைந்து, ஐயோ? பாவிகளா? இராஜனைக்கெடுத்து நாசப்படுத்தினீர்களா? ஒழுக்கமுதலிய வருணாச்சிரமதருமம் ஒடுங்கிப்போயிற்றே; ஆ! ஆ! என்று விம்மியழுது அகங்கலாய்த்து இந்தப் பிள்ளையினாலே இவன் தந்தையாகிய பெரிய அரசனும் நரகம்புகுவானே, நாம் மந்திரியா யிருந்து துரைத்தனம் பண்ணும்போது சேர்த்துவைத்த பெரிதாகிய தருமமெல்லாம் விருதாவாய் போய்விட்டதே, இதற்கெப்படி என்ன செய்யலாம்; தருமத்துடன் கிரமமாக நடக்கும்படியாய்ச்

செம்மைப் படுத்த வேண்டும் புண்ணியவானுடைய சோற்றைப் பூரணமாகப் புசித்த நன்மைக்காக, இந்தப் பிள்ளையினளவில் நாம் பாடுபடவேணுமென்று பூர்த்தியாய் நினைத்து, தமது தபோ மகிமையால் அலங்கார முள்ள ஒரு காக்கையை ஏற்படுத்தி, அதற்கு விலையுயர்ந்த ஆபரணங்களினால் அலங்கரித்துப் பட்டுறை பூட்டிய வட்டத்திலேந்திக்கொண்டு, பட்டணத்தி லுண்டாகியபழைய மனிதர்களிடத்தி லெல்லாம் போய்த் தான் பழைய மந்திரி யென்று, அவர்களறியாமல் உபசாரஞ்செய்ய மரியாதை யுடன் இந்தக்காக்கையைக் கண்டீர்களா ? இதனுடைய மகிமை யறிவீர்களா ? நான் சொல்லுகிறேன் கேளுங்கள், வேதாகம சாஸ்திர புராணாங்கற்ற வித்வான்களுக்குந் தெரியாத ரகசியங்களைச் சொல்லும். அவர்களின் மனதில் நினைத்த நினைப்பெல்லாந் தெரிந்துக்கூறும், மனவஞ்சனை சூது, வாது, பொய், கரவட முதலிய இம்மார்க்கமெல்லாம் கண்டுகொள்ளும். பாபபுண்ணியங்களைப் பகுத்து விள்ளும். பாலும் அன்னமும் உட்கொள்ளு மென்று, நாடு நகரங்களிற் காட்டிவரும்போது, ஒருவன் கூட்டிக்கொண்டுபோய் இராஜசமுகத்தில் விட்டான், அங்கே இராஜனும் மந்திரிமார் முதலாகிய சகலரும் நிறைந்திருக்கின்றார்கள். இந்தப் பெரியவர் அந்தச்சபையைப் பார்த்து, ஓ! இறைவனே ? முறைபிறழாத மந்திரிகளே? இந்தக் காகத்துக்குத் திரிகாலமும் தெரியும், ஆகலால் இந்தக்காக்கையை என்மனோவாக்குச் சரிப்பட்டிருந்த பெரிய இராஜனுடைய பிள்ளையான இளவரசனுக்குக் கொடுக்கிறேன். இதனால் ஒருவிவகாரங்களில் சாக்ஷி சாதக முதலியவைகளை விசாரித்து சஞ்சலப்பட வேண்டுவதில்லை, சங்கதிகளைச்சொல்லி என்ன சொல்லுகிறாய், காகமேயென்றால், பளபள வென்று உண்மையாய் இன்னதிக்கில் சத்துரு உண்டு. இல்லையென்று சொல்லும். இது ஞாயம் அனியாயமென்று காட்டும். மந்திரிகளிடத்திற் மாறுபாடிருந்தால் அவர்களின் பிராணனைமாட்டும். வஞ்சக நினைத்தபேரைத் தூரத்துலைத் தோட்டும். திரவியக்கொள்ளை யடித்தவரை எமனிடத்திற் கூட்டும். புண்ணிய மறந்தவர்களைப் பெருமை குறையவாட்டும். பொருள் வாக்கொண்ட பேர்களை மருள் கொண்டலையப் பண்ணும். இராஜத்துரோகம், கர்த்தத்துரோகம், வெகுஜனத் துரோகம், சிநேகத் துரோகம், செய்யும் போகளைத் தெருவி விழுத்து விடும். எக்காலு முக்கால முணருங் காகமென்று இதற்குப் பெயர். நடைதப்பின பேரைக் காட்டிக்கொடுக்கும். சீர்தப்பின் பேரை ஆட்டிக்கெடுக்கும். இனி இதையறிந்து

பிழையுங்க ளென்று சொல்லி, அந்தக் காக்கையை இராஜ கொலுக் கூடத்தில் வைத்து, இராஜ புத்திரனுக்கும் புத்தி மதி சொல்லி, தன் பிள்ளைபோல் அன்பு பாராட்டி ஆசீர்வதிக்க, அந்த இராஜ குமாரன் தன் தகப்பனைக் கண்டதுபோற் களித்துச் சரணம் புகுந்து, சகல வித மரியாதையும் உபசாரமுஞ் செய்து அவரை அனுப்பினான். அந்தப் பெரியவர் அவ்விடம் விட்டுப் பிரிந்து காட்டுக்குப் போய் விட்டார். இப்பால், அன்றிராத்திரி பாபிகளாகிய மந்திரிகளும் பதர்களாகிய தந்திரிகளுஞ் சேர்ந்து, அந்தரிஷியானவர் இந்தக் காக்கைக்கு எல்லாந் தெரியுமென்று சொல்லிப் போயிருக்கிறார். ஒருவேளை நம்முடைய துர்நடத்தைகளை யெடுத்து சொல்லுமாகில் இராஜன் கோபித்து இவ்வாறுகவா என்னைக் கெடுத்தீர்களென்று, இரைந்து விரைந்து வெட்டிப் போடக் கட்டளையிடுவான் நமது பெருமை கெட்டுப்போம், ஆகையால், இந்தக்காக்கையை கொல்லுவது நல்லதென்று ஆலோசனை பண்ணிக்கொண்டு, மிகுந்த தந்திர உபாயமாய் ஒதுங்கிப் பதுங்கி வந்து காகத்தைப் பிடித்து கழுத்தை யொடித்து அதனுயிரை முடித்துப்போட்டு, ஒருவருக்குந் தெரியாமல் அவர்கள் ஓடிப் போய் விட்டார்கள். பொழுது விடிந்த வுடனே, கிருபைக்கடலாகிய ரிஷீஸ்வரன் காலக்கடனை முடித்துக் கொண்டு. இராஜசபைக்கு வந்து கழுத்து முறிபட்டு இறந்துகிடக்கிற காகத்தைக்கண்டு, மனவருத்த மாய் வருந்தி, இந்த வேலைசெய்தவர்களை கியானதிருஷ்டியால் அறிந்து, இனி நாம் சும்மா யிருக்க லாகாது, பிரமாதம் விளையும், மோசம் வரும், அரசனுக்கு நாசம் வரும், பட்டினமுழுகிப் பாழாய்ப்போய் விடும், இவ்வரசனுடைய சந்ததியாரும் நரகத்தில் விழுவார்கள் அப்படிக் கெல்லாம் வரவொட்டாமல் காப்பாற்றவேணுமென்று கருதி. இளவரசன் சிங்காரவனத்திற்குப் போகும்போது, தானுங்கூடத் தொடர்ந்து அடர்ந்த வனத்தில் சந்தடியில்லாமல் தனித்து இளவரசை ஆசீர் வதித்து கடாட்ச வீக்ஷண்யங் காட்டி, இவர் தந்தை நாளையில் தான் மந்திரியாயிருந்த தர்மமெல்லாஞ் சொல்லி, அப்பா இப்போது உன்னிடத்திலிருக்கிற துஷ்டமந்திரிகளால் உன்னிஷ்ட காமியார்த்தங்களை யிழந்து போகிறாய். உலகத்தார் உன்னைப் பொல்லாதவனென்று தூறுகிறார்கள். சும்மாயிருக்கிற உன்தலையின்பேரில் பழியேற்றி விட்டுகிறது, தருமத்தை மறந்ததினால் மாத மும்மாரியாகிய மழைமாரி குன்றிவிட்டது. உன்மந்திரிகள் உன்னை வஞ்சித்து உள்ளடக்கிப் போட்டுத் தாங்கள்

வெளிப்பட்டு வேண்டிய திரவியங்களைத் தேடிக்கொண்டார்கள். ஊரை அநியாயம் பண்ணிவிட்டார்கள், அவர்களா லுண்டாகிற பாபமெல்லாந் தீர விசாரியாத மன்னனைச் சாரும். ஆதலால் உன் னைப் பாபம் பிடித்துக்கொண்டது. இன்னம் அனேகங் குறைக ளுண்டு. இதுகளை யெல்லாங்கண்டு என்மனந்தாளாமல், உங்கள் தகப்பனிடத்தில் உண்டு வளர்ந்த உண்மையைக் கொண்டு சீர் திருத்த வேண்டுமென்று வந்து, ஒரு காக்கையைக் காட்டி அதற்குக் காலத்திரயமுந் தெரியுமென்று சபையறியப்பேசி வைத்து விட்டு வந்தேன், இந்தத் துஷ்டமந்திரிகள் தங்களுடைய துர்னடைத்தைகளை அக்காகம் ஒருவேளை உனக்குச் சொல்லிவிடப் போகிறதென்கிற அச்சத்தினு லதைக் கொன்றுபோட்டார்கள். இப்பேர்ப்பட்ட பாபிகளுக்கு முன் நீ எப்படி பிழைக்கப் போகிறாய் இவ்வித இராச்சியபரிபாலனம் பண்ணுகிறவர்களுக்கு மனம் எப்படி நிம்மதியாயிருக்கும் ஒருவேளையிருக்கிற சிந்தை ஒருவேளையிராது ஏதாகிலும் ஒரு காரியங்களைப் பேசவேண்டிவரும், அப்போது இந்த மந்திரிகளாகிய பாபிகள் வசனுபி சேர்ந்துக் கொன்றுவிடுவார்கள். ஆதலால், இந்தமந்திரிகள் உன்னிடத்திலிருக்கலாகாது நீ இவர்களை நீக்கிவிடுவதே மேலாகிய பாக்கியமாக எனக்குத் தோற்றுகிறது. அதன்றியும், உனக்குப் பட்டமான அன்றுமுதல் இன்றையவரையிலும் இவர்கள் நடத்திய அதர்மங்கள் இன்னின்னதென்று எடுத்துக்காட்டி, இதுவரையிலும் நீ யடைந்த துன்பமெல்லாம்போக, இனிமேலாகிலும் நல்ல மந்திரிகளை வைத்துக்கொண்டு இகபரானந்தத்தைப் பெறுவை யென்று மகாரிஷி சொல்ல அரசன் அந்த முநிவன் வார்த்தையைக்கேட்டு, தேவரீர்! என்னுடைய தந்தைக்குரிய பெரியமந்திரி யாகையால், எனக்கு ஆசிரியராயிருந்து கடைத்தேற்ற வேண்டுமென்று, பணிந்து ஓ! சுவாமிகளே ? எனக்குப் புத்திமதி சொல்லிக்கொண்டு சிறுதுநா ளிவ்விடத்திலிருந்து என்னை பாதுகாத்து வருவீராகில், நானும் பக்குவகுணனுவேன் பிரதான மானபாபரகிதனுய், என்றும் பாத்துவவிசாரணை செய்வேன். தேவரீர் பாதத்தை மறவேன் என்று; பற்பலவிதமாகப் பேசிப் பணிந்தான், அந்த இராஜகுமாரனை எடுத்து அணைத்து முத்தமிட்டு அப்பா! அப்படியே ஆகட்டும். நீ இனிமேல் எவ்விதமாவது அந்தப் பாபிகளாகிய மந்திரிமார்களை ஒழித்துப்போடு சாக்கிரதையா யிருந்து நீதிசெலுத்துவது, நெருப்பாறு மயிர்ப்பால மென்று நினைத்துக் கொள்ளென்றுசொல்லி, அவனுக்குத் தெளிவுபிறக்கும் படி

யாய் நாளுக்குநாள் நல்லறிவு மேலிடும்படி தேற்றிவிட்டார். அன்று முதல் மனக்கவலை யுடையவனுய்ப் பொல்லாத மந்திரி மார்களின் பொய், பொறாமை, வஞ்சனை, முதலிய தீங்குகளை யறிந்து, அவர்களுக்கே மேவுதல் செய்து நாள்தோறும் ஒவ்வொருவனு யகற்றி விட்டான். இப்பால் இந்த ரிஷீஸ்வரருடைய நீதியைக் கேட்டு நெறிமுறை மீன்று தண்டுகள் கூட்டி அவர் திருவடிநிழலை மறவாதவனுய், உலகத்தார் கொண்டாடவும் சத்துருக்களழிந் தோடவும் தர்மதான நீளவும் செங்கோல் செழிப்பாகவும் தேவதைகள் கூடவும், பிரபலமாய் நீதி விசாரணை நெறியாய் நடத்தி நாடுகள் செழிக்க நல் மழை பொழிய நான்கு வருணருஞ் சிதையாமல் பத்தினிமார்களிலே குறையாமல் இவ்வரசனது கீர்த்திமூன்று, லோகமும் பூர்த்தியாகப் பகைவர்வந்து ஒதுங்கப் படைகளும் வந்து நெருங்க நித்திய சோபன மங்கள புத்திரபாக்கியம் சத்தியவாக்கியம் இவைமுதலிய யோக்கியங்களெல்லாம் உண்டாகி, மாதம்மும்மழை பெய்து சிலாக்கியனுக வாழ்ந்துவந்தான். ஓ! தருமனந்தனு? பிரம்மாவைப்போன்ற வேதமுதல்வனுலும் துணைக்காரணமாகிய நன்மந்திரி யில்லாவிட்டால் இராஜனுக்குப் பிரதிஷ்டை இல்லை. ஆனால் யோக்கியமான நடத்தையும் சாந்தகுணமுள்ள மந்திரியுமிருக்க வேணும். இப்போது நான் சொல்லி வந்த திருஷ்டாந்தத்தில் சாம்பிரதாயனுகிய மந்திரி, இந்த அரசனுடைய தந்தை யிடத்திலும் அனேகநாளிருந்து அப்பால், தவம்புரிந்து ஆத்மலாபமும் பெற்று இப்பால் தன்னுடைய அரசனது புத்திரனுக்குந் துணையாயிருந்து காப்பாற்றினுன். ஒரு நன் மந்திரியினுல் அவன் பிறந்தகுலமும், அவனுக்குப் புகுந்த மனைவியின் குலமும், தன்னை இரட்சித்த பெரிய இராஜாவின் குலமும் அவ்விராஜனுடைய புத்திரமித்திர சந்ததி வருக்கமுந் தழைத்த புண்ணியத்தைப்பாரும், புனிதத்தை யோசியும், பழிபாபநீங்கிய பாக்கியத்தைப்பாரும் என்று வீஷ்மோச் சாரியர் புகன்று, மேலும் சொல்லுகின்றுர் ஓ! புண்ணியவானே, இப்பேர்ப்பட்ட மந்திரி கிடைத்திருந்தாலும் பெரியவாளுடைய சகாயமிருக்க வேண்டும், அதெப்படி யென்னில்:—

"நல்வினத்தினூங்குந் துணையில்லை தீயினத்தீ
கல்லற் படுப்பதூஉ மில்."

## 16. பெரியாரைத் துணைக்கொள்ளும் பலன்.

நான்கு, வேதம் ஆறு, சாஸ்திரம் அறுபத்துநான்கு கலைக் ஞானம் முப்பத்திரண்டு உபநிடதம் பதினெண்புராணம் ஆகமாதி முதலிய யாவுமுணர்ந்த பெரியோரைத் துணைகொள்ளல் வேண்டும், வீண்காலம் போக்காமல் சத்காலக்ஷேபம் பண்ணவேண்டும், நல்ல நீதிநெறி முறைமைகளைத் தூண்டிக் கேட்கவேண்டும், தருமம் தானம், தவம், தயை, சாந்தம் இவைகளை யெல்லாங் கேட்டுத் தெரிந்து கொள்ளல்வேண்டும், மந்திராலோசனையுடன் தன்மதியையுங் கூட்டிப்பார்த்து, இது சரியோ, அல்லவோவென்று பெரியோர்கள் காதிலிட்டு அவர்களுடைய வாக்கினால் தெரிந்துகொள்ள வேண்டுவது முறைமை. மேலும், பெரியவர்கள் கிடைப்பது அருமையாயிருக்கும் அப்படிக் கிருந்தபோதிலும் எந்தப்பாடாகிலும் பட்டுத் தேடிவிசாரித்துச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். அதேனென்றால், பெண்டுபிள்ளை, பந்து மித்திரர்கள் முதலான பேர்களெல்லாம் இவனுடைமையைச் சிலவழித்து சாப்பிடுவார்களே யல்லாமல் இவனைக் கடைத் தேற்றுவாரில்லை. இவனுக்கொரு ஆபத்துவந்ததானால், தாங்களுங்கூடவிருந்து அழுவார்கள், அல்லது தூரப்போய் விடுவார்கள். வகையும் சொல்லத்தெரியாது, நீர் நிறைந்தகுளத்தில் சேர்ந்திருக்கும் பக்ஷிகள் நீர்வறண்டால் நெடுந்தூரம் பறக்கும். அதிலிருந்த தாமரைகளோ நீருடனிறக்கும். நீர் சுரக்கும்போது மறுபடி யுண்டாகும். அதுபோல் பெரியோரைத் துணைப்பற்றியிருந்தால், நல்ல கேள்விகளினாலும் சாஸ்திரப் பயிற்சியினாலும் ஞானோபதேசமாய், திடச்சித்தங்கொண்டு, தெய்வநிர்ணயந் தெரிந்து இப்பிரபஞ்சம் பொய் யென்றறிந்து, உண்மையில் நின்று போகாதவிஷயங்களில் புத்திகெட்டலையாமல் நிலைபெற்று நெறிபற்றி நன்மையைப் பெறலாம். அப்பெரியோரென்பது எந்த வருணத்திற் பிறந்திருந்தாலும், அவர்களுக்குச் சாதிபேதமிராது. பெருமையிலும் பொன்னிடமும் நாட்டமில்லாமலிருப்பார்கள். நன்மை தீமைகளைச் சமமாய் நாடுவார்கள். தருமமும் சத்தியமும் தவறார்கள், அத்தன்மையாகிய தெளிவுடையவர்களை விட்டுப்பிரியாத இராசனிருப்பானாகில், அவனுக்குச் சகல காரியங்களும் வெற்றியாம். அப்படிக்கில்லாமற் போனால், உண்டதையுண்டு உடுத்தினதையுடுத்தி கண்டதைக்கண்டு களித்ததைக்களித்துக் கேட்டதைக் கேட்டுக் கர்ம

பூமிக்கிலேசத்திலழுந்தி, பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தங்களிலே பாதைப்பட்டு, ஆத்மக்கியானமில்லாமல் ஆணவமாயை காமியத்திலே தோய்ந்து, ஐம்புலன்வழியிற்பாய்ந்து, ஆறுபகையாற் காய்ந்து, மனமிருண்டு மண்ணாசை பெண்ணாசையிலழுந்தி மாய்ந்துபோய்விடுவான். ஆனதால், இப்பூலோகத்தில் பெரியோர்களுக்கு மிஞ்சின பதார்த்தமில்லை. உலகமென்பது உயர்ந்தோர்மாட்டு என்றபடியே உலகமென்பது உயர்ந்தோர் மயமாயிருக்கின்றது. ஈஸ்வரன் விளையாடுகிற இந்த ஜகத்தானது அந்தப் பெரியவர்களுக்காகவே யல்லது மற்றப்பேருக்கல்ல. ஜகதீசன் செய்யும் நன்மைகளெல்லாம் அவர்கள் நிமித்தமே. சர்வத்திர சாதாரணமாய், நெல்லுக் கிறைக்கும் தண்ணீர் புல்லுக்குப் பாயுமாப்போல், பசுவாகிய ஜீவராசிகளெல்லாம் பெரியோர்களால் பிழைத்திருக்கின்றார்கள். அதுபற்றி இப்பிரபஞ்சசுகபோகவாழ்வை வைத்திருக்கிற பேராசையைப் பார்க்கினும், பெரியவர்கள்பேரில் அதிக அன்புவைத்து, அவர்கள் தன்னிடத்தில் விருப்பமாயிருக்கும்படிக்குப் போற்றி நடந்துகொண்டால் அவர்கள் எந்நேரமுங் கூடியிருந்து திவ்ய கியானந் தெரிவித்து, சாஸ்திரக் கருத்தை யேற்றிச் சஞ்சலச் சித்தத்தைமாற்றி, அக்கியானவிருளையகற்றி விடுவார்கள். பெரியோர்களின் கேள்வியும் சாவகாசமும் இல்லாமற்போனால், இராஜனுக்கு எத்தனைபலமிருந்தாலும், மற்றையருக் கெவ்வளவு செல்வமிருந்தாலும் உண்மைப்பொருள், தெரிந்து ஒருபோதும் நற்கதிக்கு அருகராகமாட்டார்கள். பின்னு முன்னும் துன்பப் பிறவிக்கிடமாய்விடும். இவைகளைப்பற்றி இராஜனுக்குத் துணைவலியும் தோள்வலியும் தூய்மையோர் கேள்வலியுமிருக்கவேண்டும். துணைவலியும் கேள்வலியு மில்லாவிட்டால் இராஜன் பொருட்பட மாட்டான். அதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு கதை சொல்லுகிறேன் கேளும்.

## 17. கேள்வியற்றதனால் நேரிட்ட விபத்து.

### அவிவேக ஒட்டகத்தின் கதை.

எமது குலத்திற்குரிய பேரனே? ஆகாயமேட்டை யளாவிய ஒருபெருங் காட்டில் கழுத்துநீண்டு, கொழுத்து, உயர்ந்து, பருத்த ஒட்டகமொன்று பிரம்மாவைக்குறித்து அநேகநாள் தபசிலிருந்து

அதனது பக்தி ரசத்தால் பிரம்மா சந்தோஷப்பட்டு அன்னவாகனரூடராய் காக்ஷிதந்து என்னைநோக்கி தவம்புரிந்ததென்ன வென்று கேட்க, ஒட்டகமானது விவேக சூனியத்தினாலும் அவசர குணத்தினாலும் பிரம்மாவைப்பார்த்து ஐயா, சதுர்முகனே தேவர் முதலிய மானுடர்களும் ஆச்சரியப்பட்டு நகைக்கும்படியான நூற்றன்பது யோசனை நீளமாக என்கழுத்து வளரும்படிக்கு அனுக்கிரகம் பண்ணவேணுமென்று கேட்க, அவ்வாறே ஆகுகவென்று கடாக்ஷித்து பிரம்மதேவர்போய்விட்டார். அப்பாலந்த ஒட்டகம் மேகமண்டலத்தையளாவிய கழுத்தையுடையதாய் மமதையடைந்து ஒருவருநிகரில்லாமல் காட்டிலிருக்கிற மிருகங்களெல்லாவற்றையும் கூட்டிக்கொண்டு தாட்டியாய் நின்று, மதோன்மத்தமாய்த் திரிந்துக்கொண்டிக்கும்போது ஒருநாள் விபரீதமான யுகாந்தகாலம்போல் காற்றுமழையுங்கலந்து இடியுமின்னலும் எங்குந்தடித்து தலைகாட்ட வொட்டாமற் சாடும் வேளையில் பிரமாண்டமாகிய தேகமும் நூற்றன்பது யோசனைதூரம் வளர்ந்திருக்கின்ற கழுத்துள்ள கொழுத்த ஒட்டகமானது ஒதுங்கியிருக்க இடங்கிடைக்காமல் மெத்தவுந் துக்கப்பட்டு பிரயாசத்துடன் நாலுபக்கங்களிலுமோட ஒரு பெரியமலையினிடத்தில் ஒரு சிறியகுகையிருக்கக்கண்டு அந்த குகைக்குள் நூற்றன்பது யோசனை நீளமுள்ள தன்கழுத்தை நுழைத்து இளைப்பாறியிருந்தது அந்தக்குகைக்குள் இதற்குமுன்வந்து புகுந்திருந்த ஒரு குள்ளநரியானது குகைக்குள்வந்து ஒட்டகம் கர்வித்து காட்டிலுள்ள சீவராசிகளைக் பயமுறுத்தி களிப்புற்றிருக்கின்றது நம்மைக் கண்டால் எப்படியுங் கொல்லுமென்று பயந்து, இந்த மலைக்குகைக்குள் வொளித்திருக்கிற நம்மைப் பிடித்து கடித்துக்கொல்ல, தலைநீட்டியதாகையால், இது நல்லசமயம் இதனுடைய கழுத்து சீக்கிரத்தில் திரும்பப்படாது இதற்குள்ளே தானே வேலை முடித்து விடவேணுமென்று ஒருபக்கமாகச் சாய்ந்து, அவ்வொட்டகத்தின் கண்ணுக்கு தெரியாமல் கழுத்துநரம்பைக்கடித்து, இரத்தத்தைக் குடித்து, பசியையு மொழித்து பகையையு முடித்தது, அவ்வளவு பாரியும் பலமும்பெற்ற ஒட்டகமானது ஒன்றுக்கு முதவாமல் இறந்துப்போய்விட்டது. பிரம்மாவைக்குறித்து தபசுசெய்து வரம்பெறுகிற வல்லமையிருந்தும் பெரியாரைத் துணைக்கொள்ளென்று பேரறிவின் பெருமையில்லாமையினால் பெறவேண்டிய வரத்தைப்பெற்று நெடுநாளிராமல் உயிர்நீங்கியது அதுவுமன்றி துணைவலியாகினு மிருக்குமாகில் நரியினுடைய பகைநேரிடாது காட்டிலிருக்கும் ஜீவராசி

களைப் பகையாக்கிக்கொண்டு உதவியொருவரு மில்லாமல் துணைவலியு மிழந்து, சோர்வில்லாமல் போர் முனையில் பூமியைசெயிக்கும் வல்லவராகிய ஸ்ரீராமன் திரிபுவன ஜயதானகிய தம்பியிருந்தும் கவிக் குலங்களைப் படைகூட்டிக் கொண்டுபோய் கடலைக்கடந்து அடலைத்தொடர்ந்து, இராவணவேட்டையாடி அயோத்தியில்வந்து, சிதையுடன் பட்டங்கட்டிக் கொண்டார். ஆனபடியால் எவ்வளவு வல்லமை சாமர்த்திய மிருந்த போதிலும் முக்கியம் துணைவலி யிருக்கவேண்டியது அந்த துணைவலிக்கு இவ்வளவென்று ஒருகணக்கிலலை சத்துருவின்பலம் எத்தன்மையுடையதோ அத்தனை வரைக்கும் விஸ்தாரம் துணைவலி வேண்டியது. பகைவர் மேலிட்டுப் பகைத்து வருங்காலத்தில் படைத்துணையானது கோட்டைவாயிற் கதவென்று குறிக்கலாம் இராஜனுடைய செங்கோல் காயமாயிருப்பதற்கு பெரியோர்களுடைய துணைவலியே துணையன்றி வேறில்லை இதைவிட்டு சின்னமனிதரை சேர்ப்பானகில் உடனே அரசனுக்குப் பின்னம்வரும் அதெப்படி யென்னில் சிறியகதை யொன்று சொல்லுகிறேன் கேள்.

## 18. அபஜெயமடைந்த அரசு பெரியோர்களால் மீண்டு கிடைத்த சரித்திரம்.

பூர்வத்தில் கோசல தேசத்தை ஆண்டிருத்த மதரிசி என்னும் இராஜன் இருந்தான் அவனிடத்தில் நேசமாயிருந்தவர் காலவ ரிஷியென்பவர். என்னேரமும் திரியாக்கினிவளர்த்துக்கொண்டு வைதீகத்தை யனுசரித்து லௌகிகங்களை யோர்வழி யேர்ப்படுத்தி சட்டதிட்டமாய் இராச்சியபரிபாலனம் பண்ணும்படிக்கு கூடியிருந்து குணப்படுத்தினபின்பு விட்டகுறையாகிய பழையவாசனையை நினைத்து தபசுபண்ணப் போய்விட்டார் அவருடைய சிநேகம்பெற்ற இராஜன் அனேக நாள் இராச்சியபாரம் பண்ணிக்கொண்டிருக்கு நாளில் முன்னல் துற்கிருத்தியத்தால் தள்ளிவிட்ட மந்திரிகளில் ஒரு துஷ்டன் மெத்தவும்வணங்கி இராஜனிடத்தில் வரப்போகவிருந்து விதேகராஜனை கலந்து கலகம் விளைவித்தான் அதனல் விதேகராஜன் அனேக தண்டுகளுடனே புறப்பட்டு வடவாமுகாக்கினியைப்போற் கொதித்து மதரிசிராஜன்பேரி லெதிர்த்தான் இந்த மத

ரிசிராஜனும் படைகளுட னெதிர்த்து, பயங்கரமான சண்டைபுரிந்து கைகலந்தகாலத்தில், விதேகதேசாதிபன் மேலிட்டு கோசலதேசாதிபனைக் குன்றச்செய்து அவனது கோட்டை கொத்தளமெல்லாம் பறித்துக்கொண்டு நாட்டைவிட்டோடப்பண்ணினான். அந்தக்கோசலதேசாதிபன் சகலசம்பத்துமிழந்து ஆரணியத்திற் புகுந்து, அலைந்துதிரிந்து வருந்தி வாடி முன்னே தன்தகப்பனிடத்தில் மந்திரியாயிருந்து துறந்து மாதவமிழைத்தவர் மறுபடியுந் தன்னிடத்தில் வந்திருந்து துஷ்ட மந்திரிகளை விலக்கி, இஷ்ட மந்திரிகளை நியமித்து தாமும் சிறிதுகாலமிருந்துபோயின காலவமகாரிஷி யெங்கேயென்று, காடெல்லாந்தேடி அவரைக்கண்டுபிடித்து நமஸ்கரித்து ஐயனே என்னுயிரைக் காக்குந் தெய்வமே என்குலமுதல்வனாகிய மூர்த்தியே துஷ்டமந்திரிகளால், நரகத்தில் விழுந்து முழுகிப்போக இருக்கிற என்னைக் கைதூக்கிக் கரையேற்றிவிட்டனை, என்ராச்சியத்தில் தருமத்தை நாட்டினை, இப்போது விதேகதேச ராஜன்மேலிட்டுப் போர்விளைத்து மெலியப்படுத்தி இராச்சியமுதலிய அரசாட்சியைக் கைக்கொண்டு என்னைக் காட்டிலோட்டினான் தேவரீருடைய திருவடியே தஞ்சமென்றடைந்தேன், என்னை இரட்சியும், ஐயாவென்றழுதான் அந்தரிஷியானவர் ஆசீர்வதித்து நல்லது பயப்படாமல் உட்காருமென்று தன்னுடனேகூட ஸ்நானம் பூசை சாப்பாடு முதலானது நடத்தி சிறிதுநாட் சென்றபின் இவ்வரசனைச் சுகப்படுத்தவேண்டுமென்று கிருபை கூர்ந்து தன்னுடைய சீடர்களுக்கு விதேகஇராஜனை அங்கே அழைத்துவரக் கட்டளையிட சீடர்கள் வணங்கி அவ்வாறேபோய் விதேகராசனை யழைத்துக்கொண்டு வந்தார்கள் வந்த அந்த இராசன், காலவமஹரிஷியைப் பணிந்து அவர்பாதங்களைக் கண்களிலும் சிரத்திலும் மார்பிலும் தோளிலும் ஒத்திக்கொண்டு முத்தமிட்டு நின்று நான் என்னபாக்கியஞ் செய்தேன் சுவாமி அடியேனொருவன் அடிமையா யிருக்கிறானென்று அன்புகூர்ந்து அழைத்த காரணம் யாதோவென்று அடிமேல் வீழ்ந்தான். அவனை யாதரித்து ஆசீர்வதித்து ஓ! அரசனே அளவில்லாத புகழ்பெற்ற பராக்கிரம சாலியாகிய என்னரசனுடைய குமாரன், எனக்கு மிகுந்த அன்பன் அந்த மகா ராசனை நீ எதிர்த்து யுத்தம்பண்ணி வெற்றி பெற்று அவனது இராச்சியத்தைப் பிடுங்கிக்கொண்டு துறத்தி விட்டதாய், அவன் என்னிடத்தில்வந்து முறையிட்டுக் கொண்டான் இனியாகிலும் நீ என்சொல்லுக்கிரங்கி உன் பெண்ணை யவனுக்குக் கலியாணம் பண்ணிக்கொடுத்து இருவரும் சிநேகமாயிருக்க

னென்று கித்தியாகித்திய வஸ்துவை போதித்து மங்களாசனம் பண்ணினர், அந்த வார்த்தையைக்கேட்டு மிகுந்த பயங்கரத்துடன் விதேகதேச இராஜனும் கோசலதேச இராஜனும் சிநேகர்களாய் காலவரிஷியின் வாக்கியத்தை வேதமாகக்கருதி சுவாமி தமதிஷ்டப்படிக்கு நடத்துகிறேனென்று வணங்கி விடைபெற்றுக் கொண்டு கோசலதேசாதிபனும் விதேகதேசாதிபனும் கைகோர்த்துக் கொண்டு வந்து நல்ல முகூர்த்த தினத்தில் தன்பெண்ணை கோசலதேசாதிபனுக்குக் கலியாணம் பண்ணிக்கொடுத்து அவருடைய பட்டிணமும், இன்னம் அளவிறந்த மண்மனை பொன்வெள்ளி பூஷணம் பொற்காசும் பொற்றுகிலும் போர்மோதிய யானை முதற்றோரா திபடைகளும் சீதனமாகக் கொடுத்து மஹாரிஷி வாக்கியப்படி மன்னர் முதலிய மகாசனங்களும் வேத வேதியரும் நாத கீத நாவலர்களுங் கொண்டாடிப்புகழ பொக்கிஷத்திலிருந்த திரவியங்க ளெல்லாவற்றையுங் கொடுத்து மகிழ்ந்திருந்தான். அப்போது கோசலதேசாதிபன் பெண்சாதியுடனே விதேகராஜனை வணங்கி விடைபெற்று தன்னுடைய பட்டணஞ்சேர்ந்து புகழுடையபோக வாழ்விற் சுகப்பெற்றிருந்தான் ஓ! தருமபூபனே? பூரியர் சிநேகத்தைப் போக்கிநீதியிந்த உத்தமர் நேசத்தை யடைவாராகில் அவர்கள் இயாவரானபோதிலும் மேன்பாட்டை யடைந்து வெற்றி பெறுவார்கள் இப்பேர்ப்பட்ட இராஜனைச் சிநேகித்திருக்கிற பேருக்கும் அவனுளப்பட்ட பூமியிற்பிறந்து பாபிகளாகிய பேருக்கும் பாபமானது; பஞ்சுப்பொதியிற் பட்ட நெருப்புப்போலும் இராசனுடைய நன்னெறித்துணை வர்ப்பாடு பாபங்களைப் போக்கிவிடும் அதற்கொரு கதை சொல்லுகிறேன் கேள்.

## 19. விவேகமுள்ள வேடன் இராஜனுன சரித்திரம்.

கேளும் தருமனந்தனு? இந்நாட்டைச் சார்ந்த பெரியகாட்டில் பாரியாத்திர மென்னும் பர்வதமொன்றுண்டு, அந்த மலையினிடத்தில் காப்பவ்வியனென்று ஒருவேடனிருந்தான் அவன் சாதியில் வேடனானபோதிலும் உத்தமகுணமும் சத்திய வசனமும் தருமங்குடிகொண்டமனதும் தயாளுவாகியும் சாந்தமும் பொறுமையும் அருமையும் விரதமும் தூய்மையும் மேன்மையு முடையவனுய் தாஷ்டீகபுஜபல பராக்கிரம தைரியம் படைத்தவனுமாய் வில் வித்தையில்

வல்லவன்; பொய்வசன மறியாதவன்; தான் அந்தமலையில் வாசம் பண்ணிக் கொண்டிருக்கிற காட்டுவழிகளில் மிருகபயம் வேடர்பயம் திருடர்பயம் இல்லாமல் காத்து தவசிகளுக்குத் தொண்டுபுரிந்து தன் குலாச்சாரப்படிக்கு பட்சிமிருகங்களை யடித்து உண்டு சுகித்து பெண்டுபிள்ளைகளுடன் வாழ்ந்திருந்தான். இவன் உத்தமனென்று பெரியோர்கள் கொண்டாடினார்கள். அக்காட்டிலிருக்கும் வேடுநியர் முதலிய தீயரும் மற்றைச் சாதியருஞ் சேர்ந்து இவனது நற்குணங்களைப் பார்த்தும் ஞாயங்களை யோசித்து நடுநிலைமையாய் பேசுதல் யாவருங்கண்டு நீரெங்களுக்கெல்லாம் இராஜாவாயிருந்து நன்மார்க்கம்போதித்து ஆசாரவிவகாரம் பாவபுண்ணியம் நன்மை தீமை சுபாசுபம் இதுகளெல்லாம் வரன்முறை யேர்ப்படுத்தி நாங்கள் நரகம்புகாமல் நற்பதவி பெறும்படியாகக் கண்டனை தண்டனையுடன் நடத்திவரவேண்டும். நாங்களுமது ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறோமென்று வேண்டிக் கொண்டார்கள். அவர்களைப் பார்த்து புருடலக்ஷண ம்மைந்த தாமரைக்கண்ணுடைய வேடன் சொல்லுகிறான் ஓ பிரசைகளே? நீங்களெல்லாந் தருமநீதிதெரியாதவர்கள். உங்களை யொருவழிப்படுத்தி ஆளுகிறபேர் ஒருவருமில்லை. ஆனாலும் நான்சொல்லுகிற வசனத்தைக் கேளுங்கள் எப்பேர்ப்பட்ட இடுக்கண் வந்தபோதிலும் உயிர்போங் காலத்திலும் என்னுடைய ஆஞ்ஞையைத்தட்டுகிறதில்லை யென்னுஞ் சத்தியம் உங்களிடத்திலுண்மையா யிருக்குமானால் நீங்கள் கேட்டுக்கொண்ட வண்ணம் நான் இராஜாவா யிருக்கிறேன் என்ன சொல்லுகிறீர்களென்று, பச்சைமேனியையுடைய வேடன் கேட்க, இவன் மொழியைக்கேட்ட அவர்கள் யாவரும் அவசியம் சத்தியமாய் அப்படியே அத்துமீறுமல் உமது கட்டுப்பாட்டி லிருக்கிறோமென்று சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணினார்கள். அப்போது சத்தியனாகிய வேடன் சந்தோஷித்து நீங்கள் என்னை இராஜாவாகயிருக்க கோறுகின்றதும் நான் சம்மதித்து நடப்பதும் இனி நடந்துக்கொள்வதும் எல்லாம் நம்மையாளும் ஆண்டவன் செயலல்லாமல் நமது செயலல்லவென்று நிதானித்து பாரியாத்திர பர்வதத்தினிடத்தில் ஒரு ஆசனமேர்படுத்திக் கொண்டு காட்டிலிருக்கும் வேடர்முதலிய பேர்களைக் கூட்டி சபை ஏர்ப்படுத்திவைத்து சிற்சில தருமத்தின் இயல்பெடுத்துச் சொல்லத் தொடங்கினன். அதாவது, கேளுங்கள் வெகு சனங்களே! இன்று முதல் பசுக்களையும் பிராமணர்களையும் வித்வான்களையும் தொழுது, அவர்களுக்குத் தொண்டுசெய்து போற்றுங்கள். அவர்கள் உங்

களைக் கோபித்தாலும் உதைத்தாலும முட்டினாலும் திட்டினாலும் அடித்தாலும் நீங்கள் பதிலுக்குக் கோபிக்கக் கூடாது. கோபத்தை நாயாகநினைத்துக் கட்டிவிடுங்கள் கோபமே பாவங்களுக்கெல்லாந் தாய் தந்தை சொற்கபதம் வேணுமென்கிற அக்கரை யிருக்குமாகில் தாய் தகப்பனை தமயனை தெய்வமென் றெண்ணி பூசித்து அவர்கள் சொல்லுக்கு எதிர்சொல்லாமல் வழிபட்டு நடவுங்கள். தன் பெண்சாதி பிள்ளைகளை அன்புடன் விசுவாசித்து போஷித்துவாருங்கள். பரஸ்திரீ கவனம் பண்ணாதீர்கள். அண்ணன் தம்பிமாருடனேயும் தாயாதிகளுடனேயும் நகமும் சதையும்போல் கலந்திருந்து வேற்றுமையில்லாமல் சாப்பிடுங்கள். எந்த விஷயத்திலும் ஒருவரை யொருவர் வஞ்சிக்கவேண்டாம். நன்மை தீமைகளின் விரோதமில்லாமல கலந்திருப்பது மன்றி பிறருக்கு இடங்கொடாதீர்கள் சத்துருவின்பேரில் சண்டை போடுகிறபோது சாந்தத்தையும் பொறுமையையும் தூரத்தள்ளி வையுங்கள். மற்றவேளையில் கோபத்தை நீக்கிப் போக்கிவிடுங்கள். நம்முடைய ஜாதியாசாரம் ஜீவ இம்சை செய்யுந் தொழிலானாலும் நமது பசிக்கும் குடும்ப சவரட்சணைக்கும் தக்கதாய் உயிர்வதை பண்ணிக்கொள்ள வேண்டியது சத்தியந் தப்பலாகாது, தலைபோகிறகாலம் வந்தாலும் பொய் பொறாமை, புறங்கூறல் அதிகவாசையுங் கூடாதென்று தருமசாஸ்திரம் போதித்து ஜாதிகட்டோலையுடன் பட்டோலை ஏற்படுத்தி அவ்வாறே அவர்கள் நல்லொழுக்கத்தை யனுசரித்த வேடராஜன் விதித்த விதியின்படிக்கு முறைதப்பாமல் ஒப்பாகநடந்து வந்தார்கள். அதனால் நீயவேடர்களெல்லாம் தீவினைகடந்து தெய்வலோகத்தில் ஸ்திரமாகிய நற்கதி புகுந்தார்கள். கேளும் தருமராஜனே! இராஜனுடைய நன்மைகளினால் ஜனங்களெல்லாம் நற்கதி புகுந்தார்கள். (அரசனெவ்வழி அவ்வழி குடிகள்) இதை நீ யறிந்துக் கொள்ளும் இனி தலைமையானவர்களின் சிநேகத்தைச் சொல்லுகிறேன் கேள்.

## 20. விவேகமுள்ள தலையாயார் நட்பு.

உயர்ந்த குலத்திலுதித்து சகல கலைக்ஞானமு மறிந்த பெரியோரென்று துதித்துப் பூசிதைபெறற புண்ணியவான்கள் ஒருவரைப்பிடித்து தந்திரம் பண்ணி சில பொருளைக் கிரகிக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டு நேசிக்கமாட்டார்கள். எந்தக் காலத்திலும் ஒருவனாற் பெரும்பொருளுக்கு இச்சை கொள்ளார்கள் ஒருவனிடத்தில்

வரும்போதே வீட்டில் உலைவைத்துப்போட்டு வாரார்கள் இப்பேர்
ப்பட்டவர்களுடைய சிநேகம் ஒப்பற்ற நேசமென்று யோசித்துக்
கொள்ளும் இவர்கள்தான் பனைமரம் போன்றவர்கள், மழை மேகம்
போன்றவர்கள் பிரதி யுபகாரத்திற்கு எதிர் பாரார்கள்; மேலும்
இத்தியாதி குணங்களையுடைய சர்வக்கியான முற்றின பேர்கள்
நான்கு வருணத்திலேயு முண்டு. பட்சிமுதலாகிய மிருகங்களிலேயு
முண்டு. எதிலே நல்ல ஆத்மக்கியானமும் ஈஸ்வரபக்தியும் வேத
விதியும் சத்தியபுத்தியும் தப்பில்லாம லிருக்கிறார்களோ அவர்களைத்
தெரிந்து சந்தோஷித்து பூமியிலுள்ள மானிட ஆக்கையில் பேரறி
வாளராகிய பிரபலரையறிந்து கன்மத்தாற் சாதியல்லது, சன்மத்
தாற் சாதி இல்லை யென்று கருத்தில் மதித்து, பாசிமுதலிய நுரை
யைநீக்கி நீரைக்கொள்வதுபோலும் உமியைப்போக்கி அரிசி பெறு
வதுபோலும் புல்லிதழை விலக்கிப் பூவைதரிப்பது போலும் எந்த
குலத்திற் பிறந்தாலும் (ஈசநடியார்க் கிழுக்கில்லை) என்பதுபோல்
புன்மைகளையகற்றி நன்மை பெறுவதுபோலும் குலபேதம் பாரா
மல் அவர்களிடத்திலுற்ற அதிசயமகிமை ஆசாமுதலிய நன்னெறி
நலத்தைப் பிரயோசனமாகக்கொண்டு அவர்களைப் பணிந்து அவர்
களிடத்திலுள்ள மேலாகிய விஷயங்களைக்கண்டு விசுவாசிக்க வேண்
டும் மேலும் சகலவித அலங்காரங்களுடனே வானமளாவிய இரதத்
தை ஒரு பொருட்டாய் மதியாமல் அதனது அஞ்சூராணியை ஆஸ்ப
தமாய்ப் பார்ப்பதுபோல குலத்தைமதியாமல் குணத்தை நிதானி
த்து சுகத்தைப் பெறவேணும் இப்பேர்ப்பட்ட நற்குண முடைய
பேர்களை சற்குணமுள்ள தெளிவினோரென்றறிந்துக் கொள்வார்
கள் அவர்களா லடையும் படியாகிய பேற்றை இன்ன தென்று நான்
சொல்லி யாற்றமாட்டேன் (அறக்கடவுள் குமரனே) இத்தன்மை
வாய்ந்த சிவக்ஞானம்பெற்ற முதன்மையானவர்களை சண்டைமுனை
யிற்சென்ற வீரனானாலும், பஞ்சமா பாவியானாலும், படியாத மூட
னானாலும், சமயவாதி யானாலும் சாதுசங்கமற்றவனானாலும் அவர்
களை கண்டவுடனே தெண்டனிட்டு தங்களுடைய துற்குணங்களைத்
துரத்திவிட்டு நற்குணம் பிறந்து தரிசனமகத்துவ பக்தியினாலே
கடைத்தேறிப் போவார்கள். அவர்களின் பகையைச் சம்பாதித்துக்
கொண்டாலும் பாக்கியமுண்டு: "அறிவின் பகையேனு மன்புசேர்
கட்பாம்." இதற்குச் சாட்சியாக ஒருகதை சொல்லுகிறேன் கேள்.

## 21. பகைத்தும் பதிவிரதா தருமத்தைக் காட்டிய புறாவின் கதை.

காருண்யமுள்ள பெரியோர்போன்ற ஒரு ஆரண்யத்தில் விழுதுவிட்டுத் தழைத்திருக்கின்ற ஆலமரத்தின் கிளையில் புருடனும் பெண்சாதியுமாகிய இரண்டு புறாக்களிருந்தது. அவ்விரண்டும் தங்கள் குடித்தன முறையில் குறைவறக்கலந்து மனதொருமையாய் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் வாசம் பண்ணிக்கொண்டு வருநாளையில், ஒருநாள் ஆண்புறா வெளியேபோயிருக்குஞ் சமயத்தில் பெண்புறா தன்நாயகனைத்தேடி தங்களினத்தின் கூச்சலின்படியே கூவிக்கொண்டு இருக்கும்போது ஒருவேடன் வில்லும், அம்பும் பிடித்து, மிருகமுதலிய பட்சிகளைக்கண்டால் தாட்சணிய மில்லாமலடித்து, நெருப்பிலிட்டுப் பொசுக்கிக் கடித்துத் தின்னும்படியாகிய; கடூரமானவன் என்னேரமும் கொலைசெய்யுந் தொழிற் குறிப்பினையுடையவன் சிறுகண்ணமைத்த முறுக்கிய வலையைக்கட்டி இரையைத் தெளித்து தீபகப்பட்சியை ஒன்றைகட்டிவைத்து உச்சுருக்குக் கயிற்றைக் கையிற்பிடித்துக்கொண்டு, தழைகளினாலே தன்னை மறைத்து பட்சிமிருகங்களுக்கு யமன்போல ஒளித்திருந்தான். அப்போது அம்மரத்திலிருந்த பெண்புறாவானது கண்ணிக்குள் கட்டிவைத்திருக்கின்ற காரியந்தெரியாமல் வேடன் பழகிவைத்திருக்கிற தங்களினமாகிய புறாக்களும் அங்கிருக்கக்கண்டு பறந்து வந்து வலையில் விழுந்து அகப்பட்டுக் கொண்டது. உடனே அந்த வேடனானவன் வலையின் சுருக்குக் கயிற்றை இழுத்து சுறுக்கில் ஓடிவந்து பெண்புறாவைப்பிடித்து பையிலடைத்து இன்னம் பட்சிகளைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, ஆகாயத்தில் மேகங்கவிழ்ந்து சூரிய கிரணமாறி பெருங்காற்று, மின்னல், பேரிடியுடனே நறநறவென்று பெருமழை பொழிய, இந்த வேடனுடைய தோற்பை நனைந்து, நடுக்கமும், குளிருமுண்டாகி சரீரம் சிலிர்த்து வெளுத்து, கையுங்காலும், விரைத்து, கண்ணு மனமும் இருண்டு, காது மூக்கும் அடைந்து, கருவிகரணங்களுங் குறைந்து, பூமியில் விழுந்தான். அந்த சமயத்தில் ஆண்புறாவானது ஆலமரத்திற்கு வந்து தன்னுடைய பெண்புறாவைத் தேடி, ஐயோ பெண்ணாயகமே பெண்கள் சிகாமணியே! பெண்கள் பெருமாளே! பெண்ணரசி! செங்காலன்னமே! செம்பொன் மன்னமே! மயிலே! குயிலே! மாடப்புறாவே யென்று மன

கொந்துவாடி அந்தோ! இந்தமழையிலெங்கே அகப்பட்டுக் கொண்
டாயோ! வழிதெரியாமல் நின்றாயோ! வருந்தி யென்னைத் தேடுகின்
றாயோ! வென்று வாய்வறண்டு புலம்பி எவ்விடத்திலுமோடி இலை
யிலையாய்த்தேடி இனி என்னாசை யெவ்வாறாமோ ஏந்திழையே என
க்கிசைந்த இன்பமேயென்று வேடன்கையி லகப்பட்டு வலைப்பையி
லிருக்கின்ற விதமறியாமல் வாய்விட்டலறி பேய்போற்பறதவித்
தது; அதனுடைய வருத்தத்தைப்பார்த்து அவ்வனத்திலிருக்கின்ற
மாதவரெல்லாரும் வருந்தி ஆஹா! பெண்ணாசையின் பெருமை இப
படிப்பட்டதோ வென்று நினைத்துக்கொண்டு பேதுற்றார்கள். மிருக
ங்கள், பட்சிகள், மரங்கள், மலைகளும், புண்ணீர்போன்ற கண்ணீர்
விட்டதுகள். இப்படிக்கு மண்ணும் விண்ணுங் கலங்கும் படியாய்
வருந்திய ஆண்புறா, சற்றுநேரம் மூர்ச்சையாயிருந்து தெளிந்து,
நெடுமூச்செறிந்து பின்னுஞ் சொல்லத் தொடங்கியது.

ஓ! பெண்ணாயகமே; நாம் கூடிய நாள்முதல் இன்னாள்வரையி
லும் ஒரு நிமிடமேனும் பிரிந்தறியோமே! நீயும் என்னைவிட்டு நீங்கி
னதில்லையே நாயகனே தெய்வமென்று பூலோக வழக்கத்தை நற்றி
என்னைப்பற்றி மிகுந்த உபசாரம் பண்ணியதுடன் உடலிரண்டும்
உயிரொன்றுமாக இருந்தோமே! உன்னைப்பிரிந்த என்னுயிர் இன்ன
மிருக்கின்றதே! உன்மனமென்ன கல்லோ ! இரும்போ ! ஆருடைய
துற்போதனையில் அகப்பட்டுக்கொண்டாயோ ! என்ன வகைமோ
சம் வந்ததோ ! மதிமயங்கிப் போச்சுதோ ! என்னை மறக்குங்கா
லம் ஆச்சுதோ! மழையால் உயிர்மாயவாச்சுதோ! உயிருடனிருந்து
என்னைச் சோதிக்கிறாயோ விருதாவிலென்னை வாதிக்கிறாயோ ! நீ
பிடித்தபிடியைச் சாதிக்கிறாயோ ! இல்லறதருமம் மறந்துவிட்டா
யோ! என்னைக்காணாதபடியால் இறந்துவிட்டாயோ! பெருங்காற்றி
லகப்பட்டுப் பறந்துவிட்டாயோ ! இப்பூமியின்வாழ்க்கையைத் துற
ந்துவிட்டாயோ ! இனி யொருக்கால் நானுன்னைக் காண்பேனோ !
இன்ப விளையாட்டைப் பூண்பேனோ தெய்வமே யென்று பெண்சா
தியை நினைத்துக்கொண்டு வருந்தி வருந்தி மருண்டு கிலேசத்துடன்
கண்ணீர் விட்டழுதது. இந்த ஆண் புறா புலம்புஞ் சஞ்சல வசனங்
களை யெல்லாம் வேடனுடைய சிக்கப்பையி லகப்பட்டிருக்கிற
பெண்புறாவானது கேட்டு, ஐயோ ! பாவம் நம்மைக்குறித்து ஏனிப்
படி துயரப்படுகின்றாய் நாயகனே என்லபி இப்படியாச்சுதென்று
சிந்தை கலங்கி மனம் நொந்து மிஞ்சிப்போன காரியத்திற்கு வேறு

செய்கை யென்ன யிருக்கின்றது ஆங்காலமெல்லாம் அன்புடன் வாழ்ந்தோம் இது போங்காலம் ஏதோ பொல்லாதகாலம் பிரிவினை காலம் சாகுங்காலத்தைக் குறித்து சஞ்சலப்படுவானேன் இதை நம்மால் விலக்கிக்கொள்ளும் வல்லமை யுண்டானல் முன்னோர் முதலிய மன்னவர் பெரியோர்களெல்லாம் மூடிக்காதிருப்பார்களா. ஆகையால் வினைப்பகுதியைவெல்ல வல்லவரில்லையென்று மனவுறுதிகொண்டு தன்னாயகனைக் கூவி யழைத்து, ஓ பிராண நாயகா ஓ பிராண வல்லபா ஓ பிராண சகிதா ஓ புருஷ சிரேஷ்டா ஓ புருஷ வன்னமே ஓ புருஷ சிகாமணியே ஓ புருஷ புனிதா என்வினைவசத்தால் இந்த வேடன் கட்டிய வலையில் விழுந்து சுக்கத்திலிருக்குஞ் சிக்கத்திற் சிக்கி இவன்கைக்குள்ளாய் விட்டேன். நான் மகா தீவினையுடையவள், என்னையொரு பொருட்டாக நினைத்து நீர் மனம்நையவேண்டிய மார்க்கமென்ன? உம்முடைய பேரறிவாண்மையை எங்கே போக்கடித்துக்கொண்டீர், நீர் இப்பொழுது நித்தியாநித்திய வஸ்து விவேகக் கியானத்தை மறந்து சமயம்வந்த வேளையில் மயங்கி தாபங் திரியப்படலாமா? அப்படி படுவதினால் பயனுண்டாகுமா? இது நமக்கு முன்னும் பின்னும் நடந்திருக்கிற காரியம் நாமும் அந்திருக்கின்றோமே, போனதுபோக நின்றவரைக்கும் நிலைதவறுமலிருந்து என்றென்றைக்கும் பயமில்லாத இனத்தைத்தேடும்; என்னுறவைத் துறவாகக்கொள்ளும், இந்த வேடனுடைய சமூகவிசார சல்லியம் எப்பேர்ப்பட்டதோ இவனது பசியெத்தன்மையுடையதோ நானொருபிராணி அகப்பட்டதை நம்பி வேறு ஆகாரம் அகப்படாமையால் வெம்பி அபேட்சை கொண்டுவந்து மழைகுளிர், காற்றினால், மாய்ந்தவர்போல் ஓய்ந்து கிடக்கின்றான். நான் இவனது பையிலடங்கி உய்யும் வகையில்லாமல் உபாதிப்படுகிறேன். ஆனதால் இந்தவேளை விருதாவில் என்பிராணன் போகாமல் இவனுடைய பசிக்கும் களைக்கும் உபயோகப்படும்படியாய் நீர்சகாயம்பண்ணும், ஐயா! இவ்வுலகத்தில் தோற்றப்படும் நாமரூபமாகிய வஸ்துக்களெல்லாம் நசியும் பொருளே யல்லது வேறல்ல. இன்னம் பற்பலநாளிருந்தாலும் ஒருநாளிறப்பது நிச்சயம், உறங்குவதுபோ லிறப்பு, தூங்கிவிழிப்பது போல் பிறப்பு, இதை யறிந்தும் பிரபஞ்சத்திற் பிறப்பும் இறப்புமே தொழிலாயிருக்கின்றது. அதுவே பந்தம், இந்தப் புன்மையான பிறவியின் போகந்தெரிந்த புருஷனமான நீர் கலங்கி மயங்குவதற்குக் காரணம்யாதோ அறிகிலேன். இந்த விசாரத்தை விவேக

விசாரணையில் விட்டுவிடும். நாம் வாழ்ந்த இல்லற தருமம் பழுதுபட்டு நரகத்திற் கேதுவை யாகாமல் ஜன்ம பலிதமொன்றுண்டு அதாவது இவ்வேடுவனுக்கு உபயோகமாகும்படியாய்ச் செய்யும் ஐயோ! இந்தவேடன் எண்ணிய எண்ணம் நிறைவேறாமலிருக்கின்றது, நாம் அருத்தியமனைவாழ்க்கையிலிருந்த இடத்தில் விரும்பி வந்த விருந்தாளிக்கு உபசாரத்துடன் உண்டி ஊட்டிவைக்க வேண்டியது வருமையல்லவா! வந்தவிருந்தாளி பட்டிணியாயிருக்க, நாம் பார்த்திருப்பது பாபமல்லவோ! நம்மிட வீட்டேறி வந்தவன் எப்படிப்பட்ட பகைவனா யிருந்தாலும், அவனை நாம் அதிதியாக நினைத்து ஆதரிக்கவேண்டுமே; ஆகையால், இந்தவேடனாகிய அதிதியை ஆயா சந்தித்து பூசைபண்ணிவையும், ஐயனே; உம்மாலே எனக்கும் நல்ல பதவிகிடைக்கும் இனிமேல் நாமிருவருங் கூடி வாழ்ந்தபோதிலும், அனுபவிப்பது ஆசாபாசமே யல்லது, வேறே நூதன முண்டோ! எப்போதும் உமக்கு முந்திநான் போகவேணுமென்று முழுமனதுட னினைந்த என்னெண்ணத்தின் வண்ணம் திண்ணமாய் கண்ணியமாயிற்று: அண்ணலே, நமது பந்துக்களும் வந்து பார்க்கப் பாக்கியம் பண்ணாமற்போன பாபமென்னமோ; ஆனால் எவரும் வினையின்பயனை வெல்லமுடியாது, நாம் மனம் வாக்குக் காயங்களினால் வஞ்சனை இல்லாமல் நடந்தால் வருவது வரட்டும், போவது போகட்டும். இப்போது நீர் நன்றாயிருக்க ஆபத்தினால் ஒருவன் அவஸ்தையடைந்து விழுந்தால், அதைக்கண்டு சும்மாயிருப்பது பாபத்திற் கிடமல்லவோ என்று அனேகவிதமாகப் புருடன் மனதைத் தேற்றிய பெண் புறாவின் சொல்லைக்கேட்டு ஆண்புறாவானது அறிவுடன் தெளிவடைந்து ஸ்திரீயின் பேரிலிருந்த சொந்தபந்தத்தைத் துலைத்து மழைக்காற்றுவிட்டும் எழுந்திராமல் திடந்தப்பி விழுந்து கிடக்கிற வேடனண்டைக்கு ஆண்புறாவந்து நாங்களிருக்கும் இடந்தேடிவந்த நாதனே! நீரிப்போது அடைந்திருக்கும் வருக்கத்திற்கு நான் செய்யவேண்டிய உபசார மென்னதென்று கட்டளையிட்டருளினால், அவ்வாறு நடந்துக்கொள்ளுகிறேனென்ன, வேடன் சொல்லுகின்றான்; ஓ! ஆண்புறாவே! நானிந்தவேளை பிழைத்தெழும்படிக்கு என்னுடைய குளிரைப்போக்கி விடுவீராகில்; இதற்கு மிஞ்சின உபசாரமும், உபகாரமும், உதவியுமில்லை யென்று வேடன் வேண்டிக்கொண்டான், அன்னேரமே அந்தப்புறாவானது, அதிக வேகமாய்ப் பறந்து முறிந்துலர்ந்து கிடக்கிற சிறியவிறகுகளை மூக்கினாற் கொண்டுவந்து சேர்த்து காட்டுத்தீமூட்டி தன்னுடைய இரக்கையை

7

வீசி காற்றினால் எரியச்செய்து வேடனுக்குச் சூடுறைக்கப் பண்ணியபோது, புரண்டெழுந்து முன்னும் பின்னுந் தீயைக் காய்ச்சி குளிருமகன்று சரீரம் உலர்ந்து திமிர்வாங்கி கையையுங் காலையும் நீட்டி யசைத்து நெட்டையிட்டு கோட்டுவாய் விட்டு, மெள்ள எழுந்து மறுபடியு மிருந்து அதிகப்பசியினால் வருந்தி வாடுகிறவேடனுடைய வெறுமையறிந்து, இந்த ஆண்புறாவானது, ஓ! அரண்யவாசி! உனக்கு மிகவும் இளைப்பும் களைப்பும் வந்திருக்கிறதாக வெனக்குத் தோற்றுகின்றது. நானிந்தப் பக்ஷியுடம் பெடுத்ததற்கு உன்பசியாறச் செய்வதே எனக்குப் போதுமான பிரயோசனமாகக் காணப்படுகிறது, ஆகையால் நீ பசியினாலே வருத்தப்படவேண்டாம் நானிந்த நெருப்பிலே வீழ்ந்து இறக்கின்றேன் என்னை எடுத்துப்புசித்து உன் பசியைத் தீர்த்துக்கொள்ளென்று சொல்லி, ஆகாயத்திலெழுந்து பறந்து படபடவென்று இரக்கையையுதறி ஓ! ஜகத்ரக்ஷகனாகிய கடவுளே, உன்னாக்கினையால் நல்வினை தீவினைப்பயனை யனுபவிப்பதற்கு எடுத்த இந்தத்தேகமானது, பசித்து வந்த அதிதியாகிய வேடனுக்கு இரையாகக் கடவதென்று மூன்றுவிசைகூவி இரக்கையை யொடிக்கிக்கொண்டு நெருப்பில் வீழ்ந்திறந்தது. அதைப்பார்த்திருந்த வேடன் அதிசயப்பட்டு, ஒருபக்கம் வருத்துகிற பசியால் துன்பப்பட்டு அந்தப்புறாவை வெந்தபின் னெடுத்துச் சாப்பிட்டு தண்ணீர் குடித்து பசி தணிந்து அகங்குளிர்ந்து முகமலர்ந்து தருமத்தை நினைத்து இத்தரணியிற் பிறந்த ஆத்மாக்களில் பேரறிவுடைய புறாவானது மெத்த அருமையானது. நானிதுவரையிலும் இப்பேர்ப்பட்ட ஜெந்துவைப் பார்த்ததில்லை. ஐயோ! இதனது பெண்சாதி என்கையிலகப்பட்டு என்னால் துன்பத்திலிருக்க பிரபஞ்சவாழ்க்கைப் படிக்குப் புலம்பித் தவித்து அந்தத்துக்கத்தை உடனே மறந்து எனது என்குளிரையும் போக்கி, உயிரைத்தந்து தன்னுயிரையுமாய்த்து, தன்னுடலை பசிக்கு உதவியாக்கி இத்தனையுபகாரம் பண்ணிய ஒருபக்ஷிக்கிருந்த நல்லறிவு நமக்கில்லாமற் போனதென்ன, நான் மானுடதேகி, வழிதுறைதெரிந்து கியானமுதலியவைகளையுடைத்தாயிருந்தும் அழியும் பாழான தேகநிமித்தம் இதைப் புசித்து விட்டேனே. என்னைப்போல் பாபசலன மில்லையென்று பாதவித்து அல்ப உயிரை வளர்ப்பதற்காகவா, சில ஆத்மாக்களை வதைப்பது அப்படி உயிர்வதைசெய்து உண்டும், சுகித்தும், களித்தும், என்ன பலனைப்பெற்றோம். இந்தக்கொலைத் தொழில் புரிந்த நமது

குடும்பத்துப் பெரியோர் முதலிய பேர்களெங்கே? எல்லாரும் இற
துந் தானே போனார்கள், இருந்தவரொரு வருமில்லையே யென்று
மனமிளகி வாடி இந்த ஆண்புறாவைப்போல் நமக்கு அதிதீவர பக்கு
வங்கிட்டுமோ! ஏதேது இன்னமென்ன தீவினைக்காளாக யிருக்கின்
றோமோ தெரியாதென்று, வலைப்பையி லிருக்கிற பெண்புறாவைக்
கையிலெடுத்துக்கொண்டு உன்புருஷனுக் கொப்பான புண்ணியவா
னை இம்மண்ணுலகிற் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை, அவனை
நினைக்குந்தோறும் எனக்கு மனக்கலக்க மாகிறது, அப்படிப்பட்ட
உத்தமனுக்கு நான் துரோகியாய் விட்டேன், மிகுபாபியாய்விட்
டேன். என்னாவி பாதவித்தலைகிறது, ஆனபடியால், அவருடன்
கூடிப் பிரியாமல் வாழ்ந்த உன்னை எரியிலிட்டுக்கொல்ல மாட்டேன்.
என்பாழான அங்கத்திற்கு இரையாவொட்டேன். உனக்கிஷ்டமான
விடத்திற்குப் போய்விடென்று விட்டுவிட்டான். அந்தவேடுவன்
கையினின்று விடுபட்ட பெண்புறாவானது வானத்திலுயர்ந்து, பற
ந்து வேடனையடுத்து, ஐயா! நானும் என் புருஷனும் (இல்லறமல்
லது நல்லறமல்ல வென்னும்) விதியைவிரும்பி வாழ்ந்தோம், இருவ
ரும் மனங்கலந்து இன்பத்தி லாழ்ந்தோம், எங்களை யொருபொரு
ளாய் நினைத்து நாங்களிருக்கும் வீடுதேடிவந்து நலிந்து, மெலிந்து,
நாவுக்குரிசைதேடிய நீர் அதிதியாய் விட்டீர். இல்லறதருமத்தை
இச்சித்தபேர்கள் பரதேசிகளுக்கு அன்னம் படைத்து பிராணதத்
தங் கேட்டாலுங் கொடுத்து பசியகற்றி பரிவுடனனுப்பவேண்டிய
பாத்கரத்தினால், வேதாகமவிதியின் படிக்கு என் புருஷன் உம்மு
டையபசிக்கு உணவாயினார். இப்போது நீரென்னை எங்கேயாகிலும்
போய் இன்பத்தை யடைந்து வாழென்றிசைத்தீர். அப்பனே என்
நாயகன் வெளிப்பட்டபோதே எனக்கு நாதம் போய்விட்டது. என்
கணவன் நீங்கியவப்போதே ஆசையும் அலங்காரமு மகன்றது.
கொண்டவன் கலைந்தபோதே என்கொண்டையுங் குலைந்தது மகிழ்
நன் மடிந்தபோதே என்வாழ்வும் மடிந்தது.இனிஎன் வாணாள் முடி
யவேண்டியது. நான் என்னாயகனுக்குப் பாரியாளாகையால், உயிர்
போய் உடலிருப்பதினும் பதிபோய் பாரியாளிருப்பதினும் பயனெ
ன்ன, சையோகத்தலைவி யொத்திருந்தால் (ஐயமிட்டுண்) என்று
சுருதிவாக்கியச் சொல்லிருப்பதினால், என்னாயகன், அதிதியாகிய
உமக்கு ஆத்மதிருப்தி பண்ணிவைத்தார். நானும் ஒத்துநடந்தால்
மாத்திரம் அவருதவிய ஆகாரப்பலன் பயன்படும். நான் அவரிஷ்
டம்போற் கலந்து நடவாவிடில் இதுவரையிலும் நாங்கள் ஒற்றுமை

யில் வாழ்ந்த இல்லற வாழ்வும், விரதமும், தருமதானமும், நிஷ்பல மாய்ப்போம். எனக்கும் நல்லகதி இல்லை, என் பதியின் எண்ணம் போல் நானும் உள்ளத்திற் பதிவிப்பேனாகில், பதியும்; பாரியாளும் பதவியடைவோம், இல்லாமற்போனால் அவரங்கும் நானிங்கும் அலைந்து நரகத்தில் விழ்வோம். ஆதலால் என்காதலன் உம்மைப் போலொத்த நல்லோர்க்கு பசியாற்றி வருந்தப்பட்டா ரென்கிற பேர்வாராமல் என்னையுங்கூட அனுப்பிவிடும் வந்தலே, ஸ்திரீகளுக்கு புருஷனைவிடத் தெய்வம் வேறில்லை, விரதநோன்பில்லை, கோயிற் குளமில்லை, மூர்த்தி தீர்த்தமு மில்லை, மஞ்ச ளில்லை, மாலை இல்லை, வாசனை இல்லை, வாடைஇல்லை, குங்குமமில்லை, பூஷணமில்லை, பூர்த் தியான புசிப்பில்லை, எல்லாச்சிறப்பும் புருஷனன்றி வேறொன்றில் லை, என்று இந்தக்கருமங்களை அருமையாகப் போதித்து, இதனது உண்மையைத் தெரிவித்தபேர்களும், தேர்ந்துநடந்த உத்தம ஸ்திரீ களும், எமவாதனையில்லாமல் இகபர சாதனத்தை என்றும் பெறு வார்கள். புருஷன் இறந்தவுடன் என்னுயிர்போகவேண்டும்; அப்படி போகாமையால் நீ என்னைப் பக்ஷிக்க ஆசைபட்டுப் பிடித்த இச்சை தீரப் புசிக்கக்கடவை, என்கணவனுடன் நானும்போய்ச் சேருகிறே னென்று உயரவெழும்பி தலைகீழாகவிழுந்து தன்நாயகனிறந்த நெருப்பில் தானும் பிராணனைவிட்டது. உடனே அப்புறாக்களிரண் டும் திவ்வியதேகம் பெற்று, தேவவிமானத்திலூர்ந்து தேவதுந்துமி முழங்க தேவகூட்ட நெருங்க அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோ த்தமை, முதலாகிய அநேகம் அப்ஸர ஸ்திரீகள் நடனம்புரிய, தேவ ரிஷிகளும் அவர்களுடைய தருமபத்தினிகளும் ஆலவட்டம், சாம ரம், குடை, கொடி, பூரணகும்பம், மாணிக்கதீபம், இவைமுதலிய உபசாரங்கள் செலுத்திவர தேவேந்திரன் முதலிய சப்தரிஷிகள், அஷ்டவசுக்கள் திக்குப்பாலகர், உருத்திரகணங்கள், பூதகணங்கள் தேவகணங்கள், சிவகணங்கள் முதலிய பேர்களெல்லாம் ஜயஜய வென்று கொண்டாட, இவ்வளவு சம்பிரமத்துடன் பெண்சாதி புரு ஷனுக மனமொத்து வாழ்ந்த புறாக்களிரண்டும் சுவற்கலோகம் போய் தேவரூபம்பெற்று சுகசீவியாயிருந்தார்கள். இத்தியாதிவைப வங்களைக் கண்டவனாகிய வேடுவன் மதிமருண்டு மன்மேற்புரண்டு ஐயையோ! இவ்வாறாகிய மகாபுருஷருக்குத் துரோகியானேனே! கொலைபாதகனானேனே! தவக்குறையானேனே, பாபியாய்ப்போ னேனே, பதிதனானேனென்று மூர்ச்சையாய் பின்னுந் தெளிந்து,

நன்மைசெய்தார் நலம்பெறுவார், தீமைசெய்தார் தீமையுற்று நலிவர், என்னும் பழமொழிக்கிணங்க பிராண ஆசையையும் தேகாபிமானத்தையும் போக்கி பரிந்து நமக்கு விருந்தாக விருந்த புறாக்களிரண்டும் தெய்வதேகம் பெற்று தேவலோக முற்றார்களே, அவர்களைத் தின்றிருக்கிற நமது கர்ப்பம் புனிதம்பெறாதா, நான் பாபியானபோதிலும் நல்லோர்களால் உபசரிக்கப்பட்டு அவர்களையே உணவாகக்கொண்ட என்னுடலானது பதிபெறுமலிக்கப்போமா, இனிமேலிந்தத் தேகம் இருந்தென்ன இறந்தென்ன. வீடு, வாசல், பெண்சாதி, பிள்ளையாருக்கு யார் சம்பந்தம் இதென்ன வீண்தொந்தம் என்று விக்கியானம் பிறந்து இகத்திலாசையை வெறுத்து பரத்திலாசையை விரும்பி (நிலத்தின் குணத்தால் நன்னீர் உவர்ப்பும் கைப்பும் உருசியு முண்டாவதுபோல குலத்தின் குணம் நம்மைக்கூறாக்கிவிட்டது.) அநேகம் உயிர்வதைகண்டோம், அவைகளைப் பசிக்கு உட்கொண்டோம், கொலைத்தொழிலுக்கு ஆலயமானோம், பாபத்திற்கு அதிபதியானோம் இன்னமிருந்து வினைமூட்டைகட்டிக்கொண்டு எமபடாளிடத்தில் அகப்பட்டு இருபத்தெட்டுகோடி நரகத்தில் வீழ்ந்து இம்சைப்படுவதைப் பார்க்கிலும், இப்பொழுதே உயிர்தப்புவது ஒப்பென்று, களங்கரகிதமாகிய சுருப்புறா இரண்டையும் கியானோபதேசக் குருவாகக்கொண்டு அப் புறாக்களினது திருவடியைத் தியானித்து, ஓ! என்குருசுவாமியாகிய தெய்வமே! நல்லோர்களைக் கண்டாலும் நாவினாற் பேசிக்கொண்டாலும் நன்நிலத்தில் வீழ்ந்தாலும் சரணமடைந்தாலும் தரிசனஞ் செய்தாலும், நல்லகதி உடனே உண்டாமென்று வேதசாஸ்திரங்களில் விளம்பியிருப்பதாய் மேலோர் சொல்லுகின்றார்கள். அவைகளைக் கிளிப்பிள்ளைபோல், நெடுநாளாய்க் கேட்டுக்கொண்டிருந்த நான் உங்களைக் கண்டு தரிசித்தேன். கையில் பிடித்துக்கொண்டு பரிசித்தேன். கடித்துப்புசித்தேன். என்பசியைத் தவிர்த்தேன் இப்போது உங்களைக்கதியென்று நம்பினேனென்று, பாபரகிதமான பவித்திர மனத்தையுடையவனாகி, புறாக்கள் விழுந்த காட்டுத்தீயதிகரித்து தானும் அதில் விழுந்து விரிந்து காலமுடிந்துபோனான், தக்ஷணமே இந்திரலோகவிமானம்வந்தது. நெருப்புக்குத் தத்தமானவேடன் தேவரூபம்பெற்று தேரிலேறிக்கொண்டு சிங்காரங்களுடன் தேவலோகம் புகுந்தான். நாளும் பரிமளமிருந்த குவளை புனைந்த தருமராஜனே! கேளும் பெரியோர்களுடன் கலந்து பேசிய மூலத்தினாலாவது ஜோபக்குறேநத

தினாலாவது நன்மார்க்கமும், நற்கதியும் நற்பாக்கியமும் உண்டாகும். பெரியோர்கள் நீர்பூத்த நெருப்புப்போல் ஒன்றிலுந் தட்டுப்படாமல், உலகத்தோடும் ஒத்திருப்பார்கள். ஏதோ ஒரு நாளைக்கு இஷ்டம்வந்தால் இராஜ கொலுவுக்கு வருவார்கள். அவர்களைக் கண்டவுடனே எந்தவேலையிருந்தாலும் நிறுத்திவிட்டுபசரித்து தரிசித்து ஒருநாட் கண்டதை பலநாளுங் கண்டதாக உணர்விலழுத்தி பிரியம்வைக்க வேண்டும். ஆதலினால் இராஜர்கள் சுகப்பட்டு இடையூறகன்று இன்பத்துடன் வாழ்வார்கள் இதற்குத்தான் பெரியாரைத் துணைக்கொள்ளென்று பெரியோர்கள் பேசியிருக்கின்ற வாசகமிஃது, இனி சிநேகம் பண்ணத்தகாத தீயரைக் குறித்துச் செப்புகிறேன் கேள்.

## 22. கூடா நட்பு.

### அதாவது-மூடருறவு.

ஓ, காவலனே! விருட்சங்கள் அடர்ந்து நெருங்கிய காட்டில் ஒரு ஆலமரத்தின் அடிவாரத்தில் பெரிய வளைவைத்துக் கொண்டு, தங்களினத்துடன் சாராமல் தன்னந்தனியாய் பலாபலமும் புத்தியுமுள்ள மாபலிதனென்னும் எலியொன்று வெகுநாளாயிருந்தது. அந்த ஆலமரத்தின்மேற் கிளைநுனியில் உரோமசன்மனென்கிற பூனையும் ஒன்றிருந்தது. இப்படியிருக்குநாளில் சூரிய சந்திரகிரணநுழையக்கூடாத அந்தக்காட்டில், மிகுந்த கடினசித்தமுள்ள வேடன் நாள்தோறும் வந்து புகுந்து அவ்விடத்திலிருக்கிற மிருகங்களையும் பட்சிகளையும் பிடித்துக்கொண்டு போய்விடுவான். அப்படியாயிருந்த வேடன் ஒருநாள் அந்த ஆலமரத்தின் கிளையின்பேரில் பூனையிருக்கக்கண்டு, அதைப்பிடித்துத் தின்னவேண்டுமென்று விருப்பங்கொண்டு, அப்பூனையில்லாத வேளையில் அம்மரத்தின் அடியில் ஒரு கண்ணி வைத்துப்போனான். அப்போது இரைதேடித் தின்னப்போயிருந்த பூனையானது திரும்பிவந்து, மரத்தில் ஏறப்போம்போது வேடுவன் வலைகட்டி இருக்கின்றானென்று தெரியாமல்(ஸ்ரீகளினுடைய மாயமயக்கவலையிலகப்படும் மானுட பாவியரைப்போல்) அந்த வலையிலகப்பட்டுக் கொண்டு, ஆ! மோசம்போனேனென்றிரைந்து அழுது பிராணபயமுற்று பதை பதைத்து, துடி துடித்து,

பெரு மூச்சிட்டு, நாமுடியுங்காலம் இதுவாயிருந்ததோ வென்று
நான்குதிக்கு நோக்கி படுபாவியாகிய வேடன் எங்கே பார்த்திருக்
கின்றானோ, பதுங்கியிருப்பானோ, நாம் அகப்பட்டக் குறிப்பையறி
ந்து ஜடிதியில் வருவானோவென்று காலினாலும் கையினாலும், வாயி
னாலும்; வலையைக்கிழித்துப் பார்த்து தன்னால் முடியாமல் தவித்து,
தெய்வத்தை நினைத்து தெய்வமே இதுவரையிலும் பெருமையாய்ப்
பிழைத்தேனே இப்போது வேடன்வலையில் விழ்ந்து கட்டுண்டே
னே, இனி என்னுடையகதி எப்படியோ நானறியேனென்று மனங்
கலங்கி அகங்கலாய்க்கும்போது அவ்விருக்ஷத்தின் அடிவாரத்தி
லிருக்கின்ற பலிதனென்னும் எலிக்கு இந்தப்பூனைபடுந்துயரந் தெரி
யும்படியாய், ஒரு கீரிப்பிள்ளையும் கோட்டானுங் கூவியது. அதிசளி
னுடைய ஓசை கேட்டு எலியோடிவந்து, பூனைக்குப் பக்கத்தில் நின்
றது. இதைக்கண்டவுடன் கீரியும் கோட்டானும் கிளம்பி தாங்களி
ருக்கும் இடத்திற்குப் போய்விட்டது. இப்பால், ஓடிவந்த எலியான
து, ஓய் உரோமசன்மனென்னும் பூனையே! இப்போது என்னாலே நீ
உயிர்பிழைக்கவேண்டி யிருக்கிறது, நீயகப்பட்டுக் கொண்டவலையை
என்பல்லினாலே கடித்துவிட்டு உன்னைக் காப்பாற்றுகிறேன் பயப்ப
டாதே, கவலைவையாதே நானப்படியுபகாரம் பண்ணுவேனாகில், நீர்
செய்யப்போகிற பிரதி யுபகாரமென்ன! என்னையும் எங்களினத்
தையுங் கண்டால் வாழைப்பழம்போல் விழுங்குவது தானேமரியா
தை. நன்றி யறியாத்தனம் உங்கள் சுபாவம். நீங்கள் எலிப்புலியல்
லவா? அப்பால் வாயிற்போட்டுக் கொள்ளுவீர்களே, நன்மைசெய்
தார்க்குத் தீமைசெய்கிற சாதியாச்சுதே குலாசாரதருமம் விட்டு
விடுவீர்களா போகட்டும் ஆபத்து வந்திருக்கும்போது அவைகளை
யெல்லாம் பேசப்போகாது, உள்ளபடி முடியும். தெய்வமிருக்கிறது,
ஐயா! எங்கள் குலத்தின் பேரில் உங்களினத்தாருக்கிருக்கும்
விரோதத்தை வைக்காமல் என்னிடத்தில் சிநேகமாயிருப்பீரா,
சாதியின் குணத்தைக் காட்டுவீரா தயவாயிருப்பீரா உறுதியாய்ச்
சொல்லுமென்று கேட்க, பஞ்சேந்திரியங்களும் உடலும், உயிரும்
நிலைதவரு குலாலன் சக்கரம்போற் சுழன்றுக்கொண்டிருக்கு மனத்
தையுடைய உரோமசன்ம னென்னும் பூனை, வெகுதூரப் பார்வை
பெற்ற பலிதனெனும் எலியைப் பார்த்து, ஐயா! எலியரசனே,
என்பிராண ரட்சகனே, இந்தவேளையில் எனக்குப் பிராணதாரை
வார்த்தால் இந்த உபகாரத்தை நானெந்த நாளையிலும் மறவேன்.

நீர் கெட்டியாய் நம்பும், சிலர் காரியத்தைப் பற்றி தழுவுவார்கள் காரியமுடிந்தால் கடைக்கண்ணாலும் பாரார்கள், நானப்படியல்ல. காரியமுடியட்டும் முடியாமற் போகட்டும் ஒன்றின்பேரிற் கவலை கொண்டால் ஒரே பார்வையிருப்பது எங்கள் குலத்தொழில் ஆதலால் பாபஞ்செய்யும் பதிதராளுலும் சத்தியந்தப்புஞ் சண்டாளராலுலும், பிராணபிக்ஷைகொடுத்த நன்றியை மறம்பார்களோ? நீர் நினைக்கின்றீரா? ஐயோ! பெருங்குறையாகிய பிறவிக்கடலை கடக்கக் கருதியகருவாளிகள் செய்நன்றி குன்றுவார்களா? உயிருதவிக்கு மிஞ்சின உதவி வேறில்லை. இதெனக்கு உண்மையாய்த் தெரியும். அறக்கடவுளாகிய தருமதேவதைக்குச் சொல்லிய தருமமும் தப்பிப் போனாலும் என்னுடைய சொல்லும் சத்தியமும் தப்பமாட்டேன். உண்மைதான், வேடன் வருவதற்கு முன்னே விரைந்தோடிவந்து வலையையறுத்து என்மயக்கத்தைத் தீரும், உயிர்பிச்சை தாரும், உமக்குச்சகல கீர்த்தியும் புண்ணியமும் உண்டாகும் என்னால் நீர் நல்லபேறு பெறுவீர், தாமசம் பண்ணாதீர் என்னுயிரை ரக்ஷியும் என்னுயிருள்ள மட்டும் என் கால்வழி சந்ததியுள்ளமட்டும் உம்மை எங்கள் வம்சத்திற்கு உயிரளித்த தெய்வமென்று, உச்சவங்களுடன் தலைமேற் சுமக்குறோம். விளக்கேற்றிவைத்துக் கும்பிடுகிறோம். சந்தேகப்படாமல்வாரும் சப்தகோடிமகா மந்திரங்களும் அளவிறந்த ஆகமங்களும் சாக்ஷியாக சத்தியம்பேசினேன். இனி சொல்பிசக மாட்டேன். துக்கத்தில் மூழ்கிய வென்னை அக்கரையாய்க் கரையேற்றும் மெத்தப்பேசுகிறதற்கு இந்தவேளை பக்குவமாயில்லை. நான் வலையை விட்டு வெளிவந்தவுடனே உம்மைவிட்டு அப்பாற்போவேனென்று எண்ணாதீர். நீர் என்கர்ப்பத்திலிருக்க வேண்டிய மனிதனுச்சுகே உம்மைவிட எனக்கு வேறு துணையில்லை. பிராணன் போகிறகாலத்தில் எங்கள் குலத்தெய்வம்போல் குறுக்கேவந்து வீழ்ந்து, என்னுயிரைக் காத்திரக்ஷிக்கு முமக்கு உன்னுயிரை நான்காக்க வேண்டாமோ, உமக்கு நான் தீங்கிழைப்பேனோ, இப்படியும் பாவிகளிருப்பார்களா? தெய்வந்தான் பொறுக்குமா? தீங்குசெய்யுந் தீயர்களைத் தெய்வஞ் சீறாதா? என்ன விபரீதம் எண்ணுகின்றீர், ஒருக்காலு மப்படிவாராது என்சொல்லுறுதியை நம்பி சீக்கிரம் வாருமென்று மிகவும் வருந்திச் சொல்லுகின்ற பூனையைப்பார்த்து, எலியானது மனதிரங்கி பயப்படாதே, பயப்படாதே; நான் உன் பிராணபயந் தீர்க்கிறேன் நீ சந்தோஷமா யிருவென்று எலி வலை

யைக் கிட்டிக்கடிக்காமல் அசைவின்றி குந்திக்கொண்டிருந்தது. அதைக்கண்ட பூனை, ஏனையா இன்னம் மனமிரங்கவில்லையா, என்னை நம்பவில்லையா, என்வார்த்தையில் உண்மை இல்லையா உரியைச் சீக்கிரம் கடிக்கவில்லையா, நன்மைசெய்தார்க்குத்தீமைசெய்தால் தனக்குத்தானே கேடு நாடிவரும், தீமையோடிவரும் வறுமை மூடிவரும், மைந்தர் பெண்டீர் வாடியுறும். ஆதலால் சீக்கிரந்தயை செய்யும், செஞ்சே வகனே என்று திக்குநோக்கி விழுந்து தொழுது அழுது வேண்டிக் கொள்ளவும், அந்த உரோமசன்மனுகிய பூனையை நோக்கி பலித னென்னும் எலிசொன்னது, ஓ! பூனையே நான் தூரத்திலிருக்கிறே னென்று நீ யோசிக்காதே, இந்த வலைக்குரியவனவரசன்கிட்டவந்தால் பட்டென்று உன்னைப்பாதுகாப்பேன். இப்போது முன்னதாக உன்னை விடமாட்டேன், அதேனென்றுல் தனக்குமேற்பட்ட சத்துருவின் நேசம் என்றைக்கும் ஆகாது, அவர்களைச் சிநேகிக்க வேண்டிய சந்தர்ப்பம் நேரிட்டால் தூரத்தில் வைத்து மனோபயத்துடன் சாக்கிரதையாய் உறவாடியனுப்பவேணும், அப்படி செய்யாமல் ஏமாறிநெருங்கினுல் உடனே துன்பமுண்டாம், இவ்வாறு நீதிசாஸ்திரத்தின் கருத்து. இவ்விதியை நான் கொஞ்சங் கேட்டிருக்கிறேன், உன்னைக்குறித்து நீ யோசனை பண்ண வேண்டாம், அந்தநீச வேடனைக் கண்டவுடனே ஒரு நிமிஷத்திலே வலையைக் கடித்து உன்னை வெளிபடுத்துவேன், அதற்குமுன் அவசரப்படலாகாது (எண்ணித்துணியாத காரிய மிளைப்பத்திற்கேதுவாம்,) நீர் கிலேசப்பட வேண்டாமென்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே எம படாளைப்போல்தண்டுங் கதையுந் தடியும் வலையும் வில்லும் பாணமும் வேலும் கோலும் கயிறுங் கையுமாய் வேடரோடிவந்தார்கள். அவர்களைக்கண்டுபூனை நடுங்கி, இனி என்ன உபகாரம் பண்ணப்போகிறுய் பலிதனென்னும் எலியரசனேயென்று பரதவித்துக்கொண்டிருக்கும் போது வேடர்களுங்கிட்டி நெருங்கிவிட்டார்கள், எலியான இதுதான் சமயமென்று வலையைக்கடித்துப்போட்டது. அவ்வலைக்குள்ளகப்பட்டிருந்த பூனையானது, சமூகவிசாரபந்தத்தை யறுத்துக் கொண்டோடும் சந்நியாசியைப்போல், ஓடிப்போயிற்று, எலியும் தன்னிருப்பிடத்தில் நுழைந்துகொண்டது; ஓடிவந்தவேடுவர் கானல் நீரைக்கண்டு களித்ததைப்போல் பார்த்து, ஏமாந்து அயர்ந்துபோனுர்கள். அன்றுபோக மறுநாள் உரோமசன்மனென்னும் பூனை பலிதனென்னும் எலியண்டைக்கு

வந்து ஓ, மஹாநுபாவா எனக்குப்பிராணாதாரமாகிய புண்ணியனே! என்னுபத்தைத்தீர்த்த அன்பனே எனக்கு உம்மைவிடவேறுதவி யில்லை, ஆதரவில்லை, தாயுந் தந்தையுங்குருவுந் தெய்வமும் நீ ரென்று சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு, எளியேன் மீது தயவு வைத்து, வெளியேவாருமையா எலியரசனே! நேற்றெல்லாம் பாவி யாகிய வேடன் வலையிற்சிக்கிப் பசியாயிருந்தேன் இப்போது நான் எங்கேயாகிலும்போய் இறைதேடவேணும், உதவிசெய்த உம்மைப் பார்த்துவிட்டு போகலாமென்று வந்தேன், உம்மைக்கண்டால் என் பசியாறிப்போம். இன்றுமுதல் நாமிருவரும் ஒன்றுபட்டு சந்தோஷ மாயிருப்போம். உமக்கு ஒரு பொல்லாங்குமில்லாமல் நானும்மைக் கருப்பத்தில்வைத்துக்காக்கின்றேன் என்னுயிரை மீட்டுக்கொடுத்த இறைவனே, என்று பூனை சொல்ல, அம்மொழியைக்கேட்ட எலி யானது, ஐயா, பெரியவராகிய பூனையே! நம்மிருவருக்கும் சிநேக மென்பது விட்டுப்போகாது, மேகம் வானத்திற் கனத்தால் பூமியி லிருக்கும் மயில்களாடுகிறது. சூரிய னுதித்தால் தாமரைமலருகிறது போல் அன்பர்களெங்கிருந்தாலும் பட்சம் விடப்போகிறதில்லை ஆத லால், நாம் இப்போதிருக்கிற இடத்திலேயே இருப்போம். மனதி லிருக்கும் அன்புமாத்திரம், மறவாதிருக்கவேண்டியதே யன்றி மற் றொன்றல்ல. நாமிருவரும் ஒரிடத்திற்கூடி யிருப்பதற்குச் சரிப் படாது. நானோ வளைவாசி. நீரோ கிளைவாசி, நமக்குமுமக்கும் பிரி யா விடையா யிருக்கக்கூடுமோ? இந்தமட்டும் நீரும் நாமும் கலந் திருக்கிற பேச்சை விட்டு விடும். எல்லாருக்கும் சிரேஷ்டராகிய சுக்கிராச்சாரியர் தன் சிஷருக்குச் சொல்லிகொண்டு வந்ததருமங் களில் சிலதுகேட்டிருக்கின்றேன், அதனாற் பெரியோர்கள் பேறு பெற்றார்கள். முதன்மையாகிய அதனை உமக்குத் தெரிவிக்கிறேன் ஞாபகமாகக்கேளும்.

இராஜனானவன் தன்னி லுமுயர்ந்த சத்துருவுடனே எதிர்த்து யுத்தஞ்செய்து ஜெயிக்கமாட்டாமற் போனால், நேசம் பண்ணிக் கொண்டிருந்து, சமயம் பார்த்துக் கொல்லச் சொல்லியிருக்கிறது (பகையாளி குடியை உறவாடிக் கெடுவென்று பழமொழி வாக்கி யம்) தம்மிலுமுயர்ந்த பேர்களின் இஷ்டத்தைப் பெற்றோமென்று மகிழலாகாது. அப்படிக்கு மகிழ்ந்து அந்த நேசத்தை எதார்த்த மென்று நம்பினபேர்கள் துன்பப்படுவார்கள். தன்னிலுந் தாழ்ந் தவர்களுடன் சிநேகிக்கத்தகாது, அதுவும் அப்படியேகீர்த்தியைக் கெடுத்து கிலேசத்தைவிளைவிக்கும். ஏதோ ஒருகாரியம்நேரிட்டால்

அந்தக் குவையைப்பற்றி கூடவிருந்து காரியசாதனை பண்ணிக் கொண்டு காலங் கழிக்கவேண்டியவன் முழுவிரோதியென்றும், குலப்பகையென்றும், தெரிந்திருந்து கூடிக்குலாவுவது அறிவுள்ள பேருக்கு அடுக்காது. முறையன்று. சத்துருவுக்குக்கேடுசெய்யுங் காரியத்திலேயே கவலைகொண்டிருப்பான், எதிரியை வெல்லவேணுமென்கிற நினைப்பு எந்நேரமுஞ் சொலித்துக் கொண்டிருக்கும், கொல்லுவதற்குத் தன்னாலே முடியாதாகில் அவனுக்கிப் பகைவனைக்கொண்டாகிலும் அல்லது நல்லதனத்திலாகிலும் வேலைமுடித்துப்போடுவான். சத்துருக்கள் வந்து பணிந்து கும்பிடுவார்களாகில் எதிராளி குவித்த கைகளுக்குள் ஒரு ஆயுதமிருக்கும், மேலும் அவர்கள் துயரம்போல் அபிநயித்து அழுவார்கள். அவர்களுடைய கண்ணீரைத்துடைத்தால் அது விஷமாகயிருந்து துன்பநீக்கிய அன்பனைக் கொல்லும். ஆகையாலிப்பேர்ப்பட்ட சத்துருவை நம்பி இன்பமாய் நேசிப்பதைப் பார்க்கிலும் அவன் கையில் இவன்பிராணனை ஒப்புக்கொடுத்துவிடுகிறது மெத்தவும் உத்தமம் பகைவனிடத்தில் முக்கியசிநேகஞ் செய்யவேண்டிய முறை நேரிடுமாகில், நெஞ்சிலே பயம்வைத்து நித்திரையற்று பஞ்சும் நெருப்பும், பக்கத்திலிருப்பதுபோல் ஜாக்கிரதையாயிருந்து தப்பித்துக் கொள்ளவேணும். தான்போகிற இடமும் படுக்கிற ஸ்தானமும் உண்ணுகிற உணவும் எதிரிக்குத் தெரியப்படாது தெரிந்தால் உடனே பிராண ஆனிவரும். இதல்லாமல் இடையில் வந்த பகையானாலும் ஒருவிதத்தில் மாறிப்போம், இது அனாதியாகிய ஈஸ்வர சிருஷ்டியினாலுண்டாகிய ஜன்மப்பகை. ஆகையால் என்றைக்குஞ் சேரலாகாது உன்பேரில் வைத்த இஷ்டத்தை யொருக்காலும் நான் மறக்கமாட்டேன். நீ என்மனதைவிட்டு நீங்கமாட்டாய். அதைவிட்டு எந்நேரமும் உன்னுடன் கூடி இருப்பதற்கு ஒப்பமாட்டேனென்று பலிதனென்னும் எலிசொல்ல, அதினுடைய வார்த்தையைப் பூனைகேட்டு, எலியின் மனதில் ஐயம்நேரிட்டிருக்கிறபடியால் நாமென்ன சொன்னாலும் நம்பமாட்டாது. நாமேன் வீணாய் இதையழைக்க வேண்டுமென்று தான்கொண்ட ஆசையை விட்டுவிட்டு தானிருந்த ஆலமரத்தையும் விட்டு, வேறொரு இடத்தில் வாசம் பண்ணிக்கொண்டிருந்தது. பலிதனாகிய எலியும் ஆலமரத்தின் அடிவாரத்தைவிட்டு மற்றோரிடத்திற்குப்போய்விட்டது. ஆகலால் பூமியை ஆளப்பட்ட அரசர்கள் சத்துருக்களையும் கீழ்மக்களையும் தனக்கு மேற்பட்டவர்

களையும் நேசிக்கப்படாது, நேசம் பண்ணினால் உடனே பிராணனு க்கு மோசம்வருவதுமன்றி நரகத்தையு மனுபவித்து, மறுமையில் ஈனமாகிய, இழிபிறப்பி லழிந்திவிடும் இதற்கொரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன் கேள்.

## 23. அரசன் தன் துர்ச்செய்கையால் மறுபிறப்பில் நரியாகப் பிறந்த சரித்திரம்.

ஓ! தருமராஜனே ? அதருமராஜன் கதையைக்கேளும் புரிசைக் கிரியென்னும் ஒரு பட்டினத்தில் பவிரகராஜன் அரசாகுி செய்து வருங்காலத்தில் அவன் கொடுங்கோல் மன்னன், பொல்லான். அரு ளில்லாதவன், அதருமங்களைப் புரிவதே அவனுக்குப் புண்ணியம். குடிபடைகளை வருத்தி இராஜதண்டங் கொண்டு வெகுபணங்களைக் கொள்ளையடித்து உயிர்வதைசெய்து, பெரியோர்மன நோவப்பண் ணி, அனேக பொருளை வைத்துவிட்ட பாவம் உலைபோல பொங்கி மேலெழும்பி பெருவியாதிபிடித்து உடல் தடித்து வெடித்து சீழும் இரத்தமுமாய் வடிந்துச் செத்தான். அந்தப்பாபி இந்த பூமியிற் செய்த பொல்லாங்கினால் ரௌரவாதி நரகங்களை அனேகநாள் அனு பவித்து, மீண்டு கோமாயுவென்கிற குள்ளநரியாய்ப் பிறந்து குவல யமெங்கு்ந் திருந்து ஒரு சுடுகாட்டுக்குப் போய் நரிகளுடன் சேர்ந்து நாற்றமுள்ள பிணங்களைப் பிடுங்கித்தின்று, நாளுமுழன்று வருநா ளில் இந்நரி பூர்வஜன்மத்தில் அநேகம் பொல்லாங்கைச் செய்த போதிலும் ஒருகாலத்தில், நன்மைசெய்திருந்த படியினாலே பூர்வக் கியானந்தோன்றி, ஐயையோ ? நாம்முன்னே வெகுபாபஞ் செய்தி ருந்தபடியினாலே நரியாய்ப்பிறந்து இத்தனை பாடுபட்டு திரியாநின் றோம், இனியாகிலும் நற்கருமங்களைச் செய்து பூர்வபாபத்தைப் போக்கடித்துக் கொள்ளவேண்டுமென்று நல்லறிவு பிறந்து, சாதி யாசாரப்படிக்கு மாமிசமுதலிய பிணங்களைத் தின்னாமல், பழங்களை யுங் காய்களையும் கிழங்குகளையும் புசித்து குளத்துத் தண்ணீரைக் குடித்து காலங்கழித்து வெகுநாளிருந்தது. இப்படி யிருக்கிற போது அதன் குலத்தாராகிய நரிகளெல்லாம் இந்த நரியினிடத்திற் குவந்து, ஐயா! நீர்நமது குலாச்சாரந்தப்பி மாமிசம் புசியாமல் பட் டினியா யிருக்கின்றீரே ! ஒருவேளை மாமிசம் உமக்கு அகப்படாமை யினாலேயோ அல்லது காடுமேடு திரிந்து கஷ்டப்படக் கூடாத பால்

மாறிக்கை யினாலேயோ நீர் விலக்கிவிட்டது. அப்படிக்கானால் நிதம்
நாங்கள் கொண்டுவந்து கொடுக்கிறோம் நீர் சாப்பிட்டு சந்தோஷமா
யிருமையாவென்று அநேகவிதத்திற் சொல்லியும், அதுகளின் பேச்
சை ஒத்துக்கொள்ளாமல் நிழலினுடைய அருமை வெய்யலிற் போ
னால் தெரியும் என்பதுபோல் பூர்வத்தில் எழுவகைத் தோற்றமா
கிய எண்பத்து நான்கு நூறாயிரமென்னும் யோனிபேதத்திற் பிற
ந்து மறுபடியு மிறந்த சகடக்கால்போலும் கடலினுடைய அலையை
ப்போலும் மாறிவரும் ஜனனத்தில், எத்தனையோகோடி புண்ணிய
வசத்தினால் ஐயறிவுள்ள ஆண் பிள்ளையாய்ப் பிறப்பதும் அந்த பிற
வியிலும் கூன், குருடு, செவுடு, ஊமை, பேடு முதலாகிய அவயவப்
பழுதில்லாமற் ஜனித்து கல்வியைக் கற்று ஞானம், சத்தியம், சாந்
தம், தயை, இரக்கமுடையதாய் நன்னீதி நடத்தும் அரசனாகப் பிற
ப்பது எவற்றினு மரிது. அப்பேர்ப்பட்ட இராச்சியபரிபாலனம்
புண்ணிய விசேஷத்தால் பண்ணத் தக்கதாகக் கிடைத்திருந்தும்
பெரியோர்களுடன் சிநேகஞ்செய்து நல்லதருமசாஸ்திரக் கேள்விக
ளைக் கேட்டு, சத்கருமங்களை யனுஷ்டித்து யோககியமாக தான
தரும பரவுபகார முதலான ஜீவகாருண்ய முடையவனாயிருந்து
கடைத்தேறாமல், ஐயையோ? அநியாயமாய் பெரிய பாபங்களைப்
பண்ணி பணத்தை சோரஞ்செய்து வைத்துவிட்டு செந்துக்களிற்
றாழ்ந்த நரியாய்ப் பிறந்து, நாற்றமெடுத்த பிணங்களைப் பிடுங்கித்
தின்று வயிறு வளர்க்கிறோமே என்று வருந்தி பூர்வக்கியானத்தினா
லே யறிந்து, மெத்தவுந் துக்கப்பட்டு உங்களினத்தா ருண்ணுகிற
புலாலை மறுத்தேனென்று சொல்ல; மற்ற நரிகளெல்லாம் மெத்த
விரைந்து உத்தமரே? எவனொருவனைத் தருமவாவென்று சொல்லத்
தக்கதோ அவனே குலாச்சார தருமந் தப்பாதவன், அதைவிட்டு
வேறு தருமஞ் செய்பவன் அதருமன். (கைவினைகரவேல் என்ற
வாக்கியத்தைக் கண்ணுற்றுப்பாரும்) ஆகையால் நமது குலமுறை
மைப்படிக்கு நாமெல்லாங் கூடியுண்போம் வாருமென்று எத்தனை
விதத்திற் புத்தியை கலைத்தாலும், ஒரே பிடிவாதமாயிருந்து நிலைவிட்
டுப் பிரியாமல் சருகாதி மூலங்களை அருந்திக்கொண்டிருந்தது, இந்த
வர்த்தமான மெல்லாம் அந்தக் காட்டிலிருக்கின்ற மிருகங்களுக்
கெல்லாம் இராஜாவாகிய வேங்கைப் புலிகேட்டு, ஆச்சரியப்பட்டு
இந்த நரியண்டைக்கு வந்து ஓய்! நரியே! உம்முடைய விரதத்தின்
திடத்தைக் கேட்டு அதிக சந்தோஷமாச்சுது உம்மையொத்த ஸ்திர

மான புத்திசாலிகளிடத்தில் சிநேகிக்கவேண்டுமென்று வந்தேன். இப்போது என்னிடத்திலிருக்கிற மந்திரிமார்களுக்கெல்லாம் பெரிய மந்திரியா யிருந்து மதிமந்திரித் தனஞ்செய்து எனக்கு நல்ல அறிவும் யோசனையும் போதித்துக் கொண்டிருமென்று சொல்லிற்று, அதற்கந்த ஆசாரநரியானது சொல்லுகிறது ஓ, புலி, இராஜனே நான் உம்மிடத்தில் நூதனமாய்வந்து அமுல் நடத்தினால் பழைமையா யிருக்கிற பேரெல்லாம் பொறுமைப்பட்டு மனங்கொள்ளாமல் என்பேரில் விரோதஞ் சொல்லுவார்கள்; எங்கே குற்ற முண்டோவென்று தேடுவார்கள் எந்தச்சமயத்தில் இவன்பேரில் குற்றஞ் சாற்றலாமென்று யோசனைசெய்யக் கூடுவார்கள் உம்மிடத்தில் என்பேரில் பொல்லாங்கு சொல்லி எனக்குத்தண்டனை கண்டனை செய்விக்கும்படி நாடுவார்கள். (பார்க்கிறகண்ணுக்குக் கேழ்க்கிறகாது மேலென்பதுபோல்) அவர்கள் மொழியைக்கேட்டு நீர் கோபிக்க வேண்டிவரும் நீர் துரைத்தனம் பண்ணுகிறவர், உம்மிடத்தில் மந்திரித்தனஞ் செய்கிற என்னை நீர் என்னசெய்ய வேணுமோ அதெல்லாம் பக்ஷபாரம் பாராமற் செய்யலாம், உமக்கு எதிரில்லை எனக்குத் திக்கில்லை. ஆதலால், கேள்விச்சொற்கேட்டு கேடுநினைப்புக் கொள்ளுகிற தில்லையென்று இப்போதிருக்கிற இஷ்டம்போல் எப்போது மிருங்கிக்கிறே னென்றும் கெட்டியாய்ச் சொல்லுவீராகில், நானும்மிடத்தி லிஷ்டப்படிக்கு இருக்கிறேனென்று சொல்ல, அதற்குப் புலியானது அப்படியே, (சொல்லுவார் வார்த்தைக்கேட்டு தோழமையிகழ்வார் புல்லர்) என்று நினைத்து நான் ஒருத்தர்பேச்சையுங் கேளாமல் உன்னையே நம்பினேன், என்னை நீ உண்மையாய் நம்பு என்று அபயஸ்தங் கொடுத்தது. அப்பாலந்த நரியானது புலியினிடத்திற்போய் சகல விசாரணையுஞ் செய்து மந்திரியாயிருந்து பாரமார்த்திய பக்குவ விசேடங்களை எங்களுடன்கூடி வாழச்செய்து காலத்ரையமுங்கண்டு காலக்ஷேபம்பண்ணிக் கொண்டிருந்தது. அந்த இராஜபுலியும் நரிசொன்ன பேச்சைத் தள்ளாமற்கேட்டு வந்தது. இப்படிக்கிருக்க, அந்தப் புலியினிடத்தில் பழைமையா யிருந்த மந்திரி மிருகங்க ளெல்லாம் பொறுமையடைந்து, அந்தப் புலியும் நரியும் பொருந்திவாழ்வது சரிப்படாமல், இந்த நரியைக் கொன்றுவிட வேண்டுமென்று ஆலோசித்து எந்தவிதத்திற் கொல்லலாமென்று தருணந் தேடிக்கொண்டிருக்கிற நாளையில், சமயம் வாய்க்காதபடியால்; இப்படிக்கெல்லாம் அதைக்கொல்லப்படாது. நமது புலிராஜாவுக்கும் இந்த நரிக்கும் மித்திரபேதம் பண்ணி, அவரைக்

கொண்டு இதைக் கொன்றுவிடச் செய்யவேண்டுமென்று கலந்து பேசி காலம்பார்த்திருந்த புலி இராஜன் பசியுடனே வருகிறவேளைப்பார்த்து அதற்குப் பக்ஷணமாக வைத்திருந்த மாமிசத்தை எடுத்து மறைத்துவிட்டிருந்ததுகள் அந்தப்புலிராஜன் காடெல்லாமோடித் திரிந்து களைத்து இளைத்து வந்து பசிநோயினால் வருந்தி இவ்விடத்தில் வைத்திருந்த இரையெங்கேயென்று இரைந்து கோபமாக விரைந்து பூமியதிர்க்கும் பொல்லாத கோபவேளையை நோக்கி, ஏனையா? எங்கள்பேரி லெரிந்து விழுகிறீர் உமக்கு உயிர்துணையாய் வந்திருக்கிற பிரியமான மந்திரி கோமாயுதன் அதை தின்பதற்காக இரகசியமாய்த் திருடிவைத்துக் கொண்டது; அந்த நரியானது நான் மாமிசபட்சணம் பண்ணுவ தில்லையென்று சொல்லிய பேச்சையெல்லாம் நம்பினையே அதுசத்த வெளிச்சமே, வெளிக்கு வேஷமே, மாமிசதேகம் மாமிசத்தை மாற்றிய தென்றால் யாவரும் இனத்தைத் தழுவாம லிருக்கவேண்டுமே. (இனத்தை இனந்தழுவு மென்பது பொய்யா) ஐயா சைவமென்று வீணான பிரதிஷ்டைக்காகச் சொல்லிக்கொள்ளுவது, இதைப்பகுத்துப் பார்க்குமிடத்தில் உள்ளுக்குள்ளே உண்ணுவது ஊத்தைக்கவுச்சு, உதிரக்கவுச்சு ஊனீர்க்கவுச்சு, சீக்கவுச்சு, சிலேத்துமக்கவுச்சு, தேகக்கவுச்சு, போகக்கவுச்சு, புத்திரக்கவுச்சு, முலைப்பால்கவுச்சு, முகருங்கவுச்சு, இன்னமநேகங் கவுச்சுகளுண்டு தேகம்விட்ட அன்றைக்கல்லவோ சிலமென்று செப்பவேண்டியது. மாமிசத்தேக மிருக்கிறவரைக்கும் சைவமென்னும் மேல் மினுக்குப் பொய்வார்த்தையை நம்பப்படாது, ஆசாரமென்று பேர் வைத்துக்கொண்டு உமக்கிருக்கிற இறைச்சியில் கொஞ்சங் கொஞ்சம் உருசிபார்த்து பசியாற்றிவருகிறதே தனக்கு ஆதார ஆசாரமாக நினைத்திருக்கின்றது. நாங்களும் பாராமல் பார்த்து வருகின்றோம். ஒருவேளை உம்மிடத்திற் சொன்னால் அதனளவில் வைத்திருக்கிற புது மோகத்தால் எங்கள்பேரில் உமக்குக் கோபம் வருமேயென்று மெத்தவும் பயந்திருந்தோம். உமது அன்னத்தைப் புசித்த நாங்கள் உமக்கு பின்னந்தேடப் படாது. உண்மையை யுரைத்தோமென்று சமயோச்சிதமாய்ச் சொன்னார்கள். அந்த மட்டிற்கேட்ட மதப்புலியானது சொல்வலிமையினாற் சொன்ன பொய்யை மெய்யாகக்கொண்டு வாலடித்து, நகத்தைவிரித்து முகஞ்சிலிர்த்து கண்சிவந்து பல்லைக்கடித்து அந்த நரியைப்பிடித்து அடித்து விழுங்கிவிடுகிறேனென்று, ஆக்கிரமித்துப் பராக்கிரமங்காட்டி கழுத்து மயிரைச் சிலுப்பி

கடைவாயை நக்கி வாயைத்திறந்து, உடம்பைக் குலுக்கி வருகிற ஆவேசத்தை அந்தப் புலியினுடைய தாயானவள்கண்டு, அடடா பழயபாவிகள் கெடுத்தார்கள் பகைமூட்டி விட்டார்கள், அந்தநரி வந்தபிற்பாடு என்மகன் சுகப்பட்டானே, உள்ளபடி நடக்கிற குள்ளநரி நல்லதாச்சுதே! அது பொய்பேச மாட்டாதே, உத்தியோகத்திற்கு வருகிற முன்னிலையில் விஸ்தார வினைவினையுமென்று கேட்டுக் கொண்டதே! துன்மார்க்கா ளெல்லாருங்கூடி, என்பிள்ளைக்குத் துற்போதனைபண்ணி இத்தனை தூரத்திற்குக் கொண்டுவந்து விட்டார்களே, யென்று குலைகுலைந்து ஓடிவந்து குறுக்கே விழுந்து அப்பா மகனே அந்த நரியானது மெத்தவும் உத்தமச் செந்துவானது, அதற்கு வாய்ப்பதட்டங் கைப்பதட்டங் கிடையாது, அதுவந்த நாள் முதல் இந்நாள் வரையிலும் அனுபோகம் பார்த்துவருகிறேன், மெத்தவு நிதானமுடையது நான் ஸ்திரமாகச் சொல்லுகிறேன், நீ தீர்க்கவிசாரணை செய்தாற் றெரியும், பொய்யு மெய்யும் வெளியாய்ப் போகும். புண்ணியபாவம் இரண்டுந் தெரிகிறது, நீ பொறுமையாயிருவென்று பிள்ளையினது கோபத்தையாற்றினாள். தாய் சொல்லைக்கேட்டு பாய்ந்த புலியானது சற்றுநேர நிதானித்து நீரவிசாரிக்கத் தெரியுமென்று கொலுவுக்கு வந்து, பழய மந்திரிகளையழைத்து ஒருவரோடொருவர் பேசாமலிருக்க காவல்வைத்து ஒவ்வொருவராயழைத்து தான் தின்னுகிற புலாலை நரியெப்படி எடுத்தது, எத்தனை நாளாய் அப்படி செய்கிறது இயாவர் பார்த்தவர்கள், நீபார்க்கும் போது எந்த மாமிசத்தை எடுத்தது நீகண்ணுறக்கண்டாயா? கண்டபோதே எனக்குத் தெரிவிக்க வேண்டுமே, நல்லது அந்த நரிக்காகினுஞ் சொல்லி மட்டடக்கவேண்டுமே? நல்ல மனதுடையவர்களானல் எல்லாரு நன்று யிருக்கப்பார்ப்பார்கள், கெட்ட குணத்தார் யாவருங் 'கெட்டுப்போம்படி திட்டத்தன நினைப்பார்களென்று, தனித்தனி பிரித்து அவர்கள் மனத்தினைப் பேதித்து விசாரிக்கும் போது பொய்பேசிச் சாதிக்கமாட்டாமல் புலிராஜனைப்பணிந்து ஐயா, நீர் அந்த நரியைக்கொன்று விடுவீரென்று நாங்களெல்லோரும் ஒன்றுகூடி நீர் புசிப்பதற்காக இருந்த மாமிசத்தை எடுத்து ஒளித்து வைத்து, இப்படிக்கு அபாண்டஞ் சொன்னேமென்று ஒத்துக் கொண்டார்கள். அத்தக்ஷணமே புலி அரசன், விசாரமடைந்து என்னபுத்தி எண்ணினேம், நரியானது முன் இவ்விஷயம் சொல்லியும் கவனிக்காமலும் நாம்நின்று விசாரியாமல் கொன்றுவிடப்

போனேமே யென்று மனங்குன்றி நரியை யழைத்து இவ்விடத்தில் நடந்த கிரியைகளை யுரைத்து உபசாரம் பண்ணி இனி என்சரீரமுள்ள மட்டும் உன்னைப்பிரியேன், உன்னிடத்தில் அவனம்பிக்கை வைக்கமாட்டேன், யாரென்ன சொன்னாலும் கேட்கேன் இது சத்தியமென்று உறுதிவாக்கு சொல்லிக் கொடுத்து, அந்த நரிக்கு முன்னிருந்த பெருமையைப் பார்க்கிலும் பின்னையும் அருமைபாராட்டி சகல விபகார அதிகாரங்களையும் அதன்வசத்தாய் விட்டுவிட்டு தன்தாயை வணங்கி, அம்மா! உன்னாலே நான்பாபத்தில் வீழ்ந்து ஆபத்தை யடையாமல் கோபத்தைத் தவிர்த்து, குணவானுடைய உறவைப் படைத்து, பெருமை யடைந்தே னென்று அன்னையைப்போற்றி துன்மார்க்கராகிய பழயமந்திரிமார்களை சன்மார்க்கமுள்ள நரிக்கு ஊழியம் பண்ணும்படிக்கு விதித்து, மந்திரியான நரியைத் துதித்து சுகம்பெற்று வாழ்ந்தது. (கேளுந்கருமகந்தனு) அறிவில்லாத பேரிடத்தில் அறிவுடையோர் சேர்ந்தாலும் குற்றம்வரும். ஆனதால் இராசர்களுடைய குணங்களை நன்றாயறிந்து பின்பு அவர்களிடத்தில் மருவவேண்டும், எவர்களானாலும் தன் சுதா விவேகத்தினாலே தீர்க்காலோசனை செய்து தெரிந்துக்கொள்ள வேண்டும். ஒருவருடைய வார்த்தையைக்கேட்டு அவசரப்படலாகாது, அவரவர்கள் தங்கள் தங்களுடையகாரியஞ் ஜயப்படுகிறதற்குப் பாடுபட்டு, எந்தவேளையில் எப்படி செய்யவேண்டுமோ எவ்விதம் பேசவேண்டுமோ அதற்குத்தகுந்த காரியங்களைப் பேசுவார்கள். அயலார் சொன்ன பேச்சைப் புத்திமானாகிய இராஜன், சொன்னோக்கம் பொருணோக்கம் முன்பின் யோசித்து புருஷலட்சணம் சொல்லுகின்றதிசை இப்போது அவனுக்கு நடக்கிற தெசை இதையெல்லாம் நிதானிப்பார்த்து அதை நம்பவும்போகாது தள்ளவுங் கூடாது பராமுகமா யிருக்கவும் படாது. அவரவர்க ளக்கறைக்கு அவரவர்கள் பாடுபடுவார்களாதலால் பகுத்தறிவு இல்லாதபேர்களின் வார்த்தையை பத்தியமாய் எண்ணப்படாது. எண்ணினால், உடனே குற்றம் நேரிடும். எத்தனையோ விதத்தில் சொன்னபோதிலும் தன்னுடைய சுயபுத்தியைத் துணையாகக்கொண்டு யோசித்து நடக்கவேண்டும். அன்றியும் இராஜர்களுக்கு, (கண்ணுக் கணிகலம் கண்ணோரகம் யென்பது போல்) தாக்ஷண்யம், காருண்ணியம், ஆசாரம் கருமக்கிரியை, ஒழுக்கம் ஈஸ்வரபக்தி இவை களிருக்கவேண்டும் அவைகளில்லாவிட்டால், செல்வம் நில்லாது, ஜயம்பெறமாட்டார்கள். ஒருவேளை காலகதியால் தள்ளுண்டுப் போனாலும் பிராணலய காலத்திலாவது ஒழுக்

கத்தைத்தழுவி உயிர்விடவேண்டும், அதற்காக ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன் கேளும்.

## 24. ஒழுக்கத்தினால் ஜயத்தை யடைந்த இந்திரன் சரித்திரம்.

ஓ! நால்வருக்கு மூந்திய நற்புத்திரனே! தேவேந்திரனும், பிரகலாதனனும் ஒரு காலத்திற்பகைத்து நெருங்கிப்போர்புரிந்து கடைசியில் தேவேந்திரன் தோல்வியடைந்து பிரகலாதனன்வெற்றி பெற்று உத்தமனென்று உலகத்தார் கொண்டாட நின்றான். தேவேந்திரன் தியங்கி சோர்வடைந்து தெய்வ லோகத்திற்குப்போய்த் தங்களாசிரியனாகிய பிரகஸ்பதி பகவானுக்கு; நடந்த சண்டையின் பிரதாபமும் தான் பட்ட அபஜயமும் பிரகலாதனன்பெற்ற வெற்றியுஞ் சொல்லி மனவருத்தப்பட்டு, அந்தப் பிரகலாதனனை தான் செயிக்க வேணும், அதற்கு வேண்டிய உபாயஞ் சொல்லுமையா வென்றுகேட்டான். தேவ குருவானவர் சீடனைப் பார்த்து நீ செயிக்க வேண்டுமானால் இராக்ஷத குருவாகிய சுக்கிராச்சாரி இடத்திற்குப் போய்த் தெரிவித்துக்கொண்டால், அவருபாயஞ் சொல்லிக்கொடுப்பார் போவென்று அனுப்பிவைத்தார். அப்படியே இந்திரன் அவரிடத்திற்குப்போய் பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து சுவாமி, மஹானுபாவா, நானெத்தவுஞ் சிறுமையடைந்து உம்மாற் பெருமையடைய வேண்டுமென்று சரணம் புகுந்தேன், என்னைக் காத்திரட்சியுமையாவென்று நடந்தசங்கதியைத் தொடர்ந்துரைத்து தோத்திரம் பண்ணினான். அப்போது, சுக்கிராச்சாரியருக்கு தயைபிறந்து ஓ! தேவேந்திரனே ? பிரகலாதனனிடத்திலிருக்கிற நல்லொழுக்கம் உன்னிடத்தில் வரும்படியாய்ச் செய்துக் கொள்ளுவையாகில் உடனே உனக்குச்செயமுண்டாம், அப்பால், உன்னை வெல்லும் வல்லவரில்லை என்றியம்பக்கேட்டு இந்திரன், சந்தோஷப்பட்டு அவரைவிட்டு சிலவுபெற்றுக்கொண்டு, இப்பால் இந்திரன் வந்து, தளர்ந்த பிராமணவேடமெடுத்து, பிரகலாதனனிடத்தி லடுத்து அவனுக்கு மனங்களிக்கத்தக்கதாக வழிபட்டுவந்தான். இந்தப் பிராமணனுடைய யோக்கிதைக்கு பிரகலாதனன் மகிழ்ந்து சுவாமி பெரியவரே, உமக்குவேணுமென்றதைக்கேளும் தருகிறேனென்று சாற்றினான். உடனே இந்திரன் ஐயா, உம்மிடத்திலிருக்கிற ஒழுக்கத்தை என

க்குக் கொடுத்துவிடுமென்று கேட்க, பிரகலாதனன் திடுக்கிட்டு ஓ! ஓ! மோசம்போனேம் இனிமேல் சொற்சோர்வு படலாகாது, தேகம் அநித்தியம், கீர்த்திநித்தியமென் றெண்ணி அவர்விரும்பிய அவ்வாறே கொடுத்துவிட்டான். இந்திரன் அவ்வொழுக்கத்தைத் தத்தமாக வாங்கி தெய்வலோகம்போய்ச் சேர்ந்து ஜயித்தோரை ஜயித்து ஜயம்பெற்றிருந்தான். இவ்விடத்தில் சீலமான ஒழுக்கத்தை தேவேந்திரனுக்குக் கொடுத்த பிரகலாதன னிடத்திலிருந்து ஒரு திவ்ய ஆசாரபுருஷன் புறப்பட்டு ஓ! பிரகலாதனே, இதுவரையிலும் உன்னிடத்தில் நல்லொழுக்க மிருந்தபடியினலே பிராமணனுடைய சக்தியெல்லாம் உன்னை விட் டொழியாதிருந்தது. அதை தேவேந்திரனுக்கு தத்தம் பண்ணிப் படியால் இனிமேலுன்னிடத்தி லிருக்கமாட்டேன், இதோபோகிறேனென்று வெளிப்பட்டு இந்திரனிடத்திற்பொருந்தி அவனுடனிற்றங்கி யிருந்தது. அன்று முதலாய் வெற்றிபெறும்படி ஒழுக்கமென்னும் பிராமண ஜீவாசார புருஷனும் மஹாலக்ஷிமியும் ஜயலக்ஷிமியும் தங்கள் தங்கள் ரூபத்தைக்காட்டி பிரத்தியக்ஷமாய் பிரகலாத னிடத்திலிருந்து வந்துவிட்டார்கள். இவ்விருவரையும் பெற்றுக்கொண்ட இந்திரனனவன் இராக்கதரை ஜயித்து திரு புவனத்திற்கும் அதிபதியானன். ஆகையால், நல்லொழுக்கம் எவர்களிடத்தி லிருக்கின்றதோ அவர்களுக்குச் சத்துரு ஜயமுண்டாகும் மித்துருஜயம் மேன்பாடாகும் சகலபாக்கியமும் பெருகும், அவர்களுக்குப் பூலோகத்திற்கிட்டாத பதார்த்தமொன்று மில்லை. அப்பேர்பட்ட ஒழுக்கம், சீவாச்சாரம், இவைகளைத் துணையாகக் கொண்டபேருக்குக் குறைவுவாராது. சிலவேளை காலதேச, வர்த்த மானங்களினல் ஒருவேளை வந்தாலும் உலகம் பழிக்காமற்படிக்கு தன்னை யறிந்த தலைவர் ஜாக்கிரதையாயிருந்து ஆசாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று வீஷ்மர் சொல்ல தருமராஜன் கேட்டு ஐயா! செங்கோல் எப்பேர்ப்பட்டது. எத்திறமுடையதென்று வினவியதற்கு வீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

## 25. இராஜர்களின் செங்கோலி யற்கையின் சட்டவிற்பத்தி.

ஓ! தருமபூபதியே? அரசருக்குச் செங்கோலாவது யாது? அந்தச் செங்கோலுக்கு அதிதேவதைகளார்? என்று கேட்க

அவைகளெல்லா முனக்குச் சொல்லுகிறேன் கேள்! சங்கினங்களூர்ந்து நாதமுழங்கி விளையாடித் திரியும் சேற்றினங்களும், நாற்றினங்களு மருவிய கழனிகள் சூழ்ந்த வளப்பங்களினாற் பொங்கிய அங்க தேசத்தில் வசுவேமன் என்போன் ஒருவனிருந்தான். அவனுக்கு தருமமே இயற்கைகுணம். அவிர்ப்பாகங்களினால் மகிழ்ந்து தேவதைகள் யாவருங் கொண்டாடாநின்றவன். வெகுநாள் இராச்சியபாரம்பண்ணி மண்ணாசையை நீக்கி, பெண்சாதியும் தானுமாய் இமோர்க்கிரிச் சாரலுக்குப்போய் அங்கே தவம்பண்ணுகிற பெரியோராகிய ஞானிகளுக்கு வணக்கம் புரிந்து அவர்களுடன் இணக்கமாயிருந்து தவஞ்செய்வதற்கு சிஷ்டாசாரத்தன்மை பயின்றுவந்தான். அப்படியிருக்கின்ற காலத்தில் சுவர்க்க மத்திய பாதாளமும் கீர்த்திக்கொண்டாடி நாட்டிய மாந்தாதாவென்னும் பார்த்திபன் அவ்விடத்திற்கு வந்து வசுவேமனென்னும் அரசனுக்கு தாழ்ந்து வணங்கி வழிபட்டு செங்கோலாகிய தண்டனை நூல்முறைமைய எங்கோனே? எனக்குச் சொல்லவேண்டுமென்று கேட்க, பிரபஞ்ச வாசனைவிட்ட அங்கதேசாதிபன் சந்தோஷத்துடன் ஓ! மாந்தாதாவே? நீர் வேட்கப்பட்ட செங்கோலியற்கையுந் தண்டனையும் அதுவந்த வரலாறும் அதனுடைய பலமும் விஸ்தரித்து விளம்புகிறேன். அந்தத்தண்டனை முறைமைப் பிரகாரம் நடத்தினால் அவர்களுக்கு என்றென்றைக்கும் பழிவரமாட்டாது பாபமணுகாது என்று மாந்தாதாவுக்கு வசுவேமன் சொல்லியவண்ணம் உமக்குச் சொல்லுகிறேன் கேளும் தருமநந்தனா? மூலக்கமலத்தில் முளைத்தெழுந்த பிரம்மா, யாகம்பண்ணவேணுமென்று எத்தனித்து மானசத்திலே ஒரு பிள்ளைவரவேண்டி கர்ப்பந்தாங்கி நல்ல பிள்ளையைப் பெற்று, அவனை எக்கிய யோக்கிய கர்த்தாவாக்கி இமோர்க்கிரிச் சாரலில் சகல மேன்பாடும் வரத்தக்க யாகஞ்செய்யத் தொடங்கி, அந்தயாகத்தைப் பூரணப்படுத்தி தேவதைகளுக்கு அவிர்ப்பாகங் கொடுத்து வருகிறகாலத்தில் மானசத்தினுண்டாகியபிள்ளை மறைந்துபோய் விட்டான். அப்போது சதுர்முகனுக்குக் கோபம் பிறந்து மகாவிஷ்ணுவினிடத்திற்குப் போய் நடந்த விர்த்தாந்தங்களை விண்ணப்பம்பண்ணி வணங்கினான். அந்த சங்கதியை மகாவிஷ்ணு கேட்டு, பிரமனை யழைத்துக்கொண்டு எப்பொருட்கு மிறையாகிய ஈஸ்வரனிருக்கப்பட்ட கைலாயத்திற்குச் சென்று உமாபதியை வணங்கி சுவாமி! இவ்வாறு எக்கியம்பண்ணிக்கொண்டு வரும்போது அந்தயாகம் நிறைவேறி வருகிறதற்கு முன்னமே பிரமனுடைய மானசபுத்திரன் மறைந்துபோனான். அந்தயா

கம் பூரணமாகாமற் போயிற்று, வேள்வி விக்கினம் வராலாகாதே இதற்கென்ன செய்வோமென்று வேண்டிக்சொண்டார்கள். அதற்கு பரமேஸ்வரன் இயாதொருவன் பொல்லாதகாரியம் பண்ணினால், தண்டனை நூலிற் செப்பியபிரகாரம் தண்டிக்கவேண்டியது. அப்படி உடனுக்குடனே தண்டித்தால் அவன் சொன்னபடி கேட்பான். அவன் செய்த தீவினையும் அற்றுப்போய்விடும். அவ்வாறு தண்டிக்காமற் போனால் காரியமுமுடியாது தீவினையும் நீங்காது. ஆகையால் ஒருவனிமித்தம் தண்டனைசெய்யத் தொடங்கினால் அதைப்பார்த்து உலகத்திலிருக்கிற மனுக்களெல்லாம் பிசகாய் நடவாமல் செப்பமாயும் செம்மையாயு மிருப்பார்கள். அதனால் இயாவரும் பாவங்கள்தீர்ந்து புண்ணியதேகிகளாய் சுகப்பட்டு வாழ்வார்களென்று சிவபிரான் சொல்லியபோது பிரம்மாவும் விஷ்ணுவும் பணிந்து பரமசிவமே! தாங்கள் திருவாய்மலர்ந்தருளிய தண்டனைநூல் கற்பித்தருளவேண்டுமென்று காதலித்தார்கள். உடனே சாம்பமூர்த்திதண்டனை நூலேர்ப்படுத்தி நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், பரமஞானமான பதினெண்புராணங்களுஞ் சேர்த்து அவைகளில் ஒருபுறமாய் நீதி சாஸ்திரம், தருக்கசாஸ்திரம் வகுத்து இதல்லாமல் பதினான்கு சாஸ்திரம் பிரத்யேகமாயமைத்து அத்துடன்கூட் பரதசாஸ்திரம், ஆயுள்வேதம், தனுர்வேதம், மீமாம்சை இந்நான்கையும் மேற்கூறிய பதினான்கையும் கூட்டி, ஆகபதினெட்டாக்கி, இந்தச் சாஸ்திரங்களையெல்லாம் மஹாவிஷ்ணுகையிற் கொடுத்து, அதனுடைய விபரங்களையும் போதித்து நீர் உலக ரக்ஷகனாகையாலும் மகா விஷ்ணு பிரிதிவுபதே யென்னும் வாக்கியத்தினாலும், உலகத்திற் பரவும்படியாய் விரித்து இந்தக்கருத்தை எவர்களும் தெரிந்துக்கொண்டு, இந்நூலின்படி நடக்கத்தக்கதாய் நீரே இராஜனாக இருந்து திட்டஞ்செய்து, இதையனுசரிக்காதபேரை உடனுக்குடனே தண்டித்து தருமசக்கர பரிபாலனம் பண்ணி தாரணியிற் காவற்கடவுளாயிருந்து இராட்சியுமென்று, சதாசிவ மூர்த்திகிருபையுடனே அநுக்கிரகஞ் செய்தனுப்பினார். அப்படியே விஷ்ணுவும் பிரம்மாவும் அவ்வருளைப்பெற்று வந்தார்கள். இதற்குள்ளே இந்தச்சேதி தெரிந்து எக்கியகர்த்தாவாகிய மண்பொதுத் தந்தையினுடைய மானசபுத்திரன் எப்போதும்போல் வந்து யாகத்தை முடித்தான். அப்பால் மகாவிஷ்ணு அங்கிரா வென்கிற பிள்ளையை மானசத்திலே உண்டாக்கி அவருக்கு ஆதிபாண்டரங்கன் அளித்த சாஸ்திரங்களையெல்லாம் படிப்பித்துக் கொடுத்து

அதனைப் பூமிக்கு அரசனுக்கினர், அந்தப்பிள்ளை மரிசிமஹாரிஷிக்கு இந்த சாஸ்திரங்களை வழங்கி வையகத்திற் பிரசித்தம் பண்ணச்சொன்னர். அந்தமரிசி மகாரிஷி கொண்டல்வாசனுகிய தேவேந்திரனுக்கு உபதேசித்தருளினர். அந்தத்தேவேந்திரனல் அஷ்டதிசாமுகங்களிலு மிருந்த ரிஷி ஈஸ்வரர்களெல்லாரும் மகாதேவவாக்கியத்தை யறிந்து பூலோகத்தில் விதைத்தார்கள். பூலோகத்திலுள்ளபேர்கள் சிஷ்டாசாரத் தன்மைப் பிரகாரம் தொண்டுபட்டு கிரகித்துக்கொண்டார்கள். இதுதான் தண்டனை நூல் வந்ததற்கு முகாந்திரம், அந்தத் தண்டனை நூலுக்குப் பெயர் கற்பதி. சங்கரன்ருனு, உருத்திரபவன், உமாபதி, எனவாம் இப்பெயருடையவர்களால் இந்நூல் செய்யப்பட்டது, அவரவர்களே அந்தந்த நூலுக்குப் பெயரும், அதிதேவதையுமானர்கள், அந்த நூலின்வழியே நடவாமல் அதிக்கிரமித்து தீங்குசெய்தபேர்களை தண்டிக்கிறபோது, இன்னரினியாரென்று பாராமல் தன்மனிதன் பிறமனித னென்றுன்னுமல் பயப்படாமல் அஞ்சாமல் இரக்கங்கொள்ளாமல், அந்தந்தக் காரியங்களுக்குத் தகுந்தபடி இராசன் தண்டிக்கவேண்டியது. அப்படி தண்டித்தால் அந்த ஆத்மாக்களுக்கு நல்லதெளிவும் நற்குணமும் புத்தியும் வரும் இரத்தினங்களுக்கு சாணைபிடிப்பதுபோலும், பயிருக்குக் களை எடுப்பது போலும், தாமரைத் தடாகத்திற் பாசி யகற்றுவதுபோலும், நெல்லுக்குப் பதர்போக்குவதுபோலும், இருட்டுக்கு வெளிச்சங் காட்டுவதுபோலும், ஆத்மாக்களுக்கு குற்ற நீக்கிக் குணங்கொடுத்துப் பாவத்தை போக்குதலாம். ஆனதால் அரசர்கள் பகை, நட்பு தர்மாதர்மம் ஆராய்ந்து தண்டனை கண்டனை முதலியவை சாற்றிய பிரகாரம் நடத்துவதே செங்கோன்மை. இந்தப்படிக்கு எந்த இராஜன் நடத்துகின்ருனே, அந்த இராஜனுக்கு எவர்கள் அடங்கி நடக்கின்றர்களோ அவர்களுக்கு இகபரசாதனம் உண்டாமென்று வசுவேமன் சொல்ல, மாந்தாதான்மகிழ்ந்து சந்தோஷப்பட்டு விடை பெற்றுக்கொண்டு தன்னுடைய பட்டணம் போய்ச்சேர்ந்து, தன்னரசாட்சிக்குரிய தேசமெல்லாம் தர்மா தர்மம் விசாரித்து தண்டனை நூல் பிரகாரம் நடத்தி தானும் தன்னைச்சேர்ந்த பேர்களும் பெருமையுடன் பேறுபெற்றர்கள். அதனல் இராஜர்கள் விவகாரங்களில் தாட்சணிய மில்லாமல் தண்டிப்பதே முதற்காரியம். இதுதான் செங்கோல்வந்த வரலாறென்று வீஷ்மர் சொல்லக்கேட்டு ரிஷியீஸ்வரர்கள் முனீஸ்வரர்கள் தபசிகள் தபோதனர்கள் தருமராஜன் அவ

ஷிமார்கள் கிருஷ்ணபகவான் முதலானபேர்களும் உவகை
மகிழ்ந்து அனுதியில் தண்டனை நூல் வந்தமார்க்கம் இப்
வன்று கொண்டாடினார்கள்.

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போலமைந் தொருபாற்
கோடாமை சான்றோர்க்கணி"

இன்னும் வீஷ்மர் சொல்லுகின்றார். இராஜன் தன்னிடத்தி லிருக்கப்பட்டவர்களுக்கு அடிக்கடி சாக்கிரதையாய் நடவாமற்போனால் கடினதண்டனை கிடைக்குமென்றும் பயம் பிறக்கத்தக்கதாகச் சொல்லிக் கொண்டு வரவேண்டும், அப்படி சொல்லியும் தெரியாமையால் சிலகுற்றங்கள் செய்வார்களாகில், அந்தவேளையில் தண்டனை நூல் பிரகாரந் தண்டிக்காமல் மனம் பொறுத்து சற்றே தாழ்ந்த தண்டனை தண்டிப்பதே உயிர்களின்மீது தாட்சண்ணிய முடையவன் அதுதான் தயாளுவாகிய இராஜ முறைமை. கொடுந் தண்டனை கூடாது இத்தன்மையுடன் குடிபடைகளுக்குத் தந்தை போன்றவன் மகா புண்ணியவான். அதனைத்தான் தரும இராஜனென்று சாற்றுவது அதைவிட்டு அரசன் இராஜசம், தாமச சாத்வீககுணங்களிலே அகப்பட்டு மனம்போனபடிக்குப் போய் வஞ்சகம்வைத்து தாழ்ந்த குற்றத்திற்கு உயர்ந்த தண்டனை தண்டிக்கிறவன் மகாபாபி நிந்தையையுடைய கொடுங்கோல் வேந்தன் அவனிருக்கும் நாடு பெரும்புலி சேருங்காடு அவனுக்குப் பின்னே நிற்குங் கேடு, சாமபேத தானதண்ட சதுர்வித உபாயசத்தியந் தப்பாமல் முறைமை விசாரித்து அதன் தகுதியும் வழக்கமும் ஒழுக்கமும் நியாயமுமறிந்து இருதரங்கேட்டு பெரியோர்களுக்கும் ஊராருக்கும் சரிப்படத்தெரிவி த்து, தாங்கத்தக்க தண்டனை நடத்தி தன்னுயிர்காத்து வருகிறவன் பரன். அந்தச் சாந்தகுணந்தப்பி நாம் இராசனுக்குநே நமக்கெ பாரிருக்கின்றார்களென்று எங்குமுள ரொருவரென்றெண்ணு ணவமாலை அகந்தையடைந்து எவரையு மதிக்காமல் எடுத் துபேசிய வண்ணமும் அடக்கம் ஒடுக்கம் ஒழுக்கமில்லாமனி ம் அவனுக்கு எப்பேர்ப்பட்ட பலமிருந்தாலும் பணமிருந் ழாய்க்குறைந்துபோம், அவனும் அபஜயப்பட்டு வறுமை அதற்குத் திருஷ்டாந்தமாக ஒருகதை சொல்லுகிறேன் சொல்லுகின்றார்.

வது கருமம் துணிந்தபின் எண்ணுவதேன்ப திழுக்கு'

## 26 வணக்கமில்லாதவர்களுக்கு கேடுவரும்

இமவத்கிரிச் சாரலில் ஒரு இலவமரம் ஆகாயமட்டும் உ
தன்னுடையகிளையை அஷ்டதிக்குமட்டும் நீட்டி தழையுங் கொழுந்
துந் தளிர்த்து குடை கவிழ்ந்ததுபோலிருந்தது. அடிமரமானது
பிரம்மாண்ட மாய்ப்பருத்து நெடுங்காலமா யிருக்கின்ற, அந்த மரத்
தண்டைக்கு நாரதமகாமுனிவர் வந்து வெய்யலுக்கொதுங்கி நின்று
அந்த இலவமரத்தை நோக்கி ஓ சான்மலிவிருட்சமே மகமேருமுத
லிய மலைகாடு செடிகளெல்லா முறித்து அதம் பண்ணுகிற வாயுதே
வனுக்கும் உனக்கும் அதிக சிநேகிதமோ? அவன் உன்னைமுறிக்கா
மல் விட்டிருககவேண்டிய காரணமென்ன ? அதை யொளிக்காமற்
சொல்லவேண்டு மென்று கேட்க, அந்த இலவமரம் சற்றேநகைத்து
ஐயா நாரத மகாமுனியே என்பலத்திற்கு வாயு பகவான் ஈடாக
மாட்டுவானா? எனக்கவன் எம்மாத்திரம் மற்றமரங்களைப்போல்
என்னைமதித்துக் கேட்கின்றீரோ, அந்தவாயுவை மெத்தக்கொண்
டாடிப் பேசுகிறீர். அவனுக்கு ஆயிரம் பங்கு நானதிகமாச்சுதே
என்னை இலேசாய் மதித்தீரோவென்று தன்னைத்தானே புகழ்ந்து
பேசிய சான்மலிமரத்தைப் பார்த்து நாரதர் சொல்லுகின்றார். ஓ பூர
ணித்.தருவே மகாமேருவினுடைய கொடிமுடியை யொடித்து ஆதி
சேடனைக் கெலித்த பராக்கிரம சாலியாகிய வாயுதேவனை உனக்குச்
சமானமல்லவென்றும் ஒன்றுக்கு ஆயிரப்பங்கு உயர்ந்தாயென்றும்
சொன்னாயே இப்படியாகச் சொல்லத் தகுமோ? நீ ஒரு அல்பவிருட்
சம். உன்னைப்பார்க்கினும் வயிரம் பற்றியமரம் அநேகங்களிருக்கின்
றது அதுகளொன்றும் இப்படிகர்வித்துச் சொல்லக்காணோம். நீ
பேசுவது அகந்தையா யிருக்கின்றது. இந்த ஆணவமும் அகந்
யும் வணங்காமுடிபெற்ற இறுமாப்பும் முட்டமுடியாதிருக்குமா?
தேவன் மதத்துவரும்போது இப்போ தென்னிடத்திலுள
நிலையின்படிக்கு கெட்டியாயிருப்பாயா ! இந்தச்சொல்லை ம
யென்று நாரதர்சொல்ல அவர்மொழியைக்கேட்ட இலவம
பின்னையும் பெருமை பாராட்டி இன்னம் நான்சொல்ல வே
வீண்பேச்சென்னத்திற்கு வெட்கப்படாமல் வாயுதேவ
திற்குவரும்போது நான்படுகிற அவமானமும் அவன
அவமானமும் நீரேபார்க்கலாமென்று சொல்லிற்று.
பின் வலுவைக்கேட்ட நாரதரானவர் நல்லது நாம்

இலவமரத்தினிடத்தில் விடைபெற்றுக் கொண்டுபோய் நண்பனாகிய வாயுபகவானைக் கண்டு தனக்கும் இலவமரத்திற்கும் நடந்த சங்கதிகளைப் புகன்றார்.

அம்மொழிகேட்ட வாயுபகவான் இம்மென்றெழுந்து கோபாக்கினியுடன் சீறி நெருப்புபொறி பறக்கக் கண்களை நெறித்து விழித்து ஆக்கிரமித்து லோகாலோகமெங்குங் குலுங்கத் தக்கதாய் மலை ஆறு காடு, நாடு கோபுரம், தோரண கம்பம், யாவற்றும் அதிரும் படியாய் ஆரவாரத்துடன் புறப்பட்டு கிழது மேலது மேலது கிழது என்னப்புரட்டி ஜாடித்து வரும்போது, இலவமரங்கண்டு கிடுகிடென்று நடுநடுங்கி தன்னுடைய கப்புக்களையாகிய கிளைகளை முறித்துக்கொண்டு மொட்டையாய் நின்று தப்புவார்த்தை பேசினேமென்று சலித்து தன்னை வேருடனே சாய்த்துவிடப் போகிறானென்கிற பயத்தினாலே வாயுதேவனை வணங்கி, நல்லவார்த்தை சொல்லி இணங்கிய காலையில் காற்றானது கோபசாந்தியாய் மனங்குளிர்ந்து போய்விட்டது. அதைக்கண்டு நாரதர்வந்து புன்சிரிப்புக்கொண்டு ஆனந்தக் கூத்தாடி தன்னுடைய மகதியாழைத் தட்டிப்பாடி இலவமரத்தை நோக்கி, ஏன் பலமாகிய பொங்கர்விருட்சமே! உன்னுடைய கிளையெங்கே கப்புங்காயுமெங்கே இலையெங்கே! தளிரெங்கேயென்றுகேட்டு அது உன்னுடைய இறுமாப்பல்லவா உன்னை மொட்டையடித்துவிட்டது இனியெப்போதும் உனக்கும் மற்ற ஆத்மகோடிகளுக்கும் ஆணவம் மமதை அகந்தை எப்போதும் ஆகாதென்று சொல்லிவிட்டு தன்னுடைய ஸ்தானத்திற் கெழுந்தருளினார். ஆனபடியால் இயாவனொருத்தன் கல்வியினும் செல்வத்தினும் பலத்தினும் பெருமையினும் தனக்கொப்பாக ஒருத்தரு மில்லை யென்று பிரதிஷ்டைபேசி தன்னைத்தானே புகழுகிறானோ அவன் எவனானபோதினும் சீக்கிரத்தில் நால்வருங்கண்டு நகைக்க உடனே தாழ்ந்து அவமானப்பட்டு வருத்தமுறுவான். கேளுந் தருமநந்தனா! எவனொருவன் யோக்கியமும் அவை யடக்கமும் வணக்கமும் கியானமும் உடையவனோ அவன் மேல்வருங் காரியமறிந்து காலத்துக்குத் தக்கபடி தப்பித்துக்கொள்ளுவான் அப்படிவருங் காரியங்களுக்கு முயற்சி தேடிக் கொள்ளாமலிருப்பானாகில் அவன் உறுதியாய் காரியத் தாட்சியினாலே கலக்கமுற்று கண்கலங்கி இறந்துபோவான். அதற்குச் சாக்ஷியாய் ஒருகதை சொல்லுகிறேன் கேளென்று வீஷ்மர் விளம்பலுற்றார்.

"எல்லார்க்கு நன்றும் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கேசெல்வந் தகைத்து"

## 27. மூன்ஜாக்கிரதையுடைய மும்மீன் கதை.

ஓ! தரும பூபதியே? பூமியிலுள்ள ஒருநதியின் மடுவிலுற்ற அநேகஞ் சலசரத்தில் பெரியதாகிய அறிவையுடைய மூன்றுமீன்களிருந்தன. அவைகளின் பெயர் தீர்க்கதரிசி பிரார்த்தகாலதரிசி தீர்க்க சூத்திரதரிசி. இம் மீன்கள் மூன்றும் சிநேகமாய் சஞ்சரித்துக்கொண்டிருந்தது. அப்படிக்கிருக்க அந்த மடுவிலுள்ள சலமெல்லாங் கொஞ்சங் கொஞ்சமாய் கால்வாயிலோடிக் காச்சலா லுலர்ந்து போவதைக்கண்டு மனதிலச்சங் கொண்டு தன்னுடன் கூடி மருவிய இரண்டு மீன்களையுங்கண்டு வருவது உணரும் தீர்க்கதரிசியென்னு மச்சம் சொல்லுவதாவது, என்னுடைய தோழர்களே! நாமிருக்கிற மடுவினுடைய நீரெல்லாம் வறண்டும் வடிந்துப்போய் விடுகிறது இனிமேல் செம்படவர் சேர்ந்துவந்து வலைவீசினல் நாம் அகப்பட்டுக் கொள்ளுவோம் ஆதலால் இதில் இனி நாமிருக்கப் போகாது முன்னடி மடைவாயிற்போகிற நீர்வழியேபோய் ஆழமுள்ள மடுவில் அல்லது குளங்களில் தடாகத்திலிருந்து பிழைப்போம், இனி இவ்விடத்தி லிருப்பது காரியமல்ல வென்றியம்ப மற்ற இரண்டு மீன்களும், இந்த இடத்தில் நாம் வெகுநாளாயிருந்தோம் இந்தமடுவை விட்டுப் போகிறதேது நம்மைப்பிடிக்கிறதேது போ, போ இதெல்லாம் பயித்தியம். மேலும் நினைத்த உடனே போகக்கூடுமா எல்லாம் பின்னலே பார்த்துக்கொள்வோ மென்று வரும்போதறியும் பிரார்த்த காலதரிசியும் வந்தும் அறியாத தீர்க்க சூத்திரதரிசியும் பேசியது. அதைக்கேட்டு இவர்களுக்கு மேல்வருங் காரியஞ்சொன்னல் தெரியவில்லை துன்பப்படுகிற முன்னிலையிற் றெரியுமென்று சொல்லிவிட்டு தீர்க்க தரிசியானது நீர்வளமுள்ள பெருங் குளத்திற்குப் போய்விட்டது. மற்றிரண்டு மீன்களும் முன்னிருந்த மடுவிலிருக்கும்போது மீன்வேடுவர்வந்து வலைவீசினர்கள். அம்மடுவிலுள்ள மீன்களகப்படும்போது, இந்த பிரார்த்த தரிசியென்னும் மீன் அகப்பட்டு, ஐயோ! நமக்குப் பிராணன்போகிறகாலும் நேரிட்டதே ஆ! ஆ! நமதுதீர்க்கதரிசி சொன்னதும் சரியாச்சுதேயென்று மனமயங்கி

தூக்கப்பட்டு நிதானித்து இனியாகிலும் ஜாக்கிரதையாய் இருப்போமென்று தயிரியங் கொண்டிருந்து செம்படவன் வலையை உதறிய போது இறந்ததுபோற் கிடக்க, வலைவேடன் அதைநோக்காயலிருக்க, மறுபடியும் செம்படவன் வலைவீசும் சமயம்பார்த்து அம்மீன் மடுவில்குதித்து சேற்றில் ஒளித்தது, மற்றொரு மீனாகிய தீர்க்கதரிசி என்பது பிராணனைக் காப்பாற்றிக்கொள்ளும் வகையறியாமல் வலைஞரிடத்திலகப்பட்டு மாய்ந்தது. ஆனதால் முன் சாக்கிரதையும் பேரறிவு முள்ளபேர்கள் ஆபத்துகாலத்தில் எப்படியுந் தப்பித்துக்கொண்டு பிழைப்பார்கள். அறிவுஞ் சாக்கிரதையு மற்றவர்கள் சோம்பேரியைப்போல் எந்தக்காரியங்களையும் எண்ணிப் பாராமல் எதிராளி இடத்திற்சிக்கி இறந்து போவார்கள், என்றிசைந்த பாட்டன் வாக்கியத்தைக் கேட்ட தாஷடீகனான தருமஇராஜன் ஐயா, தேவரீரால் சகலநீதியுந் தெரியவந்து. ஆநந்தபாஷ்பத்துடன் ஆசையானேன். இதல்லாமல் சீமையாளப்பட்ட இராஜர்களுக்கு ஜெயம்வருகிற விதமும், அபஜெயமுண்டாகிற காரணமும் சமையத்துக்குத் தக்கபடி ஜயத்தையடைவதற்கு யோக்கியமுமுள்ள விஷயங்களை தேவரீர் அனுக்கிரகிக்கவேண்டு மென்று கேட்க வீஷ்டுமர் அதற்கொருக்கதை சொல்லத்தொடங்கினர்.

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கையெரிமுன்னர்
வைத்தூறுபோலக் கோடும்"

## 28. சமுத்திரதீரத்திற்கும் கங்காநதிக்கும் வினாவிடை.

முன்னொருகாலத்தில் கங்காப்பிரவாகம் வந்து கடலிற்கலந்த போது சமுத்திரமும் கங்கையைக்கண்டு ஓ! கங்கையே? இந்தப் பெருவெள்ளம் வரும்போது உங்களருகி லிருக்கப்பட்ட செடி, கொடி, புற்பூடுகளை விட்டுவிடுகிறீர்கள் பெரியமரம் கிளை எல்லாம் அடிவேருடன் பிடுங்கி, அசைத்து, அலைத்து ஆட்டி, முறித்து வீழ்த்துகிறீர்கள், அது என்னத்தினாலே? இந்த விருட்சங்கள் பண்ணுகிற அபகாரமென்ன? புற்பூடுகள் செய்கிற உபகாரமென்ன என்று கேட்ட அந்தக்கேள்விக்கு கங்காநதி விசுவாசமாய் சொன்னதாவது நாங்கள் பெருகிமும்மரமாய் வரும்போது எங்களுக்கு அடக்கமாயும், ஒடுக்கமாயும், வணங்கப்பட்டதை வருத்தப்படமாட்டோம்

வணங்காமல் நிமிர்ந்து இறுமாந்து கட்டையாயிருப்பதை வேருடன் பதித்து மொட்டையாக வீழ்த்துவோம். வணங்குவது பிழைக்கும். வணங்காதது உயிரிழக்குமென்ன, அந்தவார்த்தயைச் சமுத்திரம் கேட்டு சரிதானென்று ஒப்புக்கொண்டது. ஆதலால் சிலபாவங்க ளால் னேரிட்ட இளைத்த அரசன் வணக்கத்துடன் கனத்த பலவானையடுத்து நல்லவார்த்தைகளைப்பேசி அவ்விராஜனுடைய மனம் போனபடிக்குத் தானும்போய் அண்டிப்பிழைப்பான், பலவான்களுக்குத் தாழ்ந்து நடந்தால் என்றைக்குங் குறைவுவராது யாதொரு குற்றமு மில்லையென்றார். இதுவரையிலும் இராஜநீதிகளைக் கேட்டு இன்பமடைந்தேன் இனி எண்பத்து நான்கு கோடி ஜீவாத்துமாக்களும் எவ்விதத்தில் சனனமரண வேதையைக்கடந்து தணிக்கைபெறுவார்கள், அதனதுவிபரத்தை அடியேனுக்குச் சொல்லவேண்டுமையனே யென்று தருமராஜன் கேட்க வீஷ்மோச்சாரியார் விரித்துச் சொல்லத்தொடங்கினர்.

"அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா ரஃதறி கல்லா தவர்"

## 29. தருமசாஸ்திர வியல்புரைத்தல்.

ஓ! எனக்கன்புள்ள தருமபுத்திரனே? தருமங்களை பலகோடி விதங்களாக எடுத்துச் சொல்லாத சாஸ்திரங்களில்லை நல்ல அறிவு பெரியோர்கள் தருமமார்க்கமாய் எல்லாமறிந்து அப்பிரகாரம் நடந்து நற்கதிபெறுவார்கள், தருமந்தெரியாத மூடர்களெல்லாம் பாவங்களை விருத்திபண்ணிக்கொண்டு நரகத்திற் கேதுவாவார்கள். நல்வினை தீவினைகளினுலே இந்த உலகம் நடந்து வருகின்றது உலகுண்டானதும் உடலுண்டானதும் வினைப்பயனென் றறிந்துக்கொள்ளும் மெய்யனே! அப்படி வினைக்காரணமாக வுண்டாக்கப்பட்ட பூமியில் தருமத்தின்பேரில் கருத்தைவைத்துக் கடைத்தேற வேண்டும். கடைத்தேறுவதற்கு அனேகம் வழிகளுண்டு எந்தவழியைப்பற்றி எவன் முடிவுகாண்கிருனே அவனுக்கு அவ்வழியிற் சுகமுண்டு அவைகளில் ஏதாகிலு மொன்றைக் கேட்பையானல் அதற்குவழி காட்டுகிறேனென்று வீஷ்மர் சொல்ல தருமராஜன் ஐயா! மெத்தப்பிரயாசப்பட்டு எடுத்த இந்த உடலானது தற்செயலாய் விழுந்து இறந்துபோவதற்கு முன்சோம்பலில்லாமல் எந்தக்காரியத்தைச் செய்தால் சுலபத்திற் கரையேறக்கூடும் இது உலகத்தாருக்கும் எளி

திற் றெரியவேண்டியது, அப்படிப்பட்ட மார்க்கத்தை எனக்கு அநுக்கிரகம் பண்ணிவையுமென்று கேட்க, அதற்கு பிரமசாரியாகிய வீஷ்மர் ஒரு திருஷ்டாந்தஞ் சொல்லுகின்றார்.

## 30. அனித்திய தேகிகளாகிய ஜீவர்கள் இல்லறத்திலிருந்து முத்தியடைகின்ற விதம்.

பிராமண குலத்திற்பிறந்த மேதாவி யென்னும் பெயர் வாய்ந்த ஒருவர் இருந்தார். அவர் மேலான சாஸ்திரங்களைச் சோதித்து சுருதிகுரு சுவாநுபவத்தினாற் சிறந்து பிரபஞ்சத்தையு மறந்து பொருந்தியபோது அவருடைய தகப்பனானவன் சமஸ்த பூதாதி உயிர்வருக்கங்களெல்லாம் பூமியிற் பிறக்கிறதும், இறக்கிறதுங்கண்டு மனம் வெறுத்து தன்பிள்ளையாகிய மேதாவியைப்பார்த்துக் கேட்கிறான். அப்பா குழந்தையே ? இந்தக் கிரகஸ்தாச்சிரமத்தினாலே ஆத்மலாபம் ஒன்று மில்லை உயிர் கதிபெறுவதற்கு முகாந்திரமில்லை இந்த இல்லற வாழ்க்கையால் நல்லறங்கிட்டுமென்று எனக்குத் தோன்றவில்லை இகபர சாதனமாகிய இல்லறத்தை யொழித்து மனஞ்சலித்து வனத்திற்குப்போய் பஞ்சேந்திரியங்களையும் பாழாக்கி பெரியோர்களுடை சாவகாசம் பெற்று உபதேசக்கிரம முற்று உடற்பகையாகிய காமக்குரோதாதிகளை நீக்கி பிராணவாயுவிற்கு யோகவலுவேற்றிக் கொண்டு சம்மாரகர்த்தாவாகிய எமனை ஜயித்து விஷ்ணுமாயை வென்று பரத்தின் பதத்தைக்கண்டு வாழவேண்டுமென்று இச்சைகொண் டிருக்கின்றேனென்று சொல்ல மெய்யனான மேதாவிகேட்டு ஐயா காட்டுக்குப்போய் தபசுசெய்து கதியடைகிறேனென்று கழறுகின்றீர் இல்லறத்திற் கூடாதென்றும் துறவறத்திற் பரத்தை யடையலாமென்றும் இரண்டு விதங் கற்பித்தீர் இவ்விடத்தை விட்டு அவ்விடத்திற்குப்போனால் ஆத்மலாபம்வரும் இல்லாவிட்டா லில்லையென்பதல்லவோ உம்முடைய கருத்து ஆத்மலாபம் ஆசிரமத்தின்பேரிலேறிற்று, அதப்படியல்ல, கியானவுறுதி கிட்டாத பேர்களுக்கு ஸ்திரீயின் மயக்கமும் அசத்தியமும் அவாவும் புறங்கூறுதலும் பொறுமையும் ஜீவஇச்சையு மிருந்து அதனால் ஈஸ்வரன் சார்பு பெறமாட்டாமற்போய் கருமபூமியைக் காதலித்து ஐம்புலன்களையு மடக்காமல் யான் எனது என்னும் அஞ்ஞானப்பற்றால் மயங்கி நின்றவர்

கள் எவர்களோ அவர்கள்தான் அடிக்கடி ஜனனமெடுத்து எமதண்டனைக்கு ஈடுபட்டு பாசக்கயிற்றாற் கட்டுண்டு கதையினால் மொத்துண்டு சூலத்தாற் குத்துண்டு சோம்பிக்கிடப்பார்கள். கியான உறுதியைக் கடைப்பிடியாய்க் கொண்டவர்கள் ஜீவகாருண்யத்துடன் இருந்து அவர்கள்பெண்மாயை யடையாமல்சத்தியந்தப்பாமல் சதாசிவச்சார்புபெற்று ஐம்புலனையுமடக்கி யமனையும் புறம்போக்கி அருள்வடிவு பெறுவார்கள். அப்பேர்ப்பட்ட உத்தமர் இங்கிருந்தா லென்ன எங்கிருந்தாலு மென்ன வீட்டிலிருந்தால் வியசனம் காட்டிலிருந்தால் தரிசனமென்று இரண்டுமில்லை. அவர்கள் பெண்சாதிபிள்ளைகளுடன் கலந்து குலாவி நெருங்கிவாழ்ந்தாலும் அவர்களை மாயை அசைக்க மாட்டாது. மனத்தெளிவும் உறுதியும் உண்மைக் கியானமும் நித்தியாநித்திய வஸ்துவிவேகமும் மலபரிபாகமும் இல்லாதவர்கள் காட்டுக்குப் போனாலும் காலூன்றித் தவமிழைத்தாலும் ஆகப்போகிற தொன்றுமில்லை. இருந்த இடத்திற் றவங் கூடாதபேருக்கு எங்கேபோனால்தா னென்னகைகூடும் பெரியவர்களின் நேசமும் விசுவாசமும் சாவகாசமும் உபதேசமும் இங்குமுண்டு அங்கேமாத்திரம் உண்டென்பது அபத்தம் மோட்சம் பெறுகிறவனுக்கு இடபேதமில்லை. இருந்த இடத்திலிருந்து அனுபவிக்க மாட்டாதவன் வனத்திற்குப்போய் பசியுற்றுபுலிக்கிரையாகி மறுபடியும் சுகமற்ற ஜன்மமாகப் பிறக்கவேண்டியதாய் முடியும். உள்ளபடியே மோக்ஷலாப மடைகிறவன் மனோதிடமுடையவனாய் இல்லத்திலிருந்து ஈஸ்வர பணிவிடைப் புரிந்து சித்தந்தெளிவுடைய வனாயிருப்பானாகில் அதிலிருந்து கிஞ்சித்துபிசகின போதிலும் சுவர்க்காதி போகங்கிட்டி மீண்டு சுக ஜீவியாய்ப்பிறந்து முத்தியடைவதற்கு சந்தேகமில்லை. ஆகையால்மனோதிடமுடையவன் எங்குமிருக்கலா மென்று வார்த்தை வழங்கிய மேதாவியின் வசனத்தை தந்தைகேட்டு சரிதானென்று தனியனாய் ஈஸ்வரபக்தியும் இருதயசுத்தியும் பெற்று இரக்கமும் பூததயவும் அருளுடைமை அன்புடைமை உறுதிக்கியானமுற்று ரிஷிகளுக்கெல்லாம் பெரியவராகி பூமியிற்பிரசித்தரானார். ஆதலால் உலகிலுள்ளபேர்களெல்லாரும் கடைத்தேறுவ தெப்படி யென்று உசாவியபடியால் இனிநான் உனக்குச் சொல்லவேண்டிய தென்ன இவ்வாறு இல்லற வாழ்க்கையைக்குறித்து பேசியிருக்கிற வண்ணம் நல்லமனைவியுடன்கலந்து இல்லறம் நடத்தினால்எல்லவர்க்கும் இன்ப

முண்டாகும் மதிகுலமன்னனே யென்று வழங்கக்கேட்டு தருமராஜன் தருக்கடைந்து ஐயா வெகுதிரவியம் பெற்ற ஒருவன் வாழ்வதும்; செல்வமில்லாதொருவன் அவனைத்தாழ்வதும் உயர்ந்தவனொருவன் தாழ்ந்தவனொருவன் என்பதும் என்னகாரணத்தாலென்று கேட்க வீஷ்மே ரியம்புகின்றார்.

## 31. செல்வமுடையவர்களை வறுமை யுடையவர்கள் தாழ்வதற்கு காரணம்.

மனவுறுதிகொண்ட மாதவத்தருமனே! கேளும் தன முள்ளவருக்கு மதமிருக்கும். கோபம் பிறக்கும். நமக்கெதிர் ஒருவருமில்லையென்று கர்வப் பேய்பிடிக்கும். கல்வி கேள்வியுடைய பேர்களைக் கண்டால் அவர்களை மதியாமலும் வணங்காமலும் அகந்தை ஆங்காரத்தையடைந்து ஐஸ்வரியம் சாஸ்வதமென்று அக்கியானத்தை மதித்து விக்கியானத்தை விடுத்திருப்பார்கள். அன்றியும் பெண்மயக்கம் பொருண்மயக்கம் மண்மயக்கம் இவைகளைப் பெருமையாகப் பெற்றிருப்பார்கள் சம்பத்தில்லாதவர்களுக்கு இத்தியாதிசங்கடங்களொன்று மில்லை. அதனால் தரித்திரன், ஜன்மாந்திரத்தில் இத்தியாதி மமதையடைந்து பெரியவர்கள்மனம் பேதிக்கநடந்து பெரியோரையிகழ்ந்து ஈஸ்வரனை மறந்து இந்தப்பிறப்பில் நொந்து வந்து பிறந்து இனிநோதலடையப் போகிறதனவானிடத்தில் காத்துக் கொண்டிருக்கிறான். திரவியமுள்ளவன் உயர்ந்தவன். பூர்வபுண்ணியத்தினால் வந்தபொருளைப்போற்றி இன்னம் புண்ணியந் தேடிக்கொள்ள முயன்று எவரையும் நொய்யவுரையாமல் நோதல் புரியாமல் செய்யுங்கருமந் திங்கறச்செய்து ஜீவராசியில் இரக்கம் நாட்டிஸ்திரத்திலிருந்து தெய்வமிகழாமற் றொழுது சிந்தையொருமித்து மமதை நீக்கி வாழ்வானாகில் அவன் தேவபோகத்தை யனுபவித்து இன்னொரு ஜன்மத்தில் இறைவனாவான். அப்படிக்கில்லாமல் நடந்தால் அதிக பாவமூட்டை கட்டிக்கொண்டு நால்வருநகைக்க நலிவுற்றிருந்து நரகவாதனையி லழுந்திக்கிடந்து இவன் நன்றாயிருக்கும் போது மனமறிந்து செய்தநன்மையோ மனமறியாமற் செய்த தன்மையோ அந்தப் பலனிருந்து வேறொருயோனியிற் புகவொட்டாமல் ஏழையின் வயிற்றில் மேலாகியமானிட ஆக்கையிற் பிறந்து மேற்கூறிய மாதவப்பேறுபெற்ற மகாராஜனிடத்தில் வறுமையாய்க் காத்

திருக்கவேண்டிவரும். கூடியமட்டும் பாரமார்த்திகமாய் நன்மையை நாடி நடந்தவன், பின்னும் முற்பதவியின் பெருமையிலே செல்வ னுய்ப் பிறப்பான். தீரக்கெட்டு ஆணவப்பட்டு அழிபவன் வேறு யோனியிற் பிறந்து வெகுகஷ்டப்படுவான். அதனால் திரவியமில்லாத வன் கர்மவமற்றவன். திரவியம்படைத்தவன் கர்வமுற்றவன். எல் லாப் பொல்லாங்கும் பெரும்பழியும் பொருளிருப்பவனைப் பீடிக்கு மேயொழிய பொருளில்லாமல் அருளிருப்பவனை பீடிக்கமாட்டாது தருமராஜனே யென்ன, அதைகேட்ட அறன்மைந்தன் ஐயா தேவ ரீர் திருவாய் மலர்ந்தருளிய வண்ணமானுல் திரவியம் படைத்தவர் கள் எவ்விதத்தில் கடைத்தேறுவார்கள் அதைச்சொல்ல வேண்டு மென்று வேண்டினுன். அதற்கு வீஷ்மர் சொல்லுகின்ருர், பொ ருள் அவாவைபோக்கி, இப்பொருள் யாரிடத்திலும் நிலைத்திருப்ப தல்லவென்று அநுபோகத்தினுலும், நல்ல ஆசிரியர் முன்னிலையினு லும், சாஸ்திர வழக்கத்தினுலும் ஆசையாகிய வேரைக்களைந்து, அண்ணழி ஆண்டழியென்று அலக்ஷியப்படுத்தி அருளாசைவைத்து நன்மார்க்கம் பற்றிநிற்பாராகில் அவர்கள் நல்லகதியை விதியாய்ப் பெறுவதுமன்றி ஜனனம் நேரிட்ட போதிலும் நாலாவிதத்திலும் பொருள் மிகுந்து குடிபெறுத்து குபேரசம் பத்தைப் பெறலாகும் அதற்கொரு கதைசொல்லுகிறேன் கேள்.

"மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங் கீழல்லார் கீழல்லவர்,,

## 32. செல்வமுடன் நற்கதி யடையும் உபாயம் வருமாறு.

வேதநெறிதப்பாத மங்கனென்னு மறையவன் பணத்தாசைப் பிடித்து எந்த விதத்திலாவது எந்தத் தொழிலினுலாவது பொருள் சேர்ந்தால் போதுமென்று தன்னுடைய சாதியாசாரந் தப்பி திர வியந்தேடினுன். அதை தரும கருமங்களிலும் சற்பாத்திரங்களி லும் செலவழித்து அதற்குத் தகுந்த நல்லபயனை யடையாமல் பிரயோஜன மில்லாமல் பூமியிற் புதைத்து உலோபமிகுத்து பின்னை யும் ஆசைப்பிடித்து ஆத்துமக்கியானமற்று அறிவும் பொறையும் நெறியும் முறைமையுங்கெட்டு தான் போகிறகதி தனக்குத் தெரி யாமல் நாம் சாஸ்வதமாயிருப்போமென்றும் இந்தத்தனம் நம்மை விட்டுப்போகாது செல்வ நிலையாமை இளமைநிலையாமை யென்னும்

நீதிசாஸ்திரம் தருமசாஸ்திரங்களைப் பார்க்காமலும் பொருளெந்த வழி வந்ததோ அந்தவழியே போய்விடும் இந்தப் பொருளிருக்கும் போதே அருளைத் தேடிக்கொள்ளுவோமென்று யோசிக்காமலும் கியான சூனியத்தால்; மயங்கி சரீரந் தளர்ந்து நோய்கள் மேலிட்டு சிலேத்துமரர்ஜன் காலிட்டு வெளிப்படுகிற காலத்திற் வெள்ளைக் கொடிபோன்ற கறுத்த மயிர் நரைத்து மறைவு செய்வதுபோல திரைவந்து பேரிகை முழங்குவதுபோல் இருமிக் கனைத்து கட்டுங் கலகலத்து கால்வாங்கி யோடும். நாடிகளோட்டத்தைக் கூடிக் குதிக்க பாரியாள் புத்திரமித்திரரும் பதைபதைத்து விழி மேல் கீழாய் வெருண்டு வழிந்து உடலும் உயிரும் ஒடுங்குங் காலையில் யாத்திரைக்கியானம்வந்துகுதித்து ஐயோ நாமிறந்துபோய்விட்டால் நமக்குப்பின்னாலே நம்மைத்தொடர்ந்து இந்தப் பெண்டுபிள்ளை உற்றார் பெற்றார் சுற்றமும் நாம் தேடிப் புதைத்த பொருளும் நம்முடன் வரப்போகிறதோ ? ஒன்று முதவப்போகிறதில்லையே, நாம்செய்த நல்வினை தீவினை அல்லது பாவ புண்ணியம் இதுதானே நமக்கு வழித் துணையாய் வருவது நமக்குங் காலம் சமீபித்தது. இந்தப் பொருளைப் போற்றி வைத்திருப்பதினால் பிரயோசன மென்னவென்று போங்காலக் கியானம் பிறந்து புண்ணியர்களாகிய நல்ல சத்கருமங்களில் அனேகமாய் சிலவுசெய்து ஒருகாசும் வையாமல் ஆசையுஞ் செய்யாமல் பாப் பிரமத்தையே பொருளாகக்கொண்டு பிராணனை விட்டான். உடனே சிவகண தரிசனமாகி மோட்சம் லபித்தது ஒ! வல்லவனேயென்று வீஷ்டுமர் சொல்ல நல்லவன் கேட்டு நன்குடன் இதமகிழ்ந்து எங்கட்கிசைந்த இறையே சரணம் சரணம் சரணம் [இவ்வுலகமானது பஞ்சபூதசகிதமென்றும் பஞ்சகோச மெய்யென்றும் பகர்கின்றார்களே அந்தப் பஞ்சபூத மெங்கே இருந்தது அதுவந்து இந்தத்தேகத்திற் சம்பந்தப்பட்டவித மென்னவென்றுகேட்க வீஷ்டுமர் சொல்லுகிறார்.

## 33. உடலானது பஞ்சபூதவடிவென்றும், பஞ்சகோச மெய்யென்றும் உணர்ந்த பூதங்கள் இத் தேகத்திற் புகுந்தவிதம் வருமாறு.

கேளும், கருமனந்தனே! பராபரமாகிய பரமேசுவரன் தராதலம் படைக்கத் தானினைந்தருளிய பராபரத்திற் பரந்தோன்றி அப்பரத்

திற் சிவந்தோன்றி சிவத்திற்சத்திதோன்றி சத்தியில் நாதந்தோன்றி நாதத்தில் விந்துதோன்றி விந்துவில் சதாசிவந்தோன்றி சதாசிவத்தில் மகேசுரர் தோன்றி மகேசுரத்தில் உருத்திரன் தோன்றி உருத்திரனில் விஷ்ணுதோன்றி விஷ்ணுவில் பிரம்மாதோன்றி பிரம்மாவில் ஆகாயந்தோன்றி ஆகாயத்தில் வாயுதோன்றி வாயுவில் அக்கினிதோன்றி அக்கினியில் அப்பு தோன்றி அப்புவில் பிருதிவு தோன்றி, பிருதிவியில் அன்னந்தோன்றி, அன்னத்தின் கண்ணே நரர், மிருகம், பட்சி, தாவரசங்கமாதிகள் யாவற்றும் தோன்றின.

இவ்விதமாய்த் தோன்றிய நரர் மிருகம் பட்சி தாவரசங்கமாதிகள் அன்னத்திலொடுங்கி அன்னம் பிருதிவிலொடுங்கி பிருதிவு அப்புவிலொடுங்கி அப்பு தேயுவிலொடுங்கி தேயு வாயுவிலொடுங்கி வாயு ஆகாசத்திலொடுங்கி ஆகாசம் பிரம்மாவிலொடுங்கி பிரம்மா விஷ்ணுவிலொடுங்கி விஷ்ணு உருத்திரனிலொடுங்கி உருத்திரன் மகேசுவரத்திலொடுங்கி மகேசுவரன் சதாசிவத்திலொடுங்கி சதாசிவம் விந்துவிலொடுங்கி விந்து நாதத்திலொடுங்கி நாதஞ் சத்தியிலொடுங்கி சத்தி சிவத்திலொடுங்கி சிவம் பரத்திலொடுங்கி பரம் பராபரமாகிய பரமேசுவரனிடத்தில் ஒடுங்குமென் றறிந்துக்கொள்ளும் இந்த பிருதிவாதி பூதம் ஐந்துவிலிருந்து அன்னமய கோசங்களாகி அன்னத்தில் இரசந்தோன்றி இரசத்தில் உதிரந்தோன்றி உதிரத்தில் மாம்சந்தோன்றி மாம்சத்தில் மேதைதோன்றி மேதையில் அஸ்தி தோன்றி அஸ்தியில் மச்சை தோன்றி மச்சையில் சுக்கிலந் தோன்றி சுக்கிலத்தில் சுரோணிதந் தோன்றியது:

இப்படித் தோன்றிய சுக்கில சுரோணிதங்கள் அணுப்பிரமாணமுள்ள ஒருருபுபோலப் பாய்ந்து குதித்து பேரிகைபோல் கண்டித்து நடுவெளியில் ஒருசுழி முளையுண்டாகி அம்முளையினடுவே ஒரு துவாரமுண்டாகி அத்துவாரத்தினடுவேயுள்ள இரண்டெழுத்துகளாலே அபிமந்திரத்துப் பிண்டமாகி எழுமளவில், சுக்கிலம் பெருகில் ஆணும் சுரோணிதம் பெருகில் பெண்ணும் இந்த ஐந்து பெரும் பூதங்களினால் சமஸ்தமான பிராணிகள் தோன்றின அகில முதலாகிய பாதாள லோகமேழும் பூலோக முதலாகிய சத்திய லோகம் மேழும் ஆகப் பதினான்கு லோகங்களும் முகமாகவும், எழு சமுத்திரம் வயிறாகவும், பர்வதங்கள் முழுதும் எலும்பாகவும், தோப்புகள் வனங்கள் காடுகளெல்லாம் ரோமமாகவும, வானமும் பூமியும் உடலாகவும், சக்கிரவாளகிரி கையாகவும், சந்திர

சூரியர் கண்களாகவும், வடவாமுகாக்கினி யுகாந்த காலாக்கினி உதராக்கினியாகவும். ஆறு கால்வாய் அருவி முதலாகியதும் இரத்த நாடியாகவும், திசையே காலாகவும் உருக்கொண்டிருக்கின்ற தம்பிரானாகிய ஆண்டவன் கர்த்தா; அவர்தான் அண்டநாதன் பிர்ம்மாண்டநாதன். இதில் சரங்களாயுள்ளதெல்லாம் பஞ்சபூத சொரூபமென்றும் அசரங்களாயுள்ள மலை, மரம், ஆறு, குகை, கோபுரங்கள், பஞ்ச பூதசகிதமல்லவென்றும் சிலர் நினைப்பார்கள், நீயப்படி எண்ணலாகாது, சரங்களைப்போலவே அசரங்களென்றும் அவ்வசரங்களெல்லாம் சலத்தினாதரவால் முளைத்துவளருவதேயல்லது வேறல்ல ஆனதைப்பற்றி அந்த பஞ்ச பூதத்தினாலாகிய இத்தேகமுமப்படியே வந்ததென்றுநினைத்து அக்காரியங்களை அதிதீவரத்திலுன்னியறிந்துக்கொள். அப்படி வந்த விவேகமும் பகுத்தறியும்படியாயுள்ளமையானதேகமென்றெண்ணி நற்கதிபெறும் பெரியோர்களுடைய ஆசாரமும் சொல்லுகிறேன் கேளும்.

சூரிய உதயமாக ஐந்துநாழிகைக்கு முன்னெழுந்து கமண்டலத்து நீரால், கரம், வாய், முகம், ஆசமனியம் பண்ணிக்கொண்டு பரிசுத்த மனதுடன், தனது ஆத்மார்த்தகடவுளின் அடிமலரைத் தியானித்து, செவிமறைய சிரவேஷ்டிகட்டி நிருதிமூலைக்குப்போய் களர் நிலத்திலே மற்றொருநினைப்புகள் வரவொட்டாமல் உன்மத்தனாயிருந்து மலமிரண்டையுங் கழித்து எவர்களுடனேயும் பேசாமல் இரு கைநிறையமிருத்திகைசேர்த்து குதத்திற் குப்பதினொன்றும், இடது கரத்திற்கு ஏழும், வலதுகரத்திற்கு ஐந்தும், காலுக்குப் பத்தும், ஆக முப்பத்துமூன்றுதரம் சௌசமாற்றி அந்தத் தொகையேவாய் கொப்பளித்து, பதினொரு அங்குலம், ஐந்து அங்குலமாக நல்லபூங் கொம்பு அல்லது பாற்கொம்புகளால் பல்விளக்கி அங்கந் நியாசம், கரந்நியாசம், பண்ணிக்கொண்டு ஈஸ்வரத்தியானஞ் செய்து தடாகத்திலிரங்கி பரிசுத்த கங்கையாகப் பாவனை பண்ணி சங்கல் பித்து, ஸ்நானமாடி நீரைத் துவட்டி மடிவஸ்திரமுடுத்தி சூரியமந்திர சகிதமாய் சூரிய நமஸ்காரம்பண்ணி நித்திய கர்மாநுஷ்டான முடித்து ஆத்மார்த்தக் கடவுளைப்பூசித்து தோத்திர நமஸ்காரந்தொடங்கி ஆசமன்னியங்கொண்டு அசுத்தமான வழியிற் செல்லாமல் நல்லவழியாய் நடந்து, தானிருக்கும் இடம்புகுந்து, பசித்து வந்த பரதேசிகளுண்டோ வென்று தேடி பஞ்சகச்சாய அன்னமும் பகர்ந்து, உபசரித்து கோபத்தை விடுத்து, சத்தியத்தை யடுத்து, குரோதத்தை

தடுத்து, மனதுக்கினமாகிய ஈனவிருத்திகட் கிசையாமல், பெரியோரையடுத்து இதுசத்து, அசத்து, சடம், என்கின்ற பதார்த்த பேதமுணர்ந்து, எதார்த்தமான தன்னைத்தா னறிந்து, காலந்தெரிந்து உண்டு கழிக்கத்தக்கதைக் கழித்து, அதிக பிரசாபத்தியத்தி லகப்படாமல் நாவைக்காத்து நன்மைபெற் றிருப்பதே ஆச்சாரம். இதற்கு வேண்டிய மந்திரங்களை யெல்லாம், மர்மமாய் மனதிலுணர்ந்து அம்மகா மந்திரங்களை பிரயோகத்தின் வழி போக்கி பஞ்சேந்திரியங்களையும் நிக்கிரகம் பண்ணி தான்கடைத்தேறத் தக்கதாக எவனொருவன் நிலையினின்று மந்திரஞ் செபிக்கின்றானோ அவன் எல்லாவற்றிற்கும் மேலான பேரின்பலோகம் பெறுவான்.

இதிப்படியிருக்க, யோகிகளுடைய தன்மையை யுரைக்கிறேன் கேள், இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, இவைகள், அட்டாங்கயோகம், இவ்வெட்டினுடைய, ஆசனம், மந்திரம், இயற்கை, இருக்கை பேதாபேதம் இவைகளை நன்று யனுபவித்தறிந்த பெரியோர்களிடத்தில் அனுபவிக்கும் விதமறிந்து, விபூதிதுளிதமணிந்து அக்ஷரரூப மாய் வாயுவை கும்பித்து யோகாப்பியாச மனுஷ்டிப்பார்களென்று வீஷ்டுமாச்சாரிசொல்ல தருமராஜன், ஐயா? அந்த விபூதியின் மகிமை உலகத்தாருக்கும் எளிதில்தெரிய, அந்த மகத்துவத்தை எனக்கு அனுக்கிரகம் பண்ணிவைக்க வேண்டுமென்று கேட்க அதற்கு நான் சூதமுநிவரால் கேட்ட விபூதி மான்மியத்தை சொல்லுகிறேன் கேளுங்களென் றுரைக்கின்றார்.

## 34. விபூதியின் மகிமை.

கேளும், தருமனந்தன! விபூதி தரிப்பதனால் முத்தியடைந்தவர்களெவர்களோ அவர்களுடைய சரித்திரம் கேட்க மிகு ஆவலுடையவர்களா யிருக்கிறோமென்று, நைமிசாரண்ணிய முநிவர்கள், சூதமுனிவரைக்கேட்க அவர்புகழ்ந்து சொல்லத்தொடங்குகின்றார்:

கேளுங்கள் நைமிசாரண்ய முனிவர்களே! கைலாசபதியின் பரிசுத்தமான நிறமுள்ள பெருமைதங்கிய விபூதியும் உருத்திராக்ஷமணி மகிமையும் அம் மணியின் திருமுகத்தின பலன்களையும் மற்றும் அவைகளின் பெருமையைச்சொல்ல அளவுகடந்திருந்தாலும் கூடிய

மாத்திரம் நானறிந்த அவ்வளவும் உங்களுக்கு அறிவிக்குறேன் கேட்பீராக.

விபூதிக்கு பெருமை நீறு, பஸ்பம், பசிதம், சாரம், இரக்ஷை யெனப் பெயர்பெறும், பூதியென்பது, ஐசுவரியம் யென்று அருத்தம். அதனைத் தரித்தவர்களுக்கு அழிவில்லாத ஐசுவரியத்தைக் கொடுப்பதால் பூதியெனப் பெயர்பெற்றது. ஐசுவரியமென்பது முத்தி பேற்றினையாம்.

விபூதியானது மிருகங்களுட்சிறந்த பசுவின் சாணத்தையே கொண்டு ஆகுங்காரணத்தை சொல்லுகிறேன் கேளுங்கள், முன்னைப் பழம்பொருளாகிய பரமசிவக்கடவுள், பிரம்மதேவர் விஷ்ணு உருத்திரனர் அனந்தேசுரர் சதாசிவப்பரமார்த்தர் என்னும், பஞ்சமூர்த்திகளானும் முறையே சங்கரிக்கப்படுகின்ற, நிவிர்த்திகலை, பிரதிஷ்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியதீதகலை என்னும் பஞ்சகலைகளுக்கு முட்பட்ட தத்துவபுவனங்களின் சங்காரங்களாகிய, பிரம்மாண்டபிரளயம், பிராகிருதப்பிரளயம், மத்திமப்பிரளயம், மகாப்பிரளயம், பிரதமமகாப்பிரளயம் என்கிற ஐவகை சங்காரத்துள் மாயாப்புவன முடிவுவரைக்குஞ் சங்கரிக்கப்படுகின்ற அக்காலத்திலே அணுசாதாக்கிய மிறுதியாகவுள்ள தேவர்களது உடலங்களெல்லாம் தாம் தமது நெற்றிக் கண்ணினின்று தோன்றும் ஒரு தீப்பொறியினாற்தகித்து, சாம்பராக்கி அவற்றைத்தமது திருமேனியிற் பூசித் தாண்டவ மாடினபடியால் ஆண்டவனுக்கு சுடலையாடி யென்றும் திருநாமம் வந்தது. அந்ததேவர்கள் யாவரும் பசுவின் ஒவ்வோர் உருப்புகளிலும் வசிக்கப்பெற்ற அருட் பெருமையால் அப்பசுவின் சாணத்தை அக்கினியினால் தகித்து அதனால்நீர்த்து பொடித்த நீற்றை அதற்கு அறிகுறியாக ஆன்மாக்களும் பூசும்படியாக விதித்தருளினர். அன்றியும் மும்மலங்களால் கட்டுப்பட்ட ஆன்மாக்களுக்கும், பசுவென்னும் பெயரிருத்தல் போல, ஆசையாற் கட்டுப்படும் பசுவென்னும்பெயரைக்கொண்டிருக்கும் உண்மையினாலும் தேவர்கள் வசிக்கும் பசுக்களின் மலம் நீராகப்படுத்தல் போல, ஆன்மாக்களாகிய பசுக்களின் மலங்களும், சிவஞ்ஞான அக்கினியாற் றகிக்கப்படும் என்னும் காரணத்தினாலுமாம்.

பசுக்களின் ஒவ்வொரு உறுப்புகளின் மீதும் பிரம்ம விஷ்ணு உருத்திரன் முதலான தேவர்களும், ரிஷீஸ்வரர்களும், புண்ணிய தீர்த்தத்தின் தேவதைகளும் வசித்திருப்பதால் அப்புண்ணிய

பெருமைவாய்ந்த பசுவின் சாணமேயாதரித்து விபூதியுண்டாக்குதற் தாக, விதிக்கப்பட்டது. இதனாலே உச்சிட்டமுதலான அசுத்தமான விடங்களெல்லாம் இப்பசுஞ்சாணத்தால் சுத்தமாகின்றது அது போல அக்கினிசொரூபராகிய சிவ பெருமானுடைய அக்கினியால் தகித்த திருவெண்ணீற்றை ஆன்மகோடிகள் தரிப்பதனால் ஆணவ மலத்தைப்போக்கி அவர்களை பரிசுத்தராக்கி சிவபெருமான் அவர்களுக்கு சிவசாம்பிராச்சியத்தைக் கொடுக்கின்றார்.

அதற்கு திருஷ்டாந்திரம் ஒரு சரித்திரம் சொல்லுகிறேன் கேளுங்களென்று சூதமுனிவர் சொல்லுகின்றார்.

பரமசிவத்தின் திருநீற்றின் பெருமையை தேவர்களாலும் நிச்சயித்து அறியக்கூடாத தன்மை யுடையதென்றால், வெவ்வேறு தேகமெடுத்து உழலுகின்ற மனிதர்களோ அறியத் தக்கவர்கள். ஆயினும், ஒருவாறு அப்பெருமையை சொல்லத் துணிகின்றேன்.

நற்குண நற்செய்கை யுடையவராய் சதா விபூதிதாரணராய் சிவ சின்னங்களைத் தாங்கி காலமுழுவதும் கடவுளை தியானித்திரா நின்ற வேதமுதலான சாஸ்திரங்களுணர்ந்து பரிசுத்தராயிரா நின்ற வாம தேவனென்னும் ஒரு முனிவரிருந்தார். அவர் இவ்வுலகத்திலிருப்பவர்களுக்கு இனிய அருள்பொழியும் பெரியோராக்கும், அவரோ சாந்தகுணமே மேற்கொண்டு தேசமெங்குந் திரிந்து அன்பர்களாயுள்ள ஆன்மாக்களுக்கு அருள்பொழியும் எண்ணமுடையவராய் போகும் பாதையில் ஓர்வனத்தை யடைந்தவளவில், வேல் போன்ற பற்களும், அகன்ற வாயும் கடலின் அலைபோன்ற புருவமும், பனை மரம்போல் நீண்டகரங்களும், கால்களும், அக்கினிமயமாய் சுழன்று பருத்த கண்களும் செம்மயிரினை யுடையவனும், மேகத்தின் இடி போல ஒலிக்கின்ற குரலோசை யுடையவனுமாய், வேறொரு ரிஷியின் சாபத்தால் நேரிட்ட இக்கொடுமையான வஞ்சனையுடைய ஒரு ராக்ஷதன் அந்தவனத்தில்வந்த தவமகிமையுடைய வாமதேவனைக் கொன்றுதின்னமனதிற் கோபக்குறியோடும் மெதுவாகவந்து, வாம தேவமுனிவனைப்பார்த்து நீ போகாமல் நில்லும் நில்லுமென்று கோபத்துடன் உறுதிச் சொல்லி இரண்டு நீண்டகைகளால் பிடித்துக் கொண்டு அவரைக்கொன்று தின்ன பனைபோன்ற நீண்ட கைகளால் தழுவியிருக்கவும் பரிசுத்தராகிய அம்முனிவருடைய திருத்தோள்களிற் பூசியிருக்கும், விபூதி யானது அவ்வரக்கன் சரீரத்திற் பட்டதனாலும் அம்முனிவனது திருமேனியை ஸ்பரிசித்ததனாலும் அந்த

இராக்ஷதனுடைய அகோரரூபமும் பாவமும் தொலையவே, மன்ம தன்போல் பிரகாசியாநின்ற சௌந்தரியமுள்ள தன்பழைய சரீரத் துடன் நின்றான். அந்த ராக்ஷத வுருவம்மறைந்து நிற்கவே அவனு க்கு தாகமும், பசியும், மாராமலிருந்த தீயகுணமும் தொலைந்து, பூர்வஜன்மத்தின் இயற்கையான செயல்களையறிந்து மனதாற்றியா னித்து, வாமதேவ முனிவனை வணங்கி ஓமகா தபசியாகிய முனி சிரேஷ்டரே! என்னுடைய சரித்திரஞ் சொல்லுகின்றேன் கேட் பீரென்று பிரார்த்தித்தான்.

சுவாமி நான் எப்போதும் மாராமலிருக்கும் பசியினால் இக்கா ட்டில் வருந்தினேன் அப்படியிருந்த நான் தவத்தின் பெருமையுடைய உமது திருமேனியை ஸ்பரிசித்த அதிர்ஷ்டம் அடியேன் பெற்றத னால் எனக்கிருந்த இராக்ஷத உருவமும் அடக்கக்கூடாத பசியும், கொலைத்தொழிலும் நீங்கிச் சொல்லத் தகாத நல்லுருவத்தையு மடைந்தேன். ஒரு க்ஷணப்பொழுது உம்முடைய திருக்கண்களால் என்னைப் பார்க்கும்படி பாக்கியம்பெற்ற அடியேன் இயல்பாகவே, பற்றற்றகுணத்தையுடைய பரமசிவத்தின் கிருபை பெறவும், இவ்வு லகத்தில் உழலுகின்ற பிறவிப்பிணி நீங்கவும் என்னை ரக்ஷிப்பது தேவரீர் கடமையேயென்று சொன்னான்.

பழையபடி நல்லுருவம்பெற்ற அந்தராக்ஷதன் இப்படி சொன் னதைக் கேட்ட வாமதேவமுனிவர் ஆச்சரியத்துடன் சந்தோஷ மும் கிருபையும் பொருந்தி அந்த ராக்ஷதனைப்பார்த்து, காட்டில் சஞ்சரிக்கின்ற கொடியசெய்கையையுடைய அரக்கனே! இங்ஙனம் பேசுகின்ற நீ யாவன் நீ வுருமாறி இவ்வனத்தில் வந்த காரணம் என்னை? நீ பாவத்தினால் வரத்தக்க தீயதாகிய இராக்ஷதரூபம் எடுக் கும்படி என்னபிழை செய்தனையென்று கேட்டருள; அந்த வார்த் தையை அவ்வரக்கன் கேட்டவுடன் மனமகிழ்ந்து வணங்கி, என்னை யனே! உம்முடைய கிருபையை பெற்றதனால் இருபத்தைந்து பிறப் புமறிந்தேன், நான் வந்த வரலாற்றையும் சொல்லுகிறேன் கிருபை செய்து கேட்பீராக, எனக்கு முன்னாலே சம்பவித்ததையும், வனத் தில் வந்த கதையும் ஒழிவில்லாமற் சொல்வானாயினன்.

என்னையனே! இந்த ஜன்மத்துக்குமுன் இருபத் தைந்தாம் பிற வியில் இவ்வுலகம் புகழும்படி துச்சயனென்னும் இராஜனாய் பிறந்து கொடுமையான பாவங்களைச் செய்யும் மிலேச்சர்களுக்கு இறைவ னாகி இழித்தொழில்களைச் செய்துக்கொண்டிருந்து உலகுக்கெல்

லாம் வருத்தமுண்டாகும்படி கொடுங்கோல் செலுத்தினது மன்றி மயில்போன்ற சாயலும், கோவைக்கனிபோன்ற வாயையுடைய அனேகபிரம்ம, க்ஷத்திர, வைசிய, சூத்திரகுலத்தில் அனேகம் பெண்களை கலியாணஞ்செய்து ஒருநாள் அவர்களைப் புணர்ந்து அதன் பின்பு அவர்களை பலமான சிறையினிடத்தில் காவற்படுத்தி அப்படியே அனேக மாதர்களை விவாகஞ்செய்துகொண்ட தினந்தவிர மறுப்படியும் ஒருநாளேனும் அம்மாதர்களை பாராமல் துன்பத்திலாழ்ந்தச் செய்தேன் இப்படி கோடிமாதரைப் புணர்ந்தும் எனக்குண்டாகிய ஆசையொழிந்தே தில்லை, நான் என்னேரமும் காமவிகாரமே மேற்கொண்டு ஈனத்தொழில்தனிலே பொருந்தினவனாய் அரசாக்ஷியிலிருந்து சிறுதும் விசாரித்தறியேன். வெற்றிபொருந்திய குதிரை ஏறி செலுத்தும் புத்திரர்களும், இகழத்தக்க நோய்கள்படர்ந்து அதனால் படாதபாடும் பட்டு இறந்துவிட்டேன். இவ்விதமாக இருந்து இறந்தபின்பு காலதூதர்கள் பாசத்தினாலிருக்கிக்கட்டி இருப்புத்தூண்டின்முள்ளை என்னுடைய கோசத்தினேராக அறைந்து இழுத்துக்கொண்டுபோய் இயமன் முன்னேகாட்ட அந்த இயமதருமன் ஏவலாளிகளைப்பார்த்து இந்தப்பாவி அழகிய வஸ்திரமணிந்த தன் மனைவியரைப் புணராமல் சிறையில் வைத்த துரோகியும், பொய்யொழுக்கமுள்ளவனாகிய, இவனை இந்திரியக்குழம்பு நிறைந்த (கும்பிபாகமென்னும்) நரகில் விடுங்களென்று உத்திரவு செய்தனிப்பினான். அத்தூதுவர்கள் சமுத்திரத்தைப்போல் பெரியதாகிய நரகத்தில் விரைவாகக் கொண்டுபோய் சேர்க்க, நாறுகின்ற இந்திரியதிரக்குழம்பில் முழுகியும், நீந்தியும், குடம்போன்ற வயிறும் விலாப்புறமும் நிறையும்படி குடித்தும் இவ்வாறு மூப்பதுனாயிரம் வருஷம் அதிலிருந்து துன்பமுற்றேன். இன் நரகத்தைவிட்டு நீங்கி நூறுவருஷம் பேயுருவங்கொண்டு கானகத்தில் காலங்கழித்தேன் அதன் பின்பு கொலைத்தொழிலையுடைய புலியாகபிறந்தேன். அதன்பின்பு பாம்பாகவும், செந்நாயாகவும், பன்றியாகவும், நாயாகவும், முயலாகவும், மானாகவும், குரங்காகவும், பருந்தாகவும், கிரியாகவும், காகமாகவும், யானையாகவும், ஆமையாகவும், பெருச்சாளியாகவும், இப்படிக்கெல்லாம் பிறந்து, இருபத்தைந்தாம் பிறப்பில் இவ்வனத்தில் இராக்ஷதனாகவந்து, இக்காட்டில் பலபக்ஷிகளையும், மிருகங்களையும், பலமனிதர்களையும் கண்டு பிடித்துக்கொன்று மாமிசங்களைத்தின்றும் வருத்தத்தைத் தருகின்ற பசியடங்காமல் துன்பங்கொண்டிருந்தேன். இப்படியிருக்கையில் அமிர்தமழை பொழியும் மேகம்போற்

திருப்பொழியும் உம்மைக்கண்டேன் அத்தருணமே முன்னிருந்த துயரத்தையும் விண்டேனானேன்.

அடியேன் இப்பொழுது தேவரீரைத்தரிசித்து தேவனானேன் இப்படியாவதற்கு என்னபுண்ணியம் செய்தேனென்று சொல்ல வேண்டும் ஐயனேயென்று அரக்கன்கேட்க, தவமுனிசொல்லு கின்றார்.

முட்களைத்தைக்கும் இந்தக்கானகத்தில் ஓடிவந்து என்னை உன் கைகளாற்கட்டி பிடித்தபோது, என்சரீரத்தில் அழுகுள்ளதாயிரு ந்த திருநீறானது உன்மேற்பட்டது அதனால் உன்பாவம் நீங்கி முற் பிறப்பின் தன்மைகளும் தெரியப்பெற்றாய். அன்றியும் திவ்விய சரீ ரத்தையுடைய தேவனாய் நின்றனை, மூங்கிலையொத்த தோள்களை யுடைய பார்வதிசமேதராகிய பரமசிவத்தின் திருநீற்றின் பெருமை யைமுழுவதும், பரிசுத்தனாகிய பிரம்மதேவனும், மாயவனும் நிச்சயி த்து அறியக்கூடாத தன்மையுடையதென்றால் வெவ்வேறு தேக மெடுத்து உழலுகின்ற மனிதர்களோ அறியத்தக்கவர்கள்; ஆகை யால் இராக்ஷத அண்ணலே திருநீற்றின் பெருமையைச் சொல்லுதற் கெளிதானதல்ல உலகில் பொல்லாத துன்பத்தையடைகின்ற பாவி களேயானாலும், விபூதியைத் தொட்டமாத்திரத்தில் புனிதர்களாய் பொன்னுலகமடைவார்கள் அந்த விபூதியை நானும் சிவனடியார்க ளும் தரித்துக்கொள்வதுபோல் இந்த சரீரமுழுவதும் பால்நிறம் போல் விளங்கும்படி தரித்துக்கொண்டிருக்கிறேனென்று, வாம தேவமுனிவர் சொல்லியருளினார்.

தேவவுருவங்கொண்ட இராக்ஷதனானவன் மனமகிழ்ந்து வாம தேவமுனிவரை துதித்து தோத்திரஞ்செய்து, நாயேன் முற்பிறப் பில் அரசனாயிருந்தபோது வேதமோதிய ஒரு பிராமணனிடத்தில் என்னிலத்தை நீர்வார்த்து தானம் வாங்கிக்கொள்ளென்று தத் தஞ்செய்துகொடுத்த அந்தப்புண்ணியம் ஒன்றால் இருபத்தைந்தாம் பிறவியில் ஒரு சிவயோகியை தரிசிப்பாய் அப்பொழுது உன்பாவம் நீங்கிவிடுமென்று, எமதருமராஜனும் அன்னாளிற் சொல்லியிருக் கின்றார் அத்தன்மையாகவே இப்போது விளைந்த நன்மையால் அடி யேன் தேவரீரை தரிசித்து என்மேற்பட்ட விபூதியின் பெருமை யின் மகிமையால் என்னைப் பற்றிய பாவங்கள் நீங்கப்பெற்று பரி சுத்தமான தேவரூபத்துடன் நல்ல நிலைமையுள்ள உணர்ச்சியும் பெற்

றேனென்று பணிந்தபோது வாமதேவரிஷியானவர் இந்த அற்புத மான விபூதியானது ஆராயுங்கால், கற்பம், அநுகற்பம், உபகற்பம், பென்று சொல்லப்படும். அப்பேர்ப்பட்ட மேலான விபூதியை சிரம், நெற்றி, மார்பு, உந்தி, முழந்தாள், புஜங்கள், முழங்கைகள், கணுக் கால்கள், முதுகு, பக்கங்கள், கழுத்து, காது முதலான இடங்களில் தரிப்பவர்கள்செய்த பாவங்களெல்லா மகன்று சிவலோகத்தை யுற்று நீங்காது வாழ்ந்திருப்பார்களென்று வாமதேவமுனிவர்சொல்ல நல்லுருவங்கொண்ட இராக்ஷதன் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, ஆசீர் வசனம்பெற்று மறுபடியும் இராஜ்ஜிய பரிபாலனஞ்செய்து முத்தியடைந்தானென்று, சூதமுனிவர் சொல்ல, நைமிசாரண்ய முனிவர்கள் பணிந்து உருத்திராக்ஷ மகிமையும் அதனது திருமுகத் தின் பெருமையும் அருள்புரிய வேண்டுமென்று வணங்கிக்கேட்க அதற்கு சூதமுனிவர் உருத்திராக்ஷத்தின் பெருமையை ஒருவாறு கூறுவேனென்று சொல்லத்தொடங்கினர்.

பரதார கமனம்பண்ணிய பாவியான ஒருபிராமணன் துர்மரண் மடைந்து நரகத்தில் மூழ்கி உடனே தன்பிரேத உடலில் விபூதி பட் டதனல், சுவர்க்க லோகத்தை யடைந்தனன் இது பிரமோத்திர காண்டத்திலும் காண்க.

திருஞானசம்பந்த சுவாமியானவர் கூன்பாண்டியனது வெப்பு நோயைத் திருநீற்றுனல் தீர்த்தருளினர்.

முழுநீறுபூசிய முனிவர்கள் எண்ணிறந்தோர்கள் சிவசாயுச்சிய முத்தியை யடைந்தனர் இதல்லாமல் பெரியபுராணம் அகஸ்தியர் வைத்திய சாஸ்திரம் பக்தவிலாச முதலிய உண்மை நூல்கள் முழங் குகின்றன. ஆதலால் நாமெல்லோரும சதாகாலம் விபூதியணிதலே பெரும் பாக்கிய மாகும்.

## 35. உருத்திராக்ஷ மகிமை யுரைத்தல்.

கேளும் தருமனந்தனு! திரிநேத்திரமுள்ள பரமசிவன் அருள் பெற்ற அடியார்கள் விரும்பி அணிந்துகொள்ளும் உருத்திராக்ஷ மகிமையை விவரித்துரைக்க வேண்டுமென்று தவமேன்மையுடைய நைமிசாரண்ய முனிவர்கள் சூத முனிவரைக்கேட்க அவர்சொன்ன

உருத்திராக்ஷ மகிமையை நான் உனக்கு சொல்லுகிறேன் கேள். திரிநேத்திரங்களையுடைய பரமசிவனுக்கு அடிமைத்திறம் பூண்டவர்கள் தரிக்கும் உருத்திராக்ஷத்தின் பெருமை அற்புதமான தென்று சூதமுனிவர் கூட்டமாக இருக்கும் நைமிசாரண்ய முனிவர்களுக்குச் சொல்லத்தொடங்கினர்.

கேளுங்கள் முனிவர்களே! எத்தன்மையுடையவர்களானாலும் இழிவான தொழில் செய்யுந் தன்மை யுடையவர் களேயானாலும் பார்வதி நேயனைத் துதிசெய்யும் சித்தமில்லாதவர்களே யானாலும் பரமசிவனுடைய சிறப்புள்ள உருத்திராக்ஷம் தரிப்பார் களானால், அவர்கள் சிவன் முத்தர்க ளென்று வேதங்களெல்லாஞ் சொல்லும் நமது கடவுளுடைய திருநேத்திரங்களி னின்றும் உதித்துண்டாகிய தேவர்களாற் புகழப்பட்ட உருத்திராக்ஷத்தைத் தரித்துக்கொள்ளும் விவேகமுள்ளவர்கள் இவ்வுலகில் நேரிடும் எல்லாப் பாவங்களினின்றும் நீங்கிச் சிவலோகத்திற் பரமசிவனை யொத்துச் சேர்வார்கள், பல பல நதிகளிற்சென்று முழுகுவதினு லென்னபலன் அசுவமேத முதலாகிய யாகங்கள் செய்வதனு லென்னபலன்? சத கோடி மகாமந்திரங்களைச் செபித்ததனுலென்னபலன் தவமென்று பஞ்சாக்கினி மத்தியிலிருப்பதனு லென்னபலன்?உருத்திராக்ஷமென்னும் அரியமணியானது நதிகளில் முழுகுதல் முதலாகச் சொல்லப்பட்ட இவைகளெல்லாம் கொடுக்கும் பலன் யாதோ! அதனிலும் எண்மடங்கு அதிக பலம் கொடுக்கத்தக்கது என்று புராதன முனிவர்களாகிய ஞானவான்கள் தரித்துக்கொள்வார்கள். ஆதலால் அந்த மணியினுஞ் சிறந்த பொருள் வேறென்றுண்டோ? இல்லை. அத்தன்மையுள்ள உருத்திராக்ஷமணிகளை ஆயிரம் அணிந்து கொள்வார்களானால் அவர்களை விஷ்ணு, பிரமன், தேவேந்திரன், தேவர்கள் முதலானவர்கள் தாவிச்செல்லும் இரிஷபவாகன ரூடராகிய பரமசிவனென்று கருதி வணங்குவார் களென்றால் அம்மணியைத் தரிப்பவர் மானிதப்பிறப்பில் மேன்மையானவர்கள். அவ்வுருத்திராக்ஷ மணியைச் சிரசினும் செவிகளிலும் கழுத்திலிம் பரந்தமார்பினும் தோள்களிலும் கைகளிலும் தரிக்கவேண்டிய தொகையின் படி வகுத்து, நன்மை தங்கிய அங்குஷ்டவிரலினு மணியவேண்டிய கிரமத்தை யறிந்து, தரித்துக்கொள்ளுகின்றவர்களும் மாணிக்கமுதலாகிய ரத்தினங்களுடன் சேர்த்துத் தங்கத்தகட்டினுற் செய்யப்பட்ட ஆபரணம்போல உருத்திராக்ஷமணியை இவ்வுலகத்திற் றரித்துக்

கொள்ளுகின்றவர் களுமாகிய இவர்களுடைய திருவடித் தாமரைகளைத் தொழுகின்றவர்கள் ஜன்மசாகரத்தில் அழுந்தார்கள் பரமசிவனிடத்தில் அன்பில்லாதவர்களும் உருத்திராக்ஷமும் விபூதியுந் தங்கள் சரீரத்திற் றரித்துக்கொள்ளாதவர்கள், மோக்ஷமடை வதற்குரிய பஞ்சாக்ஷரத்தை உச்சரிப்பவர்களைப் பரியாசஞ் செய்பவர்களும் அவற்றின் மகிமையை அறியாத தன்மையுள்ளவர்களும் இந்தப் பெரிய உலகத்திற் கழுதையாகவும் நாயாகவும் பிறந்திறந்து கர்ம சேஷத்தில் காலம் கழிப்பார்கள்.

சந்திரனைத் திருமுடியி லணிந்தருளும் சிவபெருமானது மணியாகிய உருத்திராக்ஷ மாலைகையினுற் ஜபிக்கத்தக்க மந்திரம் தருகின்ற பலனை இவ்வளவென மதித்துப் புத்தியினுற் றெளிந்து அறிகின்றவர்கள் யாவர்? நீரில் முழுகுமவர்களுக்கு உருத்திராக்ஷ பரிசத்தோடு தம்மேல் விழுகின்ற நீர் சிவகங்கைத் தீர்த்தமாம். ஒரு முகமுதலாகப் பதின்மூன்று முகமீறுகவுள்ள அம்மணிகளில் ஒரு மணியினைக் கருதிய புண்ணியர்கள் முறைமையுடன் பூசைசெய்தால் அப்பூசை தெளிவாகிய நல் வினையுடைய பிறை மதியணிந்த பரம சிவன் பூசையாகவே சிறக்கும்.

இத்தன்மையுள்ள உருத்திராக்ஷத்தின் பெருமைகளை யெல்லாம் எடுத்து விவரமாகச் சொல்லின் பிரமன் முதலானவர்களுக்கும் அமையாதென்றால் மற்றயாவர் அதன் பெருமையைச்சொல்லத் தக்கவர்களோ: ஆயினும் இந்த உருத்திராக்ஷத்தினுல் ஆதியில் நடந்த சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேளுங்க ளென்றுர்.

மாமரத்தி லிருக்குங் குயில்கள் சோர்வடைந்து ஒளிக்கவும், மயிலின் கூட்டங்கள் சந்தோஷிக்கவும், உஷ்ணகுறைகள் நீங்கவும், மேகங்கள் அனுதினமும் பொழிந்து நிறைந்த சீர்தங்கிய காஸ்மீர தேசத்துக்கு அரசனும் மிகுந்த சேனை யுடையவனுமாகிய பத்திரசேனனென்னும் வெற்றியுள்ள அரசன் பெற்றருளிய இளவரசாகிய குற்றம் நீங்கிய தருமனென்னும் புத்திரனும், கற்றுணர்ந்து பெருமைதங்கிய மந்திரிபெற்ற புத்திரனுகிய தாருகனென்னும் பெயரையுடைய வீரனும், வேதசாஸ்திர முதலாகிய கல்விகள் முழுவதும் ஒதி யுணர்ந்தார்கள். இந்தப் புத்திரர்கள் உருவத்தி லிரண்டு பேராகக் காணப்பட்டாலும் இராஜ நீதியும் தனுர்வேத விநோதப் பயிற்சியும் ஒப்பில்லாத உருவமும் ஆயுளும் இள

மையும் அழகும், தருமமும் கிருபையும், தயவும் மாட்சிமையும் ஆகிய இவைகளில் வேற்றுமை இல்லையென்னும்படி வளர்ந்தார்கள் அத்தன்மையுள்ள புத்திரர்களிருவரும், விலையளவு அறியப்படாததும், பிரகாசிப்பதுமாகிய நல்ல இரத்நாபரணங்களும் வாசனைதங்கிய சந்தனமும் சௌந்தரியமுள்ள தங்கள் சரீரத்திற்றரித்துக் கொள்ளாதவர்களாய் விபூதியும் நிலைபெற்ற உருத்திராக்ஷமுமே சரீரமுழுவதும் அணிந்து கொண்டார்கள். அவ்வரசனும் மந்திரியும் அருமையாகப் பெற்ற தங்கள் தங்கள் புத்திரர்களைத் தனித்தனியாக அழைத்து இனிதான வசனங்கள் சொல்லி வாசனையுள்ள நல்ல கூட்டுவர்க்கஞ் சேர்த்த சந்தனமும் ஆபரணங்களுங் கொடுக்கவும், நிகரற்றவர்களாகிய அந்தப்புத்திரர்கள் அவைகளில் விருப்பம்வையாமல் மறுத்து விட்டார்கள். அந்தப் புத்திரர்கள் இவ்வாறு நடந்துவருநாளில் ஒரு நாள் உலகமெங்கும் புகழ்பெற்ற பராசரென்று சொல்லும் பெயருள்ள தவசிலராகிய முனிவர் வரவும் அந்த இராசன், எதிர்கொண்டு சென்று பணிந்து அவர் மனதுக்குச் சந்தோஷமுண்டாகும்படித் தகுதியுள்ள பூசைசெய்து அந்தப் பராசரமுனிவர் மனமகிழ்ந்து ஆசீர்வசனஞ்சொல்ல, அரசன் அந்தமுனிவரைப் பொன்மயமான ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து, பணிந்து, என்புத்திரனும் மந்திரி குமாரனும் ஒருவரைவிட்டொருவர் பிரியாத சிநேகமுள்ளவர்களாய், நவரத்தினம் பதித்த ஆபரணங்கள் முதலான பல ஆபரணங்களை இகழ்ந்து அந்த ஆபரணங்களைக் கையினுற் றொடாதவர்களாயும், கண்களாற் பாராதவர்களாயும், நீக்கிவிட்டுப் புனிதமாகிய விபூதியும் உருத்திராக்ஷங்களுமே சரீரத்தில் பிரகாசிக்கும்படித் தரித்துக்கொண்டிருக்கின்றார்கள் அதன்காரண மின்னதென்று அடியேன் அறிந்திலேன்; ஐயனே! எனக்கு அதைச் சொல்லுமென்று பணிவுடன்கேட்க, அந்த வார்த்தையைப் பராசரமுனிவர்கேட்டு தன்னை எதிர்த்துவரும் பகைவருடைய போரைக்கடக்கும் வேலாயுதத்தையுடைய ராஜசிங்கமே! பூர்வம் இவர்களுக்குப் பொருந்திய பிறப்பில் பழகிய தொடர்ச்சியைக் கொண்டு இப்போது வந்த பிறப்பிலும் அந்தப்பழக்கத்தை விடாமலிருக்கின்றார்கள்; அதற்கொருகாரணமுண்டு; அந்தக்காரணக் கிரமத்தைக் கேளென்று சொல்லுவாராயினர்.

மாளிகையினுச்சியிலும், மேகந்தவழ்கின்ற வீடுகளிலும், நாட்கச்சாலைகளிலும் கட்டியிராநின்ற பொற்கொடிக் கூட்டத்தின்மே

லே அசைகின்ற தோற்றமானது ஆகாயத்திற்செல்லுகின்ற சந்திர னுடைய களங்கத்தைத் துடைப்பதுபோல் பிரகாசிக்கவும், வளமை பெற்ற கெடுதலில்லாத சிறப்பினையுடைய பெரும்பதியான வளப்பம் பொருந்திய நந்திக்கிராமமென்றொரு நகரமுண்டு. அந்தப் பெரிய நகரத்தில் மானந்த யென்னும் பெயரினையும் பவளம் போலும் அதரத் தினையுமுடைய ஒரு கணிகையானவள் சித்திரக்காரர் தீட்டிய திவ்வியமான பதுமை உயிர்பெற்றிருப்பது போலும் அழகிற் சிறந்திருந்தனள். அவளை யாவரும் விரும்பத்தக்க பொன்மயமான வடிவுடையவள்; அவள் வீட்டினைத்தாவிச் செல்லுங் குதிரைப் படை முதலாகிய படைகளை யுடைய இராசகுமாரர்களும் மந்திராலோசனைக்குரிய சாஸ்திரங்கள் கற்றுணர்ந்த மந்திரிகளுடைய புத்திரர்களும் மிகுந்த திரவியங்கள் கொடுக்கத்தக்க வைசிய புத்திரர்களுங் கூட்டமாகச் சேர்ந்திருப்பார்கள். மிகுதியாகிய திரவியமுள்ள வளப்பத்தினாலும் பெண்தன்மையினாலும் பூலோகத்தி லெல்லாரும் பார்க்கும்படி வந்திருக்குந் திருமகளே இவளென்று சொல்லத்தக்க சௌந்தரியமுள்ள அந்தக் கணிகை மாநிடத்தில் ஒரு இராத்திரி வருகின்றவர்கள் கொடுக்கும் உரையாணிவைத்து மாற்றுப்பார்க்க வேண்டுவதல்லாத உயர்ந்த பொன்தொகை ஆயிரங் கழஞ்சியென்று சொல்லுவார்கள்.

அத்தன்மை யுடையவள் நாள் தோறும் வாசனைதங்கிய மலர்களால் ஆகமவிதிப்படி அருச்சித்து மன்மதனை வென்ற நெற்றிக்கண்ணையுடைய பரமசிவனை ஆராதனைசெய்யும் திருவேடமுடைய அன்பர்களைக் கண்டு சிவமென உள்ளமுருகி வந்தனை செய்வாள். இதுவுமன்றி குற்றம் நீங்கிய தரித்திரர்களாகிய யாசகர் வந்தால் அவர்களுக்குத் திரவியங்கொடுப்பாள். மெய்யறிவினிலுயர்ந்த அந்தக்கணிகையானவள் நடனஞ்செய்யும் நாடகசாலையில் புள்ளிகள் பொருந்திய சேவலும், வானரக்குட்டியும் பொருந்தக் கற்றூணிற் கட்டி உருத்திராக்ஷமணிகள் தொடுத்த மாலையை அவ்விரண்டுக்கும் அழகு பெறத் தரித்து வாநரக்குட்டியுடன் பழகிய கோழி நடப்பதை வாசனை தங்கிய அரிய அளகபாரத்தையுடைய, தோழிகளுடன் பார்த்து முகம் வேர்க்கும்படி நகைசெய்து விளையாடி, இனிதாக அமர்ந்து நாள்தோறும் அவைகளிடத்தில் தயையுடனிருப்பாள். இவ்வாறு அன்புடனிருந்த அவள் வீட்டினில் பிரகாசியாநின்ற சடாமகுடத்தையுடைய முனிவர் வேடத்தை குறைவரப்

பொருந்திப் பொன்னிலுஞ் சிறந்த விபூதியும் உருத்திராக்ஷமுந் தரி
த்துக்கொண்டு இரத்தின கடகம் பொருந்திய கரத்தையுடைய சுத்த
சைவ வைசியத்தலைவனாகிய ஒரு வணிகன் வந்தான். அவ்வணிககுல
திலகனைக் கண்டெழுந்து இளந்திங்களை அணிந்த சாம்பசிவ மூர்த்
தியினுடைய அடியவரிவரென்று முறைமையுடன் பணிந்து, என்னி
றைவனே! இவ்வுலகத்தையெல்லாம் விலையாக மதிக்கும்படி பொன்
தடிகட்டு மணிகள்பதித்து அணிந்து கொண்டிருக்கும் இரத்தின
கடகத்தின் விலையாதோ, எனக்குத் தெரியச்சொல்லு மென்றாள்.
சந்திரனைப்போல விளங்குகின்ற ஒப்பற்ற குடையின்கீழ் வருகின்ற
மன்னவர் முன் கையில் அணிந்திருக்கும் இரத்தின கடகங்களெல்
லாம் இந்த வயிரமணி கடகத்தை ஒப்பாகாதென்று, மயிலிறகின்
குருத்தும்போன்ற தந்த பந்தியை யுடையாளுக்கு வாங்கிக்கொள்
ளும் விருப்பமுண்டாகும்படிச் சொல்ல, அப்பெண் பதில்கூறியதும்,
அவள்மனதில் எண்ணிய குறிப்பும் வந்தவைசியன் அறிந்துகொண்டு
நகைசெய்து, பெண்ணே! சூரியனைப்போலப் பிரகாசிக்கும் இந்தரத்
தினகடகம் இன்ன விலையென்று சொல்லுகிறேன். நீ அதற்குப்
பொருள் கொடுக்கத் துணிய மாட்டுவையோ? வென்று வைசியன்
சொல்ல மானந்தை என்னும் கணிகை சொல்லுகிறாள், மலைபோன்ற
புஜங்களையுடைய வணிகேசனே! ஸ்தனங்களை விலைக்குவிற்கும் புன்
னொழிலையுடையவர்கள் ஒருபொருளை வாங்கிக்கொண்டு அதற்கு
விலையாகத் திரவியங்கொடுத்தால் அந்தப் பெண்களுடைய பெண்
தன்மையும் இன்பமும் நன்றேயாகுமா? வாழ்கின்ற யாவர்க்கும் பொ
துவாகிய இன்பத்தை யுடைய கணிகைமாதர்கள் மாயன் விரும்புகி
ன்ற கவுத்துவமணியே யானாலும் விற்பவர்கள் கொண்டுவந்தால்
புணர்ச்சியினால் தழுவிவாங்கிக் கொள்ளுவதல்லது மிகுந்த திரவியம்
விலையாகக் கொடுப்பது பழமையாகிய இவ்வுலகத்திலுண்டோ? இல்
லை யல்லவா! இறைவனே அன்புடன் இந்தக் கடகத்தை என் கையி
லிட்டால், மூன்று நாள்வரைக்கும் உனக்குரிய முல்லைமலரணிந்த
அன்புள்ள மனைவியைப்போல் இன்பம் உண்டாகச் சயனத்தில் உன்
னை நான் அணைவேனென்று மின்னலைப்போன்ற நுண்ணிய இடை
யையுடைய கணிகை சொல்ல, வைசியன் ஓ! கணிகைமாதே? நன்
றாகச் சொல்லினை சுத்த-பொன் பொருந்ம்படியான இந்தக் கடகத்தை
உன்கையிற் கொடுக்கிறேன், கொடுத்தால் எனக்குரிய மனைவிபோ
லிருப்பதாக நீ சொன்ன மூன்றுநாளும் சொன்ன மொழிதவறி மற்

ரொருவர் போகத்தை அனுபவிக்கிற தில்லையென்று என்னுடன் ஒருமனதா யிருக்க உறுதிவார்த்தையைச் சொல்லென்றான்.

நின்மலனாகிய அந்த வர்த்தகன் சொல்லிய வார்த்தைக்கு அவள் சம்மதித்து, மனிதர்களே யல்லாமல் தேவேந்திரன் இவ்விடத்தில் வந்தாலும் இந்த மூன்றுநாள் வரையில் நீக்கிவிடுவனே யல்லாமல் நான் புணரேன்; வார்த்தையுமாடேன் குளிர்ச்சி தங்கிய சடைமுடியையுடைய சிவனது ஆணையின்படியென்று சொன்னாள். அப்படிச் சொல்லிய மானந்தை யென்பவளுக்கு வணிகன் இவள்கெடப்பிரகாசிக்கும் இரத்தினக் கடகத்தை விருப்பமுடன் கொடுத்து பின்னும் ஒரு மாணிக்க விலிங்கத்தைக் காட்டி அன்னம் போன்ற சின்னலையுடையவளே! இதைப் பத்திரமாகவைத்திருந்து மறுபடியும் எனக்குக் கொடுப்பையோ வென்றான். தெய்வப்பெண்ணை யொத்த தன்மையையுடைய மானந்தை என்பவள் அப்படியே செய்கிறேன் சுவாமி யென்றுசொல்லி வணக்கஞ்செய்து அந்த லிங்கத்தை வாங்கிக்கொண்டு தன்னுடைய நாடகசாலையினிடத்தில் வைத்து மாலைப்பொழுது வந்தவளவில் பஞ்சணைமெத்தையில் உல்லாசமாய் தன் கணவனாகிய வணிகன்மார்பில் தேமலைப் பொருந்தி வளர்ந்திருக்கும் அழகிய தன் ஸ்தனங்களின் தழும்பு பொருந்தி யழுந்தப் புணர்ந்திருந்தாள். மன்மதனும் இரதியும்போலக் கலந்து வாசனைப் புகைகலந்த சயனத்தில் நித்திரைசெய்யும் அர்த்தராத்திரியான வேளையில், இரத்தினமாலைகள் கட்டிய பொன்னாலாகிய நாடகசாலை வேகும்படி தீயானது பற்றிக்கொண்டு அவர்கள் நித்திரைசெய்யும்போது மேகம்போலத் தவழ்கின்ற புகையுடன் தீப்பொறிகள் நெருங்கத்தக்கதாகச் சிவந்த சிகைவிட் டெழுகின்ற அக்கினியானது அதிகவேகமாகப் பற்றிக்கொண்டு விடுமுழுவதும் எரிக்க, அவ்விருவரும் திடுக்கிட்டு நித்திரைநீங்கிப் பெட்டையன்னமும் ஆணன்னமும் ஓடுவதுபோலப் பயந்து ஓடினார்கள்.

அவ்வாறு ஓடும்போது மானந்தை என்பவள் விரைவில் திரும்பி நிர்த்தனஞ்செய்யும் நாடகசாலையில் கிளைகளில் வாசஞ்செய்யும் (உருத்திராக்ஷந் தரிக்கப்பட்ட குரங்கு குட்டியையும் சிவந்த உச்சிக்கொண்டையுடைய கோழியினையுந் தேடிக்கண்டு கட்டியிருந்த கயிற்றை யவிழ்த்துவிட்ட மாத்திரத்தில் குரங்குங்கோழியும் பற்றிக்கொண்டெரியுங் கூட்டமாகிய தீ இருக்குமிடத்தைவிட்டு அப்புறம் போய்விட்டன. அந்தவர்த்தகன்கொடுத்த மாணிக்க இலிங்கமானது

மானங்கைக்கு ஞாபகம் வருவதற்குமுன் வெந்து நீறாய் விட்டது.
தூரமாகப்போய் நின்ற வர்த்தகன் மாணிக்கலிங்கம் வெந்து போ
னதைப் பார்த்துப் பெண்ணே! நான் உன் கையிற் கொடுத்த சிவ
லிங்கப் பெருமான் பலமுள்ள தீ பற்ற, அதனால் வெந்து சாம்பராய்
விட்டதைக் கண்டனையோ? ஆதலால் என்வாழ்நாளின்றே முடிந்து
விட்டதென்று துயரத்துடன் சொன்னான். அதைக் கேட்ட மானங்
கையானவள் வளையலணிந்த கைகளால் இரண்டு தனத்தின் மேலும்
மோதிக்கொண்டு, துயரமுற்று நம்பனே! சங்கரனே! என்று வாய்
திறந்து உதிரம் படியத்தக்க வேல் போன்ற கண்களில் ஆறுபோல
நீர் பெருகும்படி அழுது அறிவழிந்துசோர்ந்து விட்டாள், அதைக்
கண்ட வணிகராகவந்த பெருமான் சொல்லுகின்றார். மைச்சாந்தணி
ந்த நீண்ட அளகத்தையும் நெருங்கிய ஸ்தனங்களையுடைய பூக்
கொம்புபோல்பவளே! நீ துயரப்படவேண்டாம் எம்போலியர்க்கு
இவ்விதத்துன்பம் நேரிட்டால் உயிரைப் போக்கிக் கொள்வார்களே
யன்றி, அதை எப்படி விடுகிறதென்று இரங்கார்கள்; நாடக சாலை
யில்வைத்த என் சிவலிங்கம் வெந்துசாம்பராய் விடுமானால், தேவேந்
திரன் முதலான தேவர்கள் வந்து விலக்கினாலும் தீயில் விழுந்து
விடுவதே தருமம். நீ வேறொன்றும் நினையாதே, தீயில் விழுந்து நா
னிறப்பதற்கு உலர்ந்த விறகுகளை யடுக்கி எரியுந் தீயைமூட்டும்படி
நீ உத்தரவுசெய்யென்று வணிகன் சொல்லச் சிறிய இடையை
யுடையவளாய்க் கொடி போன்ற மானங்கையானவள் இடியுண்ட
நாகம் போற்றிகைத்து நின்று யாதொன்றுக்கும் அஞ்சாத நிலைமை
யையுடைய வணிகேசனே! வேண்டியதிரவியங்கள் கொடுக்கிறேன்,
பிராமணர்களுக்குக் கொடுத்துச் செய்யத்தக்க விரதங்களையும் பழு
தறச்செய்து, இப்போது நீர் தீயில் விழும்படிநேரிட்ட குற்றம் நீங்
குத்தக்கதாகப் பெரியோர்களைக்கொண்டு பிராயச்சித்தஞ் செய்துக்
கொள்ளென்றாள். அப்போது வணிகன் சொன்னதாவது பூமியுந்
தாங்கமாட்டாத மிகுந்த பொன்னையுடைய குடியிற் பிறந்தேன்,
ஆபரணங்களைத் தாங்கமாட்டாத நுண்ணிய இடையையுடைய
வளே! நீ என்னை வறுமையாளர்போல் நினைத்து எங்கள் குலம்
பொறுக்காத இழிவான வார்த்தை சொல்லுவதைவிட்டு இவ்வுலகத்
தார் பார்த்துச் சகிக்கக்கூடாததான வேகமாய் மூளும் தீமூட்டுவா
யாக என்று வணிகேசன் சொல்ல, இவ்வாறு கோபித்துச் சுடுஞ்
சொல்லினால் வணிகேசன் சொல்லுகையில் பொன்மலைபோல் வளர்
ந்த ஸ்தனத்தையுடைய மானங்கையானவள் தான் தடுப்பதை

யொத்துக்கொள்ளாமல் யாகத்தில் இறந்துபோவேனென்று நிச்சயித்துக்கொண்டு சொல்லுதலால் ஏவலாளிகளை அழைத்து விறகுகளிட்டு விரைவாகத் தீமூட்டுங்களென்றாள்.

அந்த ஏவலாளிகள் மானங்கை கட்டளையிட்ட வார்த்தையைச் சிரசிலேற்றுக் கொண்டுபோய், அளவில்லாத விறகுகள் அடுக்கித் தீமூட்டித் தீச்சிகை மேலோங்கும்படிக் குடங் குடமாக நெய்யை ஊற்றினார்கள். அப்படி ஊற்றிய அளவில் கொடிய தீயானது கற்றைக் கற்றையாகச் சிகை விட்டுக் கொண்டு மேலோங்கிவளர்ந்தது.

அதைகண்ட வணிகமுனிவர் வாசனைதங்கிய நீரில் ஸ்நானஞ்செய்து கொழுந்து விட்டெரியுந் தீயை மூன்றுதரம் பிரதக்ஷணஞ்செய்து வணங்கி, இளம்பிறையணிந்தருளிய சடாமகுடத்தையுடைய சிவபெருமான் திருவடிகளை தொழுது அண்ட கூடவரையில் ஓசையெழும்படி அந்தத்தீயில் மூழ்கினர். அந்த வணிகேசர் தீயில் முழுகினதைக்கண்டு துயரங்கொண்டு நின்ற மானங்கையானவள், தனக்குப் பந்தமாயிருக்கிற சுற்றத்தார் முகங்களைப்பார்த்து கேளுங்கள், பந்துக்களே? இப்பொழுது இத்தீயில் விழுந்து இறந்துபோன வணிகேசர் கொடுத்தது இந்தக் கங்கணம், இதைக்குறித்து நடந்த செய்தி சொல்லுகிறேன் கேளுங்கள், இக்கடகம் பொறுமான விலைக்காக மூன்று நாள் அவரது வாழ்க்கைக்குரிய மனைவிபோல் அவருடன் நான் வாழ்கிறேனென்று சம்மதித்துக் கொண்டேன்; அந்த மூன்று நாளைக்குள் வணிகேசர் உயிர்துறந்து இறந்த தனாலே, நானும் அவருடன் இந்தத்தீயில் விழுந்து இறப்பதல்லது இனி உயிருடன் வாழேன். அந்தச்சிவலிங்கத்தை வணிகேசன் என்கையிற் கொடுத்தபோது: இது என் உயிர்போலிருப்பது ஆகையால் பத்திரமாகப் பாதுகாத்துத் தருவாயென்று சொன்னதுண்டு; அப்படிக்கிருக்கப் பாவியாகிய யான் மறந்துமதிமோசம் போனேனே இது என்ன காரணம் சிவலிங்கம் வெந்து போய் விட்டபடியால் தனக்கொப்பில்லாத சைவசமயப் பக்தியுள்ள அவ்வணிகேசர் இறந்துபோனார். இத்தனை காரியமும் என்னிமித்தம் நேரிட்ட தாகையால், நான் தீயில் விழுவதல்லது சொன்னசொல் தவறி உயிர்வாழேன். சொன்னசொல் தவறலாகாதென்று நம்முடைய ஆண்டவனால் சொல்லப்பட்ட ஆகமங்கள் புராணங்கள் வேதங்கள் முதலாகிய எல்லாவற்றிலும் விதித்திருக்கிற உண்மையல்லவோ? சமுத்திரமானது கரைக்குள் அடங்கி மேலுயர்ந்து நிற்பதும், காலை மாலை

களில் முறையாகச் சூரிய சந்திரர்கள் உதிப்பதும் அறைவதும் பிரு
திவி முதலாகிய பஞ்சபூதங்கள் பொருந்தி அந்தரத்தில் பூமி எப்
போது மிருப்பதும் ஆலகாலமுண்ட பரமசிவனுடைய ஆக்கினையன்
றி உண்டாகாதாதலால், உண்மை தவறியவர்கள் இவ்வுலகத்தில் ஈன
ர்களாய்ப் பாபத்தை அடைந்து பெரியோர்கள் பழிக்கும்படித் திரி
ந்து பின்பு தூய்மையற்ற கும்பிபாகமென்னும் நரகத்தில் விழுந்து,
வருந்துவார்களென்று வாய்மையுற்ற மந்திரங்களைப் பகர்கின்ற வேத
முழுதுஞ் சொல்லுகின்றன. ஆகையால் என்னை குறித்து நீங்கள்
வருத்தப்படுவது தகாதென்று மானந்தை தன் சுற்றத்தார் தெளி
யும்படி சொல்லித் தான் சம்பாதித்த திரவியங்களை எல்லாம் வேத
மோதிய பிராமணர்களுக்கும், பெரிதாகிய விரதங்களை அனுஷ்டிக்
கும் தபசிகளுக்கும், தன் சுற்றற்றிற்கும் ஏழைகளாய் வருபவர்கட்
கும் போதுமானமட்டும் பொருள்கொடுத்து, மௌனவிரதங் கொ
ண்டு ஒருவருடனும் பேசாமல் பசுமையான மஞ்சள்நீரில் ஸ்நானஞ்
செய்து திரிபுர தகனஞ்செய்த மெய்ஞ்ஞான சொரூபியாகிய பரம
சிவனுடைய திருவடிகளை வணங்கி நல்ல தீப்பிழம்பைப் பிரதக்ஷஞ்
செய்து அக்கினி குண்டத்தில் விழப்போகும் சமயத்தில், இளந்திங்
கள் அணிந்தசடை முடியையுடைய கைலாசபதியானவர் தரிசனமா
னார். கொன்றைமாலை யணிந்த சடாமகுடமும், குளிர்ச்சியுள்ள ஐந்து
திருமுகங்களும் கறுத்த காளகண்டமும், செந்தாமரை மலர்போ
ன்ற திரு அஸ்தங்களும், ஒளிகொண்ட பொன்மலைபோல விளங்குந்
திருப்புயங்களும் திருவுந்தியும் அழகு பொருந்திய திருவடிகளுந் தரி
சனமாகக்கண்ட மானந்தையென்பவள் பூமியில் விழுந்து பணிந்தாள்.
அவ்வாறு பணிந்து நிற்பவளைப் பார்த்து, அடியாளே? நீ தீயில் விழு
வதை நீக்கு, உன் மனதிற் பொருந்திய மெய்யன்பினை யுன்னி இவ்வு
லகத்தாருக்குக் கணிகையின் செய்கையும் சிவபக்தியின் உண்மை
யும் தெரிவிக்கும் பொருட்டுப் பொன்னாற் செய்யப்பட்ட கடகத்தி
னுடன் இவ்விடத்திற்கு வந்து உன்னுடன் அளவளாவி உன்னைசோ
திக்கத் தீயில்விழுந்த வணிகன் நாமே. இந்த இராத்திரியில் நீ உன்
தேகத்தை லக்ஷியம் பண்ணாமல் தீயில் விழும்படி நிச்சயித்தகாரியம்
மிகவும் நன்று.

பிறைபோல் வளைவாகிய நெற்றியையுடையவளே! பொதுமக
ளாயிருப்பவர்கள் பொருளாசையை விட்டு உன்னைப்போல் சத்தியத்
தைக் காப்பாற்றுவார்களோ? இவ்வுலகத்தில் இது அதிசயமான
காரியம் உன்னிடத்தில் நலமாகக் கண்டறிந்தோம்; நீ அடையவேண்

டிய பதவியெதுவோ அதை விரும்பிய வண்ணஞ்சொல்லுவாயாக
அவ்வண்ணமே பரமசிவன் அருளிச்செய்த திருவாக்கினைக் கேட்டு
மலைகளும் மரங்களும் நின்றுருகும்படி மானந்தை யென்பவள் எழு
ந்து ஆனந்தக் கண்ணீர்ததும்பித் தொழுது, கடலமுதுண்ட கரு
ணைக்கடலே! தங்களடியவளாகியயான் ஒன்றுமறியாதவள் இன்ன
வாறு தங்களைத் துதிப்பதென்பதும் அறியாச் சிறியவள் என்று
துதித்து நின்றாள்.

தேவர்கள் முதல் திரிலோகத்தி லிருப்பவர்களில் எவர்கள்
வாழும் பதவியும் யான் இனிவேண்டேன்; திரிமூர்த்திகளாயும் முக்
குணங்களாகியும் முத்தொழிற்குங் கர்த்தாவாகியும் இவைகளை எல்
லாங்கடந்த, காரணனாயு மிருக்கும் ஆண்டவனே சுவாமி! அடியாள்
தேவர் கருணைக்குப்பாத்திர மாகிறதோடு அன்புள்ள உன் சுற்றத்
தார் எல்லாருந் துக்கசாகரத்தில் மூழ்காமல் அடியேனைப் போலப்
பேரின்பமுள்ள சிவலோகத்திற் சேர்த்து இன்பமுடன் எக்காலமும்
ஒரே தன்மையாக வாழும்படிக் கிருபை செய்யவேண்டுமென்றாள்.

கொம்பினையுடைய ரிஷபவாகன ஆரோஹணராய்வந்த பரம
சிவன் மானந்தை கேட்ட வரமெல்லாங் கொடுத்தோமென்று திரு
வாய் மலர்ந்தருளி, நீ சுற்றத்தாருடன் பேரின்பவீட்டிற் போய்ச்
சேரும்படி அருளிச்செய்து, கைலையங்கிரிக்கு எழுந்தருளினார். முன்
நாடகச்சாலையைத் தீப்பற்றி எரிக்குங் காலத்தில், தெய்வப் பெண்
ணை யொத்த மானந்தையானவள் கட்டவிழ்த்து விட்ட குரங்கும்
கோழியும்போய் நெடுங்காலம் இவ்வுலகத்திலிருந்து இறந்து போன
அக்குரங்குதான் உன்னுடைய புத்திரன். உதிரம் பொருந்தி யொ
த்த உச்சிக் கொண்டையையுடைய கோழி தான் சிறப்புள்ள சாத்தி
ரங்கள் உணர்ந்த மந்திரிகுமாரன்: இவர்களிருவரும் பூலோகத்திற்
பிறந்தும், பூர்வவாசனையினால் பெரிதான முறைமையுடன் உத்திரா
க்ஷமும் விபூதியும் விரும்பியணிந்தார்கள். மன்னர் தொழும் மன்ன
னே! முன்னீங்கிய பிறவியால் பரமசிவனுடைய மணியாகிய உருத்தி
ராக்ஷத்தைத் தரித்த தபோபல புண்ணியத்தினால், உனக்கும் நன்
மதியையுடைய அமைச்சனுக்கும் குமாரர்களானார்கள். இந்த இர
ண்டு புத்திரர்களும் பரமசிவனுடைய திருவடிகளை இடை விடாமல்
நெடுநாள் பூசித்து, வாளைகள் குதிக்கும் நீர்வளமுள்ள இந்தத்
தேசத்தை அதிக இன்பமுடன் ஆண்டு, காமதகனராகிய பரமசிவ

னுடைய திருவருளினால் மோக்ஷசாம் பிராச்சியத்தை யடைட் வார்கள்.

இவ்விருவருடைய முற்பிறப்பின் தன்மையையும் அப்போது அணிந்த உருத்திராக்ஷத்தின் பெருமையும் அருமையையும் அத னால் அடைய வேண்டியபயனையும் இப்போது அடைந்ததையும் பராசரமுனிவரால் நடந்ததைக்கேட்டு உமக்குச் சொன்னேம் உன் மனதின் மிகுந்த விருப்பத்தினால் இன்னம் ஏதாகிலும் சந்தேகம் கேட்கவேண்டியிருந்தால் கேளென்றுசொல்ல அப்போது தரும ராஜன் ஆனந்தப் பரவசராய் சிறிதுநேரம் கடவுளை தியானித்து மறுபடியும் ஐயா உத்திராக்ஷத்தின் திருமுகப் பெருமையும் அருள் செய்ய வேண்டுமென்று கேட்க பீஷ்மாச்சாரியா ரதைச்சொல்லத் தொடங்குகின்றார்.

## 36. உருத்திராக்ஷத்தின் திருமுகங்களின் மகத்துவம்.

உருத்திராக்ஷம் முகம் ஒன்றுமுதல் பதினாறுமுகம் வரைக்கும் உண்டெனவறிக.

ஒருமுக மணிதரிக்கில், சிவனுக்கும், இரண்டுமுகமணி சிவ சத்திக்கும், மூன்றுமுகமணி திருமூர்த்திகளுக்கும், நான்குமுக மணி. பிரம்மாவுக்கும், ஐந்துமுகமணி சதாசிவமூர்த்திக்கும், ஆறு முகமணி, சுப்பிரமணியருக்கும், ஏழுமுகமணி சத்திமாதர்களுக் கும், எட்டுமுகமணி அஷ்டவித்தியேசுரர்களுக்கும், ஒன்பதுமுக மணி கங்கை முதலிய நவதீர்த்தங்களுக்கும், பத்துமுகமணி பத்து திக்கு பாலகர்களுக்கும், பதினொரு முகமணி பதினொரு உருத்தி ரர்களுக்கும், பன்னிரண்டு முகமணி விஷ்ணுமூர்த்திகளாகிய வாசு தேவமுதலிய, பன்னிருவர்களுக்கும், பதின்மூன்று முகமணி சத் ருத்திரர்களுக்கும், பதினன்கு முகமணி அஸ்வனி தேவதைகளுக் கும், அஷ்டவசுக்களுக்கும், பதினைந்து முகமணிவருணன் முதலிய வர்களுக்கும், பதினாறு முகமணிக்கு முப்பத்து முக்கோடிதேவர் கள், பிரம்மா. விஷ்ணு சிவபிரான் எல்லாருக்கும், பிரியமாமென்று சிவாகமத்திற் கூறுகின்றன:—

### விசேஷ மகத்துவமணி இலட்சணப் பலன்.

ஒருமுக மணியை தரிக்கில் பிரம்மஹத்தியைப் போக்கும், இர ண்டுமுக மணியை தரிக்கில் கோஹத்தியைப் போக்கும், மூன்று

முகமணியை தரிக்கில் ஸ்திரீயத்தியைப் போக்கும், நான்குமுக மணியைதரிக்கில், நரகத்தியைப்போக்கும், ஐந்துமுக மணியைத் தரிக்கில், அன்னிய ஸ்திரீயைப் புணர்ந்த பாவத்தையும், மாம்ஸ முண்ட தோஷத்தையும் போக்கும், ஆறுமுகமணியை தரிக்கில் பிரமஹத்தி முதலிய பாவங்களைப் போக்கும், ஏழுமுக மணியை தரிக்கில், கோஹத்தியும் பொற்களவின் பாவத்தையும் போக்கும், எட்டு முகமணியை தரிக்கில் குருபத்தினியை பாவக்குமியால் கண்ட பாவத்தைப்போக்கும், ஒன்பதுமுக மணிக்கு நூறுபிராம்மண ஹத்தியும், பூதப்பிசாசும் சற்பமுதலியவற்றாலாகும் விஷவிக்கினங்களையும்போக்கி சித்திமுத்திகளைக் கொடுக்கும், பத்துமுகமணிக்குபேய் பூதம் பிரம்மராக்ஷசமுதலியவற்றாலுண்டாகிய தீங்குகளெல்லாவற்றையும் போக்கும், பதினொறுமுக மணிக்கு அசுவமேதயாக பலத்தையும், ஆயிரம் கோதானம் பண்ணபலத்தையும் கொடுக்கும், பன்னிரண்டு முகமணிக்கு அசுவமேதயாக பலத்தையும், சுவர்னதான பலத்தையும் கொடுக்கும், பதின்மூன்று முகமணிக்கு, சர்வாபீஷ்டத்தையும், சர்வசித்தியையும் கொடுக்கும். அதன்றியில் புத்திரரையும் கருவையுங்கொன்ற பாவங்களையும் போக்கும், பதினான்குமுக மணிக்கு தேவர்முனிவர் முதலாயினோரெல்லாரையும் வசப்படுத்தி சிவபதத்தை கொடுக்கும் இது கிடைப்பதரிது, பதினைந்து பதினாறு முகமணிகள் இக்காலத்தில் கிடைப்பது அருமையாதலால் விடப்பட்டன.

ஆறுமுகமணி வலதுபுயத்திலும், ஒன்பது முகமணி இடதுபுயத்திலும், பதினொறுமுகமணி சிகையிலும், பன்னிரண்டு முகமணி காதுகளிலும், பதினான்குமுகமணி சிரசிலும், தரிப்பது உத்தமம்.

ஜபமாலைக்கு ஒருவித முகங்களையுடைய மணியேயிருப்பது உத்தமம்.

ஜபமாலைக்கு இரண்டுமுகமணியும், மூன்றுமுகமணியும் பன்னிரண்டுமுகமணியும், பதின்மூன்று முகமணியும் ஆகாவாம் குற்றந்தரும்.

ஜபமாலையில், முத்துமாலை, பொன்மாலை, பவழமாலை, சங்குமாலை, படிகமாலை, தாமரைமணிமாலை, புத்திரமணி தீபமாலை, இவைகளெல்லாவற்றைப் பார்க்கினும், உருத்திராக்ஷமணி மாலையானது. கையிற்கொண்டு ஜபிக்கிறது லக்ஷமடங்குபலன் அதிகமென்றும், சரீரத்திலே தரித்தவர்களுக்கு கோடிமடங்குபலன்

அதிகமென்றும் கனகமுதலாகிய இடையில் கட்டி சிங்காரமாக தரித்தவர்கள் இரண்டுகோடிமடங்கு அதிக பலனென்றும் ஜபம் பண்ணும்பொழுது மணியைதள்ளுவது பிறருடைய கண்ணுக்குப் புலப்படாமல் பரிவட்டத்தால் மறைத்துக்கொண்டு ஜபிக்கப்பலனும், பிறர் கண்ணுக்கு புலப்படில் பயன்படாவாம், என்பது சிவாகமங்களிற் கூறுகின்றது.

## 37. செல்வ நிலையாமையைப்பற்றி தேவேந்திரனும் மாபலிச்சக்கிரவர்த்தியும் பேசிய சரித்திரம்.

ஓ, முரசகேதன! முற்காலத்தில் தேவேந்திரனும் மாபலிச் சக்கிரவர்த்தியும் செல்வத்தைப்பற்றிப் பேசிய வினு விடைகளை உமக்கு விரித்துரைக்கிறேன். அதாவது சதமகனென இந்திரன், சத்தியலோகத்திற்குப் போய் நான்முகனைக்கண்டு நமஸ்காரம் பண்ணிக் கொண்டு, ஐயா, மூலக்கமலாசனனே! விரோசனனென்கிற இராக்ஷத இராஜன்பிள்ளை, மாபலிச்சக்கிரவர்த்தி, மூன்றுலோகாதி பத்தியமும் பெற்று சக்கிரவர்த்தியென்று பெயரேந்தி ஒரு குடை நிழலில் உலகையடக்கி திருக்கில்லாத பெருவாழ்வு வாழ்ந்து வந்தவனைக் காணேமே, அவனிப்போது எங்கிருக்கின்றான். அந்த இடத்தை எனக்குத் தெரிவிக்கவேணுமென்று கேட்க, அதற்குப் பிரமன் நகைத்து இந்திரனைப் பார்த்து உன்மனதினினைத்துக் கேட்டது எனக்குத் தெரியலாயிற்று, முன்னே மூவர்முதலாகிய தேவர்களையும் தலை காட்டவொட்டாமலடித்து இறுமாப்படைந்து, தனக்கு மேலான சம்பத்துடையவர்களில்லையென்று திருவிற்சிறந்து பெருவாழ்வு வாழ்ந்தவன் அந்தவாழ்வெல்லாம் நம்முடைய கையிற் கொடுத்துவிட்டு தாழ்வை யடைந்துபோனனென்கிற தயாளத்தினு லல்லவோ, என்னைக் கேட்கவந்தாய் சசிமணாளனே, அது எனக்குத் தெரியவந்தது ஆகிலும், இப்போது அவனிருக்கிற இடமும் ஐஸ்வரியத் திடமும் உனக்குத் தெரியச் சொல்லுகிறேன் கேள், அவன் சுரபிபயமென்கிற எலிரூபமெடுத்து பூமியிற் சஞ்சரிக்கின்றான். அவனைக்கண்டு நீயென்ன செய்யப்போகிறாய், அதை எனக்குத்தெரியச் சொல்லென்று கேட்க, சுவாமி! அடியேன் அந்த மாபலிச் சக்கிரவர்த்தியைப்பார்த்து சிலவார்த்தை சொல்லவேண்டியிருக்கிறது தாங்கள் முழுமனதுடன் சிலவு கொடுக்கவேண்டுமென்று பிர

தக்ஷண நமஸ்காரம்புரிய, அப்படியே நான்முகனிடம் விடைபெற்று சத்தியலோகத்தைவிட்டுப் புறப்பட்டு பூலோகத்தில் வந்து, காடுகள், செடிகள், மலைகள், வனாந்திரங்கள், நாடுகள், நகரங்கள், மேடுகள், பள்ளங்கள், ஆறுகள், குளங்கள், குன்றுகள், குகைகள் எங்குந்திரிந்து தேடி பூமியெல்லாம் வலமாகவந்து ஓரிடத்தில் மாறுருவத்துடன் வாசம்பண்ணுகின்ற மாபலியாகிய எலியைக் கண்டு ஓ மாபலிசக்கிரவர்த்தி! ஜயிக்கப்படாத யுத்தங்களெல்லாஞ் ஜயித்து, விஜயங்கொண்டு, முடிக்கக்கூடாத யாகமுதலிய வேலைகளை முடித்து பிரபல மேன்மையடைந்து வாழ்ந்தவாழ்வெல்லா மறைந்துப்போக நீர் இந்த எலிரூபமெடுத்து உமியும் நெல்லுந் தின்றுக்கொண்டு உயிர் பிழைக்கும்படியாய் நேரிட்டதல்லவா! ஐயோ, உம்முடைய பரிவட்டனையும் வைபவமும் பெருஞ்செல்வமும், பிரதிஷ்டையும், வீராப்பும், எங்களைப்போன்றவர்களை ஒரு விதத்திலும் மதிக்காத இறுமாப்பும் இயாவரையும் அவமதிக்கும் மமதையும் அருமையும் பெருமையும், எங்கே மறைந்ததோ ஐயோ! இம்மட்டோ! இந்தபோகம், தனுகரண புவனபோகமெல்லாஞ் சதமல்லவென்றுச் சாற்றியது உண்மைதான், தெய்வமேயென்று, சித்தங்கலங்கிச் சற்றுநேரம் பொறுத்துகிட்ட நெருங்கி நீபயப்படாதே நான்தேவேந்திரன், உன்னைப்பார்க்கவேண்டி பேராசைகொண்டு வந்தேன் யென்று பகர்ந்தான். அந்த மகாராஜனைப் பார்த்து மாபலிச்சக்கிரவர்த்தி சொல்லுகிறான், ஓ வச்சிராயுதனே, எனக்கு இந்த வேளை சமயமென்றறிந்து பயம்விட்டு என்னைக்கிட்டி இழிவானவார்த்தை இசைந்து இகட்சியாய் ஏளனம் பண்ணுகின்றனையே நீ இப்படி பேசுவதனால் பெருங் கூட்டமாகிய இராக்ஷதர்களுக்கு பலங் குறைந்துபோயிற்றென்று நினைத்தாயோ? இராக்ஷதர்களுக்கு இரக்கினும் பலஞ் சிறக்குமேயொழிய குறைச்சலாகாது. முற்காலத்தில் நான் பிரபலமாயிருக்கும்போது, எனக்கெதிரிலே நீ வந்து நிற்கப் பயப்பட்டு மூலைக்கு மூலை யொதுங்கிக்கிடந்தவன். வாரத்திற்கொருதரம் புறப்பட்டு (வனவேடர் மான்கூட்டத்தை கலைத்துவிடுவதுபோல்) உன்னையும் தேவர்களையும் பொன்னுலகத்திற் றங்கவொட்டாமல் ஓட்டிக்கொண்டு திரியும்போது நீ எங்கேயோ நானெங்கேயோ, அப்பேர்ப்பட்ட அழகன் இப்போது அச்சமின்றி என் அருகில்வந்து மனோதிடங்கொண்டு பயப்படாதே, பயப்படாதே, என்று எனக்குத் தைரியங்காட்டி காலபேத சமயங்கண்டு கசட்டுமொழி வகுக்கத்தக்கது, உன்நல்லகாலமோ! உனக்கு முறைமையோ! இப்படி

நீ இசைக்கத்தகாது, நான் இப்போது அனுபவிப்பதெல்லாம் உன்னாலும்; என்னாலும் வந்த செயலல்ல, சர்வேஸ்வரனாகிய பசுபதியின் செயலென்றறிந்து அகந்தையடக்கக்கடவாய், உலகில் ஒருவருக்கு ஆங்காலத்தில் எல்லாந் தற்செயலாயமைந்து கைகூடும். திக்கெட்டும் ஜயமுண்டாகும், இடுக்கணிராது, பயமில்லை, பிடித்தகாரியம் (கடித்தவாய் துடைத்தாற்போல்வரும்) போங்காலம் வந்தால் எத்தனை பொருட் பலமுற்றிருந்தாலும் பெண்டிர், பிள்ளை, மண், மனை, பந்துமித்திரர்கள், மந்திரி, மாதவர், குருக்கள், குடி, படை, அரண்மனை, நாடு, நகரம், காடு, காம்பு, கிரம்பி இருந்தாலும், சமயத்திற் குதவாமல் எல்லாந் தட்டுக்கெட்டுதட மாடிப்போய் விடும். ஆகையால் செவ்வையாய்த் தேறித்தெளிந்த அறிவுடையோர்கள் ஜயமும், அப்ஜயமும், நன்மையுந், தீமையும், சுகமுந், துக்கமும், இன்பமும், துன்பமும், வாழ்வுந், தாழ்வும், வறுமையுந், திறமையும், பெருமையுஞ், சிறுமையும், சமமென்று பாராட்டி, வாக்கினாற் பேசியவண்ணம் மனமுங்குவிந்து, அகம்புறமொத்து அரன் செயலென்று ஆனந்தத்தைக் கைவிடாமல் அனுபவிப்பார்கள், நன்மை தீமையிலும், நொய்யவுரையார்கள், நொந்ததை கண்ணுற் பாரார்கள் நாவையடக்கி ஜீவகாருண்ணியராய் எல்லாஞ் சிவன் செயலென்றிருப்பார்கள், இதுதான் பெரியோர்க ணிலை. சிரியோர்கணிலை, நானிப்படி இருக்கிறேனென்று தெரிந்து அஞ்சாமலடுத்து இங்குவந்து இரக்கப்படுவதுபோல் ஏசிக்காட்டினையே இதுதான். எரியுங் கொள்ளியை உபகாரத்திற்கு ஏறத்தள்ளித் தீ மூட்டுவதுபோலுமாயிற்று, இந்திரனே யென்று மாபலி நவின்று மனஞ்சலித்தான்.

இப்பிரகாரந்தன்னைத்தானே வெறுத்துக்கொண்டு, தீவினையை நினைத்துத் தியங்கிய மாபலியின் தேகத்திலிருந்து சௌந்திரியமாய் ஒருவராலும் எழுதிமுடியாததாய் ககனவாசிகளாலுங் கண் விழித்துக் காணக்கூடததாய் ஆபரணவலங்கார வஸ்திரந் தரித்துக்கொண்டு சகலபாக்கிய சுந்தரமுள்ள இரட்சகியாகிய மகாலட்சுமி வெளிப்பட்டு, ஆயிரங்கண்ணனாகிய இந்திரனுக்கு எதிரில் தரிசனங்கொடுக்க, அந்தமகாதேவியை ஆயிரங் கண்களினாலுங்கண்டு ஆருமை கொண்டு அம்மணீ நீ இந்த மாபலிச் சக்கிரவர்த்தியினுடைய உடலை விட்டுப் புறப்பட்டு நாயேனுக் கெதிரிலிருக்கின்றாயே என்தாயே மனோன்மணீ நீ யாரம்மா நான் தெரிந்து கொள்ளுஞ் சக்தியற்றவனாயிருக்கின்றேன், தெரிவிக்கவேண்டுமென்று சிந்தித்தான். அந்த

வேளையில் முப்புவன நிறைந்த செந்தாமரைக் கமலத்திற் பிறந்த கோகநகை, சமஸ்தகோடி ஜீவாத்மாக்களையும் இரட்சிக்காநின்ற அசிப்பிரியாளென்று என்னையறியாயா ஆகண்டலனே! நான்மகாலட்சுமி; இதுவரைக்கும் இந்தமாபலிச் சக்கிரவர்த்தியினிடத்தி லிருந்து சகல சம்பிரமமும் பெறச்செய்தேன். இவன் முன்போலில்லை கிழமகனாகி அதற்குத்தகுந்த நினைப்பு, நடை, நொடி, பாவனை, ஆசார முதலிய யாவுங் குன்றினான். இனிமேல் இவனண்டையிலிருக்க மனமொப்பாமல் உன்னை நாடிவந்தேன், இந்திரன், சந்திரபிம்பச் சுந்தரியைப் பிரதட்சணம் பண்ணி எழுந்திருந்து இரண்டுகரத்தையுஞ் சிரசில்வைத்து தோத்திரஞ்செய்து துதிக்கின்றான் ஓம்: நாதநாதாந்த ரூபி, பாலபாலாந்த சீலி, மோகமோகாந்த பாலி, சீலசீலாந்தசீலி, மிர்கமதபயோதரி, கோடி சூரியப் பிரசாசவல்லி, அமூர்தநாந்தவசனி, ஆதிசத்திவல்லி, ஜகன்மோகினி, சர்வபூதசொரூபி, சத்காரிய காரணி, ஜகத்திரட்சகி. தேவதேவகி, திருவே, தருவே, அருவே, உருவே, மருவே, ஐஸ்வரிய குருவே' அம்மணி, வருக வருக, மநோன்மணி வருக, நவமணி வருக, உருக்குமணி வருக வருக, சிந்தாமணி வருக, வருக வென்று மதித்துத்துதித்து வணங்கினான். அப்போது அந்தப்பொன்னுலகத் திறையைக்கண்டு பூரித்து சந்தோஷித்துஆயிரங் கண்ணுடைய தேவேந்திரன் புகழ ஜகத்ஜோதியான லட்சுமி, நான் சிலகாலத்திற்குள் உன்னிடம் வந்திருப்பேனென்று சொல்லிவிட்டு மறைந்தெழுந்தருளினாள் இதுகளையெல்லாம் அருகிலிருந்து பார்த்தமாபலியானவன் எட்டப்போயிருந்து (ஊக்கமது கைவிடேலென்னும்) வாக்கியப்பிரகாரம் தகிரியத்தைவிடாமல் ஆகட்டும் எங்கே போகின்றாள், நமக்கு நல்லகாலம் வந்தால் அம்மை திரும்பிட்ப் வருவாள், இந்திரனைச் சுமையெடுக்க வைப்பாள், இவ்வாறு நம்மிதானே மாறி மாறிக்கொண்டு இன்னான் இனியானென்றெண்ணாமல் இந்தப்பூமி மலபந்தப் பூமியென்றுணராமல், எங்குந் திரிந்துழலுகிறாள், நமக்கென்னவென்று மனஞ்சுளிக்காமல் மேன்மையோருடிந்தான். தேவேந்திரன் சிந்தைகளித்து மாபலியினிடத்திற் சொல்லி விடைவாங்கிக்கொண்டு வானுலகை யடைந்தான்.

இப்பால்,மாபலி எலி யானவன் இன்னுஞ் சிலநாள்தரித்துஇருந்த இடத்தைவிட்டு மலைப்பாம்புகள் மலிந்த இமயகிரிக்குச்சென்று அம்மலையின் குகையிற் பிரவேசித்து தபசுபண்ணப்போயினான். இது இப்படிக்கிருக்க மேலுலகத்தில் விஜயம் பெற்று பிசதா பனாயிருக்கிற வெள்ளை வாரணன், மறுபடியும் மாபலியைப்பார்க்கவேண்டு

மென்றுவந்து முன்னிருந்த இடங்களெல்லாம் ஆராய்ந்து, காணாமையால் துயரமடைந்து பனிமலையைக்கண்டு ஒன்றுமறியாதவனைப்போல் உருத்தெரியாமனின்று அரக்கன் மனது அரக்கென உருகும்படிக்கு சுடச் சுடச் சொல்லுகின்றான். ஏனையா, இராக்கத ராஜனே! நவரத்தின கசிதமாயிருக்கப்பட்ட தேர்களையும் பொன் பூணணிந்த கொம்புகளுடைய யானைகளையும் வாயுவேகத்திலு மிஞ்சிய குதிரைகளையும் சமுத்திரம் போனிறைந்த சேனைகளையும், சூரியகிரணம்போற் சொலிக்கும் ரத்தினாபரண கேயூரமணிமகுடகுண்டல கிரீடங்களையும் விட்டு சமஸ்தகோடி தேவதைகளுஞ் சயசயவென்று கைகட்டிச் சேவிக்கத்தக்கதாக பரிவட்டனைகளுடன் ஆடம்பரமாய் நின்று லோக முதல்வனென்று பெருமிதம் பெற்று நிறைந்த கொலுமண்டபத்தில் சிம்மாசனமேறி சிங்கம்போல் வீறிய சக்கிரவர்த்தியா யிருந்த நீர் விருதாவாய் அப்பிரயோசனப்பட்டு இந்தப் பனிமலைச்சாரலில் குகைக்குட்புகுந்து கிடக்கத்தக்கதாக பிரமனெழுதினானோ? அடபாவி, ஐயோ! வினையேயென்று பரிதாபப் பட்டான். இவன் கூறிய மொழியெல்லாங்கேட்டு தேவேந்திரனென்று தெரிந்து, மாபலி சினந்து, ஓ இந்திரனே நெடுங்காலமாய்ப் பெருவாழ்வு வாழ்ந்தபேர்களானாலும் ஜயத்தையடைந்த வீரரானாலும் அழகு ஆண்மைபடைத்தவர்களானாலும் அதிகசாஸ்திரங்கள் கல்வி கற்றவர்களானாலும் தெய்வபக்தி ஆசாரிய பக்தியுமுள்ளவரானாலும் இவ்வுலகத்தில் ஆத்மகோடிகளைப் படைக்கின்ற அயனானாலும் அவனைப்பெற்றவனானாலும் சிறிதுகாலம், போகமும் சிறிது நாள் யோகமும் கொஞ்சதினம் மோகமும் சின்னாள் சமத்தும் பன்னாள் விபத்து மடைந்து பின்னுஞ் சிலபொழுதில் எல்லாவற்றையும் மிழந்து நிறுவகிக்க மாட்டாமல் துக்கப்பட்டு தன்னைப் பணிவாரைத் தான்போய் பணிந்து தரித்திரப் படுவது கர்மபூமியின் சுபாவம், இதுதான் இகத்தின்லாபம் நல்வினை தீவினை இரண்டினாலும் வரும்படியாகிய போகத்தை அனுபவிப்பதற்கு எடுத்தது இந்தத் தேகம் இதை நீயறியமாட்டாயா பேச்சிலும் ஏச்சிலுமிருந்தவனே நீ பூர்வத்தில் சகலசம்பத்தையும் போக்கடித்துக்கொண்டு சத்துருவினால் மெத்த வருத்தப்படவில்லையோ எழுபதினாயிரம் தேவவருஷம் சீகாழியில், மூங்கில் வடிவெடுத்து புதர்மூடி புத்திகெட்டு பயந்திருக்கவில்லையோ இமயகிரிச்சாரலில் சலநிறைந்த தடாகத்தில் தாமரைத் தண்டில் அணுரூபம்படைத்து அலைச்சலடைந்தா யில்லையோ இத்தன்மையுள்ள எத்தனை கேடுக்கும் ஈடுபட்ட நீ தன்னை மறந்து பேசி

னாய் இது உலகமுறைமையென் றெண்ணாமல் எம்மைப் பழிப்பதற்கிசைந்தையே எக்காலத்தில் எது அனுபவிக்க வேண்டுமோ அது வந்து தீரும் உறுதிபெற்ற உத்தமர்கள் கற்ற கல்வியின் திறத்தால் இதற்கு கவலைப்படுவார்களோ? கோடை காலத்தினால் தீரக்காய்ந்த பயிரானது மறுபடியும் மழையினால் துளிர்த்துத் தளிர்த்துக் காய்க்குமல்லவா சிலநாளிருட்டும் சிலநாள் நிலவுமல்லவா செல்வம் இல்லாதபோது துக்கப்படுகிறதும் இருக்கிறபோது சந்தோஷப்படுகிறதும் ஒரு அறிவா? அப்பேர்ப்பட்டவர்கள் சற்றில் மகிழ்ந்து தயிரிலழுதுபார்க்கின்ற அறிவில்லாதவர்கள். இதற்கொரு திருஷ்டாந்தங் கேளும் காற்றினாலே நெருப்புப் பிரபலமாகிறது. அந்தக்காற்றினாலேயே அவிழ்ந்துபோகிறது, நெருப்பினாலே நீருண்டாகின்றது, அந்தநீரினாலேயே நெருப்பவிந்து போகிறது, நீரினாலே மண்ணுண்டாகிறது, மண்ணினாலே நீர்மறைந்து போகிறது, சகலமும் நீரினாற்பிழைப்பது, ஜலவெள்ளத்தால் சகலமு நாசமாகிறது, சூரியனால் தாமரைப் பூவிரியும் அந்தச் சூரியனாலேயே காய்ந்துப்போகிறது, இவையோசிக்கு மிடத்து உடலிலே பகையுண்டென்பது உனக்குத் தெரியவில்லையா? எல்லாம் காலத்துக்குத் தகுந்தபடி நடப்பதற்குக் காத்திருக்கும் நல்லதும் பொல்லதும நாம் தேடிக்கொண்டதல்ல, ஒன்றையுண்டாக்கிக் கொள்வதற்கும் உண்டானதை விலக்குவதற்கும் ஒருவருக்கும் ஆதாரமில்லை ஆதலால் நான் முன்னிருந்து அனுபவிக்க வேண்டியகாலம் அது, இப்பொழுது,இப்படியாகக் குகைக்குட் புகுந்து இருக்கும்படியான காலமிது; என்னுடைய நல்வினைக் காலத்தில் என் கண்ணில் அகப்படாமல் நீ ஒளித்துக்கொண்டிருந்தாயே, அந்தக் காலத்தையும் இப்போது தேவராஜனாய் வச்சிராயுதபாணியாய் முத்தாரம்பூண்டு எனக்கு முன்னின்று விஸ்தாரம் பேசுகின்றனையே இந்தக்காலத்தையும் நீயே எண்ணிப்பார்த்துக் கொள்ளலாம். எதிர்காலத்தில் எனக்கு ஈஸ்வரன் என்னென்ன அதிசயங் காட்டுகிறாரோ அதையறிந்து, சொல்லுகிறதற்கு ஆருடைய தரம், மேகவாகனா வென்றான். அதைக்கேட்டு தேவேந்திரன் மாபலிச்சக்கிரவர்த்தியின் மனோதிடத்தையும் தகிரியத்தையும் கௌரவத்தையும் பார்த்து மகிட்சியடைந்து நல்லது சக்கிரவர்த்தியே நான்போய் வருகிறேனென்று சிலவுபெற்றுக்கொண்டு விண்ணகரத்திற்குப் போய் போகபாக்கியத்திலிருந்து பின்னும் பன்னாட் போன்பிற்பாடு பூலோகத்திற்கு வந்து அவரவர்கள் நினைத்த காரியங்களை நாப்

பட்ட கங்கா நதியில் ஸ்நானம் பண்ணி கரையருகிலிருந்து சபஞ் செய்யுஞ் சமயத்தில் சத்தியலோகவாசியான பிரம்மாவுக்குச் சமான மாகிய நாரதமகாமுனிவர் அந்த பாகீரதியில் ஸ்நானம் பண்ணி சப ங்கை கூடிய தேவேந்திரனுக் கருகில்வந்தார் அந்தவேளையில், சூரி யப்பிரகாசம்போன்ற தேரிலேரிக் கொண்டு திவ்ய சொரூப சுந்தர பிம்பம் போன்ற அம்மன்வந்து எதிரில் நின்றனள். தேவேந்திரனும் நாரதரும் சீக்கிரமெழுந்து தீர்க்கதண்டமாய் விழுந்து இருவருங் கைகூப்பி திவ்யக் காட்சியே ஜகத்தின்மாட்சியே, ஜீவகாருண்ணியே தேவரீருடைய பெயரென்ன அம்மாவென்றுகேட்க சூரியப்பிரகாச அன்னமாகிய கன்னி சொல்லுகின்றாள். நான் மகாலட்சுமி; இது வரையிலும் ராக்ஷசராஜனிடத்திலிருந்து இப்போதெனக்குச் சம் மதி இல்லாமற் புறப்பட்டு வந்து விட்டேனென்றாள். அவள் வார்த் தையைக் கேட்ட நாரதரும் தேவேந்திரனும் பிரதக்ஷணம் பண்ணி நமஸ்கரித்து ஓம்: மகாதேவி அகிலாண்ட நாயகி ஓங்காரி, பரப்பிர்ம சொரூபி, நிருவாகி, நிராகரி, நிற்குணி, நிற்பாலாட்சி, சகுணி, சற்குணி சௌந்தரி, ஜீவரட்சகி, ஜீவகாட்சி, பொற்கமலவாசி, பிரதாப விசுவாசி பரமதியாகி, கலாமுக சுந்தரதேசி, விஷ்ணுநேசி கேசவப்பிரிய நாரா யணி கிருபாசமுத்திரி, கருணைக் கண்காட்சி, காமஞட்சி கமலவல்லி தீனதயாபரி பக்தவற்சலி வேதவேதாந்த முதல்வி மெய்ப் பொருட்த லைவி யென்று அநேகவிதமாகத் தோத்திரஞ்சொல்லி அஞ்சலித்து அம்மணி; நீ, இராக்கதனை விட்டு நீங்கிய தற்குக் காரணமென்ன வென்ன ? அவ்விருவருக்கும் சொல்லுகின்றாள். ஓ நாரதரே ! ஓ வெள்ளையானை யூர்தியே என் செய்கையின் கதி நீங்களறியமாட்டீர் களா, எவரொருவர் தீவினை செய்கிறார்களோ அவர்களிடத்தில் நான் அரைக்கணப் போதும் பொருந்தேனே (தீவினையாவ தென்ன வெனில்); கொடும்பாவம், அதாவது, சூரியோதயத்திலும் அஸ்தமிக் கும்போதும் தூங்குவதும் வேதத்தை தெய்வத்தை விதியை, வில க்கை, ஆசாரத்தை, ஆசாரியரை, பூசாவிதியை, பெரியோர் தவத் தை, புண்ணியத்தை, விரதத்தை, நோன்பை, தாயை, தந்தை, தம யனை, தம்பியை, தனயரை, தருமபத்தினியை, எளியாரை, இன்ன முதலிய நன்மைகளை இகழ்ந்து பேசுவதும் சுயஸ்திரீயைத் துக்கப் பட வைத்து பரஸ்திரீயைப் பக்கத்தில் வைப்பதும் ஞாயந்தப்பி அனியாய நடப்பது, வழக்கழியுரைப்பது, லஞ்சம் பரதாரத்தை இச் சிப்பது, பொய்சாட்சி பேசுவது, ஒருவர் சொத்தை அபகரிப்பது, மனதிலொன்றும் வாக்கிலொன்றும்மாய் வசனிப்பது, வஞ்சிப்ப

தும் நன்றி குன்றுவது, ஜீவஹிம்சை பண்ணுவது, நிரவிசாரியாமற்றண்டிப்பது, நிந்திப்பது, குடும்பதோஷங் கூறுவது, அபாண்டம் பேசுவது, பயனில்லா வார்த்தை பகருவது. கோபத்தினாற் சிறுவது, சோம்பலால் தூளித்து, முழுகாது, அசுசியா இருப்பது, சூதாடுவது, கள்ளுண்பது, தூஷித்து நிந்திப்பதே தொழிலாயிருப்பது, தெய்வ மிகழ்வது, இன்னமுள்ள நன்மைகளுக் கிடராகிய தன்மைசெய்கின்ற நலமிலாரிடத்தில் நானிருக்கமாட்டேன். ஒரு குணமேனும் உத்தமமா யிருந்தால் அந்த இடத்தில் சற்று நேரமிருக்க மனஞ்சம்மதிக்கும். அவர்களாரென்னில்! விருந்தினரைப் பரிந்து பூசைபுரிந்து அமு தூட்டி உபசரிப்போரிடத்தும், துறந்தார், இறந்தார், இவர்கள் கடமையைச் சோராமற் செய்பவரிடத்தும், உண்மையான ஆசார பராளிடத்தும் கடிந்துரையாடாத கருணையோரிடத்தும், குளிர்ந்த முகமுடையோ ரிடத்தும், எல்லாருக்கு நல்லவரென்றிருப்போ ரிடத்தும் நித்தியமான சத்தியகீர்த்தியை நிலைநாட்டு வோரிடத்தும் தெய்வபக்தி ஆசாரியபக்தி செலுத்து வோரிடத்தும் தந்தைதாயை தயவாக காப்பாற்றுவோரிடத்தும் கோபிசந்தனம் விபூதி நாமம் பற்றியபேரிடத்தும் தருமச்சிந்தையுள்ளபேரிடத்தும், துளசி வில்வவிருக்ஷத்தினிடத்தும், இலட்சணமமைந்தயானை குதிரை, பசு, ரிஷபம், பூமி இப்பேர்ப்பட்ட இடத்தும் அநீதி இல்லாத அதிகாரியிடத்தும் என்னுயகனது இருதயஸ்தானத்தைப் பார்க்கினும் இன்பமாயிருப்பேன். இன்னும் சத்திரம், சாவடி, தடாகம், மடம், சாலை, சோலை, தண்ணீர்ப்பந்தல் ஏரி, குளம், ஆறு, ஊர்களின்கயம், தாமரைத்தடாகம், இவ்விடத்திலும் இவைகளை ஏர்ப்படுத்தப்பட்ட பேர்களிடத்திலும் குலாச்சாரங்களெல்லா முக்கியம் எல்லா ஆசாரத்திற்கு மேலானவைகளையும் குலமுறைமைகளையுந் தப்பாமல் நடத்துகிறவர்களிடத்தும் நான் நீங்காதிருப்பேன். என்னைவிட்டு அவர்களும் பிரியாமல் பிரியமாயிருப்பார்கள். என்று உருக்குமணிதேவியா ருரைத்தனள். அம்மொழியை நாரதரும் தேவேந்திரனும் கேட்டு அற்புதப்பட்டு அம்மா நல்லது; மகாபாவியாயிருப்பவன் மகாராஜனா இருக்கின்றானே, அவனடத்தையெல்லாம் பாவமாயும் அக்கிரமுமாயு மிருக்க ஏதாகிலும் ஒருநற்காரியஞ் செய்திருந்தால் மற்றப் பொல்லாங்கை எல்லாமறந்து அவனிடத்திற்குப் போனையோ? புகலுந்தாயே என்று போற்றினார்கள். சுகந்தபரிமளமலர்மாலை சூடியமகாலட்சுமி சிறுநகை விளைத்துச் சொல்லுகின்றாள் ஓ, அறிவுடையவரே! காலத்திற்

ருத் தக்கப்படி குற்றம் மூன்றுபாகம் குணம் ஒருபாகமிருந்தால்,
அவர்களிடத்திலும் போவேன். போய் எப்படி இருப்பேனென்றால்
தீயின்பேரிலும் முள்ளின்பேரிலும் தேகநடுங்கிச் செல்பவர்போல,
சிடசிடவென்று சிறிதுநாள் நின்று ஏதாகிலுமொரு மூகாந்திரத்தை
நாட்டி அவர்கட் கிசையக்காட்டி மறைந்துபோவேன். நற்செய்கை
யாகிய நல்வினை மூன்றுபங்கும் தீவினையாகிய துற்செய்கை ஒருப
ங்கு மிருந்தால் அவர்களிடத்தில் நான் போயிருந்து மேலுமேலும்
கல்வியுடன் நல்வினை தேடச்செய்து தீவினையை மறந்து நாளுக்கு
நாள் விருத்தியாகி நன்னடத்தை நற்காரியம் நற்செய்கை நற்றவம்
நற்புத்திரன் நற்பெண்டிர் எல்லாவற்றையுஞ் சேர்த்து நானும் விளை
யாடிக் கொண்டிருப்பேன். கர்ம்மானுபவத்தால் அகந்தை அக்கிர
மஞ் செய்யப் பிரவேசிப்பாராகில், மகிட்சியின்படியே இகட்சி வினை
த்து நானும் நீங்கிப்போவேன். அந்த அகந்தை .அகங்காரமறைந்து
ஸன்மார்க்கவழி வந்தால் நானுந் துணையாயிருந்து கைதூக்கி விடு
வேன். ஒருவேளை தெரிந்துந் தெரியாமல் குற்றங்கள்செய்தால் நா
னிருக்கிற வரைக்கும் அக்குற்றங்களை விசாரணைக்குக் கொண்டுவரா
மல் வெகுபேர் சந்தோஷிக்கும்படி விடுத்து நானும் பொறுத்துக்
கொண்டே இருப்பேன், புண்ணியவான்களிடத்திலிருப்பது எனக்
குப் பூசிதையுண்டு, அவர்கள்செய்கிற குற்றத்தை மன்னிப்பது என்
கடமை. அக்குற்றம் அதிகப்பட்டால் எவற்றையும் ஒரே தாமாகச்
சாய்த்துவிட்டு ஓடிப்போவேன் என்று இயம்பினள். அந்தவார்த்
தையை இந்திரனும் நாரதரிஷியுங் கேட்டு சந்தோஷமுற்று என்
மனோன்மணித்தாயே அம்மணியென்றுதோத்திரம் புகன்று இப்
போது நீ வந்தது என்னத்திற்கு எவ்விடத்திற்குப் போகிறீர் ஒன்
றுமில்லாதவனை, உலகு காவலனுக்கி வைப்பதற்கோ, நீங்கள் புறப்
பட்டது உண்மையாகச் சொல்லும் உத்தமபூஷணி என்றும் பணிந்
தார்கள். ஓ தேவேந்திரனே ! உன்னிடத்தி லிருக்கும் படியாகவே
முன்னமே உரைத்திருக்கின்றேன். இது காலமானதால்; உன்னைத்
தேடிவந்தேன் என்று தனது சுபப்பிரகாசத்தைக் காட்டி உடனே
மறைந்து பரம அணுவடிவமெடுத்து இந்திர னுடலிற்புகுந்து மகிழ்ந்
திருந்தனள்(தருமசொரூபியாகிய தருமராஜனே) நீ முன்னமே கேட்
ட கேள்விக்கு இதுவேசாட்சியாய் இருதயத்திலிருத்துமென்று சொ
ல்ல சகலரிஷீஸ்வரர் முதலிய தேவர்களுங் கொண்டாடுகின்ற
வீஷ்டுமாச்சாரியர் குறிக்கவும் அந்தச் சந்தேகத்தை நிவர்த்திசெய்து
தருமநந்தனன் அதிசயப் பட்டு மறுபடியும் பாட்டனை வணங்கிக்

கேட்டனர். சுவாமி காலம் காலமென்று சொல்லுகின்றார்களே, அந்தக்காலமாவதென்ன? அந்தக்காலத்தினளவை எனக்குத்தெரியக் கிருபை புரிந்தருளும் (என் குலகுருவேயென்று) சிரத்தையாய்க் கேட்க விளம்பத்தொடங்கினர்.

## 37. கால அளவின் பிரமாணம்.

அப்பா, பாண்டு புத்திரனே! நிமிஷம் பதினெட்டுக் கூடியது காஷ்டம், காஷ்டமுப்பது கூடியது கலை, கலைமுந்நூற் றன்பதுகூடியது சிறுமுகூர்த்தம், சிறுமுகூர்த்த மிரண்டு கூடியது பெருமுகூர்த்தம், பெருமுகூர்த்தம் பதினாறுகூடியது இராப்பகல், சேர்ந்த ஒருநாள். அந்தநாள் ஏழு தழுவியது வாரம், அவ்வார மிரண்டு கலந்தது பட்சம் அப்பட்சத்துவயம் மாதம், மாதம் ஒன்றுக்கு முப்பது நாள் அம்மாத மிரண்டு சேரில், இருது, இருது மூன்று கூடினால், அயனம். அயனம் இரண்டு வரில் ஒருவருஷம். அந்தவருஷத்திற்குள்ளே தக்ஷணாயனம், உத்தராயணம், இரண்டுண்டு, இது பூலோக வருடம். அயன மிரண்டு சேர்ந்தது ஒருவருடம் இது தேவதைகளுக்கு ஒரு நாள். இந்நாளில், உத்தராயணம் பகல் தக்ஷணாயனம் இரவு, இந்நாள் முந்நூற்றறுபது கூடியது, தேவவருஷம். அவ்வருஷம் பன்னீரா யிரத்தை நான்குனாற் பெருக்கிக் கண்டதொகை, கிரேதாயுகம், மேற்கூறிய பன்னீராயிரத்தை மூன்றினாற் பெருக்கி ஏற்பட்ட தொகை திரேதாயுகம், அப்பன்னீராயிரத்தை இரண்டிற் பெருக்கி ஏற்பட்ட தொகை துவாபரயுகம், அதை ஒன்றிற் பெருக்க நின்றதொகை, கலியுகம். முன்சொல்லி வந்த முன்னூற்றறுபது நாளாகிய வருஷம் பன்னீராயிரத்தை நான்கில், மூன்றில், இரண்டில் ஒன்றில் பெருக்கிய தொகை கூடியது நான்குயுகம் அப்படியாகப் பெருக்கிக் கூட்டிய தமிழ்வருஷத்திற்கு தொகையைச் சாற்றுகின்றேன்.

முதலாகிய கிரேதாயுகத்திற்கு வருஷம் பதினேழுலட்சத்திருபத்தெண்ணாயிரம். இரண்டாவது திரேதா யுகத்திற்கு வருஷம் பனிரண்டு லட்சத்துத் தொண்ணூறாயிரம். மூன்றாவது துவாபரயுகத்திற்கு வருஷம் எட்டுலட்சத்தறுபத்து நாலாயிரம். நான்காவது கலியுகத்திற்கு வருஷம் நாலுலட்சத்து முப்பத்திராயிரம், இப்பேர்

பட்ட யுகம் நான்கு கூடியது ஒரு சதுர்யுகம். இந்தச் சதுர்யுகம் ஆயிரமானால் சிருஷ்டி கர்த்தனுக்கு ஒரு பகல். இன்னம் ஆயிரஞ் சதுர்யுகஞ் சேர்ந்தால் நான்முகனுக்கு இரவு. ஆக இரண்டாயிரஞ் சதுர்யுகம் முப்பதுசேரில் ஒருமாதம். அந்த மாதம் பன்னிரண்டு கலந்தால், ஒருவருடம். அவ்வருடம் நூறு கூடினால் அயனுக்கு ஆயுள்முடிவு. அப்பிரம்மதேவன் பகலில் சகல ஆத்மாக்களையும் சிருஷ்டிப்பார். இரவில் எண்பத்து நான்குலட்சம் யோனிபேதமும் இறந்துப்போம். அப்போது சலப்பிரளயம் வந்துமூடிக்கொள்ளும் இராத்திரிமுழுது மப்படியே யிருக்கும். முதற்கூறிய நிமிஷந் தொடங்கி மண்பொதுத் தந்தையின் ஆயுசு பரியபந்தம் உனக்குணர்த்தினேன்; இப்பால் அந்தக்காலம் பெருகி வளர்ந்துபோமே, அதையாரறிந்து அறையப்போகின்றார்கள். இதுதான் காலமென்பது. இந்தக் காலஅளவை பாற்கடலிற் பிறந்த ஆலால விடத்தைக் கண்டத்திற் றரித்தருளிய ஆதிபாண்டரங்கனும், அகலிட முழுதும் விழுங்கிய ஆதிநாராயணனும் அறிந்து பேசமாட்டுவார்களல்லது மண்டலத்திலும் விண்டலத்திலும் எண்டிசையிலு முள்ளவர்கள் என்ன அறியப் போகின்றார்கள். இறைவனே என்று வீஷ்மர் சொல்ல, தருமராஜன் கேட்டானந்தித்து ஐயா பூகோள விஷயம் தெரிந்துக்கொள்ள வேணுமென்றும் அதின் விஸ்தீரணங்களும் விபரங்களும் அருள் செய்ய வேண்டுமென்று கேட்க வீஷ்மர் சொல்லத்தொடங்கினார்.

## 39. பூகோள சங்கிரஹம்.

இந்த அண்டமானது முட்டைவடிவம். அதில் சுவர்க்கம் மத்தியம், பாதாளம், என்கிற மூன்றுபிரிவுண்டு, அவற்றுள், ஏழு உலகங்கள் ஒருகூறு, அவையாவன:—

பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், ஜனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம், இதில் மானிடர்வசிக்கும் இடம் பூலோகம். இப்பூலோகத்தில் உதயகிரியும், அஸ்தகிரியும், சக்கிரவாளகிரியும், சமுத்திரங்களும் இருக்கின்றன. இதற்கப்பால் பெரும்புறக்கடலும் இருட்பூமியுமிருக்கின்றன.

சக்கிரவாளகிரிக்கு உட்பட்டபூமியானது எது துவீபமாகவகுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது: புஷ்கரத்துவீபம், சாகத்துவீபம

கிரவுஞ்சத்துவீபம், கோமேதகத்துவீபம், சான்மலித்துவீபம், குசைத்துவீபம், சம்புத்துவீபம், என ஏழாம் அவைகளின் விவரம்;

1. இவ்வேழில் ஒன்றாகிய புஷ்கர துவீபத்தில் குமுதவரை என்கிற மலையொன்றுண்டு அதில் நன்னீர் கடலாகிய கடலில் தாமசை புஷ்பங்கள் விசேஷமாக புஷ்பித்திருக்கும்.

2. சாகத்துவீபத்தில் மந்தரகிரிமலையும் பால்சமுத்திரமும் இருக்கிறுறன. அதனருகில் கீரைதண்டுகள் விசேஷமாயிருக்கின்றன.

3. கிரவுஞ்ச துவீபத்தில், கிரவுஞ்சமலை தயிர்கடல் அமைந்து அதில் அன்றில்முதலிய பலவிதபக்ஷிகள் மிகுதியாய் உள்ளன.

4. கோமேதக துவீபத்தில் நீணுகமென்கிற மலையும் நெய் கடலும் அதில் கோமேதக ரத்தினங்கள் மிகுதியா யுள்ளனவாம்.

5. சான்மலி துவீபத்தில் மேருமந்தரகிரியும், மதுக்கடலும் அமைந்து அவ்விடம் இலவமரம் மிகுதியாய் செழித்திருக்கும்.

6. குசைத்துவீபத்தில் பாரிசகிரியும் கரும்புரசக்கடலும் தருப்பைப்புல்லும் மிகுதியாய் விளைந்திருக்கும்.

7. சம்புத்திவீபத்தில், அயவரையென்கிற மலையும் உவர்கடலும், ஜம்புநாவல் விருக்ஷமும் அதிகமாயிருக்கும்.

இந்த ஏழுதீவுகளும் மகா மேருவைச்சுற்றி இருக்கின்றன. இதில்நாம் இருக்கும் சம்புதீவுவிசேஷமானது. இதில் முப்பத்துமுக்கோடி தேவர்கள்வாசம்.

1. மாகமேருவுக்கு வடக்கில் வடகிழக்கில், வடமேற்கில் நீலகிரி, சுவேதகிரி, சிருங்ககிரி, இம்மூன்றுமிருக்கின்றன. கீழ்திசையில் மாலியவான்கிரி, மேல்திசையில் கந்தமாதன பர்வத மிருக்கின்றன.

2. தென்திசையில் தென்மேற்கில், தென்கிழக்கில் நிடதகிரி, ஏமகூடம், இமையவரை என்று மூன்று மலைகளுண்டு இந்த எட்டு மலைகளையே அஷ்டகுல பர்வதமென்று சொல்லுவர்.

3. மகாமேருவுக்கு கீழ்ப்புரமாயிருக்கிற மந்தரகிரியில் மாமரங்கள் விசேஷம். அவ்விடத்தில் பாற்சுனை உண்டு அதிலே முனிவர்கள் தேவர்கள் உண்டு வாசஞ்செய்வார்கள்.

4. மகாமேருவுக்கு தென்திசையில் மேருமந்தரகிரியில் சம்பு விருக்ஷம்விஸ்தாரம் அதில் மதுச்சுனையுண்டு.

5. பாரிசகிரியில் கடம்பவிருக்ஷம் விஸ்தாரம் அங்கே கருப்பஞ்சாற்றுச் சுனையுண்டு.

6. குமுதகிரியில் வடவிருக்ஷம் மிகுதி அதில் (ஆல்) நன்னீர்ச் சுனையுண்டு.

7. மகாமேருவின் பாரரை எண்பதுனாயிரம் யோசனைகனம், நடுமெத்தி பதினாயிரம் யோசனை அகலம் ஆகாயத்தில் உயரம் முப்பத்திரண்டாயிரயோசனை அதில் மூன்று சிகரங்கள் உண்டு. அவை யாவன! பிரம்மபீடம், விஷ்ணுபீடம், சிவபீடம், ஆம்.

8. மகாமேருவின் எட்டுதிக்கிலும் திக்குபாலகராகிய இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் இவர்கள் வாசஞ்செய்வார்கள்.

9. மகாமேருவின் பக்கத்தில் மாமரங்கள் நிறைந்தபாகத்தில் வழிந்தோடும் பழச்சாற்றினால் சோகநதியென்று ஒன்று ஓடும் அந்த தண்ணீரை பானம்பண்ணுவதனால் அங்கேவசிக்கும் பிராணிகளுடைய சுவாசம் பாழாய்ப்போகாமல் ஆயுள்விருத்தியுண்டா யிருக்கிறார்கள்.

1. கிழக்குமுதல் மேற்கு சமுத்திரபரியந்தம் இருக்கப்பட்ட பூமிக்கு குருக்ஷேத்திர கண்டமென்று பெயர்பெரும்.

2. சிருங்கமலைக்கு தெற்கு சுவேதமலைக்கு வடக்கு கீழ்கடல் மேல்கடலுக்கு மத்தியில் உள்ளபூமிக்கு இரணிய கண்டமென்று பெயர்.

3. சுவேதகிரிக்கும், நீலகிரிக்கும் கிழக்கு, மேற்குக்கடலுக்கு மத்தியிலிருக்கும் பூமிசிரம்மியகண்ட மென்னப்படும்.

4. நீலகிரிக்குத் தெற்கு மேருவுக்குவடககு மேல்கீழ் கடல்களுக்கு மத்தியில் உள்ள பூமிக்கு இளாவிருதகண்டம் மென்று பெயராம்.

5. மேருவுக்கு தெற்கு மாலியவான் பருவதத்திற்கு வடக்கு கீழ்கடல்வரைக்கும் பத்திரகண்டமெனப் பெயர்பெறும்.

6. கந்தமாதன பருவதத்திற்கு மேற்கு மேலைச்சமுத்திரத்திற்கு கிழக்கு கேதுமாலவருஷ கண்டம்.

7. நிடதகிரிக்கு தெற்கு இமயமலைக்கு வடக்கு மேல்கடல் கீழ்கடல்வரைக்கும் மத்தியிலுள்ளது அரிவருஷகண்டம்.

8. ஏமமலைக்கு தெற்கு இமயமலைக்கு வடக்கு கீழ் மேல்சமுத்திரம் வரையில் இருக்கும் பூமிக்கு கிம்புருஷவருஷகண்டம்.

9. இமயமலைக்குத்தெற்கு தென்கடலுக்கு வடக்குமேல்கடல் கீழ்கடல்களுக்கு நடுவாகயிருக்கும் பூமிக்கு பாரதவருஷ கண்டமென்று பெயர்.

இந்தஒன்பது பூமிகளையும் அங்கிதிர இராசன் பிள்ளைகள்ஆண்டமையால் இவர்கள்பெயரால் விளங்கும் நவகண்டமென்பார்.

சிருஷ்டிக்கர்த்தாவாகிய பிரம்மாவின் புத்திரன் சுவாயம்பு மனுவென்பவர், இந்தசப்ததீவுகளையும் ஆண்டு வந்தவர், அவருக்கு, நந்தன், சயித்திரதன், பிரைசன், சர்வதோபத்திரன் கதிரன், மனுதாரன், அங்கிதிரன், என்று ஏழு பிள்ளைகள் பிறந்தார்கள் அந்தப் பிள்ளைகளுக்கு ஏழு தீவுகளையும் பேருக்கு ஒன்றாகப் பகுத்துக் கொடுத்தார் அவர்களில் அங்கிதிர னென்பவன் இந்த ஜம்பு தீவத்தைஆண்டுவந்தான் அவனுக்கு குரு, இரணியன், ரம்மியன், இளாவிருதன், பத்திரன், கேதுமாலன், அரி, கிம்புருஷன் பாரதன் என்று ஒன்பதின்மர் பிள்ளைகள் பிறந்தார்கள் இவர்கள் இந்த ஜம்புத்தீவத்தை ஒன்பது பங்காகபிரித்து ஆண்டுவந்தார்கள் அதனால் இதற்கு நவகண்டமெனப்பெயர் பிறந்தது.

ஆகாயகங்கையானது மகாமேருவில் பாய்ந்து மூன்றுகால்களாகி கும்பகிரியில்வரும். அதில் ஒருகாலானது நான்குவாய்க்கால்களாய் சமுத்திரத்தில் போய்க்கலக்கின்றது.

குலகிரியில்வரும் மற்றொருகாலானது தெற்குமுகமாய் வருங்கங்கை இந்த பரதகண்டத்தில் பிரவேசித்து வருவதுமன்றி, சரஸ்வதி, யமுனை, கோதாவிரி, நருமதை, கௌசிகை, துங்கபத்திரை சரயுநதி, பாலி, பெண்ணை, காவேரி, கிருஷ்ணை, தாம்பரபரணிமுதலிய நதிகளில் கங்கைதீர்த்தம் கலக்கின்றபடியால் இந் நதியெல்லாம் புண்ணியதீர்த்தமென்றும் பாவத்தையொழிக்கும் தீர்த்தமாகையாலும் இக்கண்டத்திலே தேவாலயங்களும் திவ்வியாலயங்களும் அநேகமாயிருப்பதால் இந்த கண்டம் விசேஷமென்றும் தெய்வலோகத்திற்கு அடுத்ததென்றும் மோக்ஷபூமியென்றும் விசேஷித்தது.

இந்த பாரதகண்டத்தில் குருக்ஷேத்திரம் என்றது பரிசுத்தமான மகிமையுள்ள ஸ்தலங்களும் பரசுராமர் இராஜவம்சங்களைக் கருவறுத்து அவர்கள் தேகங்களினின்றும் பெருகிய உதிரத்தினலுண்டாகிய ஆற்றுக்கு சிமந்த பஞ்சகமென்று சொல்லும் தீர்த்த மகத்துவமுண்டாயிற்று. இந்த குருக்ஷேத்திரம் எவ்விடத்திலிருக்கிறதென்றால், சரஸ்வதிநதிக்குத் தென்பாரிசத்தில் இருக்கின்றன.

இந்தஜம்புத்தீவுதவிர மற்றதீவுகளில் புஷ்கரதீபத்தையாண்ட சர்வதோபத்திரனென்னும் இராஜனுக்கு. பிராசீனன், சுவேதன்; பிரத்தியக்கன், உத்தரன் ஆக நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள், அவர்கள் அதை நான்குபங்காக பிரித்துக்கொண்டு ஆண்டு அதில் வசிப்போர்கள் பிரம்மாவைப் பூசிப்பவர்கள் வயசு ஆயிரம் உடைத்தாயிருந்தார்கள்.

கிரவுஞ்சதுவீபத்தில் வசிப்போர் வருணனை மாத்திரம் தொழுவார்கள்.

கோமேதகத்துவீபத்தில் வசிப்பவர் சூரியனைமாத்திரம் வணங்குவார்கள்.

சாகத்துவீபத்தோர் வாயுவை ஆராதிப்பார்கள்.

சான்மலி துவீபத்தோர் சந்திரனைமாத்திரம் போற்றுவார்கள்.

குசைத்துவீபத்தோர் அக்கினியைக் கொண்டாடுவார்கள்.

இந்த ஜம்புத்தீவோர் ஆதிமூலக்கடவுளாகளாகிய பரமசிவத்தையும், ஸ்ரீமன் நாராயணரையும் தொழுது முத்தியடைகின்றதாகையால் அதனால் இந்த க்ஷேத்திரத்திற்கு தெய்வபூமியென்றும் புண்ணிய ஸ்தலங்களென்றும் பெயர்வந்ததற்கு காரணமாம்.

## கீழேழுலகத்தின் விவரம்.

அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம், இவைகள் கீழேழு லோகங்களாம். ஒவ்வொன்று ஒன்பது யோசனைதூரம் விஸ்தாரம். பாதாளலோகத்தில் காண்டவர் என்னும் பெரியவரிருக்கின்றார். பாதாளத்துக்கு அப்பால் அள்ளல், ரவுரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம் பூதி, மாபூதி, என்னும் ஏழுநரகங்கள் உண்டு, அதற்கப்பால் தேவர்கள் தொழும் உருத்திரசங்கமம் என்கிற சிவஸ்தானம் இருக்கின்றது அதற்காதாரமாகிய ஆமையும் அங்கேயிருக்கிறது. இந்த பூலோக முதல் அண்டசுவர்கம் வரையிலும் ஐம்பதுகோடியோசனை விஸ்தீரணமாக இருக்கின்றது.

## மேலேழுலகத்தின் விவரம்.

இந்த பூமிக்குமேல் பத்துயோசனை தூரத்துக்கப்பால் வாயுமண்டலம் அதற்குமேல் பதினாயிரம் யோசனைக்கப்பால், மேகமண்டலம் இந்தமட்டும் பூலோகம். இதற்குமேல்,

1. புவர்லோகம், அதிலே கின்னரர், கிம்புருடர், வித்தியாதரர், இயக்கர், சித்தர்கள் வசிக்கின்றார்கள். அதற்குமேல் ஆகாயகங்கை இருக்கின்றது அதற்கு லக்ஷம் யோசனைக்கப்பால் சூரியமண்டலம். அதுவே தேவர்கள்நடக்கும் வீதி, அதற்குமேல் லக்ஷம் யோசனை தூரத்தில் சந்திரமண்டலம். அதற்குமேல் ஒருயோசனை தூரத்துக்கப்பால் லக்ஷம்யோசனை தூரம்வரையில் நக்ஷத்திரமண்டலம். அதற்குமேல் இரண்டுலக்ஷம் யோசனைதூரம் புதன்மண்டலம், அப்பால் சுக்கிரமண்டலம். அப்பால் அங்காரக ரூபமாகிய செவ்வாய்மண்டலம். அதற்கப்பால் குருமண்டலம், சனிமண்டலம், அதுகளில் ஒன்றுக்கொன்று தூரத்தின் அளவு இரண்டுலக்ஷம் யோசனை தூரமாம்.

சனிமண்டலத்துக்கு லக்ஷம் யோசனைக்கப்பால் சப்தரிஷி மண்டலம். அதற்கு லக்ஷம் யோசனை தூரத்தில் துருவமண்டலம், இதுவரையிலும் பதினைந்துலக்ஷம் யோசனைதூரம் விஸ்தீரணமுள்ள இவ்வளவும் புவர்லோகம்.

2. சுவர்லோகம் என்பது எண்பத்தைந்து லக்ஷம் யோசனை தூரமுடையது அதில் கற்பகவிருக்ஷமுதல் புண்ணியவான்கள் கேட்ட பொருள்களெல்லாங் கொடுத்து, சுகானுபோகத்தை அனுபவிக்கும் புண்ணிய லோகமாம்.

3. மகா லோகம் இருநூறுலக்ஷம் யோசனை தூரமுடையது, அதில் தேவேந்திரனுக்கு இராஜதானி அதிலே மார்க்கண்டேயர் முதலாகிய, மகாமுனிவர்களும் அரம்பை, ஊர்வசி முதலாகிய தேவதாசிகளும் வீற்றிருப்பார்கள். அதற்குமேல் எட்டுகோடி யோசனையுள்ளது.

4. ஜன லோகம் என்பது எட்டுகோடி யோசனையுள்ளது அதில் பிதிர் தேவதைகள் முதலிய புண்ணியவான்களுக்கு வாசஸ்தலம். அதற்குமேல்,

5. தபோலோகம் பன்னிரெண்டு யோசனை விஸ்தீரணம் இருப்பது அதில் ஜனகர், ஜனந்தரர், ஜனக்குமாரர், ஜனற்தரர் முதலிய திரிகாலங்கண்ட ஞானிகள் இருக்கும் அருப்பிடம். இதற்குமேல்,

6. பிரம்மலோகம். பதினாறுகோடி யோசனை தூரமுடையது இந்தலோகத்தில் பிரம்மா வாசஞ்செய்கின்றலோகம் இம்மட்டும் இதுவேழுலகங்களாம்.

சத்திய லோகம் மூன்றுகோடி யோசனைதூரம் விஸ்தீரணம் அதில் பரமபதமென்னும் மகாவிஷ்ணு வாசமா யிருக்கும் வாசஸ்தானம் அதற்குமேல்,

சிவ லோகம். இந்த சிவலோகம் மூன்றுகோடி யோசனை தூர விஸ்தீர்ணமுடையது அதில் ஈஸ்வரனும் உமாமகேஸ்வரியும் வாசஸ்தானம். இதுகளல்லாமல் நூற்றெட்டு உருத்திரர்கள் வாழும் புவனங்களும் சமுத்திரமத்தியில் இலங்கைமுதலிய அனேக தீவுகளுமுள்ளன.

எமகூடம் இமையமலைக்கு தெற்கும் வடக்கில் கிம்புருஷவருஷத்தில் கைலையங்கிரியும் இருக்கின்றது அந்த இடத்தில் தான் அர்ச்சுனனும் தவம்புரிந்து பாசுபதாஸ்திரம்பெற்று சண்டையில் ஜயித்தது.

## 40. விரைவிற் செய்யவேண்டிய பதி-பசு புண்ணிய விபரம்.

விரைவிற் செய்யுங்காரியம் இரண்டு விதமுண்டு. அதை யறிகிற வித மெப்படி யென்றால் சகல சாஸ்திர புராண வேதாகமங்களுணர்ந்து, அதுகளில் சாரமான காரியங்களையும் பகுத்தறிந்து பிரபஞ்சத்தோடு கூடி பெண்டு, பிள்ளை, பண்டு, பதார்த்தம், மண்மனை வீடு, வாசல், தோட்டந்தொறவு, ஆனை, சேனை, ஆபரணம், ஆடைகள் இத்தியாதி முதலியவெல்லாம் மாயாபதார்த்தமென்று இந்த உடலைவிட்டு உயிர்நீங்கி உடல் உலகைவிட்டு மறையும்போது மேற்குறித்த பொருளனைத்துங் கூடவாராதென்றும். முன் பின்னோருக்கும் இது பிரத்தியட்சமே, ஆதலால் ஆசாபாசத்திலழுந்திக் கிடவாமல் அதில் அசிரத்தை வைத்து இந்தக் குடும்பங்களைக் காப்பாற்றுவதற்கு நீதி சாஸ்திரம் எவ்வளவு பிரமாணம் பேசி இருக்கின்றதோ அவ்வளவுக்குப் பாடுபட்டு பிரபலித்த மனம் நாட்டி; தண்ணீர்ப் பானையைத் தலைமேற் கொண்டுபோகிற, தையல், தன் எதிர் பார்வையிலும் நினைப்புக் குடத்திலும்பதித்து போவதுபோல, பார்வையெல்லாஞ் சமூக விசாரமாகிய சமுசாரத்திற்போக்கி தன்னுயிர்த் துணையாய் தானெங்கே போனாலும் அவிடமும் வழித்துணையாகின்ற தருமத்தில் நினைவைத்தாக்கி சரீரமிருப்பதும், அச்சரீரத்திற் சஞ்சரிப்பவன் ஒளிப்பதும் தெரியாதபடியால் சீக்கிரத்திற்றானே தாமசமில்

லாமல் பதிபுண்ணிய தருமத்தைத் தேடவேணும், அந்தத்தருமமே ஐயமோட்சத்தின், கதவைத்திறக்கும் முதற்சாவியென்று அரை நிமிஷமும் சும்மா இராமல் எப்போதெப்போதென்று சமயத்தில் முடித்துக்கொள்ள வேண்டும். தருணந்தப்பினல் மரண நிச்சயம்,ஐயோ அனியாயமாய்ப் போய்விடாதீர்கள். அவசரத்திற் செய்யுங்களென்று சான்றோருரைக்கும் வாசகம். ஆனல், தருமம் பலவிதமுண்டு. அதுகளில் பசு புண்ணிய மென்றும், பதி புண்ணியமென்றும். இரண்டுண்டு. அவ்விரண்டினுள், எல்லாப் புண்ணியங்களும் அடங்கிப் போம். அப்படிக்கிருந்தாலும் தருமமென்பது பொதுப்பெயர். எதுவானலும் சீக்கிரத்திற் செய்வது நல்லது. அதிலும் பதிபுண்ணியம் பத்தத்தனே உத்தமம் இதனல் சுத்த பதிபுண்ணிய மெல்லாம் மோக்ஷம். பசுபுண்ணியத்தினுற் பலப்படுங் கருமமாம். கருமமாவது சொற்காதிபோகம். பெரியவர்களுக்கு உற்றவிடத்துதவி, திருப்பணி: உற்சவம், வேதமந்திரப் பிரதிஷ்டை, ஆசாரிய பூசை, ஜபம் இன்னம் பலவித புண்ணியங்கள் பதிதருமத்திற் சேர்ந்து பலனைத் தரும். யாகாதி கிருத்தியங்கள் அன்னதானங்கள், பசு புண்ணியத்திற் சேர்ந்து கலந்து சுவர்க்காதி போகங்களைக் கொடுக்கத்தக்கது. இதுமறுமையில் நற்பிறவியும் கல்வியையும் செல்வத்தையும் கொடுக்குமாகையால் எந்த விதத்திலாவது பேரறிவாளனுனவன் நிலை இல்லாக் காயத்தை நிச்சயமாய் நம்பாமல் கெட்டுப்போகுஞ் செல்வத்தை மயக்கத்தால் மறந்து இஷ்ட மென்றெண்ணுமல் விட்டுப் போவார்கள், கஷ்டப் பட்டானுலும் சற்கருமங்களைத் தேடிக்கொள்ளவேண்டும் மெய்விரதனே உடனுறுப்பாகிய இளமை, தேகம்,செல்வம், நித்தியமல்லாத அனித்தியப் பொருளாதலால், சீக்கிரம் புண்ணியஞ் செய்யவேண்டு மென்பதாம் மெதுவிற் செய்கிற காரியமுண்டு. அதையுஞ் சொல்லுகிறேன் கேளும்.

"நாச்சேற்று விக்குண்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப்படும்"

## 41. மெதுவில் செய்யத்தக்கவைகள் வருமாறு.

சீர்காரி என்னும் தபசியாகிய ரிஷிக்கு மேதையென்று ஒரு பிள்ளை பிறந்திருந்தான். அவன் மன்மதனுக்கு நேராகிய வடிவ

முடையவன். ஆதிசேடனுக் கொப்பாக அருமறை கற்றவன். மேலாகிய தபசுகளை மெதுவாகப் பெற்றவன். இப்பேர்ப்பட்ட பிள்ளையின்பேரில் பட்சமுடைய மகாதபசியான சிர்காரியானவர் ஆசிரமத்திலிருக்கும் போது பெண்சாதிக்கும் தனக்கும், பிணக்கு நேரிட்டு மரியாதைக்குறைவாகிய வார்த்தை பலதரம்தடுத்து சொல்லியதும சண்டை விளைத்து அத்துமீறிப் பேசியபடியால் குணமாகிய குன்றின்மேலிருந்தவர் கோபமாகிய குண நிலமீதி லிறங்கி ஆக்குரோஷப்பட்டு மேதை என்கிற மெய்யனைப்பார்த்து அப்பாவுன் தாய் அத்துமீறி தடுத்துபேசியபடியால் அவளை வெட்டிப்போடென்று வெகுளியாயுரைத்து, ஆசிரம வீட்டைவிட்டு பூசரமாகிய சோலையிற் புகுந்துபோய்விட்டார். தாயாருக்கு ஆயுள் நீடித்திருப்பதனால் தந்தைசொற்படிக்குவெட்ட, மனம்வாராமல் மெத்தத்துக் காக்கிரந்தனாய் பத்துமாதஞ் சுமந்து, பெற்றெடுத்து, வளர்த்து, சீராட்டித் தாலாட்டிக் காத்துரட்சித்த மாதாவை எப்படி வெட்டுவேன் ஒரு உபத்திரம் பண்ணாமல் அவள்சாகப்போகிற தில்லையே, என்கை வாளினால் என்தாயை நானெப்படிமுடிப்பேன் என்று மனதிலுன்னியுன்னி இந்தத்தருமசங்கடத்திற்கு நாமென்னசெய்வோம் தந்தை சொல்லுக்கு மேலாகிய, மந்திர மில்லையே இந்தப்படி நடத்துவது தருமந்தானோ? தாயைப் பிள்ளை கொல்லப் போகாது, ஓ தரும தேவதையே இதுவுந் தருமந்தானோ? நானென்ன செய்வேனென்று மனங்குன்றி, ஓ பரமகருணாநிதியே இவ்விரண்டு தருமத்தினும் தன்னுயிரை மாய்த்துக்கொள்வது மேலான தருமமென்று துணிவு கொண்டு யோசித்திருக்குங்காலத்தில் கோபங்கொண்டுகுறும் பொரையிற்புகுந்து சிர்காரி ரிஷியானவர் சினந்தெளிந்து ஆசிரமத்தை நோக்கித் திரும்பி ஐயையோ என் பிராணனுக்குப் பிராணன், ஆவிக்காவி, உயிர்க்குயிராகிய உரியவளை இன்னேரம், வெட்டி விட்டானோ என்னமோ தெய்வமே தெய்வமே நாம்போகிற வரையிலும் பேரறிவாளனாகிய பிள்ளை வெட்டாமலிருக்கானா என்மேன்மைக் குமாரன் கொல்லாம லிருக்கானா வென்று கோவென்றழுது நாம் கோபத்தினாற் கூறினோமென்று தெரிந்து கொள்ளானா நன்றாய்ப் படித்தவன் தாயைக் கொல்லச் சம்மதிப்பானா சமதக்கினி சொல்லைக் கேட்டு பரசுராமன், தாயைக்கொன்றானே அதுவும் புண்ணியருரைத்த வி தந்தானே அவ்வாறு, புரிந்திருப்பானோ ஆமாம் அப்படியாகிய தரும விரதத் *தந்தைவார்த்தையால் மூந்தினாலும் தருந் தகாதென்று எண்ணிப் பார்ப்பதல்லவோ தருமம். எல்லாந் தருமந்

தானா பதறாத காரியஞ்சிதறாது ஒரு தருமமல்லவா ! மேலும் நமது
புத்திரன் மெத்தவும் புத்திமான். அவசரப்படமாட்டான். ஆகிலும்
தெய்வமிருக்கிறது அவளைக்கண்ணினாற் காண்பேனோ ஆ தெய்
வமே, ஒ வினையே நான் ஆசிரமத்திற்குப் போனபோது என்வயிறு
குளிரப் பண்ணுவையோ ? வயிறு எரியச்செய்வையோ வென்று
எண்ணாது வெண்ணி அகங்கலாய்த்துக்கொண்டு ஆசிரமத்திற்கு
வந்தார். தன்பிள்ளையும், பெண்சாதியும் எதிர்கொண்டு சாஷ்டாங்க
மாக நமஸ்காரஞ்செய்து வணங்கி தோத்திரம் புரியக்கண்டு,உள்ளங்
குளிர்ந்து கண்ணீர் வெள்ளமாயோட புன்சிரிப்புக்காட்டி, பிள்ளை
யின் புத்திக்கு மெச்சின வராய் பெண்சாதியை ஆசீர்வதித்து பிள்
ளையையும், பெண்சாதியையும் இரண்டு கைகளினாலு மேந்தித்தாங்
கித் தழுவி மனங்குளிர்ந்து மணவாளனோடு மனைவியர் என்ன சொன்
னபோதிலும் எதிர்த்து வார்த்தையாடக்கூடாது வார்த்தை யில்லா
திருந்தால், ஈரேழுலோகத்தையும் வெல்லலாம். அன்றியும் (தெய்
வந்தொழாள் கொழுநற்றொழுதெழுவாள்) என்பதுதான் பெண்
களுக்கு இருக்க வேண்டிய தரும மென்று இரசமாகிய வார்த்தை
களினால் பிரியவசனமும் புத்தியுஞ் சொல்லி நன்மையுடன் வாழ்ந்
திருந்தார்கள் ஆனபடியினாலே, குவளை மாலை தரித்தருளிய கோவே
துணிவினால், கோபத்தினால், அதிகாரத்தினால், ஆக்கினையினால் அக
ங்காரத்தினால், அவசரத்தினால், பொறாமையினால் பொல்லாங்கினால்,
பகையினால், பணச்செருக்கினால் எண்ணிப்பாராமையினால் இன்னு
மநேக விதங்களாகிய மதமாச்சரியத்தினால், கொலை, பொய், களவு.
கட், காம, முதலாகிய பாதகங்களைக் செய்வதற்கு மனதுவருவது
ண்டு. கோபமேபாபம்கொடியது கோபஞ் சண்டாளம் மகாபாதகங்
களை உண்டாக்குவதற்கு வித்தாயிருப்பது கோபமுதலிய குறைகளி
னால் குற்றம் நேரிடுகிறதாயிருந்தால் சற்றுநேரம் கோபத்தை யடக்
கி தன்பிழையையும்,எதிரி பிழையையும், ஆராய்ந்து, தனக்குள்விரு
க்குப் ஒருவனுக்குச் சரிப்படுத்தி, இது தகுந் தகாதகாரியமென்று
கண்டறிந்துக்கொண்டு அதுகளில் தாரதம்மியம் பார்த்துபொறுமை
யாகிய விரதபூஷணத்தைப் பூணுவதே உத்தமத்திலும் உத்தமம்;மு
ன்னுரைத்த சிர்காரியென்னுந் தவசியின் புத்திரன் மேதையென்ப
வன் தகப்பன் பேச்சைக்கேட்டு உடனே தாயை வெட்டிப் போடா
மல் தந்தையினுடைய வார்த்தையையும் தாயினுடைய மூர்ச்சையை
யுஞ்சமரசப்படுத்தி துரிதப்படாமல் எண்ணி நிதானித்தபடியால்;

மைந்தனும் தந்தையுந் தாயுஞ் சுகப்பட்டார்கள். (நிறையுடைமை நீங்காமைவேண்டிற் பொறையுடைமை போற்றியொழுக்கப்படும்) ஒருமனந்தனு யாதாமொருத்தர் பொல்லாத பாவங்களைச்செய்ய மனங்குவியுமாகில் உடனே பேரறிவினாலே பிரித்து பார்த்து கோபத்தை மாற்றிவிடவேண்டும். ஆறிப்போனகோபம் எதிரிக்கு ஆதரவாகும், அப்போதே இரக்கந் தோன்றும். தீர்க்காலோசனை பண்ணித் துணிந்தபேர்கள் யாவரோ அவர்களுக்கு வரும்பலனை அரும்பதவியாகிய பெருங்கீர்த்தியை, என்னுலிசையத் தக்கதன்று. அவர்கள் பொன்னாட்டின் போகத்தைப் பெறுவார்கள். ஆகையால் சத்கருமங்களைச் சடுதியிற் செய்யவேணும், துஷ்கருமங்களை சோர்வாய் விடவேணும். சீக்கிரத்திற்செய்கிற காரியமும் மெதுவிற் செய்கிற காரியமும் இதனாலறிந்துக் கொள்ளென்று வீஷ்மர்சொல்ல, தருமராஜன் சந்தோஷப்பட்டு ஐயா, தர்மார்த்த காமமென்கிற மூன்று காரியங்களிலேயும் ஜீவனுக்குறுதியாகிய சகாயஞ் செய்யத்தக்கது இன்னதென்று எடுத்துக்காட்டவேண்டும் இறைவனே யென்று இறைஞ்சிக்கேட்க, அதற்குக் கங்காபுத்திரன் உரைக்கத் தொடங்கினர்.

## 42. தருமார்த்த காமமோக்ஷ மகிமையுரைத்தல்.

இன்பமென்பது இலட்சுமியைப் போலும் குளிர்ந்த தாமரை முகத்தளாய் மெதுவாய்ப் பேசுகிற மிருது பாஷியாய் கோபமில்லாதவளாய் குலக்கு நாய்போற் சீருதவளாய் நோயற்றவளாய் பழிப்பில்லாக் குலத்திற் பிறந்தவளாய் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, இந்த நான்கு குண முடையவளாய் மாமி, மாமனுர் மைத்துனர், சுற்றத்தார், பந்துமித்திரர்கள் இவர்களுக்கு இதம்பட நடப்பவளாயும் விருந்தினரைக் கண்டால் பரிந் தெதிர்கொண்டு வருந்தி அன்புடன் அன்னம் படைப்பவளாய், நாயகன் சொல்லுகின்ற முறைமை வழியினின்று நடப்பவளாய், மலடியாய்ப் போகாமல் புத்திர பாக்கிய முடையவளாய் இந்திராணி இரதி இவர்களைப்போல் இன்ப லீலை புரிபவளாய், அன்னியர் அயலார் வீட்டிற் போகாதவளாய், நித்திய ஸ்தான செப தப, நியமத்துடன் சூரிய நமஸ்காரம்பண்ணி நாயகனுக்கடங்கி. நடக்கும் அதிபாலிய முடையவளாய் இன்னமுள்ள ஸ்திரீகளுக்குரிய லட்சணமும், சற்குணமும் பொருந்திய

பெண்சாதியுடன் மனதொத்து ஆசையாய்க் கலந்து வாழ்வதுதான் பேரின்பத்திற்கும் பெரிதாகிய இன்பம். இது இம்மைப் பிரயோசனம். பொருளாவது, இத்தியாதி குணங்களமைந்து சொல் தவறாத மனையாளுடன் கூடிவாழ்கின்ற மனைவாழ்க்கையில் போசன முதலாகிய பிதுர்க்கருமஞ் செய்வதற்குத் தேடும் பொருள் வழியறிந்து முறைமையாய் ஒருவர்மன நோவாமல் தன்னைத் தீவினைசாராமல் சோழி சூது சொக்கட்டான், சதுரங்க முதலிய பாவசொத்துகளல்லாமல் பொய்கொலை களவு கள்காமத்தினால் வரும்பொருளில்லாமல் குறைபுகன் றோர்க்காமல், கணக்கழிவு கூறாமல், நம்பினபேர் நடுங்காமல், அடைக்கலம் வைத்தவர் கழராமல், தருமதான, சாவடி, மடம், ஆலயம், ஏரி, குளம், குட்டை, தோப்பு, தொறவு, இவைகளைச் சார்ந்து வாராமல் மனமடிந்து பிறிகழாமல் நன்மையிற் கிடைத்தது போதுமென்று சம்பாதித்த பொருளை நன்மார்க்கத்திற் சிலவழித்து ஜீவகாருண்யனுயிருப்பானாகில் அவனுக்கு இம்மைப்பயனும் மறுமைப்போகமும் உண்டு. இப்பால் தருமமாவது காலந்தப்பாது நித்தியானுஷ்டான கருமங்களைக் கருதி குருநாதனையும் ஈஸ்வரனையுந் துதித்து பூசாவிதியும் ஆசாரியமமும் செபதப நமஸ்காரமும் புரிந்து தானென்கிற ஆணவசுதந்தரத்தைத் தள்ளி யாவற்றையும் பிரம்மாற்பணமாகத் தத்தம்பண்ணி அவனல்லது வேறில்லை என்று அறிந்து நடப்பதுவே தருமம். இந்தத்தருமத்தினால் இம்மைப்பயனும் அம்மைப்போகமும் உம்மையாகிய மோட்சமுங் கிடைக்கும். இம்மைப்பயனாவது பூமியிற் செல்வமும் அம்மைப் போகமாவது, சொற்காதிபோகம் உம்மைப்பயனாவது இனிமேற் கிடைக்கப்போகிற மோட்சம். இம்மூன்றும் தருமமாகிய தவத்தினாற் பெறலாகும் தருமராஜனே தர்மார்த்தகாம மோக்ஷமென்கிற மூன்றிலும் பிராணுதாரலாபம் தருமமே. இதற்குச்சாட்சியாக ஒரு கதைகேளும்.

## 43. தருமார்த்த காமமோக்ஷத்தைத் தழுவிய சரித்திரம்.

கட்டல்வளைந்த காசினியில் திடம்விளைந்திருக்கின்ற தேவப்பிராமணகுலத்திற் பிறந்த ஒரு பெரியவர் இருந்தார். அவர் காமத்தை விட்டு அனர்த்தமாகிய பொருள்மேலாசைவைத்து பூமி எல்லாந்

திரிந்து பொன்னாசையிற் பரிந்து முடிவில் தபசுபண்ணி திரவியம் பெறவேணுமென்று மனதிலெண்ணி ஒரு பர்ணசாலை ஏற்படுத்தி அதிலிருந்து தவம்பண்ணுகிற தருணத்தில், ஒரு மஹாபுருஷன் தேவ சொரூபசுந்தர திவ்விய திருமங்கள ரூபத்துடன் பிரசன்னமானான். அவனைக் கண்டு அஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து, அடிபணிந்து நிற்கின்ற பிராமணனை நோக்கி உனக்குவேண்டிய தென்னவென்று வினவ, சுவாமி எனக்கு மிகுந்த திரவியம் வேண்டுமென்ன, அப்போது அந்தத் தேவன் ஒருயக்ஷனை வரும்படியாக நினைத்தான். அப்படியே யக்ஷன் வந்து தொழுதான். அவனைப்பார்த்து தாமரை மலரை தரிக்கப்பட்ட இந்தப் பிராமணன் எவ்வளவு திரவியங்கேட்டாலும் கொடுக்கமாட்டேனென்னாமல் வழங்கிவரக் கடவாயென்று வகுத்தான். அப்போதே யக்ஷன் அந்தப் பிராமணனை நோக்கி ஓ, ஐயரே நீர் ஆசைப்பட்ட நிதி எவ்வளவோ அவ்வளவு தருகிறேன் பெற்றுக் கொள்ளுமென்று பொக்கிஷத்தைத் திறந்து விட்டான். அதைக் கண்டபோதே அவ்வேதியனுக்கு கியானம் பிறந்து மனந்தெளிந்து, ஐயோ, என்ன அருமையான தவத்தைச் செய்து நிலையற்ற திரவியத்தைப் பெரிய பொருளாய் விரும்பினேம். செல்வம் பிரயோசனமா? கல்வி பிரயோசனமா? தவம் பிரயோசனமா? ஐஸ்வரியத்தினால் பெருமையும் பூலோகப்பிரதிஷ்டையும் பூதசம்பந்தமான உடலுக்குச் சுகந்தேடுவதல்லது உயிருக்கென்னசுகம். இந்தப்பொருளால் கோபம், லோபம், மோகம், மதம், மாற்சல்லியம், பகை, மமகாங்காரம், ஆணவமலம், அக்கியானகேவலம் இதெல்லாம் விளையுமே இதை விருதாவிற்கேட்டேன், என்விரதமெல்லாம் விட்டேன், வீணாசைப் பட்டேனென்று, தன்னைத்தானே நொந்துக் கொண்டு தனக்கெதிரிலே, காட்சியா யிருக்கிற புட்பகவிமானனை நோக்கி, பிரதட்சணம்வந்து நமஸ்கரித்து, சுவாமி, அடியேன்,மடைமையினால் பொருளை விரும்பிக் கேட்டேன். தேவரீர் அருள்செய்யத் துணிந்தீர். இந்தப்பொருள், மருளை விளைக்கத்தக்கது. ஆதலால் தெருளை விளக்கும்படியாகிய, ஆன்மாவுக்கு லாபத்தைத் தருகின்ற அம்மைப்பொருளைக் கை கூட்டிவைக்கும் தருமமான தவத்தைப் பெறும்படிக்கு அநுக்கிரகம் பண்ணுமையாவென்று வேண்டிக் கொண்டான். அந்தத்தேவனுக்கு கிருபைவந்து நீர் நல்லகாரியத்தை நாடினீர் இதுதான் சாஸ்திரவிசாரணைசெய்த சாதுக்களின் விவேக முறைமையென்று வாழ்த்தி, அதனால் உயிருக்குச்சார்பு

தருமம், தவம், பிரதானம். மகாதானமென்று நிச்சயித்து, அதன் பிறகு தவப்பெருளே சிந்திக்கத்தக்கதென்று, கிருபைகூர்ந்து மறைந்துபோனர், நெடுங்காலந் தவம்பண்ணி நெறிவழிபற்றி ஒப்பில்லாத மெய்ப்போதரிஷியென்று எப்போது மிருந்தார். அப்பா தருமராஜனே காமத்துக்கும் பொருளுக்கும் பெரிது தருமமென்று, தானென்பதற்ற வீஷ்மேர் சாற்றி, அப்பேர்ப்பட்ட தபசுக்கு நினைவு முக்கியமான துணையானது. இவ்வாறிருந்து பேறுபெற்ற தபசிகளின் பெருமையும் சொல்லுகிறேன் கேள்.

ஓ வேந்தனே குணசாந்தனே! வேதவேதாந்த உபநிடத முதலாகிய வேதாகமங்களையும்; நன்காராய்ந்துணர்ந்த நாதப்பிரம்மமென்றொரு பிராமணோத்தம ரிருந்தார். அவர் தன்மனையாளுடன் சாத்துவிகம், இராசதம் தாமசம் இம்மூன்று குணங்களையுங் கெடுத்து திரிகுணதோஷஞ் சாராமல் கொல்லாவிரதங்கொண்டு காட்டிலிருந்து தபசு செய்து வந்தார். நாளுக்குநாள் அவருடைய தபசு அதிகப்பட்டு வருகிறநாளையில், வேதவிதியால் விளம்பி இருக்கின்ற பசுவை இட்டு வேள்விசெய்யாமல் பழவர்க்கமுதலிய வகையாதிகளைக் கொண்டு பசுவதைக்குப் பிரதியாய் ஓமம் பண்ணவேண்டுமென்று மனமகிட்சியுடனே எக்கிய முடிப்பதற்கு வேண்டிய திரவியங்களைச் சேகரித்துக்கொண் டிருக்கும்போது, இந்தச் சங்கதியை தேவேந்திரன் கேள்விப்பட்டு அந்தப்பிராமணனிடத்தி மாறுவேஷங்கொண்டு வந்து ஓ பிர்ம்மகுல சிரேஷ்டரே வேதத்திற் சொல்லி இருக்கின்ற சகலயாகங்களுக்கும் பசுபந்தனம் பிரதானமென்று பேசியும், அப்படியே அனேகம் பேர்கள் நடத்தியுமிருக்க; அதற்குமாறுக இலைகளையும் காய்களையும் கனிகளையும் போட்டு எக்கியம் பண்ணுவது உமது குலத்திற்கு இயல்போ; நீர் பிடித்ததிறமோ, வேதவிதிக்கு வேறுபட்டு நீர் நடத்தினல் அது உமக்கு செல்லாது. அதனல் வரும்பயனுமில்லாது. இது மிகவும் பொல்லாது, என்று புகன்று புரந்தரன் போயினன். அப்பால். சிலரிஷியீஸ்வரர்கள் வந்து ஐயரோ விரதிமெய்யரே அக்கினிக்கையரே நீர் பசுபந்தனமில்லாமல் எக்கியம் பண்ணப்போகிறதாய்க்கேள்வியானேம். நீர் அப்படிக்குச் செய்யக்கூடுமா? உமக்கு அது முறைமையாமா அதனல் வரும் பாபம் வீண்போமா விதிதப்பி நடப்பார்க்கு விதித்திருக்கின்ற தண்டனை வீணுமா இப்படி செய்வதனற் பலன் கிட்டுமா நீர்கொல்லா விரதங்கொண் டிருந்தாலும், வேதத்திற் கூறியவண்ணம் பண்ணினுல் விரதபங்கமி

ர்தாவென்று விதம்விதமாய் விளம்பினார்கள். அவர்கள் சொல்லை யுங்கேளாமல் யாகஞ்செய்ய எத்தனித்திருந்த பெரியவரைப் பார்த்து அவருடைய பெண்சாதியானவள்கேளும் பர்த்தாவே, தேவேந்திரன் சொன்னவார்த்தையும் ரிஷியீஸ்வரர்கள் விளம்பிய விதியையும் பொருட்செய்யாமல் உமதுமனம் போனவாறே செய்வதற்கு முயற்சிபண்ணுகிறீர். நமக்கெல்லாம் வேதமே ஆதாரம், அதைத் தள்ளி நடந்தால் வேதபுருஷன் உமது யாகத்தையும், விரதத்தையும், நிறைவேற்றமாட்டார் அதனால் பழியும் பாவமும் அபரோதனையுஞ் சம்பவிக்குமென்று, தன்னாற் கூடியமட்டும் தருமபத்தினி சாற்றியும், அவள்வார்த்தையையு மிகழ்ந்து மண்டல குண்டலங்கள் வகுத்து வேதிகையமைத்து திரியாக்கினி திரித்து சமஸ்காரம் பண்ணி நமஸ்காரஞ்செய்து சங்கல்ப விதி தரித்து வாகிச வாகிசு பலி பூசைபண்ணி அக்கினியை ஓமகுண்டத்தில்வைத்து ஜொலிக்கச் செய்து அடிமேகலையிலே தருப்பையும் நடுமேகலையிலே கூற்சமும் மேய்மேகலையிலே பருதி இஷ்டமும்வைத்து அக்கினிக்கு ஜனிப்பு ஜாதகன்ம முதலானது நடத்திசிறுக்கு சிருவத்துக்குப் பூசைமுடித்து திரிமூர்த்தி சொரூபமாய்ப்பாவித்து ஆச்சியத்திற்கு சமஸ்காரஞ்செய்து ஆச்சியமாகிய அந்தநெய்யை தருப்பையினாலேதொட்டு இடைபின்கலை சுழிமுனையாய்ப்பாவித்து மூலாதார ஆகுதிபண்ணி பூரணாகுதிசெய்து அப்பிரப பிரதான ஓமம் பண்ணத்தக்கதாக ஆரம்பித்தார். அப்போது அக்கினி பிரபலியாமலடங்கி மடங்கி அவிந்து போயிற்று. எத்தனை விதத்தில் மூட்டினாலும் கர்ப்பூரம், நெய், சமுத்து, இதுகளைக் காட்டினாலும், நெருப்பு மூளாமற் போனதை ரிஷியீஸ்வரன்கண்டு, இதென்னகாரணமென்று நிதானித்து ஆலோசனையிலிருக்கும்போது, அவருக்கெதிரிலே ஒருமான் வந்து நின்று ஓ ஐயா, நீரென்னயாகம் பண்ணுகிறீர் குசையாகமேயலல்து தசையாகமா குமா எங்கேயாகிலும் இப்படி நடந்திருக்கிறதா ஓமத்திற்கு உயிரைக்கொன்று வயிற்றினுபிக்குள் வெண்டுகில் போன்ற நிணமாகிய வபையைஎடுத்து மந்திரித்தே வதைகையிற் கொடுத்து யாகம்பண்ணினால் புண்ணியபலனுண்டாம். புகழுண்டாம். பொருளுண்டாம். போதமூண்டாம். புனிதர்களாசிர்வாதமுண்டாம். முத்தியுண்டாம். அதனாலொரு பாவமுமில்லை என்பதாய்வேதத்தில் விளம்பி இருக்க, நீர் அப்படி புரியாமற் போனபடியினால் அக்கினி எரியாமல் அவிந்துவிடுகின்றது; ஆதலால் என்னை நீர்பசுவாகக்கொண்டுவபை எடுத்து ஓமம்

பண்ணுமாதவனே என்று சொல்ல, அதற்கும் ஒப்பாமல் நடத்துகிற விப்பிரனைப்பார்த்து பின்னும்மானானது ஓய்,ரிஷியே பாவம்வருமென்மென்று பயப்படாதீர் வேதத்திற் சொல்லி இருக்கின்ற மேன்பாட்டின் படிக்கு மெய்யாகநம்பி, அவிர்ப்பாகமளித்தால், தேவதைகளெல்லாஞ் சிந்தைமகிழ்ந்து, உம்மிடத்தில் வந்து கண்டு, சிந்தை நீங்க வாழ்த்துவார்கள். நீர் எக்கியம்பண்ணுகிறீர், அதில் முக்கியமாகிய அவிர்ப்பாகம் வாங்கிச் சாப்பிடலாமென்று அக்கரையாக ஆசைகொண்டு, தேவர்களெல்லாம் ஆகாயத்தில் கூட்டங் கூட்டமாய்க் குவிந்துவந்திருக்கின்றார்கள். அதோதேவேந்திரன் முதலிய பேர்களுந்திகைத்துக் கொண்டிருக்கிறார்கள். பாருமென்று அந்த மான்யாகஞ்செய்யும் பிராமணனுக்குத் தெரியும் படியாக அனுக்கிரகம் பண்ணிற்று அந்தமான் வசனத்தைத்கேட்டு வானத்தைப் பார்க்க சகலகோடிதேவதைகளையும் சதமகனையும் யிருக்கக்கண்டு ஆச்சரியங்கொண்டு ஐயம் நீங்கி (செய்வினை திருந்தச் செய்) என்னும் வேதவிதியை அநுசரித்து மனதைஸ்திரப்படுத்திக் கொண்டுவருகிற தருணத்தில் தருமதேவதை பிரசன்னமாய் ஓ கொல்லா விரதங்கொண்ட குணக்கியனே, வேதத்தின் உண்மையை வெளியிடுகிறேன் கேளுமென்றயாக அத்தியாயம் நவின்றிருக்கின்ற சத்கிரமத்தையும், எழுதாக்கிளவியாகிய ஈஸ்வரவாக்கியத்தையும், தமரகவோசையாற் பிறந்த அட்சரசொரூபத்தையும், கிரமமாகச் சொல்லிமறைந்து போய்விட்டது, மறை முதல்வனாகிய மறையவன், மனந்துணிந்து வேதமே உன்னை நம்பினே னென்று எல்லாவற்றிற்கு மேலாகிய எக்கியத்தில் திரிமூர்த்திகள் முதலாகிய தேவேந்திரன் தேவர்கள் யாவருக்கும் பசுவபையினால் ஓமம்பண்ணி, அவிர்ப்பாகங் கொடுத்து திருப்திபண்ணி வைத்தான், அப்போது திரிமூர்த்திகள் முதலானபேர்களும் சந்தோஷப்பட்டார்கள் அப்படிப்பட்ட மேலான எக்கியத்தைப் பண்ணி அநேக விஜயமும், தபமும், நன்மையுங், கூடிவரத்தக்கதாக ஓமப்பசு எக்கியத்தினாலடைந்து பசுவும்கூட பதவிபெற்றதனால், இனிமேல் நானுனக்குச் சொல்லவேண்டியதென்ன வேதமே, நமக்கு அத்து, அதைக் கற்று அதின் சொற்படி அவிர்ப்பாகம் வைத்து நடந்தால் எல்லாப் பலன்களுமுண்டாமென்று விஷ்டுமர் சொல்லதருமநந்தனன் தன்னியனானான்.

பின்னும் பாட்டனாரைப்பணிந்து இந்துகுலத்தில்வந்து தபஞ்செய்த ஐயனே நன்மையான பேர்களிற் பிரவேசித்த காரியங்

களுக்கு, எல்லாரும் பழிக்கும்படியாக துன்பம்வந்து சம்பவித்துத் துயரப்படுகிருர்களே, அதென்னத்தினுலே, இருளைப்போக்கிப் பிரகாசிக்கப்பட்ட சூரியனைப்போல் ஆத்மாவுக்கு அக்கியானமான இருளை நீக்கி சுக்கியான மென்னுஞ் சோதியைப் பிரகாசிக்கச்செய்யா நின்ற சுகுணரே இந்தச் சந்தேகத்தை நிவிர்த்திசெய்ய வேண்டுமென்று சரணம் புகுந்த சற்புத்திரனை நோக்கிச் சாற்றுகின்ருர்.

## 44. உலகில் நன்மையான காரியத்தில் பிரவேசித்தபேர்களுக்கு துன்பம் வந்து சம்பவிக்கும் காரணம்.

ஓ மைந்தனே கேளும், குளிர்ந்த பிரகாசத்தை யுடைய இளம்பிறையையும் பிரவாகமாகிய கங்கையையுந் தரித்தருளிய சடாமகுடத்தைப் பொருத்த தாணுவாகிய மூலகாரணப் பொருளானவர், வீணைமுனி முதலாகிய சகலகோடி தேவதைகளும் ரிஷிகளும் தேவகண பூதகணங்களுஞ் சேவிக்கும்படி தாமரை மலர்போலுஞ் சிவந்த இதழினையுடைய ஆதிசக்தியான தேவி வாமபாகத்தில் வந்திருக்கும்படிக்கு கோடாகோடி கொன்றைமரங்கள் குலாவிய அநேக நந்தவனங்களும் வில்வ வனங்களும் தழைந் திருக்கப்பட்ட கைலையங் கிரியில் மாணிக்கச் சிம்மாசனத்தில் எழுந்தருளி இருக்கும்போது சில ரிஷியீஸ்வரர்கள் முதலாகிய மெய்யடியார்களும் அவ்விடத்திற்கு வந்து அதிகார நந்திதேவருடைய அநுமதியின் பேரில் திருக்கோயிலுக்குட் புகுந்து பிரதட்சண நமஸ்காரம் பண்ணி தேவதேவ மஹாதேவ தத்துவசித்த பரிசுத்த நிர்மல கருணாநிதியாகிய கடவுளே! பிரமன் குமாரனுகிய தட்சப் பிரம்மாவானவர் தேவரீரொருவரை விலக்கி மற்றபேர்களுடன் சபைகூடி ஒருமித்து யாகமொன்று செய்கின்ருன், அந்த யாகத்தில் தங்களுக்கு மாத்திரம் அவிர்ப்பாகம் கொடாமல் செய்கின்ருனே அது எப்படி நடக்கும், எப்பொருட்கு மிறையாய் எல்லாவற்றிற்குஞ் ஜோதிசொரூபமாயிருக்கின்ற ஈஸ்வரனே, உம்முடையகருணை எப்படியோ எங்களுக்கொன்றுந் தெரியவில்லை என்று இறைஞ்சித் தோத்திரம் புரிந்தார்கள். அவ்வுரைகேட்ட ஆதிபகவன் புன்னகையோடு பொருந்தி இருந்தனர். அன்னேரா வேளையில் அம்மனுக்குக் கோபம்பிறந்து அரகர சம்போவென்று வணங்கி பூலோகத்திற் செய்கின்ற யாகம்

போற்செய்யாமல் அகங்காரத்தினாலும், அறிவீனத்தினாலும் செய்யப்பட்டதக்கனுடைய எக்கியம் அழியத்தக்கதாக, தேவரீர் சிந்திக்க வேண்டுமென்று அந்தரி மொழிந்தனள். கணக்கிறந்ததிருவிளையாடலை யுடைய கண்ணுதலானவர் சங்கரி வார்த்தையைக் கேட்டு சகலதேவ கணங்களும் புடைசூழ ரிஷபவாகனரூடராய் பர்வததேவியுடன், பதிதன் செய்கிர யாகசாலைக்கு வந்து அந்தர்வாசியாயிருந்தபோது, அதைத் தக்கன் கண்டு நிலைதளராமல் மனநடுங்காமல் தானெடுத்தகாரிய முடிவுபெறும்படி ஓமம்பண்ணிக்கொண்டு தேவதைகளுக்கு அவிர்ப்பாகங் கொடுக்க ஆரம்பித்தான். அப்போது தானல்லாத பொருளில்லாத பசுபதியானவர் ஞானதிபர்களாகிய ஜீவன் முத்தர்களினது மனமகிழத்தக்கதாக தம்முடைய, நெற்றிக்கண்ணிலிருந்து ஒரு வீரனைப் பிறப்பித்தார். அந்த வீரபத்திரன் பலவித ஆயுதங்களுடனே கோபாக்கிரந்தனாய் நெருப்பெரியுங்கண்ணும் சிரிப்பெறியுங் கோரதந்தமுமாகி, வந்து பரமேஸ்வரனைப்பணிந்து விடைபெற்றுக்கொண்டு யாகத்திற்புகுந்து அநேகம் படைவீர கணங்களை ஏற்படுத்தி ஓமஞ்செய்கின்ற வேள்விச்சாலையைச் சுற்றிலுங் காவலாக்கியபோது. சற்றேனுந் தாட்சண்ணியம் பாராமல் யுகாந்தகாலத்தில் சமுத்திரமும் பொங்கி உலகத்தைவளைத்துக்கொள்ளும் உபத்திரவமெப்படியோ அத்தன்மைபோல் யாகசாலையை வளைத்துக்கொள்ளவே அதற்குள் ளகப்பட்டுக்கொண்ட அயன் அரி முதலாகிய தேவதைகளெல்லாம் கைநெறித்து மெய்பதைத்து, என்னசெய்யப் போகிறோமென்று ஏங்கித் தளர்ந்தார்கள். அந்தவேளையில் வேள்விச்சாலைக்குட் புகுந்த வீரபத்திரர் வீராவேசங்கொண்டு அந்த யாகத்திற் குடன்பட்டிருந்த சகலதேவதைகளையும் கண்டகண்ட மட்டுஞ் சோதித்து மூலைக்குமூலை சோதித்துபஞ்சுப்பொதியிற்பற்றிய நெருப்புப்போல் அதமாக்கி எரித்து விஷம்போன்ற தக்கனையும், எச்சனையும் தலையை வெட்டிப்போட்டார். அதுகாலையில் பிரமதேவன் நாலுபக்கத்திலும் ஓடி வாடி அகிலலோகநாதனாகிய ஆதி பரமேஸ்வரருடைய அடிமலரிணையில் அலறிவிழுந்து தோத்திரித்து ஆண்டவனே தக்கனுக்குக் கர்வபங்கமாயிற்று இனிமேல், தேவரீருக்கு அவிர்ப்பாகங் கொடுப்பதற்குச் சந்தேகமில்லை அவன் பிழைக்கும்படிக்கு கருணைசுரக்க வேண்டுமென்று மஹாதேவனை வேண்டிக்கொள்ள அதனால் மனமிரங்கி பிரம்மாவினுடைய பரிதாபம் பார்க்கமாட்டாமல் வெய்யிலில் வைத்த மெழுகுபோலுருகி வீரபத்திரரால், வெட்டுப்பட்டு விழுந்த

பேரெல்லாம் பிழைக்கும்படிக்கு தயைபுரிந்தருளினார். சகலமான பேரும் சஞ்சலப்படாமல் முன்போலவே முளைவீசியவாறுபோல் பிழைத்தெழுந்தார்கள். எழுந்தபேர்களியாவரும் வீரபத்திரசுவாமி கையால் வீழ்ந்து மேலாகிய பரமசிவத்தி னருளால் பிழைத்தோமென்றறிந்து இருவரையும் பணிந்து யாகம் அழிந்துபோய்க்கிடக்கிற அமக்களத்தையுங்கண்டு கிடுகிடென்று நடுங்கி பயபக்தியுடன் தோத்திரஞ் சொல்லி சுவாமி, நாங்கள் செய்த அபராதத்தைப் பொறுத்துரட்சிக்கவேண்டு மென்பதாய் தக்கன் முதலாகிய பேர்களும் ஒக்கலுடன்சேர்ந்து பொருமலும் விக்கலுங்கொண்டு வாய் தடமாறி புலம்பித்தவித்து தயாபரா யாபராவென்று வேண்டிக்கொண்டு மறுபடியும் வேள்வியைத் தொடங்கச்செய்து வேதவிதியின் படிக்கு முதலில் மஹாதேவனுக்கு அவிர்ப்பாகங் கொடுத்து மற்றவர்களையும் பூசித்தார்கள். பரமன் தக்கனை மாத்திரம் தலைமாறுடன் வைத்திருந்தார். இதைப்போல் நல்லகாரியமா இருந்தாலும், செய்யத்தக்க காரியம், தவரானகாரியம் இரண்டுமறிந்து ஈஸ்வரபக்தியு மிருந்து பெரியவாளிடம் யோசித்து நடத்துவாராகில் நிறைவேறும் இல்லாவிட்டால் கெட்டுப்போம் நன்மையைநாடிய தருமசுதனாவென்று வீஷ்டுமர் புகன்றார். பாட்டனுக்குப் பணிவிடைபுரிந்து என்குலதெய்வமே பார்க்கவரென்னும் பெரியவரை சுக்கிரனென்று உலகத்தார் சொல்லுகின்றார்களே, அவருக்கு இந்தப் பெயர் வந்த வரலா றென்னவென்று பேரன்கேட்க, மேலோனாகிய வீஷ்டுமர் பட்சத்துடன் சொல்லத்தொடங்கினார்.

## 45. பார்க்கவனுக்கு சுக்கிரனென்று பெயர் வந்ததற்கு காரணம்.

முன்னொருநாள் பார்க்கவனானவன் அளகாபுரிக்கதிபதியாகிய குபேரனிடத்திற்குப் போய் அவனைப்பயங்கரப்படுத்தினான். அதனால் துயரமடைந்த இருநிதிக்கிழவன் தரித்துச் சகிக்கமாட்டதவனாய் தனது தோழமைபூண்ட பரமசிவனிடத்திற் சென்று பரதவித்தான் அச்சங்கதியைக்கேட்ட பார்வதி சமேதராகிய சிவபெருமான், குபேரன்பேரிற்பரிந்து பார்க்கவன்பேரில் குரோதங் கொண்டெரிந்து அவனைப்பிடித்து விழுங்கிப் போட்டார். அப்பால் தேவர்கள் ரிஷிகள் முனிவர்கள் யாவரும் அழுது ஆதிசிவனைத்தொழுது பார்க்

தவனைத் தரவேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். அதன்பே ரில் பாலசேகந்திரனுக்கு அருளுண்டாகி விழுங்கியபார்க்கவனை வீரி யவழியினால் விட்டுவிட்டார். இந்தப் பார்க்கவன் ஈஸ்வரனுடையசுக் கிலமாய் அதோ முகத்தால் வந்தபடியால் அன்று முதல் இவனைச் சுக்கிலனென்று சொல்லப்பட்டு இவ்வுலகத்தில் சுக்கிரனென்று மரு வியது. ஓ தருமராஜனே என்று சாற்றவும் சந்தோஷப்பட்டு துதி த்து ஓ நாதனே நன்னிலங்கொண்டாடா நின்ற வேத வியாசரு டைய பிள்ளை சுகயோகியின் விருத்தாந்தமெல்லாம் கேட்க விருப்ப முற்றிருக்கின்றேன் என்னபேட்சையடங்க அருள் செய்யவேண் டும் ஐயனே என்ன, சுத்தவித்தகனாகிய வீஷ்மர் சொல்லத் தொட ங்கினர்.

## 46. சுகப்பிரம்மரிஷியின் சரித்திரம்.

சகலகல்யாணகுண அச்சுதனுக்குமைத்துனனேகேளும், கோ டா கோடிகோடியாகிய வேதங்களை எல்லாம் சிக்கறுத்து, இருக்கு, எசுர், சாமம், அதர்வணமென்று நான்காகப் பிரித்துஜடைசாகை களுடன் உலகத்திற்கெல்லாம் ஆதாரமாகும்படி செய்தருளிய ஆதி யில் சகல தபசுஞ்செய்து திரிகாலக்கியானியாய் சாபானுக்கிரக சா மர்த்தியமுடையவராய் அதிக தூய்மையா யிருக்கப்பட்டதேவவியா சமாக முனியாவனர் வெகுநாளாய் பிள்ளை இல்லாமல் புத்திரன் வேணுமென்கிற அபேட்சையினாலே, சூரியன் தினமும் பிரதக்ஷண நமஸ்காரம் பண்ணிக் கொண்டு வராநின்ற வெள்ளியங் கிரிச்சாரலில் அருந்தவமிருந்து, பர்வதராஜ புத்திரியையும் பரமசிவனையும் கருத்தி லிருத்தி கடுந்தவசுபண்ணி வருங்காலத்திலே, சிவனுக்கற்புதமாகிய சிலயாகங்களைச் செய்து மந்திரமூலமாய் அவிர்ப்பாக மளித்து சிவ னைத்தியானித்து ஆனந்தக்கண்ணீர் விட்டழுது, சரீரம் பொடித் துப் பூரிக்க நாவானது குழகுழத்துத் தழும் பேற நெஞ்சம் பஞ்சு போலாகி வெண்ணெய்போலுருகி, உடல் குழைந்து சிவானந்த வெள்ளத்தில் மூழ்கி பரவசமாய்த் தியானஞ்செய்து தன்னைமறந்த போது. ஏழைபங்காளனுக்குக் கிருபைவந்து யக்ஷ, கின்னர, கருட, காந்தருவ, சித்தர், வித்தியா தரருடன், அநேகக்கோடி ரிஷீஸ்வரா கள் தோத்திரம் பண்ணிக்கொண்டு மொய்த்து வரும்படியாக சகல ஜீவாத்மகோடிகளையும் இரட்சிக்கப்பட்ட சம்புவாகிய நாதன்

ரிஷப்வாகனரூடராய் பார்வதியம்மனுடன் மான் மழு சதுர்ப்புஜம் காளகண்டத் திரிநேத்திரத்துடனே காட்சிகொடுக்க, அதைப்பார்த்த வேதவியாசர் சூரியனைக்கண்ட செந்தாமரைக் கமலம்போல் அகமகிழ்ந்து முகமலர்ந்து, ஆனந்தமாய்க் கூத்தாடி பஞ்சாங்கநமஸ்காரம் பண்ணி சாம்பசிவ மூர்த்தியின் திருக்கோலத்தை பார்த்து, தன்னிலடங்காமல் மகிழ்ச்சி பூரித்து, ஆனந்த வியர்வை வீர்த்து அனேக விதமாக தோத்தரித்து மகாவிலாச உல்லாச கைலாசவாசியாகிய சுவாமியே என்று உள்ளமுருகி என்புகுழைந்து, அன்புதழைந்த வேதவியாசரை, விடையோனேக்கி நீரிழைத்த தவத்திற்கு நாம் மிகவுமெச்சினேம், உமது கோரிக்கையைக் கூறினல் கொடுப்போமென்று மொழிந்தார். வேதவியாசர் பணிந்து நிர்மல நிற்குணநிராகார நிச்சயமே அடியேனுக்கு ஆத்மக்கியானமும் யோக்கியமும் அறிவும் பக்தியும் பஞ்சபூதசேஷ்டைகளி லகப்படாப்பான்மையும், மாயையு மொழித்த மைந்தனொருவனைத் தந்தருளவேண்டுமென்று வருந்திக்கேட்க, அப்படியே கொடுத்தே னென்று திருவாக்கருளி, அரன் வெள்ளிபங்கிரிக் கெழுந்தருளினர். இப்பால் வேதவியாசர் தபசு நிலைநீங்கி கைலையங் கிரிச்சாரலைவிட்டு இமோத்கிரிச் சாரலரிகில்போய் பர்ணசாலை ஏர்ப்படுத்திக்கொண்டு வைதீகமடங்கட்டி வாசம்பண்ணி வருநாளையில் ஒருநாள் தீக்கடையுங்கோலை செங்கையிற் பிடித்து அக்கினிபிறக்கும்படிக்குக் கடையும்போது மைதீட்டிய மயில்கண்போன்ற செவ்வரிபடர்ந்த கண்களையுடைய அரம்பையானவள் அவ்விடம்வரக்கண்டார். அவளுடைய மதிமுகமும் மதத்தனிழிகளும் சுருட்டிய கடைக்கண்ணும் சுவர்னகுடம் போற்கதித்துப் பெருத்தகனஸ்னமும், ஆல்வயிறும் மால்ரோம வரையுமாகத் தோற்றிய சுந்தரத்தைக்கண்டு, வேதவியாசர் மிகுமோகங்கொண்டு விலக்கக் கூடாதமன்மத பாணத்திற்கு இலக்காகி. ஓமத்தீயில் உய்வது விடுத்து காமத்தீயிற் கருகிமெலிந்து கண்பஞ்சடைந்து கலங்கி வருவதை முல்லைக்கொப்பாகிய பல்லையுடைய வல்லியறிந்து மன்மதன் கணையால் வாடிய வேதவியாசரை நாடி மையல்தீரக் கலவிகூடிமருவேண்டு மென்றோடி வருபவள்போல நடைகாட்டி, கெஞ்சிக் கொஞ்சிக் கொஞ்சிப் பஞ்சவர்ண அஞ்சுகம்போல் அஞ்சியஞ்சி ஒஞ்சி தஞ்சநீயென்று அளியாய் அழகிய கிளியாய் களிகொண்டு ஒருமரத்தின் கிளையிலிருந்தாள். வியாசர் வேள்வின்கணையால் மெலிந்து வேசாறி விரகம் பொறுக்கமாட்டாமல் நேரிற்கண்ட நேரிழையழகும் அவள் செறிப்பும் காமப்பார்வையின் குறிப்பும் இவருக்

குட் புகுந்த அவளை நினைந்து நினைந்து உருக அவருக்கு வீரியம் பெருகும்போது அது பூமியில் விழப்படாதென்னும் புண்ணியத்தை எண்ணி அதை கையிற்றாங்கிய காலையில் கையுநிறைந்து மெய்யுமறந்து நெருப்புக்கடைந்த குழியில் நிரம்பியது. அது இவருக்குத் தெரியாமல் தன்னைத்தான் மறந்தவராய் தீக்கடைக்கோலால் ஓயாமற் கடையும்போது அந்தச் சூடும் இந்தச் சூடுங்கலந்து அக்கினி ஜோலித்தெழுந்ததுபோல் மகத்தாகிய திவ்ய சுகமஹாரிஷிபிறந்து எழுந்தார். உதயகிரியிலிருக்குஞ் சூரியனும் நாணும்படிக்குச் சுயம் பிரகாசகாந்தியுடன் தோன்றிய சுகனென்னும் சுதனைக்கண்டு வேதாகமசாஸ்திர புராணமுதலாகிய கலைகளுக்குரிய புருஷரும் பெரியோர்களும் அரியதவத்திற் குரியோர்களும் மெய்யன்பிறந்தான், எங்களையன் பிறந்தானென்று துதித்துக்கொண்டாடினார்கள். தருமதேவதை நீதிதேவதை வனதேவதை பூமிதேவதை முதலிய பேர்களு மதித்து மகிழ்ந்தார்கள். தேவதுந்துமி முழக்கி புஷ்பமாரி பொழிந்தார்கள், சகலாத்ம கோடிகளுக்கும் நற்செயலாய்ச் சம்பிரமமும் சந்தோஷமும் பிறந்து, நித்தியோசவங் கொண்டாடினார்கள். பாரிலுள்ளபாவங்கள் பறந்தோடவும் தருமக்குழுமித் தலை எடுத்தாடவு பெரும் பேறுங் கலந்த வைபவத்துடன் ஜனித்தபிள்ளையைப் பார்த்துக் களித்து தீராத வறுமையிலகப்பட்டுத் தேம்பிய ஒருவனுக்கு மாறாத திரவியவாழ்வு வந்தால் அவனடையும் மகிழ்வதெப்படியோ அப்படிப் போலும், பிறந்திறந்துழலுகின்ற பிராணனானது நாளுக்கு நாள் கொஞ்சம் நல்வினை தேடி அதனாற் புண்ணியங்கூடி. விதேகம் விளைந்து மந்தம் மந்ததரங்களெல்லாங் கடந்து தீவிரம் அதிதீவிரதரத்தில் கடைசியாய்ப் பிறந்து இருவினையொப்பு மலபரிபாகமாய் ஜனனமூலை தீய்ந்து இருவினைப் பயனுங்காய்ந்து உற்பவவிடயமாய்ந்து சுவர்க்கலோக மடைந்து ஆனந்தத்தை பெறுவதுபோல் வேதவியாசர் பிரம்மாநந்தத்தில் மூழ்கி எழுந்தார். அந்தகாலத்தில் தேவர்களும் தேவேந்திரனும் ரிஷிகளும் முனீஸ்வரர்களும் பிரம்மதேவனும் சரஸ்வதியும் லட்சுமியும் ஆகாயகங்கையும் பூமிதேவியும் சித்தசாத்தியரும் வந்துஞானமே நிறைந்த சொரூபமாகப் பிறந்தமைந்தனை உவந்து ஏந்தி உச்சிமுகந்து நீராட்டி ஆசீர்வதித்து சட்கர்ம்மப்பிரகாரம் புத்திரோற்சவம் ஜாதகன்மம் ஓமம் கிரமமாக நடப்பித்து சாமவேதகானத்தை வீணையில் மீட்டி தேவரம்பைகள் பாடிக்கொண்டிருக்க, பார்வதிசமேதராகிய பரமசிவன்

ரிஷபவாகனரூடராய், நாரதர்முதல் ஞானக்கடலாகிய மோனமுனிவர்கள் முன்னும் பின்னு மொய்த்துவரும்படிக்கு எழுந்தருளி வேதவியாசருடைய சேய்தனைப்பார்த்து கிருபாசமுத்திரத்துடன் திருவருண் முகூர்த்தஞ் செய்துமதிவளரக்கலைவளரு மாப்போல்மதிவளரக் கலைவளரவென்று வாழ்த்தி மஹாதேவியுடன் வெள்ளியங்கிரிக் கெழுந்தருளினர். பிரமன்முதலான தேவர்களும் போனார்கள். இப்பால் சுகப்பிரம்மரிஷியானவர் தந்தையைப் பணிந்து திரிகரண சுத்தியாய் புத்தி செலுத்தி திடனென்கின்ற பிராமணனிடத்தில் வேதாகம சாஸ்திரவிதி நூலெல்லாங்கற்று புராணசாரம் ஆசாரம் விவகாரம் நமஸ்காரம், சிஷ்டாச்சாரம், அதிகாரம், தருமவுபகாரம், இயாவுந் தெரிந்து ரிஷிகளுக் கெல்லாம் முதன்மையாயிருந்து தனது தந்தை இருக்கின்ற ஆசிரமத்திற்கு வந்து முறைமைப் பிரகார மிருந்து ரிஷிகளுடன் வாசம்பண்ணி விரிந்த திறமைக்குரிய பெரிய விரதங்களை யனுஷ்டித்து, பிரபஞ்ச மயக்கத்தையும் பார்த்துக்கொண்டு ஒருவர் கண்ணிலுந் தோற்றாமல் காரணப்பொருள் போல் நின்று, சிலநாட் சென்றபின் வியாசர், அப்பா உலகமென்பதும், இவ்வுலகத்திலுள்ள சகல பேதங்களும் தாறுமாறாகியமாயையல்லது வேறில்லை, இனிமேலதைக்கூறுவதி லென்ன சிலாக்கியம், பிரம்மம் ஒன்றுதான் நிச்சயபதார்த்தம் குற்றசத்குணமே இது எதார்த்தம், அகிலபுவன சராசரங்களில் உள்ளும் புறம்புமாயுநிறைந்து விளையாடுவது பரப்பிரம்மமே, அவரசைந்தாலல்லது அணுவுமசையாது அவரே சுதந்தரன், மற்றவர்கள்யாவரும் பரதந்திரர்கள், ஓ துரந்தரனே என்று இந்தப்படிக்கு எந்தெந்தத் தருணத்திற் சொல்லவேண்டியதோ அந்தந்த தருணத்தில் வேதத்திலெடுத்துக் காட்டினர். (தந்தைசொன்மிக்க மந்திரமில்லை யென்னும்) விதிப்பிரகாரம் வியாசராலறிந்துக்கொண்ட மெஞ்ஞான தேசிகன் மறையாச்சிரமத்தில் பிரமசரியம், கிரகஸ்தன், வானப்பிரஸ்தன், என்று விளம்பி இருக்கின்றவகை தொகை விரிவு மூன்றையுமறிந்து இதுகளைப் பார்ப்பதினாலும் கேட்பதினாலும் பிரபஞ்ச ஆசாபசாசம் பிடித்துக்கொண்டு ஆட்டும், அது சிலருக்குக் கொண்டாட்டம் அப்படிப்பட்ட கொண்டாட்டங்களை மாற்றுகின்ற ஞானநூலை நவிலுமையாவென்று கேட்டார், மைந்தன் வசனத்தைக்கேட்ட வாதராயணர் நகைத்து சகல கலைஞானமும் உருவாய்ச் சமைந்த பிள்ளாய் மேற்சொல்லிய மூன்றாச்சிரமங்களினாலும் பற்றுவையாமல் புத்தியினால்

விலக்கிவிடலாமென்று பார்க்கிறாய், அதைவிட்டு விடப்போமாமே மேலேறுகிறவன் முதற்படியிலிருந்தேறுவதா அல்லது மூன்றுபடியைத் தாண்டி நான்காவது படியிற்காலூன்றி ஏறுவதா சொல்லும் தாராசின் முட்போன்ற மனதையுடையவர்களானாலும் பாபத்திற்கு பயமும் தயாரசமும் தண்ணளியும் தலைமையும் தன்னுயிர்போல் சராசரவுயிரும் சமமென் றுன்னி இருக்குந் தவத்தினை யுடையவர், களுக்கும் இந்த ஆசிரமம் மூன்றைத் தள்ளிவேறில்லை, இம் மூன்றிலேயே பழகிவரும்போது சகலமு நாசமாகிய சந்நியாச மிருக்கிறதே யென்றியம்பிய பிதாவுக்கு பிள்ளை சொல்லுகிறார் ஐயா, நீர் சொன்னதென்ன இந்தப் பிரபஞ்சவாழ்க்கைப் போகங்களை விரும்பிய ஆக்கையுடையோர்க்கு நீர் போதிக்கவேண்டியது இதுதான். என்னைக் கூடச் சேர்த்துக்கொண்டு சொல்லவேண்டாம் நானிந்தப் பூவாசை பொன்னாசை பெண்ணாசையை விரும்பினவனல்ல நீரிதை மறந்து போம், இந்தப் பிரபஞ்சமானது நல்வினை தீவினைகளின் போகமாய் மருவி இருப்பது. நல்வினையாவது தானம் தருமம் பிரருபகாரம் பரோபகாரம் இன்னம்பற்பல சற்காரியங்க ளுண்டாயிருக்கின்றது. தீவினையாவது பொய், கொலை, களவு, கள், காமம் இவைகள் மயமாயிருப்பதுதான் இருவினை. இவைகளில் நல்வினைகளைச் செய்தவன் இங்கும் அங்கும் வீடுவாசம் மண், மனை, பெண்டுபிள்ளை, பண்டுபெதார்த்தம், பாக்கியம், யோக்கியம், சத்தியவாக்கியங்களினாற் சிலாக்கியம், விமானம் தேவ சமானம், வெகுமானம், சுகமானம் விதானம் நிதானத்துடன் உலகாதிபனாகி கலைமதிபோடிருப்பான் இந்தவாழ்வினால் அதிசெயமென்ன, இவனடையப்போகிற லாபமென்ன, தீவினையைச் செய்தவன் பாபியாய், தரித்திரனாய், நோய்பிடித்து உண்ணல் உடுக்கல், படுக்கை, கொடுக்கை யற்று வீடுவாசலில்லாமல் கைகால் குறைந்து கவலை மேலிடுவான். அதனாற் குறைவென்ன செல்வத்தினாற் சுகமென்ன, கண்டது. எதுமகிழ்ந்தது இன்மையால் எது துக்கப்பட்டது, எது துயரங்கொண்டது எண்ணிப்பார்க்குமிடத்தில் இதுவும் பாவமே, அதுவும் பாவமே, ஒருமரம், இரண்டு பாளை, ஒன்று நங்கு; ஒன்று கள்ளு. அறிவாளிகட்க்கு சம்பந்த விசேடத்தால் இரண்டு மொன்றே; அறிவில்லாத பேர்கட்க்கு அது வேறு, இது வேறுதான். சுகத்தினால் நன்மையும். அசுகத்தினால் தீமையுமில்லை. இவனுடைய பேதைமனமானது பிரமாதத்திற் கொண்டுபோய்விட்டது. நினைப்பினால் நெடுந்தூரம்போன இவன் திரும்பிவந்து எப்படி தேறுவானோ வென்றால் சாஸ்திரக்கியானத்தைச்

சார்ந்து, சாதுசங்கமப் பழக்கத்தினு லோர்ந்து சங்கதி இன்ன தென்னத் தேர்ந்து அனுபவத்தாலறிந்து அறிவாளிகட்கு சுகதுக்கமான வினை இரண்டும், செம்பொன்விலங்கு கரும்பொன்விலங்குதான், பிறவிக்கிடமே, ஐயோ ஆத்மா கடைத்தேறப்போகிற வழியதல்லவே, தனுகரண புவன போகங்களுக்குரிய பல்லக்குக், குதிரை, இரதங்களில் பவனிவந்தா லென்ன, பாரெல்லாந் திரிந்து நடந்துவந்தாலென்ன இருவருக்கும் துன்ப இன்பமொன்றே ஒருபிள்ளை துன்பப்படுகிறான் ஒருபிள்ளை இன்பப்படுகிறான் இந்த இரண்டு பிள்ளைகளையுந் தாய் தகப்பன் பார்த்து சந்தோஷப்படுவார்களா இல்லையா சர்வபூதாத்மாவிலும் நின்ற ஈஸ்வரன் எல்லாரிடத்திலுமிருந்து பார்ப்பது நிசமா அபத்தமா, நிசமானால், பிள்ளைகளிற் பேதம் வரவேண்டிய தென்ன, பெற்றவர்களுக்குப் பிள்ளைகளொன்றே, சகலாத்மகோடிகளுந் தன்னை நினைத்துப் புசிக்கும்படி ஏற்படுத்தி இருக்கின்றார். அந்தப் புசிப்பு எப்படியும் இவனுக்குக் கிடைக்கக் காத்திருக்கின்றது. பிறத்தல், இறத்தல், அனுபவித்தல், ஆநந்தப்படுதல், எல்லாம் இருவினைக் காளராகிய இருவருக்குஞ் சரியே, இப்படிக்கிருக்க ஈஸ்வரத்தியானம் பண்ணி விதியையனுசரித்து நடவாமல் வெகுபேர் கெட்டுப்போகின்றார்கள். மனோ[illegible]ல் துக்கத்தைவருவித்துக் கொண்டு வாடுகிறார்கள், வீ[illegible] வாழ்வென்றும், தாழ்வென்றும் பிராந்தியுட்கொண்டு மெய்ம்மயங்கி வீழ்கின்றார்கள். பிராந்தி மயக்கந்தீர்ந்தால் மாறிப்போமல்லவோ, ஞானமுண்டாகுமே, நாம் இன்னான் நமக்கு வீடு இன்ன இடத்தில் நாம் இன்னதினால் முழுகிப்போயிருந்தோம் நம்மை இன்னான் கைகொடுத்து அழைத்துவந்து நல்ல இடஞ் சேர்த்தான், இனிமேல் வீட்டுக்குப் போகலாம் அல்லை ஒருவருந் துணையில்லா விட்டாலும் ஒரு பக்கத்தில் வீழ்ந்து கிடந்தால் சிலநேரத்தில் தெளிந்துபோம். இது போல மோனமாய் ஒரு மூலையில் விழுந்து கிடந்தாலும் தான் கொண்ட பிராந்திமயக்கம் விண்டுபோய்விடும். அல்லது, அகன்று போய்விடும். கடைசியில் பசிக்கு ஆன்மா உடலுடன் காணப்போகிறது உணவு; மற்ற தென்னவிருந்தாலும் பயனில்லை யென்று ஞான சூக்குமமறிந்து, ஈஸ்வரபக்திபண்ணி, எந்தவேளையிலுஞ் சிந்தை தெளிந்து, களிம்பைமாற்றிக் கண்டுணராமல் ஏன் வீணிற் கெட்டுப் போகின்றார்கள் நல்வினை தீவினை சம்பந்தமான விலகாத விலங்கினது பிறப்பு மாறாமல் வந்துக் கொண்டிருக்கும். இந்த இரு வினைக

ளில் நல்வினை நல்லதென்றும் தீவினை தீயதென்று மகிழ்வார்கள். இவ்விரண்டு வினைக்கும் வித்தியாச மென்னவென்றால்; இரண்டும் விலங்குதான்; விலங்கானாலும், நல்வினை செம்பொன்விலங்கு. தீவினையானது கரும்பொன்விலங்கு இவ்வளவு தாரதம்மிய முடையது இதனுடைய தன்மையறியாமல் உயிர்வர்க்கங்கள் நல்வினை வேணு மென்று மயங்கி முயங்கி தானதருமம் பண்ணினால் சுகம் பெறலா மென்ன சஞ்சலப்பட்டு அலைகின்றார்கள், ஆனால், கீர்த்தியுண்டு, பெருமைபெறலாகும். அப்போது, பூஷணை உடலுக்கல்லது, உயிருக் கொன்றுமில்லை. இப்படிப்பட்ட பெருமையும் புண்ணியமும், வாழ்வும், மேன்பாடும், எனக்குவேண்டாம் சீக்கிரத்தில் ஜனன மரணவேதை யொழிந்து மோட்ச மடையவேண்டும், இதற்கு வேண்டிய முத்திசொரூப லட்சண மெல்லாம் மொழிந்து, எனக்கு மோக்ஷங்கிடைக்கும் ஆக்கத்தைத் தேடுமையா வென்று சுகப்பிரம்மஞ் சொல்ல வேதவியாசர் ஓ மெய்யனே ஒரு திருஷ்டாந்தமாக ஜனக மகாராஜன் கதை சொல்லுகிறேன்கேள்.

## 47. சுகருக்கு வியாசர் சொல்லுகின்ற ஜனகராஜன் கதை.

விதேகதேசத்திற் கலந்த மிதுலா புரியில் ஜனகமகாராஜன் துரைத்தனம் பண்ணிக்கொண்டு பத்தினி புத்திர மித்திரதேகபந்தம் பற்றியதைப் போலிருந்து, பிள்ளைப் பூச்சி போலும், புளியம் பழத்தோடு போலும், பொருந்தி, மாயைய யெ மரத்தை வேர்களைந்து வெட்டி, அது மறுபடியும் கிளைத்து எட்டிப்பாராம லழியும் படியாய் விரதாக்கினி கொளுத்தினவனே ஜீவன் முத்தன் அவனே பிரமசொரூபன் உலகத்தோடொத்து வாழ்பவர்களி லொருவன்; கலைமுற்றுங் கற்று கற்றாரோடிணங்கி கல்லாருடன் கலந்து காறுபேர் நடக்கிற மார்க்கத்தின்படிக்கு நடந்து லோகமாயைக் குட்படாமல் நீறுபூத்த நெருப்புப்போ லிருக்கிறான். அவனுக்கொப்பானவர்களில்லை, அப்பேர்ப்பட்ட பக்குவனாகி யடங்கி யிருப்பவனிடத்திற்கு நீ போவாயாகில் உன் மனதிலிருக்கிற சந்தேகங்களை யெல்லா மாற்றிவைப்பான் நீ அவரை நாடிப்போகிறபோது பிரபஞ்சத்திற்கு வேறுபாடாய்ப் போகாமல் ஞானத்தை யொளித்து, லோகத்தை யனுசரித்து, உலகிலுள்ள சாதாரணமான ஒருவனைப்போல் போய்ப்பாரென்று வியாச

ருரைத்தார். விஞ்ஞான வீறுபெற்ற சுகயோகியும் தன் பிதாவைப் பணிந்து விடை பெற்றுக்கொண்டு சென்று தேவதைகள் கொண்டாடப்பட்ட பரதகண்டத்திற் புகுந்து, வானமளாவிய மலைகளும், காசினி நிறைந்த காடுகளும், தண்ணீர் வறண்ட சவுட்டுப் பூமியான பாலை நிலங்களும், முல்லை முதலிய மேடும், பள்ளமுங் கடந்து தாமரை மலர்களானது ஸ்திரீகளுடைய முகங்களுக் கீடுபடாமல் வெட்கித் தண்ணீரில் ஒற்றைக்காலில் நின்று, தவமிழக்கின்ற கோலமும், தேன்பெருகி அருவியிருக்கும் ஆறுகளிலோடி, மருதநிலத்தை வளர்க்கும்படியாகிய வளமும், மண் ணரம்பைகள், விண் ணரம்பையரிடத்தில் மருவியாடும் வண்மையும் மந்திகள் வேர் பலாப்பழத்தை மகிழ்ந்துண்ணும் தன்மையுமுடைய விதேகநாட்டின் எல்லையளவைக் கண்டு மகிழ்ந்துசென்று மிதுலாபுரியைச் சார்ந்தபோது, பரதநாட்டியங்களும், சுரக்கியானங்களும், தாளங்களுக்கிணங்கிய, மேளங்களும் வீணைவேணு, தம்பூர், முதலாகிய, கருவிகளைக் கொண்டு சங்கீதம் பாடுகின்ற சரசமாதர்களும், சகோரயாழ், மகதியாழ், பேரியாழ், செங்கோட்டியாழ், வாசிக்கின்ற புருஷருடன், சரசசல்லாப, உல்லாசங்களை யனுபவித்திருக்கின்ற ஸ்திரீகளும் நாயகனுடன் கலந்து பாடுகின்றவர்களும், கலவியிற் புரண்டு ஊடுகிறவர்களும் ஊடல் தவிர்ந்து கூடுகிறவர்களும், கொஞ்சுகிறவர்களு மன்மதன் கணையால் வாடி இருவருயிரும், ஒன்றுயணைந்த பேரும் இத்தன்மையானவளங்கள் பலவாயிருக்கின்ற சின்னங்களைக் கண்டுங்காணுதவர்போல் தலைகுனிந்து சம்பிரமங்களைக் கேட்டு, மாடமாளிகை கூடகோபுர மருவிய தெருவீதி கடந்து, மிதுலைக்குட் பிரவேசித்து அங்கே வாழை, கமுகு, கரும்பு, இளநீர், பலா, மா, தாழை, மகரதோரணம் கொடி, மேல் விநோதம் இவைகளெல்லாம் அலங்கரித் திருக்கின்ற, வீதிகளின் விநோதங்களையும் பொற்குடங்களாஸ் பூரணகும்பம் இழைத்திருக்கின்ற மேடை வேதிகைகளின் சம்பிரமங்களையும், யானை, குதிரை, தேர், பதாதி, முதலியவைகணெருங்கிய பெருக்கமும், நவரத்தினங்களாற் செய்த குன்றுபோல் சிங்கார மண்டபங்களும், வசந்த மண்டபங்களும், ஆயிரக்கா லுயர்ந்த மண்டபங்களும், ஆமை, காடை, கோழி, கவுதாரி கடாமுதலியவைகள், சண்டை போட விட்டிருக்கிற சந்தடியும், அன்னம், மயில் கிள்ளை, குயில், மான்குட்டி, மாடப்புரு முதலிய பட்சிகூட்டங்களும், இராஜஸ்திரீகள், முதலாகிய மற்ற தாதிமார்களும் போற்றுகின்ற அம் மகாராஜ

னைத் துதிக்கும் பந்துமுதலிய ஆரவாரமும் இன்னமுள்ள சம்பிரமங்களெல்லாவற்றையுங் கண்டு களித்து சித்திர விசித்திரமுள்ள இரத்தின இராஜசிங்காசனக் கொலுக்கூடத்திற்கு வந்தார். அவ்விடத்திற் காவலாயிருந்த துவாரபாலகர்கண்டு ஆரையா போகிறது நில்லுமென்ற தட்டினார்கள். அதைக்கேட்ட ஞானவித்தாகிய சுகரானவர் சந்தோஷத்தினால் வாழ்த்தினாலும் தீவினைவசத்தாற்றிட்டினாலும் சமமாயனுபவிக்கப்பட்டசாது அவ்விடத்திலேயே அசையாமனின்றுவிட்டார். உடனே துவாரபாலகர் போய் ஐயா ஆரோ ஒருவர் வந்திருக்கின்றாரென்று ஜனகராஜனுக்குத் தெரிவித்தார்கள். இப்படி மகானுபாவராகிய சுகப்பிரம்மமே வந்தாரென் றறிந்துக்கொண்டு, இன்று நமக்கு நல்லகாலமென்று கண்ணீருதிர்த்துக் களித்து பக்கத்திலிருக்கப்பட்ட மந்திரிகள் சாஸ்திரிகளுடனே எழுந்து எதிர்சென்று கண்டு,பிரதக்ஷணநமஸ்காரம் பண்ணிமிகுந்த தேவதா வுபசாரத்துடன் அழைத்துவந்து ஆசனத்திலிருக்கச் செய்து, அர்க்கிய பாத்தியம். ஆசமன்னியம் பாதோதகம், வஸ்திராலங்கிர்தம் புட்பம் அட்சதை, தூபம், தீபம், நைவேத்தியம், சோடசபூசைகளுட நடத்தி சுவாமி தேவரீர் இங்கெழுந் தருளிய காரணமியாதோ தெரிவிக்க விரும்புகிறே னென்று தெண்டனிட்டிருக்க, சுகபிரம்மரிஷி சொல்லுகின்றார், என்றந்தை வேதவியாசர் உம்மிடத்திற்குப் போகச்சொன்னார். என்னத்திற்காக வென்றால் இறப்புப் பிறப்பு இல்லாத பேரானந்த ஞானம் உம்மா லறிந்துக் கொள்ளுவதற்காக வென்று தெரிவிக்கவும், அந்த வார்த்தையைக் கேட்ட ஜனகன் பயந்து மஹா ரிஷிகளுக் கெல்லாம் மாயையின் லட்சணத்தை வகுத்துச்சொல்லி மாயைகடந்து அப்பாற் கரையேறுமாற்கமுங் காட்டாநின்ற மகானுபாவர் தூய்மைக்குத் தூய்மையானவர் வேதவித்தாக விளங்கி வியாசப்பிர்மம் அவரறியாததும் ஒன்றிருக்கின்றதோ ஆ? என்னிடத்திற் கிருபைவைத்து மாயையின் புணர்ப்பையும் மறப்பையும் ஜனனமரணமற்ற திடஞானத்தையும் போதித்து ஆத்மதெரிசன மாகும்படி செய்தருளி தந்மியனுக்கிவைத்த சர்வலோக நாயகன் தம்மிடமாகத் தெரிந்துக்கொண்டதை மறந்துவிடப் போகிறேனென்று, பழம் பாடம் பார்க்கிறுப்போலத் தூண்டினாரோ?

ஐயா, பொய்யாகிய உலகமென்று உமது தந்தையினிடத்து மெய்யாகிய இரகசியம் படித்துக்கொண்டு கிருதார்த்தனானேன். அவரெனக்கு உபதேசம்பண்ணி இருக்கிறபடிக்கு, தலையானஞான

மார்க்கத்தை உமக்குச்சாற்றுகிறேன். அதனுடைய கிரமங்களெல்லாம் கேட்டருளும். கர்த்தனுடைய காதலனே என்று செல்லத் தொடங்கினர்.

## 48. ஜனகராஜன் சுகப்பிர்மருஷிக்கு ஞானேபதேசஞ் செய்தல்,

சேளும் சுகப்பிரமசோதியே உலகத்தில் பிராமணுள், ஆசிரம நான்கையும் அனுசரிக்க வேண்டும். அதில் முதலாவ தாசிரமம் வேதாத்தியயனம் பண்ணப்பட்ட உபாத்தியாயரை வணங்கி சிஷ்ய பணிவிடைபுரிந்து வழிபட்டுசாங்கோபாங்கமாய் வேதம்படித்துக் கொள்ளல்வேண்டும். பிராமணர்விடுகளில் பிட்சைவாங்கி சாப்பிட வேணும். எண்ணெய் இட்டுக்கொண்டு ஸ்நானஞ்செய்யப்படாது: தரையிலே படுக்கவேணும். சந்தனுதி வாசனை திரவியம் தாம்பூலமாகாது. கோவணத்தனுய் ஈஸ்வரத்தியானம் என்னேரமு மிருக்கவேணும். இரண்டாவதாசிரமம், நற்குண நற்செய்கையையுடைய, பொற்குடிப்பிறப்பாகிய பெண்ணை விவாகம் பண்ணிக்கொண்டு, அவளுடன் மருவிசகலதருமங்களையுந் தாட்சி இல்லாமற்செய்து பெரியவர்களுக்குத் தொண்டு புரிந்து புத்திரப்பேறுற்று வருந்தி விருந்தினரைப் பரிந்து உபசரித்து, விரதபின்னம் வராமல் அன்னமருத்தி சத்திய தருமம் நித்திய மென்றிருக்கத் தக்கது. மூன்றுவது ஆசிரமம் சந்ததியை இல்லறவாழ்க்கையிலிருத்தி பந்தபாசங்களையறுத்து நாட்டை யகன்று காட்டிட மருவி நட்டம் பிரியாமலிருந்து மனேதிடமாய் தபசு புரிந்து தியானஞ் செலுத்துதலாகும். இந்தவானப் பிரஸ்தத்தில் மருவியிருந்து இதனுடைய மார்க்கமறிந்து மனந்துறந்து, நான்காவது ஆசிரமமாகிய படிமேலேறி மோட்ச முடியேறுவார்கள். இப்படி வரன்முறைதப்பாம லனுசரித்து ஒவ்வொன்றின் பலனையு முணர்ந்து ஞானம் பிறக்கவேணும். இஞ்ஞான விஞ்ஞானம் அஞ்ஞானத்தை அடுக்கடுக்காயறுத்துப் படியேறினவர்கள் பாக்கியவான்கள் என்று ஜனகர்சொல்ல, அதைச் சுகப்பிரமங்கேட்டு நிக்கடைக்கோலில்தேகம் தேகியாயிருந்த தீப்போன்ற சுகப்பிரமயோகி இராஜனைக்குறித்து ஓ, ஜனகனே வேதவிதிப்பிரகாரம் ஒவ்வொரு ஆசிரமத்துறையையும் அனுசரித்து அந்தந்தவித்தியாசங்களைக்கண்டு வெறுப்படைந்து

அதியாச்சிரமஞ் சேர்ந்து அதனால்தான் ஞானம் வரவேண்டுமோ? ஒருவேளை நல்லபுண்ணியவசத்தால் முதலாச்சிரமத்திலேயே ஞானம்வந்துவிட்டால் அது பிரயோசனப்படாதோ? வாராதென்கிற வழக்குண்டோ? நல்லது நல்வினைப்பயனாற் கிடைத்ததானால் மற்ற மூன்றாச்சிரமத்தையும் அனுசரிக்க வேண்டி முறையில்லையே, இதனுடையதிறத்தைச் செப்புமையாவென்று சுகர்கேட்க, ஜனகவரோதயன், சுவாமி தேவரீர் திருவாய் மலர்ந்தபடியே ஆச்சிரமதருமங்களை அனுசரித்துத் தேறாமல் பிறவிஞானம் பெற்றிருக்கப்பட்ட பெரியோர்களுமுண்டு; அவ்வாறு நேரிட்டிருந்தபோதிலும், வேதத்தில் விதித்தவண்ணம் ஆசிரமநான்கையுங் கைவிடாம லனுசரிப்பார்கள். ஞானம் வந்தவர்கள் நான்காச்சிரமத்தையுந் தழுவவேண்டியதென்னவென்னில், தாங்கள் படியேறி விட்டோமென்றும் பற்றில்லாத ஞானவான்களென்றும் அலட்சியமாய் விட்டுவிட்டால் அகப்பற்று புறப்பற்றையுடைய அக்கியானிகள் தவத்தை அனுஷ்டிக்க மாட்டாத சோம்பலுடையவர்கள். பெரியோர்களெல்லாம் இந்தஆச்சிரமத்திற் பிரயோசன மில்லையென்று விட்டுவிட்டார்களே பலனிருந்தால் விட்டுவிடுவார்களோ, இல்லை யில்லை நாமேன் அந்தநான் காச்சிரமத்தையுங் காட்டிக்கொண்டிருக்கவேண்டுமென்று விட்டுவிட்டு சீக்கிரம் கெட்டுப்போவார்கள். சர்வேஸ்வரன் சகல ஆத்ம கோடிகளுங் கடைத்தேறவேண்டுமென்று மோட்ச வீட்டுக்கு ஏறிப்போகின்ற வழியாய் சரியை, கிரியை, யோகம். ஞானம், இதற்கு முறையே பிரமச்சாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன் சந்நியாசன், என்று சோபானக்கிரமமாய் ஏற்படுத்தி வைத்திருக்கின்றார். ஆகையால் முடிந்தஞானம் பெற்றவர்களும் அனுசத்துத் தீரவேணும். அப்படிக் கனுசரியாமல் விடும் பெரியோரால், உலகங்கெடும். அதனாற்பாவம் படும். ஆசைவிட்ட பெரியோரைக் கொண்டாடுகின்ற ஈஸ்வரனுக்கும் அபராதியாவன் ஞானமுதல்வர்களுக்கு அவசியமில்லாமற் போனாலும்' உலகத்தாருக்காக தான் நடந்துகாட்டி சிஷ்டாசாரத் தன்மையாய் செய்விக்கவேண்டும். அதைக்கண்ட பூலோகத்தார் ஓ, பெரியோர்களெல்லாம் அனுஷ்டிக்கின்றார்களே யென்று பேய் போல் விழுந்து பிடிவாதத்தினாற்றேறுவார்கள். சகலமுந் தெரிந்த தாணுவே, உமக்குநான்சொல்லவேண்டிய தென்ன? வேதத்திற்குரிய தேவரீரே வேதவிதியை இகழாமல் மூன்றாசிரமத்தை யனுசரித்து படிப்படியா ஏறி நான்காவது ஆசிரமம் நன்னெறி. நிலையிலிருப்பதே உத்தமமென்று ஜனகர் நவில, சுகப்பிரம்மயோகி சொல்லுகின்றார்,

தலைமைஞானம் பெற்ற தபோதனர்கள் இவ்வுலகத்தி லிருக்குங் காலத்தில் தங்களுடலை எவ்விதமாய் வைத்துக்கொண்டிருப்பார்கள். அந்த முறைமையை எனக்கறையவேண்டுமென்ன, காமக்குரோதாதி அறுவகைப் பகைகளையுங்களைந்த இறையாகிய ஜனகர் இசைக்கின்றார்,

## 49. ஞானிகள் உடலைவைத்திருக்கும் நிலை.

கேளும் சுகப்பிரம்மரிஷியே! உண்மை ஞானமுணர்ந்த உத்தமர்கள் எந்த ஆசிரமத்திலிருந்தாலும், உலகத்தை இந்திரஜாலமாகவும் கனவுகண்டதைபோலு மனதிலுன்னி ஒருயிரைக் கொல்லார்கள். இடையூறு செய்யார்கள். குற்றங்களைத் தேடார்கள். குறைகளெவருக்கும் புரியார்கள். கர்மிகளைப்போல் பந்தங்களிற் பட்டுழலார்கள், பற்றுவையார்கள். மனமும்வாக்கும் வேறுபடார்கள். உள்ளும்புறம்பும் ஒத்திருப்பார்கள். எல்லா உயிரிடத்திலும் பிரியங்கொண்டு ஒருமைப் பட்டிருப்பார்கள், ஒரு பதார்த்தத்தின்பேரில் விருப்பும் மற்றொருபதார்த்தத்தின்பேரில் வெறுப்பும் வைக்கமாட்டார்கள். உபகாரம் பண்ணினவர்களென்று பட்சமும் அபகாரஞ்செய்தவர்களென்று அபட்சமும் நினையார்கள். ஒருவர்மேற் கோபமும் இருவொருவர் மேற்சந்தோஷமும் காட்டார்கள், ஒருவேளை நினைப்பும் பின்னொருவேளை மறப்புமாயிரார்கள். என்றைக்கும் ஒரே நினைப்பும் ஒரே சீருமாயுறுவார்கள். இறப்புப்பிறப்பு என்கிற அறியாமையை அகற்றி ஈன்னடக்கை யுடையவர்களை மெய்ஞ்ஞானிகளென் றறிந்து விளம்புவது தகும். இன்னஞ் சொல்லுகிறேன் கரும்பொன்வேறு, செம்பொன்வேறென் றெண்ணார்கள் கரும்பும், வேம்பும், சமமாய்க்கொள்வார்கள். மகமேருவையும், சிறிய துரும்பையும் சரியென்று மதிப்பார்கள். அதி தீவரபக்குவமாய் நிர்மலசுத்த பரிபக்குவமாய் அரும்பாய், மொக்காய், அலராய், மலராயிருக்கப்பட்ட, மோட்ச வீட்டைக்கண்டு அதனது முடிவைத்தெரிந்தவர்கள் பெரியோர்கள் இதுவுமல்லாமல், ஒருவர் திட்டினாலும், தோத்திரம் பண்ணினாலும், புகழ்ந்தாலும். இகழ்ந்தாலும் அடித்தாலும், இடித்தாலும், சீறினாலும், தூறினாலும், உடலுக்கேயன்றி உயிருக் கொன்றுமில்லை யென்று ஐயோ ஏன்பாவத்துக்காளாகிறாரென்று இரக்கமுற்று கோபங்கொள்ளாதிருப்பார்கள். லௌகிகத்திலழுந்திமயங்கார்கள். தவப்பிரம்மானந்தத்திற் றங்கியிருப்பார்கள். இப்பேர்ப்

பட்டநல்ல ஆத்மாக்கள் முன்சொல்லியநான்காசிரமத்தை நண்ணி இருந்தாலும், நாடாதிருந்தாலும், அதனால் அவர்களுக்கு யாதொரு குற்றமுமில்லை. அவர்களிச்சா சுதந்தரராள் ஓ சுகப்பிரம்மமே! இது தான் ஞானவரம்பு, இதற்காதாரம் மோனவரம்பு. ஞானவான்கள், தேகத்தை எப்படிவைத் திருப்பார்களென்று நீர்கேட்ட படியால். இப்போதுரைத்த இயற்கையின்படியே தேகாபிமானஞ் சிதைத்து உடற்சார்பில்லாமல் தேகம் பிராரத்துவ கனமபோகத்தைப் புசிப்ப தற் கெடுத்ததென்று பூர்த்தியாய்த் தெரிந்துக்கொண்டு உடலுக்கு பலம் இளப்பம் என்னவந்தபோதிலும் தன்னபிமான மென்பதில் லாமல் புளியம்பழத்தின் ஓடுபோலும் தாமரையிலை தண்ணீர்போ லும் ஒட்டாமனின்று, எல்லாவற்றிற்கும் ஆதாரம் உடலென்று காட்டி உண்மை ஞானத்தால் பந்தமித்திரரை நீயாரோ நானாரோ வென்று விட்டு மீந்திருப்பார்கள். இனிமேல் உன்றந்தையாகிய வியாசரிடத்திற்குச் சென்று தன்னைத்தானறியுந் தன்மையை விசா ரித்து சம்பந்தமில்லாமல் தனியே இருப்பது தகுதியென்று ஜனக மஹாராஜன் சொல்லி சரணம் புகுந்தபோது, பிரம்மருட திபமாகிய சுகயோகி யானவர் கிருபாநோக்கமாக ஆசீர்வதித்து ஆசாரியபக்தி செலுத்தி சிலவு வாங்கிக்கொண்டு தந்தையாகிய வேதவியாசரிடத் திற்கு வந்து பணிந்து, ஜனகரிடத்திறபோய்க் கண்டதுமுதல் இப் போதிவ்விடத்தில் நின்றதுவரைக்கும் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லி தான் கேள்விப்பட்டுவந்த ஞானசாஸ்திரத்தி னலத்தைச் சொன்ன சுகயோகியை வேதவியாசர் குளிர்ந்த முகமாய்க் காருண் யப் பார்வையுடன் கடாட்சித்து, அப்பா ஞானசாஸ்திரங்க ளெல் லாம் நன்றாயறிந்துக்கொண்டாய். நீ இங்கேதானே இருவென்று சொல்லவும் அவ்வாறே தகப்பனுடைய சீடர்களாகிய சுமந்தர், பயி லவர், வைசம்பாயனர், இம்மூவருடனிருந்து செயல்வேறு, சிந்தனை வேறில்லாமல் வேதமோதிக் கொண்டிருந்தார்கள். இப்படி இருக் கிற நாளையில் அருமையான வேதசாஸ்திர புராணங்களை எல்லாம் ஐயமறப் படித்திருக்கின்ற சீடர்கள் மூன்றுபேரும் ஆசாரியருக்குப் பிரதக்ஷணம்பண்ணி நமஸ்கரித்து சிரத்திற்கரத்தைக் குவித்து சுவாமி தேவரீரிடத்திற் கற்றுக்கொண்ட வேதமுதலியவற்றை தங் களுடைய போதனை சக்திப்பிரகாரம் பூலோகத்தி லிருக்கின்றவர்க ளுக்கெல்லாஞ் சொல்லிவைத்தால் லோகோபகார மாயிருக்கும். தங்களுக்கும் பிரதிஷ்டையுண்டாம் ஆதலால், அனுக்கிரகம் பண் ணவேணும் ஐயா வென்று வணங்கிக் கூறவும்; மலரகிதான வேத

வியாசர் நகைத்து உலகத்திலுள்ள யாவருங் கடைத்தேறும்படியாக மிகவும் நல்லவார்த்தையைச் சொன்னீர்கள், இது முக்கியஞ்செய்ய வேண்டிய காரியந்தான், மேலும் நல்ல நூல்களைக்கற்றவன் தன்னைப்போல் பல்லோரும் நல்லவராகப்போதித்து வைக்கவேணும், அப்படிக்குச் சொல்லிவையாதபேர் படியாத மூடரிடத்திற் பயன்பட்டு அவர்கள்செய்த தவங்கெட்டு குறுகிக் குன்றுவார்களென்றிருக்கின்றதை நீங்களோதி யுணர்ந்திலீரோ; அதற்கொரு திருஷ்டாந்தம் பாருங்கள் பஞ்சப் பிரணவ மந்திரமாகிய மௌனத்திலிருக்கின்ற ரிஷிகள், மோட்சமடையும்போது தன்னைச் சூழ்ந்த சகலருங் கதிபெறவேணுமென்று உபதேசசித்துப் போகிறார்கள், குற்றமற்றஞான இருதயர்களாகையால் தன்னைப்போல் மற்றையவரையும் பார்க்கிறார்கள். நீங்களுமப்படியே போதித்து உபசரிக்கவேண்டியது முறைமையே, என்று புகன்றவேத வியாசரைப்பார்த்து அப்படிக்குத் தருமமிருந்தாலுந் தங்களுடைய பேரருளைப் பெருந்துணையாகக் கொண்டுபோனால் எங்களுக்குப் பெருமையுண்டு ஆதலால் விடை கொடுங்களென்று கேட்டார்கள்.

அச்சொல்லின் பொருளை யறிந்த வியாசர் மனமகிழ்ந்து ஓ அன்பர்களே எல்லா நூல்களையுஞ் சாம்பிரதாயமாய்க் கற்று என்னிலுஞ் சிறந்த கீர்த்திபெற்றிருந்தும் நாமேபோய் உலகத்திற் சொல்லிவைப்போமென்று வித்தியாகர்வம் படையாமல் ஆசாரியருடைய அருளைப்பெற்று அப்பால் போதிக்கவேணுமென்கிற அன்புடனே இருப்பீர்களாகையால்; நீங்கள்தான் எனக்கு தகுந்த பிள்ளைகள், இப்பொழுதுதான் சந்தோஷப் பட்டேன். என்னிடத்தில் கற்ற நூலும் கேட்டகேள்வியுஞ் சிறக்கக்கடவது என்று புகன்று மூன்று பிள்ளைகளையும் எடுத்து மார்பிலணைத்து, முத்தமிட்டு, சுகனைப்பார்க்கிலும் அதிகமென்று சொந்த பந்ததொந்தங் காட்டி, பூலோகத்தில், வேதங்களை விரித்துரைக்கும்படிக்கு அனுப்பிவிட்டு அகந்தையற்றிருக்கும் வேதவியாசர் யோகியாகிய தன் குமாரனுடனே பர்ணசாலையிலிருந்தார். அப்போது, சரிகமபதனிச வென்னும் இசையை யாழிலேற்றி வாசிக்கப்பட்ட நாரதர்வந்தார் அவரைக் கண்டு பெரியோர்களுக்குச் செய்யவேண்டுவன வெல்லாம் பிசகாமற் செய்து பூசித்த வியாசரை நாரதர் நோக்கி சுவாமி வேதவியாசமூர்த்தியே நானிந்த வனத்திற்கு வரும்போதெல்லாம் சப்தமேக முழக்கம்போலும் சமுத்திர இரைச்சல் போலும் சற்றேனு மோயாமல் சார்வதா முழங்கிக்கொண்டிருக்கின்ற வேதகோஷ்டம் இப்

போது தங்களாசிரமத்தில் முழங்காம லிருப்பதற்குக் காரண மெ ன்ன? உம்மிடத்தில் வேறொன்றி இருக்கவேண்டுமே, தேவாள் வேத வித்தே இது என்ன நிமித்தத்தில் விட்டிருக்கின்றது வேதவியாச ரென்று மிகுந்த பெயரைப் பொருந்திய வித்தகனே சொல்லுமெ ன்று வினவ, வியாசர் சொல்லுகின்றார். கர்மபூமியிலுள்ள பிராமண ருக்கு வேதமோதிவிக்கும் படிக்கு என்னிடத்தில் வாசித்த சிஷர் களை அனுப்பி வைத்தேன், இவ்விடத்திற் படிப்பவரொருவரு மில் லாமையால் வேதம் ஓதுகிற சந்தடியற்றிருக்கிற தென்றுபராசர் குமாரர் வேதவியாசர் பேசிய பின்னும் ஓய் பெரியவரே, உம்மு டைய கடாட்ச வீட்சண்ணியத்தினால் என் பிள்ளையாகிய சுகனும் நானும் பூமியெல்லாந் திரிந்து வண்டுபோற் சுழன்று வேதங்களைப் போதிக்கப் போகிறோம், அப்படிக்குப் பிரயாசை எடுத்துக்கொள் ளாவிட்டால் வேதம்பரவுகிறதா யிருக்கவில்லை யென்று சொன்னார். அந்தவார்த்தை கேட்ட நாரதர் அப்பிரகாரமே சொல்லிப் போதித் துத்திரிய வேண்டியது முறைமைதானென்று விடை பெற்றுக் கொ ண்டு போய்விட்டார். இப்பால் வியாசர் சுகயோகியுடன் கடல்சூழ் ந்த காசினியை வலமாகத்திரிந்து தன்பிள்ளைக்கும் பூமியிலுள்ள பிள்ளைகட்கும் போதித்து, பிள்ளை ஆகாசமார்க்கத்திலும் தான் பூமியிலும் வேதாத்தியனம் பண்ணிவைத்து சாங்கோபாங்கமாக நான்குவேதமும் சுகயோகிக்கு வரும்படியாகச் செய்து வேதாந்த இரகசியமும் விளம்பி யருளினார். பிற்பாடு ஆகாயகங்கையில் ஸ்தா னமாட வேணுமென்று பிள்ளையை ஒருபக்கத்தில் நிற்கவைத்து ஸ்நானஞ் செய்யப் போனார் இப்பால், சுகப்பிரமம் ஒரு சுசியாகிய பூமியிலிருந்து வேதபாராயணம் பண்ணும்போது சிவந்த சடாமகுட தாரியாகிய நாரதர் வந்து சுகனைப்பார்த்து அப்பா நீ பூரண சப்த மாய் தொனியாய் நாதமயமாய் தெலளிதமாய் வேதமோதுவதைக் கேட்டு உன்னைப் பார்க்கவந்தேன், மிகவுஞ் சந்தோஷமடைந்தேன், ஆனந்தமாயிற்று உனக்கு வேண்டிய காரியத்தை விரும்பிக் கேட் டால் நான் கொடுக்கிறேனென்றார். சுவாமி எனக்கு வேறொன்றும் வேண்டாம் என்னை இன்னானென்றறிந்து அப்பால் என்னை என்ப தும் யானென்பதும் அறிந்தவ னென்பதும் அறியத்தக்க தென்ப தும் அற்று சுகமுற்றிருக்கும் வரங் கொடுக்க வேண்டுமென்று வாழ்த்தினன். அதைக்கேட்ட நாரதர் இவருக்கு ஞானம் போதிக்க வேண்டுமென்று தன்மனதில் நினைத்து பூருவகாலம் பார்த்திருந்த

பதப் பொருளைக் குறித்துக் கேட்டபடியால் அப்பொருளுக்குரிய வன் இவனே யென்று வேதமுடிவின் சாரத்தை விளம்பத் தொடக்கினர்.

## 50. நாரதர் சுகருக்கு வேதத்தின் முடிவாகிய ஞானோபதேசஞ் செய்தல்.

வேதாந்த சாரமறிவதற்கு மிகு மோகியாகிய சுகயோகியே கேளும், வருணாசிரமம் நான்கு, அவை யாதென்னில், பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, ரென்பது, இந்நான்கினுடைய பேதமாவது அஞ்ஞானப் போர்வையல்லது வேறில்லை உயர்ந்தசாதி இதுவென்றும் அதுவே முக்கியமென்றும் தாழ்ந்த சாதி இதுவென்றும் இதுவே தாழ்மையொன்றும் இல்லை அஞ்ஞானமகன்ற விஞ்ஞானம் எந்த இடத்தில் விளங்குகிறதோ அதுவே பிரதானம், கர்மத்தினற் சாதியல்லது சென்மத்தினற்சாதி இல்லை. சாதி என்பது பிறப்பு, உயர்வு தாழ்வு பேசுவதெல்லாம் அஞ்ஞானம், பிரபஞ்சமயக்கம். பிரபஞ்சமாவது இல்வாழ்வோன் இவன் நாட்டில் கிரகத்தாசிரமங் கட்டிக்கொண்டிருப்பவன் இது இரண்டு காலுக்கும் போட்டுக்கொண்ட விலங்குகள் பிள்ளை குட்டி யென்னுங் கடையாணியினலிறுக்கித் தறிக்கப்பட்டது. பிரமசாரியாசிரமம், வானப்பிரஸ் தாசிரமம், இவ்விரண்டும் பெருமையுள்ளதென்று, பெரியோர்கள் ஒப்புக்கொள்வது, அதிலும் பயனில்லை, அப்பால்பதியாச்சிரமத்தில் தயாரசமும் சத்தியமு மிருக்கவேண்டியது. இவ்விரண்டில் கடுகத்தனை தப்பிப் போனல் மலையத்தனை நரகம் வந்து முன்னிற்கும். தெரியாமற் றவரினவனுக்கும் ஒருபங்கு தண்டனை ஆனபடியால் வண்டியுருளைப் போல் கீழதுமேலதாய் சுழன்றுக்கொன்டிருக்கப்பட்ட ஜனனமரணமானது தீராது. அது என்றைக்குத் தீருமென்றால் நானென்பது நசித்து தானென்பது தவிர்ந்து ஆணவமல மகன்றதனல் சராசரக்கோல சகலாத்மாவும் தானேயல்லது வேறில்லை, சமஸ்ததேகாதிகளெல்லாஞ் மாயை சம்பந்தம் ஆத்மா பரிசுத்தம் மாயாமயக்கத்திலகப்பட்டு மருண்டு கிடக்கிறது, மாயைவசத்தாகிய உடலுக்கும் களங்கரகிதமான உயிருக்கும் சம்பந்தமில்லை யென்று இது என்றைக்கு வேறாகக் காண்பானே அன்றே மோட்ச, மென்றறிக அப்போது நிராமயமும் நிட்களமும் நிர்விகற்பமும் நிற்குணமும் தானே

யாவான், அப்படிக்கு இருளும் வெளிச்சமும் இல்லாத இடத்திலிருந்து பார்க்கில் சகலமும் எளிதில் வெளிச்சமாய்த் தோற்றும், அப்படிப்பட்ட ஞானசொரூபியாய்த் தானிருக்க அதை விட்டுவிட்டு மாயாமயக்கமாகிய உலகத்தைத் தானென்றெடுத்து மேற்போட்டுக் கொண்டு தனக்குரிய ஞானசொரூபத்தை மறந்து எத்தனைநாள் திரிகின்றானோ அத்தனைநாளும் தன்னைத்தானறிகிற தெளிவு வரமாட்டாது; பிரபஞ்ச வாஞ்சை மயக்கத்திற் படியாமல் தற்சுபாவ தற்சொரூபமான சுகயோகியேயென்று ஞானோபதேசம் பண்ணிவைத்து அனுபோகமுங் காட்டியபோது சோதிவிளக்க சுத்தஞான சமுத்திரத்தில் மூழ்கி ஜனனக்கடலைத்தாண்டி எங்குந்தானாகிய பிரம்மக் ஞானம் விளங்கி பற்றின்றி உற்ற உத்தமச் சுகயோகியானவர் நற்றவமுடைய உத்தரதிசைக்குப் போகவேணுமென்று வியாசரைப் பணிந்து சிலவுகேட்டார், அப்போது வேதவியாசர் அப்பா மகனே அடா சுகனே என்னைப்பிரிய மனமெப்படிக் கிசைந்ததோ பிரியமானவனே யென்று பேசியகாலையில் நாரதருணர்த்திய ஞானநற்கிரிகை எடுத்துப் பலபல விதங்களைக் காட்டவும் அதைக் கேட்டு பிரமித்து புகழ்ந்து மகிழ்ந்து சுகுணமான பிள்ளை தன்னை விட்டகன்று போகிறானே யென்கிற கிலேசத்தால் பெருந்துயரப் படுகிற பிதாவை ஏகசொரூபமாக காட்டித் தேற்றி பொருமலை மாற்றி அதிதீவரமாகிய யோகப்பரியேறி பூலோகத்தைப் பிரிந்து ஆகாய மார்க்கத்திற் போகும்போது மேலோகவாசிகளாகிய தேவதைகள் கண்டு அநேககோடி சூரியப்பிரகாசம்போலச் சுகப்பிரமம் இதோ போகிறானென்று பூரித்து ஐயோ இவர் குலஞ்செய்த நலம் யாதோ? வேதவியாசரிழைத்த தவமெத்தன்மைத்தோ இந்தப்பிள்ளை பிறவிக் ஞானோதய மூர்த்தியாய்ச் ஜனித்ததே யென்று யாவருங் கரத்தைச் சிரத்திலேற்றி சிவசிவயென்று தியானித்து தரிசனங்கண்டு தெளிவுகொண் டிருந்தார்கள். சராசரங்களியாவுந் தானா யிருக்கப்பட்ட சுகயோகியும் பிரசண்டமாருதவேகம் பின்னிட்டுப் போகும்படியாய் தான் முன்னிட்டு வடமுகத்தை நாடிவருகிற வேளையில் சகல சராசரங்களையும் பார்த்து உங்களிலே ஒருவன் தா னிவனென்றுரைத்து லோகோபகாரத் தந்தையாகிய வேதவியாசர் இந்தவழியேவந்து மைந்தா மைந்தாவென்று இவன் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவாராகில் நீங்களியாவரும் ஏன் ஏனென்று சொல்லுங்களென்றியம்பி சோதிமயமாய்ச் செல்லும்போது ஆகாயமளாவிய சிகரங்களையுடைய மலைச்சுனைகளில் தீர்த்தமாட

வருகின்ற தேவஸ்திரீகள் வஸ்திரங்களைக் களைந்து வைத்து நிர்வாணமாய் நீராடியகாலையில் அந்த வழியாய்ப்போகிற சுகயோகியைப் பார்த்து நாணம் வெட்கம் அச்சமில்லாமல் தங்களிச்சையின்படிக்கு ஸ்நானம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். சுகப்பிரமம் விகல்பமில்லாமல் பிரம்மக் ஞானத்துடன் செல்லுகின்ற விசையினால் பர்வதங்கள் மலைகள் விருட்சங்கள் ; இதுகளெல்லாம் அசைந்தும் முறிந்தும் அறுந்தும் ஒடிந்தும் படிந்தும் பொடிப்பொடியாய் போகத்தக்கதாக மகாமேருவுக்கு வடபாரிசத்திற் புகுந்துபோய்விட்டார்.

இப்பால் இரணிய கருப்பனுக்குச் சமானமான வேதவியாசர் ஒப்பில்லாத புத்திர சோபத்தினால் அரணியிலுற்பவித்துப் பிரிந்து போன மகன் சுகன்போன வழியைத் தொடர்ந்து போகிற போது இமையாநாட்டத் தவர்கள் எல்லோரும் பார்தது ஐயா! உம்முடைய குமாரன் இளஞ்சூரிய பிம்பம்போல் ஆகாயமார்க்கமாய்ப் போனார். அவர் போன வேகத்தில் பர்வதங்களுங் குலுங்கி பட்சி மிருகங்களுங் கலங்கி விருட்சங்களும் விலங்கிப்போய்விட்டன, இன்னேரம் நெடுந்தூரம் போயிருப்பார். நீர் நடக்கிற நடைக்கும் அவர் சென்ற வேகத்திற்கும் சரிப்படாது நீர் அவரை எந்த நாளையிற் காணப்போகிறீர், ஏதேது கண்டு பிடிக்க மாட்டீர், பூமியிலிழிந்து போமென்றுரைக்க, அவர்கள் சொல்லையுந் தட்டி பிள்ளையைப் பற்றி பெருங்காட்டைச்சுற்றி பெருமூச்சிவிட்டு ஒருபர்வதத்திற் போயுறங்கினார். அவ்விடத்திலுள்ள சுனை நீரில் விளையாடிக்கொண்டிருந்த தேவஸ்திரீக ளியாவரும் வேத வியாசரைக் காண்பதற்கு முன்னமே வெட்கப்பட்டு வஸ்திரங்களினால் தேகத்தை மறைத்துக் கொண்டார்கள். அதை வியாசர் கண்டு சற்று நின்று இதற்குமுன் இந்தவழியிற்போன ரிஷியைப் பார்த்தீர்களா வென்றார், ஆமென்றார்கள் இப்போதுடுத்திய ஆடையை அப்போது தரித்தீர்களா வென இல்லையென்றார்கள், முன்சென்றவன் என் மகன் நானவனைத் தேடிவந்தேன், என்பெயர் வியாசன் அவனும் புருஷன் நானும் புருஷன் அப்படியிருக்க அவன் போனபோது அச்சமில்லாமல் நீராடிக்கொண்டிருந்த நீங்கள், என்னைக் கண்டு லச்சைப்பட்டு பட்டுவஸ்திர முடுத்திக்கொள்ளவேண்டிய பரிசென்ன இந்தப் பேதத்தைப் பகருங்களென்று கேட்கவும், உசிதகசித உத்தமஸ்திரீகள் ஐயா, வியாசரே முன்னேபோன முனிவரானவர் சுத்தமாயையற்றவர் சொரூபக் கியானமுற்றவர், அதனால் எங்குமவரா

யிருப்பாரென்றுணர்ந்து நிர்வாண திசையினின்று ஸ்நானம் பண்ணினேனும், அவர்மாயாப்பிரபஞ்ச மயக்கறுத்தஞான வானானதால் எங்களுக்கு அவரைப்பற்றிப் பேசவேண்டிய சம்பந்தமில்லை. எங்களை அவர் தெரிந்தவர், நாங்கள் அவரை அறிந்தவர்கள், நீரவ்வாறல்ல இப்பிரபஞ்ச மாயையின் மூழ்கிய பெரிய கியாநி. உம்மைப் பார்த்த வுடனே அங்கம் பேதித்து வெட்க மேலிட்டு வஸ்திரத்தை யுடுத்திக்கொண்டோ மென்றார்கள். அம் மொழியைக்கேட்டு வேத வியாசருக்குத் தெளிவுபிறந்து நிரம்பிய வியசனமாய்நெடுமூச்செறிந்து பிள்ளையை நினைந்துபிரிவாற்றாமையால் பெருங்குரலிட்டு அப்பா மகனே ஐயா சுகனேயென்று கூப்பிட்டார். அங்ஙனம் நிலைத்திருந்த; மலைகள், மரங்கள், செடிகள், முதலியதும் ஓரறிவுமுதலாகிய ஆறறிவுடன்கூடிய ஆத்மகோடிகளியாவும் அண்டாண்டங்களும், ஏன்ஏனென்று எதிர்மொழி ஈந்தன. வியாசர் வெருண்டு நமது புத்திரனைக் கூவினால் இந்தப் பூமி முதல் மகா பூதங்களெல்லாம் ஏன் ஏனென்று கேட்கிறது, இதையோசிக்குமிடத்தில் இப்பூமியாவும் பூதபேதங்களாயும் பூதகோடிகளாயும் பரவிய பரப்பிரமம் ஒன்று, அதை தெரிந்துக்கொள்ளாமல் தகப்பனென்கிற பெருமையும் தனயனென்கிற அருமையும் பாராட்டுகிற பிள்ளையார், தந்தையார், ஆருக்கு ஆர் பிள்ளை, யாருக்கு யார் தகப்பன், நீ வேறு நான் வேறென்பதென்னை; ஒன்றுமில்லை. நாதப்பிரமம் ஒன்றென்றே இன்று முதலென்றுங் கண்டு கொள்ளென்று அறிவுறுத்துகிற மொழியாக்களும், பிறந்ததென்று தெளிந்து தெளியாமனத்தினை யுடையவராய் செல்வனே; சிறுவனே, சேயனே, என்று தினமும் மனமுந் திகிலுமாயிருந்தார். இப்படிக்குப் பிரபஞ்ச ஆசாபாச ஆபாசமகற்றியவேத வியாசரும் புத்திரபாசப் பற்றுவிடாமல்தெய்வமே தெய்வமே என்று, தியங்கிமயங்கிய நாளில் பிரம்மா, விஷ்ணு, தேவேந்திரன், முப்பத்து முக்கோடி தேவதைகள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் யக்ஷ கின்னரர், கருட, காந்தருவர், சௌனகாதி முனீஸ்வரர்சிவகணம் பூதகண இராக்ஷசகணங்களுடன் பச்சைக்கொடி படர்ந்த பார்வதிகலந்த, பவளம்போன்ற பரமசிவன் இடபவாகன ரூடராய் மான்மழுசதுர்புசம் காளகண்டம் திரிநேத்திரம் சூலம் டமரகம் கபாலமுடையவர் ஆலகால விடத்தைப்பட்சித்து அரியயனாதிகளாகிய தேவர்களை ஆதரித்ததனில் முதலானவர் எல்லாவற்றிற்கும் மூலகாரண முதல்வனானவர் அற்புதமான ஆதி

மூர்த்தி, கிருபா நோக்கமாய் வேதவியாச ரிடத்திற்குவந்து பெருங்
காட்சியாய் நின்றபோது, வேதவியாசர் எழுந்தி அநேகவிதமாக
விழுந்து சாமவேதக் கானஞ்சாற்றி பரவசமடைந்து பாயுங்கண்ணீ
ருடன் என்புகளுருகி பட்சமாகக் கூத்தாடி தன்பிள்ளையைப் பிரி
ந்த வருத்தம் பாசபந்த நெருப்பு இவைகளெல்லாம் பறந்தோடிப்
போகும்படியாய் சிறந்த தேவாதிதேவனைப்பணிந்து எழுந்திருந்து
கைகட்டிவாய் பொற்றிபக்தியுடன் புத்தியாய்ப்பாடினர். அவ்விடத்
திருந்தசாம்பமூர்த்தி: வியந்து புகழ்ந்து சிரக்கம்பஞ்செய்து ஓ பேர
றிவுடைய பெரியோனே நீர் பூர்வகாலத்தில் புத்திரன்வேண்டுமெ
ன்று நம்மைக்குறித்து தபசு பண்ணியபோது உமக்கு வேண்டிய
தென்னவென்று நாம் வந்துகேட்க பஞ்சபூதத்தையும் ஜயிக்கத்
தக்கபாலகன் வேண்டுமென்றுகேட்டீர், நாமும் பட்சமாய் அநுக்கி
ரகம் பண்ணினேம் அவ்வாறே பிறந்தபுத்திரன் பரமானந்த ஞானத்
தைப்பெற்று ஒருவரும் பெறுதற்கரிய புகழைக்கைக்கொண்ட
பெரியவராயினர். நீர் பிரபஞ்சமாயையி லமுந்திய அறிவீனரைப்
போல் துன்பப்படவேண்டிய துயரமென்ன? வேதஞ் சுரக்கிறவாக்
கினால் மெஞ்ஞான சொரூபமெல்லாம் விளம்பியநீர் கான்முளையைக்
குறித்துக் கவலைப்படுவது ஞாயமோ? இப்பிரபஞ்சத்திற்கு அதீத
மாகிய ஞானத்திலிருக்கிற பேர்கள் சமூக விசாரத்திலும் தழுவி
தாம்கொண்ட கருத்திற்கு தவறுதல் வாராமல் பிள்ளைப் பூச்சி
போல் பூரணகலையுடன் பொருந்தி வாழ்வார்கள். அப்படிக்க இல்லா
மல் பரிபூரண கியானம் பெற்ற பாக்கியனைக் கண்டுபிடிக்க வேண்டு
மென்கிற மனவலிமையுடன் அவனைத் தேடப் புறப்பட்டது உமக்கு
முறைமையோ? அப்படிக்குப் போனாலும் அவனுமக்கு அகப்பட
மாட்டான். ஒருவேளை யகப்பட்டாலும் உன்னுடனே கலந்திருக்க
வரமாட்டான். பூமி கடல் மலை மேகம் சந்திர சூரியர் முதலாகிய
பிரம்மாண்ட முள்ளவரையிலும் உன்பெயரும் உன்பிள்ளையின்பெய
ரும் நிலைநிற்கும் படிக்குக் கீர்த்திதேடிக்கொண்ட மைந்தனைக்குறித்
துசிந்தனைப்படுவதை மறந்துவிடு. ஆனால் புத்திரவாஞ்சையால் பிள்
ளையைக் காணவேணுமென்று எப்போது நீ அபேக்ஷிக்கின்றையோ
அப்போது உன் பிள்ளையின் சாயலை உனக்குத் தோன்றும்படியாய்
வரங்கொடுத்தேன், நீர் பூலோகத்திற்கு போமென்று விடைகொடு
த்து தரும சமுத்திராதானுவானவர் மறைந்துவிட்டார். இப்பால்
வியாசர் பரமேஸ்வருடைய அனுக்கிரகத்தைப்பெற்று தம்முடைய

பர்ணசாலைக்கு வந்து மனோ நிச்சயங் கொண்டு மைந்தன் பிரிவை மறந்து உலகத்தவர்க்கு உண்மை ஞானத்தைத் தெரிவிக்கவேணு மென்று ஒருபரியாயமாய்ச் சொல்லி வேதநான்கையும் விரித்து பதி னெண்புராணங்களையுந் தழுவிநடக்கும்படி போதித்து அவ்வாறு நடத்திக் கொண்டு வரும்போது மெய்மைக்கியானம் விருதாவாய்ப் போய் விடுகிறதேயென்று விசனப்பட்டு, இதை யொருவருக்கும் விளம்பலாகாது ஏனெனில், நாரதர்நம்முடைய பிள்ளைக்கு பூட்டை த்திறந்து காட்டிவிட்டுப் போயினர். நாட்டைத் தழுவிக்கொண்டி ருந்த நமது மகன் நல்லறிவாளனாகியசுகன் பக்குவப்பட்டிருந்தமை யால் காட்டியசோதி கற்பூரதீபம் போல்கலந்து பரிபூரணபாக்கிய வானானன், இனிநாம் செய்யவேண்டிய தென்னை யென்று இகத்தை த்தழுவி இதற்குவேண்டிய சாஸ்திரங்களை எல்லாம் அதவா ஏற்ப டுத்திக் கொண்டிருந்தார். சகலமான பேருங்கேட்டு அறுவகைப்ப கைகளையு மறுத்து அப்பொழுதே ஞானம் பெற்றவர்களைப்போல் மகிழ்ந்து புராணவைராக்கிய புனிதரானார்கள், இந்தச்சுகப்பிரம்மத் தின் சரித்திரத்தைப் படித்தபேர் கேட்டபேர் லோகவாழ்க்கையில் மூழ்கியிருந்த போதிலும் நொடிக்கு நொடி மனத்தெளிவும் அப் போது நேரிட்டிருக்கிற வியாதியும் மனோவியாதியுநீங்குந் தூய்மை. அன்றியும் பரிசுத்தமனமும் இரக்கமும் உடையராவார்கள். மேலும் நாரதர் பதரிகாச்சிரமத்திருப் போய்ப் பேசுகிற சங்கதியைச் சொல் லுகிறேன் கேளுமென்று காங்கேயர் பகரத் தொடங்கினர்.

## 51. நாரதர் பதரிகாச்சிரமத்தின் பெருமை யுரைத்தல்.

ஓ! தயாளுவாகிய ஜனார்த்தனனுக்கு மைத்துனனான சதுர னேகேளும் மூலக்கமத்தில் முளைத்த முதல்வனான பிரமனுடைய மகன் நாரதன் பூமண்டல மெல்லாந்திரிந்து, மகதியாழ் தாங்கிவரும் போது பதரி காச்சிரமத்தின் வழியாய் வந்து அங்கிருக்கப்பட்ட மகானுபாவராகிய நாராயண மூர்த்தியைக்கண்டு அவரிடத்திற் செ ன்று மதுரவாசகமாய் இதவாய் வசனித்திருந்துக் கொண்டிருக்கும் போது துருத்திபோன்ற அற்ப உடலை எடுத்ததற்குப் பயனென்ன வெனில் பரப்பிரமத்தை உள்ளும் புறம்பும் ஒத்திருக்க ஏகமாய்க்

காண்பதே ஆன்மாவுக்கு உறுதியென்பதாய் பெரியோர்களெல்லோரு மிசைத்திருக்கின்றார்கள். கடலே, குற்றங்களைந்த நாராயணரே, அந்தச் சூட்சுமத்தை அடியேனுக்கு அருள்செய்யக் கோருகிறேனென்று வினவ, நாராயணர் சொல்லுகின்றார். ஓ! நாரதரே இப்போது நீரிசைத்தசோதியை உள்ளும்புறமும் பார்ப்பதே உண்மை ஞானம். உள்ளே என்ன ஆனந்தத்திற் கண்டானோ அந்த ஆனந்தமாகப் புறம்பிலுங் காணவேணும். இதல்லாமல் மகாமேருவுக்கு வடபுறத்திற் போகிறபேர்களுக் கெல்லாம் சுத்தமுத்தி என்று சுருதியும் ஆகமங்களுஞ் சொல்லுகின்றன அச்சுத்தாத்து மாக்களெல்லாம் சுவேதவனமயமாக அவ்விடத்திலிருக்கின்றார்கள். அங்கிருக்கின்ற ரிஷிகளியாவரும் உண்மையுடையவர்களேயல்லது பொய்யரென்பது சற்றேனுமில்லை, இப்படிக்கு அளவிறந்தபேர்க ளிருக்கின்றார்கள். எல்லாம் சக்கிரதாரனாகிய மகாவிஷ்ணுவைச் சதாகால முநினைத்து அந்தி, சந்தி, செப மந்திரமும் அதுவாகச் சமைந்து சலனமில்லா திருப்பவர்களும் அருட்சோதியைத் தரிசிப்பவர்களுமா யிருப்பார்கள். ஓ! வேதமுனியே ? நீரும்போனாற் காணலாமென்று நாராயணர் சொல்ல, நாரதரும், மனமகிழ்ந்து மேருவுக்கு உத்தரபாகத்திற் சென்று நாராயணர் நவின்ற காட்சிகளெல்லாங் கண்டுணர்ந்து பூலோகத்திற்கு வந்து சகலருக்கும் விளம்பினார், வசுவனென்னும் இராஜன் அந்தப் பிரகாச வெளிச்சத்தைக்கண்டு மோட்சமடைந்தான். சிவசிருஷ்டி செய்கின்ற பிரம்மகுமாரனாகிய அத்திரி மகரிஷியும் அந்த ஒளியைப் பார்த்து உள்ளங் திருத்தினார். பிரம்மாவினாலும் காணப்படாத விஷ்ணுவினுடைய திருமேனிப் பொலிவை யாவராற் காணக் கூடும், கண்டாற் பதவிகைகூடும், அமலமாயிருக்கப்பட்ட சுவேதவனத்து ரிஷிகளல்லாமல் மற்றொருவராலுங் காணக் கூடாதென்று வீஷ்டுமர் விளம்பினார். இராஜ விரோதயனாகிய தருமராஜன் ஐயா, கிருதார்த்தனானேன் சகல ஜனசமூகங்களுக்கும் பொருந்தும்படியாய் சமமான தருமமொன்று சொல்லவேண்டும். அந்தத் தருமத்திற்கு ஒன்றும் நிகரில்லாம லிருக்கவேண்டும், என்றென்றைக்கும் நிலையான காரியங் கொடுப்பதாயிருக்கவேண்டும், சொல்லப்பட்டது மோட்சம் தரத்தக்கதா யிருக்கவேண்டும், பிராணிகள் அதை யனுஷ்டிப்பதற்குச் எளிதாயிருக்கவேண்டும், அப்பேர்ப்பட்ட தருமமாக ஒன்று ஆராய்ந் தெடுத்துச் சொல்லுமையாதென்று கேட்க, விரதசில வீஷ்டுமர் வியந்து, புகழ்ந்து சொல்லுகின்றார்.

---

## 52. தருமங்களுக்கெல்லாம் மேலாகிய தருமம்.

### சூரியலோகங் கண்ட அதிசயம்.

முன்னொரு காலத்தில், நாரதர், தேவேந்திர னிடத்திற்குப் போகும்போது அவனிவரைக்கண்டு எதிர்கொண்டு பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து, ஆசனத்திலிருத்தி சோடசவுபசார பூசை புரிந்து, சுவாமிகளே இங்குதேவரீர் எழுந்தருளுவதற்கு அடியேன் என்ன தவமிழைத்தேன் பிழைத்தேனென்று தோத்திரம்பண்ணி ஆசீர்வசனம் பெற்றுக்கொண்டு நின்றான். அவனைச் சிங்காசனத்திலுட்காரச் சொல்லி ஒருவருக் கொருவர் க்ஷேமவிசாரணை செய்து கொண்டிருக்கும்போது இந்திரன், ஐயா, நாரதரே பூமியில் அற்புதங்களேதாகிலு முண்டோ அப்படிக்குண்டானாற் சொல்லுமென்று தூண்டினான். அந்த இந்திரனை நாரதர் பார்த்து உண்டாயிருக்கிறதென்று சொல்லுகிறார், ஓ! வச்சிராயுதனே, உலகத்தாரைக் கடைத்தேற்றி வைப்பதற்காக கங்கைக்கரையில் பத்மநகரமென்றொரு பட்டணம் உண்டு அதில், பிருகு வென்னும் பிராமணனிருக்கின்றான் அவன் சகலகோடி பிராணிகளையும் தன்னுயிர்போற் பார்க்கப்பட்ட தயாரசகுணமுடையவன், நித்திய சத்திய விரதன் யாவரும் நல்லவனென்று கொண்டாடப் பெயர் பெற்றவன் கோபத்தைக் கோபித்தவன் பெருமையான உத்தமஸ்திரீயை மணந்து பிள்ளைகளைப் பெற்றவன், வந்தவிருந்துக்குபசரித்து இனிமேல் வரப்போகிற விருந்துக்கு எதிர்பார்த்திருப்பவன், பாக்கியத்திலும் நன்நடைக்கையான யோக்கியத்திலும், சிலாக்கியமானவன், நோயற்றவாழ்வுடையவன் இப்படியொன்றிலும் குறைவில்லாமல் நிறைவாக வாழ்ந்து வருகிற நாளையில், தருமசாஸ்திரங்களையும் நீதிசாஸ்திரங்களையும் வாசித்து, அதனுடைய நட்பா நட்பங்களை வடித்தெடுத்து தேர்ந்து தெளிந்து, அநேக தருமங்களில் எது ஒன்றுமாத்திரம் பரமதருமமென்று முதன்மையாகிய முக்கியமானதை அறியவேண்டுமென்று மெத்தவுஞ் சாஸ்திரவிசாரணை செய்து, மேலோராகிய மெய்யறிவோர்களையுங் கேட்டு ஒருவருந்தெரியச் சொல்லாமையால் கிரகஸ்தாசிரமத்திலேயே வாழ்ந்து வந்தான். இப்படிநெடுநாள் கடந்தபிற்பாடு ஒருநாள் அவரிடத்திற்கு ஒருரிஷியீஸ்வரர் வந்தார் அவரைக் கண்டு வணங்கி புட்பார்ச்சனை புரிந்து, அன்னவாகனக் கடவுளுக்கொப்பானவரே வாருமென்று உபசரித்து போசனமுண்பித்து அவரால் மங்

களாசனம் பெற்று, சுவாமி தருமங்களில் மேன்மையாகிய மேலான
தருமமென்ன அதை எனக்குத்தெரிவிக்கவேண்டுமே தேவனேயெ
ன்று சிந்தனைசெய்தார். அந்தப் பெரியவர் சொல்லுகின்றார் அப்பா
பலநூல்களும் பலவாறாகப் பேசியிருக்கின்றது, உலகத்தில் சிறிது
பேர் சத்திய மென்றும், சிலர் தயாரசமென்றும், சிலர்கொல்லாமை
யென்றும், பலர் விருந்தினர்க்குபசரிப்பதென்றும், சிலர் உபசார
மென்றும் பலர் வேதவிதியாகிய ஆசிரமங்களிற்சொல்லி இருக்கப்
பட்ட தருமமென்றும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உள்ளும்
புறம்பும் ஒத்திருக்கின்ற உண்மைப் பொருளென்றும். பேசுவார்
கள். அப்படிக்கிருக்க தருமங்களில் இன்னது மேலாகிய தருமமெ
ன்று விளம்புதற்கு நான் பாத்திரனல்ல, ஆனாலும் குற்ற மில்லா
நற்றவங்களைச் செய்கின்ற நைமிசாரணியத்திற்குப் பக்கத்தில் கோ
மதி யென்னுந் தீர்த்தக்கரைக்கடுத்த பத்மதடாகமென்னும் பேர்
பூண்ட மகத்துவமுள்ள சர்ப்பராஜன் துரைத்தனம் பண்ணிக்கொ
ண்டிருந்தார். அவர் (இல்லறமல்லது நல்லறமல்ல யென்னுஞ்) சுருதி
வாக்கியத்தை அவர் பிடித்து அதற்கு வேண்டிய கருவி நூல்களெல்
லாம் வாசித்து கிரகஸ்தாசிரமத்தைக் கிரமமாய் நடத்திவந்தார்.
அவர் மகத்தாகிய தரும சொரூபி நித்தியநைமித்தியப் பிரமாணத்தி
லே இருக்கப்பட்டவர், ஆனந்த சமுத்திரத்தைக் கண்டிருக்கப்பட்ட
பேர்களுக்கெல்லாம் புண்ணிய தருமங்களை விரித்துரைக்கப்பட்ட
வர், நல்ல மகாத்மாக்கள் தபோநிதிகள் பிதுர்க்கள் முதலிய பேர்க
ளுக்குப் பூசை பண்ணப்பட்டவர், அவருடைய பெருமையை ஒருவ
ராலும் அளவிட்டுச் சொல்லப்படாது, அவருடைய ரூபம் சர்ப்ப
ரூபமென்று நினையாமல் அவரிடத்திற்குப்போய் நீர் கேட்கவேண்
டிய சந்தேகங்களை நிவர்த்திபண்ணிக்கொண்டு வரலாம் அவருனக்
குச் சொல்லுவாரென்று புகன்று ரிஷியீஸ்வரர் தன்னாசிரமத்திற்கு
போயினார். அவர்போய்விட்ட வுடனே இவருக்கு ஆசையும் அன்
பும் மேலிட்டு பத்மமென்னும் பாக்கியவானைப் பார்க்கவேண்டுமெ
ன்று பக்திமேலாய் தன்னுடைய பெண்சாதி பிள்ளை, பந்து மித்தி
ராள் யாவரையுங் கூட்டி அவர்களுக்கு நல்லவார்த்தை சொல்லி
இந்த வர்த்தமானங்களைத் தெரிவித்து சந்தோஷமாக அவர்களிட
த்தி லுத்தரவு பெற்றுக்கொண்டு மகாரிஷி கூறிய அடையாளப்படி
க்குத் தேடிச் சென்றான், இவன் அவர் வீட்டுக்குப்போனபோது
அந்தப் புண்ணியனாகிய பதுமன் வீட்டிலில்லாமல் அப்புறம் போயி

ருந்தபடியால் அந்த நாகராஜனுடைய, பெண்சாதி, இந்தப்பிராமண னுக்கு எதிரில் வந்து பாதபூஜை பண்ணி அர்க்ய பாத்திய அர்ச்சனை புரிந்து வீட்டுக்குள் அழைத்துப்போய் ஆண்டவனே தேவரீர் வந்த காரியம் யாதோ அடியாளுக்குத் தெரிவிக்கவேண்டு மென்று நமஸ் காரஞ் செய்தாள். அந்தப் புண்ணிய குணவதி செய்த உபசாரத்தி னல் இவள் புருஷன் இன்னிலையுடையவனென்றும் இவர்களின் இல் லறதருமம் நல்லறமா மென்றும் நிதானித்து வேதங்களை யாராய்ந்த வேதியன் மிகப் பயந்து வெருவாய்நபந்து அம்மணி நான்சிலசந்தே கங்களை உன்னுடைய கணவனல் அறிந்துக்கொள்ள வேண்டியதற்காக வந்தே னென்றான். அதுகேட்டு அந்த அம்மன் சொல்லுகிறாள். ஐயரேஎன் கணவர் வாரிச நண்பனுகிய பகவானிடத்திற்குப் போயிருக்கின்றார், அவர்வருவதற்கு எட்டுநாள் செல்லுமென்று அதிகபத்தியும் அன்பு பாராட்டிவார்த்தை சொன்னாள். வந்தபிராமணன் அதைக்கேட்டு அப்படியேவரட்டும் அவர்வரும்வழியிற் காத்திருந்து அழைத்துக் கொண்டுவருகிறேன் அல்லது அவர் வந்தபிற்பாடு வருகிறேனென் றுமகாபதி விரதையாகிய மடமாதுக்குச் சொல்லி, அவர்கள் வீட் டைவிட்டுப்புறப்பட்டு அவசரமாக நடந்து அவர்வருகிற வழியிலிரு ந்து அந்த மகானுபாவர் வந்து தரிசனங்கொடுக்கிற வரைக்கும் உப வாசவிரதமிழைப்போமென்று ஆறுநாளிருந்தார் அதை யந்த உத்த மியறிந்து இந்தப்பிராமண ரிஷினிடத்தில் வந்து கர்த்தனே நான்கு வேதமுங் கரைகண்டிருக்கிற நாயகத்தூய்மைவாய்ந்த நாதனே,அடி யாளுக்கு அன்பாகிய நாயகன் அனுமதி ஆஞ்ஞை இட்டிருப்பது என்னவென்னில், நம்முடைய ஆசிரமத்திற்கு யாவரேனும் பெரிய வர்கள் வந்தால் அவர்களுக்குச் சொடசோப சாரம்பண்ணி அவர் களிஷ்டப்படிக்கு அன்னங்கொடுக்கச் சொல்லிப் போயிருக்கின் றார், அப்படிக்கிருக்க தேவரீர் இவ்விடத்திற் கெழுந்தருளியும், அமுது கொள்ளாமல் உபவாசமா இருந்தால் முறைமையாகாது, மேலும் நாயகனல் எனக்குக் குற்றம்வந்து சம்பவிக்கும் அதல்லா மலும் எங்களுடைய இல்லறதரும நியமமுங் கெட்டுப்போம், நா னும் நாயகனும் நரகத்திற் கிடமாவோம், ஆதலால் அடியாள் அன்னம் எடுப்பித்துக்கொண்டு இவ்விடத்திற்கு வருகிறேன், தேவரீருக்கு இஷ்டமான மட்டும் பிட்சை ஏற்றுக்கொண்டு ரட் சித்து எங்களைக்கடைத்தேற்றவேண்டும் கண்ணருண் ணிறைந்தகற் பகமேயென்று பலவாறு இனியவசனங்கூறி, பத்ததனையாய்ப்

பணிந்து வேண்டி உபசரித்தாள். அதற்கந்த பிராம்மணன் அருந்ததி
யினும் அதிக புகழ் பொருந்தி வருந்தியபெருந் திருவனைய பெண்க
ணாயகமே உன்புருஷனெங்கே யென்று கேட்டபோது சூரிய னிட
த்திற்குப் போயிருக்கின்றார் வருவதற்கு ஒருவாரம் செல்லு மென்
று வசனித்த அப்போதே அவரைக் காணுகிற பரியந்தம் புசிப்ப
தில்லையென்று சங்கல்பம் பண்ணிக் கொண்டு உபவாச மிருந்தேன்,
அந்த விரதங்கெட உமது வார்த்தைக் குடன்படேன், அன்னமும்
அருந்தேன் உன்னுடைய காதலன் எட்டாம் நாள் வாராவிட்டால்
ஒன்பதானுதய முதற்கொண்டு உண்ணுகிறேன் இதனால் உங்கள்
விரதத்திற் கொருபங்கமில்லை, உங்களுடைய நியமம் இயமயோகத்
தின் பலனைப்பெறும் உங்களுக்கொரு தீமையுஞ் சேராது, உங்கள்
வாய்மையுஞ் சோராது வல்வினையும் வாராது தாயே மனோன்மணி
நீர் போமென்று சாற்றினார். அவரது மொழியைக்கேட்டு நாகரா
ஜாவின் நாயகியாகிய நாககன்னி தன்வளவுக்குவந்து விட்டாள்.
சூரியபகவானிடத்திற் சென்றிருந்த சுகுணவானான நாகராஜன் வந்
தபோது ஆசிரமத்திலிருந்த பதிவிரதை எதிரோடி வந்து பாத
பூசை முதலிய உபசாரங்கள் செய்து சிங்காசனத்தி லிருக்கச்செய்
து சேடியர் தோழிகளால், ஆலவட்டம், சாமரம் விசிறி, பனிநீர்
சந்தனாதி முதலியவற்றால் இளைப்பாற்றி அவருக்கு முன்னின்று,
சுவாமி அடியாளொரு விண்ணப்பம், தாங்கள் சூரியமண்டலம் போ
யிருந்தபோது தம்மிடத்திற்கு பிருகுவென்னும் பெரியவர்வந்தார்.
அவரை வந்தனை வழிபாடுடன் உபசரித்தேன். அவர் தங்களை விசாரி
த்தபோது, செங்கதிரோ னிடத்திற்குச்சென்றார், இங்கு ஒருவாரத்
தில் வருவாரென்றேன் அப்படியானால் அவர்வருகிற வரைக்கும்
நான் உபவாசவிரதம் பூண்பேனென்று தாங்கள் வரும்வழியிற்றவ
முற்றிருந்தனர், இச்செய்தியறிந்த அடியாள் திருவடியிற்பணிந்து
அநேகவிதத்திற் றெரிவிததுத் தேற்றியபோதும் நீரம் விடாமலிரு
ந்தனரென்று செப்பினாள். அம்மொழிக்கேட்ட நாகராஜன் அப்போ
தே எங்கே அவரெங்கேயென்று கொழுந்து விட்டெரியுங் கொப்ப
றையில் விழுந்த புழுப்போற்றுள்ளி இளைப்பைப்பாராட்டாம லெழு
ந்து பரிந்து பிருகுவிடத்திற்குப்போய், தேடியுங்கிட்டத் தெரியாப்
பெருமானே யென்றுகண்டு நாயனைப் பேயனை நாடி வந்தகாரணம்
யாதோ இக்குடிலைசயிலடி பெயர்த்த குணமென்னமோ, சீரடிவருந்
தப்பெற்ற செயலியாதோ வென்று, முகமுன் கூறி தாம் வந்தது

இன்னகாரியமென்று வழங்கினல் அந்தக்காரியத்தை க்ஷணத்தில் சாக்கிரதைசெய்ய மாட்டுவேனென்று சாற்றவும், பிறப்பிறப்பற்ற தவப்பலத்தையுடைய பிருகு மஹாரிஷி சொல்லுகின்றனர். ஓ! நாகபோகனே நான்வந்தகாரியத்தைக்குறித்துப் பிற்பாடு பேசுகிறேன். நீர் சூரியமண்டலத்திற்குப் போய்வந்த சரிதமென்ன. அம்மண்டலச் சிறப்பும், விசாலப் பரப்பும், நேர்மையும், சீர்மையும், அதிசயமும், சூரியனிருக்கின்ற ஆசாரமும், சம்பிரமமும், நீர்வார்த்தையாடியவகையும் விநோதங்களும் விந்தைகளும் உண்டாயிருப்பதை நீர்கண்டபடியே கரைக்கவேண்டும் காவலனேயென்று பிருகு மஹாரிஷி கேட்க அவருடைய செவியில் தேவாமிர்தஞ் சொரிவதுபோல் நாகராஜன் செப்பலுற்றனர். ஓ! பிரம்மவித்தாகிய தேவனே கேளும் சூரியமண்டலத்தில் முரசு, ஜயபேரிகை கறடிப்பறை, குடமுழவு, மல்லரி, துத்தாரி, பூரி, டமாரகம், எக்காளம், தாரை, வீரசின்னம், தப்பட்டை, தவண்டை, மேளமுதலிய சகலவாத்தியங்களும், சப்த மேக முழக்கம்போல் ஒருபக்கத்தில் ஒலிக்க, தேவதா ஸ்திரீகள் கந்தருவப்பெண்கள் யக்ஷகன்னியர்கள் யாவரும் சதி, சுதி, தாள, மேளங்களுடன் பரதநாட்டியமாடுகின்ற பரிசு ஒருபக்கங்கோஷிக்க, பேரறிவிலுயர்ந்த பெரியோர்கள் உறுதியுடையவர்கள் கரையற்ற வேதாகமங்களைக் கழறுகின்ற சப்தமொருபக்கம், ஸ்மிருதி, இதிஹாசம் பஞ்சலிலக்கணபாவகம் தற்கம் மீமாம்சம் அறுபத்துநான்கு கலைஞானமும் அப்பியாசம் பண்ணுகிற ஆரவாரம் ஒருபக்கம், முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் சகல சாதியருங் குலவேதியரும் தோத்திரஞ் செய்கின்றது வொருபக்கம். தவசிகள் முனிவர்கள் வேதமந்திரம் வினவுகின்ற கீதநாத மொருபக்கம் தரிசிப்பவர்கள் துதிக்கின்ற சந்தடி யொருபக்கம். ஆலவட்ட சாமரங்கள் சத்திரங்கள் மயிற்பீலிகள் குஞ்சங்கள் பிஞ்சங்கள் சுருட்டிகள் முத்துக்குடைகள் இவைகளால் உபசரிக்கின்ற ஒலி பலபக்கம், ஆசீர்வசன ஆர்ப்பொருபக்கம், அஷ்டமங்கலம் லாலி சுபமங்களம் முதலிய ஆரவாரசம்பிரம்ம் ஒருபக்கம். மேற்கட்டிய விதானம் மகரதோரணம் பாராக்கு கட்டியம் எச்சரிக்கை முதலான உபசார அவசரங்களொருபக்கமும் இன்ன மனேகவைபவங்களுடன் உஷாதேவி பிரத்யுஷாதேவி சாயாதேவி சமேதனுய் நவரத்நகசித சிங்காதனத்தின்பேரில் ஆயிரங்கிரணத்துட னிருந்தப்பட்ட திவ்விய தேவநிர்மாண ஜோதிமணியை மார்பிற் றரித்துப் பிரகாசிக்கப்பட்ட

சூரியப்பகவான் பிரபையுடன்கொலுவீற்றிருந்தார்; அவருக்கு ஒற்றைபாழித்தேர் சப்தமாகுதிரை சிவந்த திருமேனிபொருந்திய அருணன் சாரதி மனோவேக வாயுவேகமாய் மகமேருவைப் பிரதட்சணஞ்செய்துவையகத்தார் வாணாளை யளந்து காட்டிய மகாமூர்த்தி. அவருடைய கிருபையினால் மழை பெய்கிறதும் தானியாதிகள் மலிகிறதும் வருஷம், மாசம், வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம், உத்தராயனம் தக்ஷிணாயனம் நடப்பதும், சராசரங்களுண்டாகித் தழைவதும், சிருஷ்டி, திதி, சம்மாரமாகிய, முக்குணமும் இக்குணங்களுக்குரிய பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் முதலிய மூவரும் அந்தச் சூரியபகவானுடைய ஒளியினாலே ஒளியாய் உட்கலந்திருக்கின்றார்கள். இம் மும்மூர்த்திகளும் அவருடைய பிரகாசமென்றால் சகலாத்ம கோடிகளுக்குஞ் சூரியனைவிடவேறு சுடருந்தெய்வங்களு முண்டோ. இப்பேர்ப்பட்ட சூரியபகவானுக்கு முக்கோடி தேவதைகள் அர்க்கியங் கொடுத்துசுவர்ண புஷ்பம் பொழிய, கருடனுடைய தமையன் அருணன் அதிக விசையுடன் விமானத்தைச்செலுத்த வேகவிதாகத்துடன் சப்த மானடிக்க அலைகடல் வளைந்த உலகத்திற்கெல்லாம் கண்கண்ட தெய்வமாகிய கதிரவன் கொலுவிருக்கையில் மிகுந்த ஜோதியுடன் ஒருமகாபுருஷன்வந்தான். அவனுடையபிரதாப மென்னவென்னில் தேவதைகளைப்போல் திவ்வியதேகம்பெற்றவன், ஆரகேயூர மணிமகுட குண்டல கிரீடபூஷணாலங்கிருதன், திடகாத்திரவச்சிரதேக உச்சிதபலவான், அருணனுடைய காந்தியிலும் அதிகமானவன், அப்பேர்ப்பட்ட சூரியபகவானுடைய கொலுமுகத்தில் வந்து நின்று சிலாக்கியாசாரமான தோத்திரவாக்கியங்களைச் சொன்னான். அதைக்கேட்ட சூரியன் ஆநந்தமுற்றிருக்க மறுபடியும் அந்தத் திவ்விய புருஷன், சகலகோடி ரிஷியீஸ்வரர் முதலாகிய பிரம்மதகணங்களும் பணிந்து வணங்கித் தோத்திரம் பண்ணிக்கொண் டிருக்கிற சமயத்தில், அந்தச் சூரியசோதியிற் புகுந்து உள்ளேகலந்து ஒன்றுபட்டுப்போனான். அதைக்கண்ட தேவதைகளும் அஷ்டதிக்குப் பாலகர்களும் முகமலர்ந்து அகமகிழ்ந்தார்கள் இந்த விந்தையை நானுங்கண்டு அற்புதமடைந்து ஆயிரங்கிரணங்களையுள்ள ஐயா, உம்மிடத்திலும் ஒளியாய் வந்து உன்னுட்புகுந்து ஒன்றியாய்ப்போன உத்தமரானோ, அவருடைய உண்மையைச் செல்லவேண்டுமென்று உறுத்திக்கேட்டேன். என்பால்வைத்த அன்பினால் வண்டுமொய்க்குந்தேனிறைந்த தாமரைமலர்மாலை சூடிய சூரியதேவன் குலுங்கி நகைத்து மகத்து

வழும் மர்மமுமான வசனத்தைச் சொல்லத்தொடங்கினர். ஓ நாகராஜனே! என்னிற்கலந்தவர் தேவதைகளிலொருவர், மிகவும் நல்லவர். பூலோகத்தில் வேதமோதுகின்ற பிராமணர்களில் இவரும் ஒரு குட்டிப்பார்ப்பான். சகலகோடி தருமங்களும் யாதொரு பலனைக் குறித்துச் செய்யாமல் நிராசையாய்ச் செய்யப்பட்டவர். குற்றமற்ற நிர்மல உதகம்போல் பற்றற்றிருப்பவர். தேகாபிமான மற்றவர். ஸ்தூல பூததேகம் போய்விட்ட உடனே சூக்குமதேகத்திற் பிரவேசித்து என்னுடன் கலந்து பிரிவரப் பரவினர். இது தான் இடரில்லா தமுத்தி, இதன்றி வேறதிசயமில்லை. யாவனொருவன் ஆசாபாசத்திலகப்பட்டுக் கெட்டலையாமல் ஆசையற்றிருக்கின்றானோ அவனே பிறவிவேதைக்கடந்தவன் அவனேமுத்தாத்மா. ஆசையுடனும் இருபற்றுடனும் செய்கிற தருமமெல்லாம் பிறவிக் கேதுவாகும். அவாவிக்ருகிற வரைக்கும் தவாப்பிறப்பு, ஜனன மரணம் நீங்காது. ஆகையால் எல்லாத் தருமங்களிலும் முதன்மையான நிராசையோடிருந்து ஒருவழிப்பட்ட உண்மையோனாதலால் சீக்கிரம் ஜனனமொழிந்து, பிறவித்துன்பம் போய் என்னுடலிற் கலந்து ஜோதியோடு ஜோதியாய்ப் பரவிவிட்டனர். கேட்டீரோ! நாகராஜனேன்று சூரியன் கூற மகிழ்ந்து சந்தோஷமடைந்தேன். இது நேற்றியதினம் சூரியனிடத்தில் நடந்த சமாச்சாரமென்று சொல்ல, பிருகுமகாரிஷி கேட்டு ஆனந்தக்கடலில் மூழ்கி,நாம் நினைத்துவந்த கருத்து சங்கையற்ற செயலாய்வெளியாயிற்று, நமது விரதமும் பலித்தது. தருமசூட்சமும் தெரிந்த தென்று நினைத்து அந்த நாகராஜனையிருந்த உபசாரத்துடன் ஆசீர்வதித்து, மகானுபாவரே நான் வெகுநாளாய் முடிவான தருமம் அறியவேண்டுமென் அநேகம் பெரியோர்களை உசாவினேன், ஒருவருஞ்சொல்ல மாட்டாமல் சந்தேகத்தில் விட்டார்கள், உம்முடைய மகிமையைக்கேட்டு இந்த ரகசிக்த்தை உம்மால் தெரிந்து கொள்ள வேண்டுமென்று வந்த இடத்தில் நீரில்லாமற் போனபடியால், உம்மைக்காணுகிற பரியந்தம் உபவாச விரதமிருந்து கண்டு சூரியலோகத்தில் நடந்த ஆச்சரிய சமாச்சாரங்களை உம்மாற்கேள்விப்பட்டு, நான்கொண்டிருந்த சங்கை தீர்ந்து கிருதார்த்தனானேனென்று பிருகுமகாரிஷிவினவ, அந்தச் சொல்லைக் கேட்ட நாகராசனும் அவரைவணங்கி வழிபட்டு உபசாரங்கள் செய்து சுவாமி, தேவரீர் நிரம்பியபசியும் இளைப்புமாய் இருக்கின்றீர், அடியேனை நாடிவந்து ஆறுநாள் பசித்திருந்து

போவது அழகும் அறமல்லவே? அடியேனுக்குப் புகழல்லவே? எழுந்திருந்து வாருமென்று இதவாகப் பேசி, மனைக்குள்ளழைத் துப்போய் நெய்யளாவிய அன்னங்களும் அறுசுவை பதார்த்தங் களும் பாயசம், வடை, பணியாரங்களுடன் படைத்து, ஆசையும் அன்பும் பொருந்திய புருஷனும் பெண்சாதியும் உண்பித்து காம் வாய்தணித்து ஆசமன்னியமருத்தி களைதீர்ந்து ஓரிடத்தி லிருவ ரும் உட்கார்ந்து ஒருவருக்கொருவர் பேசவேண்டிய தருமரகசி யங்களைப் பேசிக்கொண்டு வரும்போது பிருகு ரிஷியானவர் தான னுஷ்டித்து வருகின்ற இயல்பெல்லாம் பேசி பரமதருமம் அறிய வேண்டிய பான்மையால் வந்தேனென்று பகர்ந்தார். இவருடைய விருத்தாந்தங்களைக் கேட்ட பதும ராஜனானவர் தன்னுடைய சரித் திரங்களைச் சாற்றி தருமபத்தினி கிடைத்திருக்கின்ற தவத்தினால், சிவநாமத்தை மறவாச் செல்வம் பெற்றிருக்கிறேனென்று செப்பி, ஆத்மவிதேகமுத்தி அடைகிறவர்களுக்கு அதிதீவிர பக்குவமும் பேரறிவும் தனக்குத்தானே வந்து கைகூடும்படி நல்வினை நடத்தி வைக்குமென்று நவின்று எல்லாவற்றிற்கு மேலான தருமமானது; எந்தப் பதார்த்தத்தின்பேரிலும் இச்சைவையாததுதான் பரமதரு மம், இச்சைப்படுவது அபரதருமம். அந்த இச்சையை விட்டேனெ ன்பது வாசகப்பாடன்றி வாச்சியப்பாடமன்று. அகமும்மனமும் ஒத்து ஒருமையாய் நிராசைப் படுவானாகில் அவனெவனானபோதி லும் உடனே முத்திபெறுவான். அவனுக்கு எல்லாக்காரியங்களும் பொருந்திக் கைவல்லியமாம். நினைத்தது சித்தியாம். அவனெத்தனை காலமிருந்தாலும் மாயாதேக வருத்தமின்றி சாயாதேகச் சம்பிரமத் துட னிருப்பான். அவன்தான் அகங்கையில் மோட்சத்தை வைத் துக்கொண்டிருப்பவன். சுகதுக்க மற்றவன். தூக்கம் ஏக்கம் விட் டவன். சோதிரூபமாகிய சூரியனிற்கலந்து சுடராயிருப்பவனென்று உணருமென்றுசொல்ல, அதைக்கேட்டபிருகுவானவர் அதிகலாபம் பெற்றவர்போல்மகிழ்ந்து பரவசமாய் ஐயா, நெடுநாளிருந்த சந்தே கங்களை ஒரு நிமிஷத்திற்றெளியச்செய்தீர், இன்றுமுதல் உம்மை என்குல தெய்வமென்று ஏற்றிப்போற்றி வருவேனென்று அவரு டைய பெண்சாதி தருமசீலியினிடத்தும வார்த்தையாடி தாயே! சிந் தாமணி, இவ்வுலக மாதாவாகிய அம்மணிக்குச் சமானமான அறம் வளர்த்த தாயென்று உன்னை என்னேரமும் நான்சிந்திக்கவேண்டி யது, கற்புள்ள காதலியேயென்றுங் கணவனுடன் கூடிவாழ்தி யென்றும் இன்சொல்லுரைத்து இருவரிடத்திலும் விடைபெற்றுக்

கொண்டு சனகர் சனகானந்தர் சனற்குமாரர் சனற்சுஜாதர்முதலிய பேர்களுங் கொண்டாடப்பட்ட பிருகுமகாரிஷி தன்னிருப்பிடத்திற்குச் செல்லும்போது சவனகமகா ரிஷியின் ஆசிரமத்திற்குப்போய் ஐயா, தேவரீர் போதித்த அடையாளப்படிக்குச் சென்று இல்லறவாழ்விலுயர்ந்த அந்தப் பதுமமகாராஜனைக் கண்டு பரமதருமார்த்தம் பக்குவமாயுணர்ந்து, அதுவே நிச்சயமென்றெண்ணி அதைக் குறித்து விரையங்கள் பண்ணாமலும் அதி சூக்குமமானபரமாகசியத்தைத் தெரிந்துக்கொண்டேன். இந்தரகசியத்தைத் தெரியப்படுத்தினது தேவரீருடைய புண்ணியமென்றுரைத்து தன்னுடைய எதாஸ்தானம் போய்ச்சேர்ந்தார். அன்றுமுதலாக ஒன்றினும் பற்றில்லாதவராய் சிலநாளிருந்து பூமி பிரதக்ஷணம்புரிந்து வருகின்ற புண்ணியனை சூரியனிடத்திற்பொருந்தி பாலும் நீரும் போலக் கலந்து போயினர்.

இதுதான் ஆத்மஞான முத்தியென்பது. இந்த அற்புதங்களைப் பார்த்து வந்தேன் ஓ, தேவந்திரனேயென்று ஜீவன் முத்தாத்மாவான நாரதபகவான்சொல்ல மேகநாதனுக்கு மெய்யறிவுவந்து பரமதருமம் இதுவென்றுணர்ந்து, பூமண்டல மெல்லாம் நொடியிற் போய்வருகின்ற புனிதனே உம்மாலே இந்தத்தருமம் தெரிந்தேனென்று தோத்திரம் பண்ணி நாரதரை வணங்கினன். அவரும் ஆசிர்வதித்து விடைபெற்றுக்கொண்டு தன்னெதாஸ்தானத்திற்குப் போனர், கேளும் தருமநந்தனனென்று பிரியமகலாத வீஷ்டுமர் சொல்ல உரிமையுள்ள தருமராஜன் சரீரம் பூரித்து தன்னைமறந்து உலகத்தார் கடைத்தேறுவதற்காக சுலபத்தில் ஒரே தருமத்தை உரைத்தருளிய உத்தமனே சித்தமதனைச் செயித்த சிதேந்திரியனே சரணம் சரணமென்று தலைமேற் கரங் கூப்பித்தொழுது சிலவு பெற்றுக்கொண்டு அஸ்தினபுரம் போனர்கள். மகாரிஷிகள், கிருபாச்சாரியர், விதுரமகாராஜன், ஸ்ரீ கிருஷ்ணபகவான், வேதவியாசர், முனிவர், பரதர், வசிஷ்டாதிப்பிரம கூட்டங்களும், பாண்டவர்களும் ஞானசோதிப் பிரகாசம்போல முகமலர்ந்து பிரம்மதேஜசுடையவர்களாய் நம்முடைய பாக்கியமே சிலாக்கியமென்று தங்களுக்குள் தாங்களே மகிழ்ந்துகொண்டாடிக்கொண்டு பிரதக்ஷண நமஸ்காரம் புரிந்து அவரவர்கள் ஸ்தானங்களுக்கு போய்ச் சேர்ந்து உண்டுடுத்தி சுகித்திருந்தார்கள். கேட்டிருந்த ரிஷிகளெல்லாஞ்சேர்ந்து, இதை படித்தவர்கள், எழுதினவர்கள், படிப்பித்தவர்கள், படிக்கச் செய்தவர்கள், படித்ததைக் கேட்டு பயன் விடாமலுரைத்தவர்கள்,

இதனுடைய தத்துவமறிந்து நடந்தவர்கள் இவர் கட்கெல்லாம்
இகத்திலுண்டாகிய துன்பம் நீங்கி இன்பமுடன் மண்மனை மக்கள்
மாடு வீடு யாவத்துமான சம்பத்தும் பெற்று வாழ்ந்து தீர்க்காயுளு
முடையவர்களாய் முடிவில் மோக்ஷம் பெறுவார்களென்றார்கள்.
அதை கேட்டானந்தத்தை யடைந்த தருமராஜன் முதலானவர்கள்
மறுநாள் வந்து தவத்திலுயர்ந்த ஐயா! ஒரு ஜீவனுக்கு மற்றொரு
ஜீவனால் வரும் துன்பம் அஜாக்கிரதையா யல்லது தெய்வச் செய
லா அதை விசிதமா யனுக்கிரகிக்கவேண்டுமென்று கேட்க வீஷ்டு
மர் சொல்லத் தொடங்கினர்.

## 53. மனிதர்களுக்கு தற்செயலாய் நேரிடும் மரணவவஸ்தை யானது யாருடைய செயலென்பதற்கு உத்தரம்.

இந்தக்கரும பூமியில் அருமையான களங்கரகிதனா யிருக்கப்
பட்ட பிராமணனொருவர் இருந்தார். அவருடைய ஸ்திரீயானவள்
புண்ணியவதி. அவனுக்கு ஒரேபிள்ளை. அந்தப்பிள்ளை காலோபாதி
கழிக்க கால்வாய்க்குபோகும்போது பாம்பு கடித்து அந்தவிஷம்
நீங்க ஒளஷத முதலிய கிசிச்சைகளும் பண்ணினார்கள். அதனால்
உபயோகப்படாமல் அந்தப்பிள்ளை இறந்துபோயிற்று. இந்த பின்
ளையைப்பற்றி யாவரும் தியங்கி, மயங்கி, கலங்கி இரங்கத்தக்கதாக
இறந்து கிடக்கிற புத்திரனைப்பார்த்து பெற்றவள் மனங்குன்றி வயி
று தாளாமல் முறையோ முறையோ வென்று கதறிப்பதறும்போ
து, பொருச்சுன னென்னும் பெயரினையுடைய, ஒரு வேடன் பே
ரறிவாளனகண்டு ஓட்டமாயோடிவந்து அந்தப்பிள்ளையைக் கடித்த
பாம்பை கையிற் பிடித்துக்கொண்டு இறந்துபோன பிள்ளையின் தா
யாருக் கெதிரில் விட்டுக்காட்டி இதோ உன்பிள்ளையைக் கொன்ற
பாம்பைக் கொல்லுகிறேன் பாரென்றான். அந்த பிராமணஸ்திரீ
யானவள் அப்பா வேடனே என்குழந்தை இறந்தது என்முன்வினை
போகத்தால் விளைந்த கொடுமையே யல்லாமல் கொன்றவர்களு
டையகுற்றமல்ல நீஏன் வீணில் இந்தப்பாம்பைக் கொல்லுகின்றாய்
இதனுடைய பிள்ளை குட்டி பெண்சாதியுடன் சுகமே வாழட்டும்
இதை கொல்லவேண்டாம் விட்டு விடென்றாள். பவளம் போன்ற
வாய்திறந்து பகர்ந்த பிராமணப் பெண்ணின் பேச்சைக்கேட்ட
வேடன் ஐயோ மானிடப்பிறவியில் சந்ததி முக்கியமானது அப்

பேர்ப்பட்ட சந்ததியைக்கடித்து கொன்ற பாம்பை அடித்து விடுவதே தருமம். இதைக்கொல்லுவதில் ஒரு துன்பமுமில்லை; யாவரும் இகழ்ந்து இரக்கப்படார்கள். பசும்பொன் மாலையைத் தரித்த அம்மணி உனக்கு ஒன்றுந் தோன்றவில்லை, உலகவியல்பு, யாவனொருத்தன் தான் ஜயம் பெறவேணுமென்று நினைக்கின்றானோ அவன் சத்துருவைக் கொல்வது தருமமே. தேவேந்திரனும் தான் ஜயமடைவதற்கு விருத்திராசுரனை வெகு பாடுபட்டு முடித்தான். பரமேஸ்வரர் தன்னைப்பகைத்து யாகம்விளைத்த தக்கனைக் கொன்றார். ஆகையால் பகைவரை உடனே கொல்லுவது உறுதி. அதனளவில் விசாரப்படலாகாது. தயை தாட்சணியம் என்னிப்பார்க்கப்போகாது துஷ்டநிக்கிரகம் பண்ணுவிட்டால் அக்கிரமமேலிட்டுப்போம். அம்மணியென்று கிராதகன்சொல்ல; அதற்கும் அந்தப் பிராமணப்பெண் மனங்கூசாமல் பசையுள்ள பால்மரத்தை வெட்டுவதுபோல் நஞ்சையுடைய நாகத்தை பதபதைக்கக் கொல்லுவையாகில் அதனுலிறந்தபிள்ளை எழுந்து வருவானோ? ஒருபோதுமில்லை. அப்படிக்கிருக்க விருதாவாய்ப் பாம்பை கொல்லுவதில் லாபமென்ன, வேலையில்லாவேலை அதைக்கொல்லும்போது தலையும் வாலும் உடலும் உயிரும் துடிப்பதைப்பார்த்து, நமது மனந்துடிப்போமே! இதுதான் காக்ஷியல்லது வேறொன்றுமில்லை. நீரதை கொலைசெய்யத் துணிவீராகில் நானதைப்பார்க்கப் பயப்படுவேன்: கொல்லாவிரதமே விரதம் (புலையுங், கொலையுங் களவுந் தவிர்வதே) புண்ணியம். ஓ, கண்ணியனே இந்தப்பாம்பை விட்டுவிடு மென்றும் உள்ளமுந் தேகமு நடுங்கி யுரைத்தாள். இப்படியாக வாதாடிக்கொண்டிருக்கிற பிராமணஸ்ரீயின் பேச்சையும், வேடனுடைய பெருமூச்சையும் கேட்டு அவ்வேடன்கையிற் சிக்கிக்கொண் டிருக்கின்ற சற்பம் கோபாவேசங் கொண்டு ஆர்ப்பரிக்கின்றவேடனை நோக்கி ஓ, மெத்தவுந் தெரிந்த வில்வேடனே, என்னைக் கொல்லுகிறேனென்று நீ எந்தமுறைமையினூற் சொல்லுகிறாய், உமக்கென்ன தருமமிருக்கின்றது நானென்ன செய்வேன் உன்னை ஏதாகிலும் கடித்தேனோ இந்தக்காட்டில் நீயும் நானும் புரண்டுக்கொண் டிருக்க, இதுவரையிலும் எத்தனையோ தரம் என்னை நீ மிதித்திருப்பாய் உன்னை நான் வருத்தி இருப்பேனோ, மிர்த்தியுதேவதை விதித்தபடிக்கு, இந்தப்பிள்ளையை நான் வந்து கடித்தேன், அப்படிக்கில்லாமல் என்சுயபுத்தியால் துஷ்டத்தனத்தால் தீண்டி இருப்பேனாகில் நீர் சொல்லவேண்டிய

தும் கொல்ல வேண்டியதும் நீதியே, எய்தவ னரிகிலிருக்க, அம்பை னோவதில் பயனென்னென்பதுபோல், செய்தவ னொருவன் பழியும் பிராணன்போகிற வழியும் நான் சுமக்கலானேன் பண்டமொரு பக்கம் பாவமொரு பக்கமென்பதுபோல் என்னை வருத்தப்படுத்துவது தருமத்திற்குப் பொருத்தமல்ல; ஞாயஞ்சரிதானு சொல்லுமென்று கேட்க அந்தப் பாம்புக்கு வேடன் சொல்லுகின்றான். இப்போது நீ சொல்லிய மிர்த்தியு தேவதையை ஆரறிவார்கள் பிரபஞ்ச மெல்லாம் பாம்புகடித் திறந்தானென்று பழியுன்பேரிற் சுமந்திருக்க நீயேதோ ஒருவழிகாட்டுகிறாய் பொல்லாதகொடுமை புரிந்தவன் நீ யல்லவா அடா படுபாவி சற்றேனு மனமிரக்கமில்லையா? தாய் தந்தையர் பந்துக்கள் வந்தவர்போனவர் நின்றவர் பார்த்தவர் கேட்டவர்களும் பதறுகிறார்களே, ஆதலால் பழிக்குப்பழி உன்னை கொல்லுவதே வழியென்று பகர்ந்தான். இப்படிக்கு வேடனும் பாம்பும் வெகுநேரம் வாதாடிக்கொண்டிருக்கிறபோது மிர்த்தியுதேவதை பிரசன்னமாய் மூவுலகத்திலும் தன்னதிகாரத்தை நடத்திக்கொண்டிரா நின்றவன் காலன் அவன் கட்டளைப்படிக்கு காற்றெனத்திரிந்து காரிய முடிப்பது நாம். அவன் எம்மை, அம்புபோல் எய்துவிடுவன். அவனெங்கே குறிவைத்தாலும் தப்பாமற்கொல்லுவோம் நாங்கள் ஒருவர்கையிலடங்கிய வேலைக்காரர்கள் நீங்கள், எங்களைக்கோபிப்பதும் நிந்திப்பதும் உங்களுக்குப் பாவனேரிடும் இப்போது இந்தப் பாம்பைக் கொல்லுவதனால் ஒருபலனு மில்லை. உலகத்தில் கர்மிகளாயிருக்கிற பேதைகள் சாஸ்திரத்தின் முடிவு அறியாத மூடர்கள் பேசுகின்ற பேச்சைப்போல் நீயும் பேசுகிறாய், பெரியோர்கள் வாசம்பண்ணுகிற காட்டுக் குரியவனாயிருக்கிற நீ, விவகாரந்தப்பியொருவேலை செய்யப்போமாவென்று, மிர்த்தியு தேவதை விளம்பியது. அதன் சொல்லைக்கேட்டு கானகவேடன் கனைத்து, நீர் எனக்கொருபழமொழிபடித்தீர் அதாவது, 'எய்தவனரிகிலிருக்க அம்பை னோவதெப்படி, என்பதாய் நீர் கூறியமொழியாதொரு குற்றமில்லை. ஒருவன்மீது வெகுகோடி பாணங்களை எய்யும்படியானவன் எதிரிலேநிற்கிறபோது அவன் விட்டபாணங்களை முன்னுதாக அறுத்துப் போட்டு அப்பால் எயதவன்பேரில் தாக்குகிறார்கள் அதை நிதானிக்குமிடத்தில் அம்பைபோன்ற உன்னைக் கொன்றுவிட்டுதேகவருத்தந் தீர்ந்தபிற்பாடு உன்னை யேவியகாலன் முதலாய்க் கணக்காகயிருக்கின்ற எய்தவன்பேரில் எய்வது தகுதியாதலால் பிரத்தியட்சத்தில் இந்தப்பாம்பு கடித்தபடியால் புத்திரன் இறந்தான், இதை எடுத்துப்

பேசவேண்டுமே யொழிய மற்றதைக்குறித்துப் பேசுவதற்கு விய வகாரமென்ன வென்று வேடன் சொல்ல, நீ, நானென்று பேசிக் கொண்டிருக்கிற சமயத்தில் இயாவருங் கொண்டாடப்பட்ட காலன் வந்து வேடனுக்கு முன்னின்றான். ஏன் பிள்ளாய் இந்தப்பாம்பைப் பிடித்துக் கொல்லுவேனென்றாய், ஒருவ ரொருவரைக் கொல்லக் கூடுமோ எப்போதும் ஊழ்வினையின்படிக்கு நடக்குமல்லாமல் வே றுண்டோ? வேதமுதலிய சாஸ்திர புராணங்களிற் றேறித் தெளிந்த பெரியோர்கள் (தாம்தாம் செய்தவினை தாமேயனுபவிப்பரென்று) சாற்றுகிறார்களல்லது அன்னியர்கள்பேரில் பின்னஞ் சொல்லுவ தில்லை, எல்லாம் நல்வினை தீவினையின் சுபானுபவமென்று எதுவந் தாலுஞ் சந்தோஷப்படுகிறதே யல்லாமல் வேறொன்று நினைப்ப தில்லை, நன்மைவருங்காலத்தில் எல்லாம் நன்மையாகவே வரும், தீமைவருங்காலத்தில் துன்பமேவரும், நல்வினை தீவினைகளின்படி, நடத்திவைக்கிறது எங்கள் சுபாவம் ஓ! வனவேடனே? அநியாய மாய் இந்தப்பாம்பைக் கொல்லுகிறேனென்பது அவசியமல்ல வென்றறைந்த காலனுடைய முகத்தை வேடன் ஏறநோக்கி நின் றான். இவ்வாறு வாதித்துக் கொண்டிருக்கையில் பர்வதம்போன்ற தனத்தையுடைய, பிராமணஸ்திரீ சொல்லுகின்றாள். ஓ ஐயமாரே? வீணாய்ச் சம்வாதம் பண்ணுவதில் என்ன பிரயோஜனம், மேல் வரும் வினையைத்தள்ளிக் கொண்டவர்கள் யாராகிலு மிருக்கின்றார் களா? நீங்கள் வாதுபுரிவதனால் பொழுதுபோகின்றது. இறந்து போன என் குமாரனுக்கு வயிறுப்பிப்போகிறது. அவனை சுடு காட்டிற் கொண்டுபோய் முடிக்கத்தக்க கடனை முடிப்பதற்கில்லா மற்போகிறது, மடிந்த பிள்ளையை வைத்துக்கொண்டு வயிறெரி வதைப் பார்க்கினும் எரிமூட்டி வைத்து தலைமுழுகிப் போட்டால் என் துயரம் நீங்கிப்போம், ஐயா! வேடனே: உமக்குக் கோடி சரணம் பாம்பை விட்டுவிடுமென்று வேண்டினாள். அந்த உத்தமி யின் வார்த்தையைக் கேட்ட வேடன் ஐயோ! உன்பாவ மிப்படியா வென்று மனதிரங்கி பாம்பை விட்டு விட்டான. அந்தப் பாம்பு வேடன்கரத்தி லகப்பட்ட மெலவுதீர்ந்து சரசரவென்றுபோய்விட்ட வுடனே, அக்கிராரத்திலுள்ளவர் களெல்லாஞ் சேர்ந்து பிராமணப் பிள்ளைக்கு நீர்க்கடனு. நெருப்புக்கடனும் நடத்தி ஸ்நானம்பண்ணி தங்கள் தங்கள் வீட்டுக்குப் போனார்கள். இங்ஙனம் வந்திருந்த வேடன் மிர்த்தியுதேவதை காலன்முதலானபேரும் அவர்களிடம்

போய்ச் சேர்ந்தார்கள். இது முற்காலத்தில் நடந்த கதையானபடியினாலே ஒருவர் ஒருவரைக் கொல்லக்கூடாது ஒருவராலொருவர் இறந்தார்களென்று சொல்லப்படாது. எல்லாம் வினையின் செயலென்று வினையொழிந்தால் தினையளவும் நிற்காது. அவுஷதமும்செல்லாது. இதை விசிதமா பறிந்துக்கொள்ளும். இன்னம் நீங்கள் கொன்றதாகவும் உங்களாலவர்கள் மடிந்ததாகவும் பிரம்மை முதலியசந்தேகமுண்டோ? உலக இயற்கை இடத்தைப்பற்றியுமுன்னிருந்த இறந்தவர்களைப்பற்றியுஞ் சொல்லுவதும் கவனிப்பதே காரியம். மேல் வினைமூண்டுமுடிந்தது காரணம்பற்றியே இதனால் உனக்கொருகொடுமையுமில்லையென்றுகடுமையகன்ற மனத்தினனாகிய வீஷ்மருரைக்க தருமராஜன் சங்கடநீங்கி இன்னமொன்று கேட்கின்றார். ஞானவல்லவனே! இவ்வுலகத்தில் இல்லற தருமத்துடனிருக்கிறபேர்கள் மிர்த்தியுமுதலிய எமனை வென்று மாறாத இன்பத்தை அனுபவித்தவருண்டோ? அப்படியுண்டானால் அருள்செய்யவேண்டுமையனேயென்று வேண்ட வீஷ்மர் சொல்லுகின்றார்.

## 54. எமவாதனைவென்ற கற்புடைய போகவதியின் சரித்திரம்.

ஓ! என்னன்புக்குரிய மன்னனே? மறுகுலத்திற் பிறந்து கறைதோய்ந்த வேலைக் கையிலேந்திய காவலன் சுயோதனராஜனென்பவன் இப்பூமியில் பிரசித்தமாயிருக்கப்பட்ட நருமதை நதியே ஒரு ஸ்திரீயாக வந்து இவனைப் பதியாகக்கொண்டு வாழ்ந்து வருகிற நாளையில், உலகத்திலிருக்கப்பட்ட பெண்களுடைய அழகெல்லாந்திரண்டு அவர்களுடைய புகழாகிய பதிவிரதா தன்மமெல்லாம் பொருந்தி ஒருபெண்ணாய்ப் பிறந்ததென்னும் படியாய்ப் புகழுள்ள அந்த ராஜனுடைய பெண்சாதி வயற்றில் ஒரு பெண்ணாயகம் பிறந்தாள். தாயுந் தந்தையும் அற்புதமடைந்து பெண்பிறந்த சந்தோஷத்தால் உச்சவாதிகள் நடத்தி அப்பெண்குழந்தைக்கு சுதாணையென்று பெயரிட்டு இராஜமுறைமையாக வளர்த்துவருகிற நாளையில், பேதை பெதும்பைப் பருவங்கடந்து பதினான்கு வயதிற்கு மேல் மங்கைப்பருவ நேரிட்டதை மாதாபிதா மகிழ்ந்து உதாசனக் கடவுளாகிய அக்கினிபகவானைப் பூசித்து வரச்சொல்லிக் கட்டளையிட்டார்கள். அந்தப் பெண்ணினுடைய தண்டை, சதங்கை, சிலம்பு

கொஞ்சத்தக்கதாகவும் சகலாபரணங்களுங்கலகலவென்றுஒலிக்கத் தக்கதாகவும் இரண்டு பொற்கிரிபோற்றிரண்டு தொய்யலெழுந்துப் புரண்டு கொங்கையைச் சுமந்து இடைதாங்கமாட்டாதென்று வங் கிச் சிவ்வாடத்தக்க தாகவும் கரத்திற் றரித்திருக்கப்பட்ட வளையல் கள் கலகலவென்று கோஷிக்கவும் மேகலாபரணம் பதினாறு கோர் வையுடன் பின்னும் முன்னும் மின்னிப் பாரிக்கும் படியாகவும் செவ்வரி, கருவரி, படர்ந்த செங்கண்களானது செவிவரையினும் பாய்ந்திருக்கவும் பவளம்போன்ற வாயில் பற்களாகிய ஆணிமுத் துப்போல் பிரகாசிக்கவும், இன்னம் விசித்திரமான ரூபசித்திர பொற்பிரதிமைபோல் வருகிறபோது; புருவமாகிய வில்லை வளைத்து சொரூபமாகிய கண்ணம்பு தொடுத்து முகவுல்லாச மிகு நகையும் பொடித்து மிகுசல்லாப சுரபதமும்படித்து அக்கினி தேவனிடத் திற்கு வந்தாள். இந்த விந்தைவந்த மிகுந்த சௌந்தரியத்தைப் பார் த்து கண் ணம்புக்குப் பயந்தவனாய் கால்பதறி, மயங்கி காமாக்கினி யாற்கலங்கி சரீர முலர்ந்து, சருகாய்ப் புலர்ந்து அடக்கமாட்டாத ஆசைகொண்டிருக்கப்பட்ட அக்கினி பகவான் சுதானையைநோக்கி, சுமுகமதியே, சுகுணவதியே, சுகிர்தமொழியே நீ யெனக்குப் பெண் சாதியாயிருவென்று வருந்தினன். இந்தச்சொற் கேட்டு அந்தப் பெண்மிகுந்த நாணத்துடன் தலை இறங்கி நின்று தோகைமயில் போற் சாய்ந்து, குயில்போற் கூவி கிளிபோல் வசனித்தாள், என் தாய் தந்தை என்னைப் பெற்று வளர்த்த சந்தோஷந்தீரச் சம்பிரம மாய் ஒருவருக்குப் பாணிக்கிரகணம் பண்ணிக் கொடுப்பதற்கு முன் னே என்னிச்சையாய் ஒருவர்பேரி லாசைப்பட்டிணங்குவது அழ கோ? எல்லாந்தெரிந்த உமக்கு நான் சொல்லவேண்டிய தென்னை உமதிஷ்டப்படிக்கு நடத்திக்கொள்ள வேணுமென்றால், உள்ளத்தில் விளைந்த ஆசையை விருதாவாய்ப் போக்காமல் என் தாய் தகப்பனிட த்திற்சென்று அவர்கள் சம்மதிக்கக் கொண்டு உமதிஷ்டப்படிக்கு முடித்துக்கொள்ளு மென்று சாற்றி தனது தாய்தந்தை இருக்கு மிடத்திற்குப் போயினள். இப்பால் அக்கினிபகவான் வெட்கப்பட்டு வேதக்குன்று வளர்ந்ததுபோல் வேதியன் வடிவங்கொண்டு சுயோ தனராஜனிடத்திற்குப் போனன். அந்த ராஜன் இந்தப்பிராமணனைக் கண்டு வணங்கி ஆசீர்வாதம்பெற்று தேவரீர் ஆரையா எங்கிருந்து வருகின்றீரென்று கேட்க அக்கினிதேவன் வெற்றிமாலைதரித்த வேந்தனே உருவத்தில் மிகுந்த அழகைப்படைத்த உன்னுடைய சுதானையை எனக்குக் கலியாணம் பண்ணிக்கொடும் நான் அதற்காக

வந்தேனென்றான். இராஜன் அதற்கு ஒன்றும் பேசாமலிருந்தான். அந்தவேளையில் பர்வதம் போன்ற தோளையுடைய அக்கினிதேவன் நாணி அப்புறம்போய் தன்னுடைய சுடர்க்கலையைச் சுருட்டிக்கொண்டு மறைந்துபோய் விட்டான். அப்பால் மூன்று லோகத்திலும் அக்கினியைக்காணமல் அலைந்து திரிந்து தேவர் முனிவர் பிராமணர் முதலியபேரும் வருந்தி திக்கடைக்கோலைத் திரித்தார்கள், அதனிடத்திலும் அக்கினி பிறக்காமற் போனபடியால் நித்தியாக்கினி, ஓமம், யாகம், சமையல்பாகம் தீபம் ஒன்றுமில்லாமல் உலகம் இருண்டுபோயிற்று இப்பேர்ப்பட்ட வேலைகளெல்லாங் குறைவற நடத்துகின்ற செங்கோலையுடைய இராஜன்மனம் வேறுபட்டு சந்தோஷமில்லாமல் சலித்துக்கொண்டான். இதென்ன நான்செய்த பாவமோ? என்னைச் சேர்ந்தவர்களால் எய்தியகுற்றமோ தருமந் தவறிப்போயிற்றோ காரணந்தெரியவில்லை யென்று கண்கலக்கமுடையவனாய் அக்குனிபகவான் ஓமத்தினிடத்திலிருந்து எப்போதும்போல் அவியேற்றுக் கொள்ளாமற் போனதென்ன அதிசயமென்று வெகுவிசாரமாய் நடுங்கி பெருமூச்செறிந்து யோசனையாயிருக்குங்காலத்தில், பிராமணர்களியாவருந் தபித்து ஸ்நானமுதலிய ஆசமனீயமில்லாமல் யோசனைபண்ணிப் பார்க்குங்காலத்தில் அக்கினிபகவான் வேதியருடனே விசாரப்பட்டுக் கொண்டான், ஓ, ஐயமார்களே சுதானையென்னும் பெண்ணிடத்தில் எனக்கு மோகமுண்டாயிருக்கிறது. அந்த ஆசைநீக்கினால் நான் புனிதனாகத்திரிவேன் இல்லாவிட்டால் என்சுடுகையைப்பார்க்கினும் காமாக்கினி கொளுத்திவிடுகிறது அது சகிக்கமாட்டாமல் ஒளித்துக்கொண்டிருக்கின்றேனென்றான். அதைக்கேட்ட பிராமணாள் இராஜனிடத்திற் றெரிவித்தார்கள். அப்படியாவென்று அரசன் மகிழ்ந்து தன் குமாரத்தியை சகலாலங்கார கன்னிகாதானமாக அக்கினிதேவனுக்கு தாராதத்தம் பண்ணினான், அக்கினியும் மன்மதசொரூபங்கொண்டு பெண்கையைப்பிடித்து அரசு ஆல் முருக்கினால் நாட்டிய அரசாணிக்காலைப் பிரதக்ஷணம் வந்து பெரியவர்களுக்கு நமஸ்காரம் பண்ணி தலைமையான பெண்ணாயகத்தின் இளமையான குஜத்தைத்தழுவி பெரும்போக வாரிதியிலழுந்தி வடவைக்கனலாகிய பெருந்தீயென்னப் பொருந்தி இன்பமாதுரிய இதயத் தேனருந்தி மருவிய சுதானையின் கருப்பத்தில் புண்ணிய உருவமேதிரண்டு ஒரு பிள்ளை பிறந்தான், தவத்தி லுயர்ந்த தவசிகளும் கிரியாக்கினிக் கதிகாரிகளாகிய வேதியர்களும் மங்களாசனஞ் சொல்லி வாழ்த்தும்படியாய் தேவர்கள்

புஷ்பமாரி தூற்றும்படியாய் புத்திரோற்சவ முதலிய கருமங்களைத்
தாட்சி இல்லாமற் செய்து அப்பிள்ளைக்கு ஞான சுதெரிசனன் என்
கிற நாமங்கொடுத்து குழவிப்பிறைவளரும் தன்மைபோல வளர்ந்து
வருகிற குமாரனுக்குப் பூணூற் கலியாணமும் பொருத்தி வேதாகம
சாஸ்திர புராணங்களும் ஐயந்திரியில்லாம லறிவித்து தன்மகன்
உலகத்தில் முயற்சியடைந்த பிற்பாடு கலியாணம் செய்வதற்கு விரு
ப்பமாய் அன்னப்பட்சி நாணிய நடையும் சொர்ண ஸ்தம்பந்தோற்
குந் தொடையும் மின்னற்கொடிவெட்கிய இடையும் பொன்னைப்
போற் பிரகாசிக்கும் உடையும் கிளிமொழியும் விற்கொண்ட வண்டி
னுஞ்சிறந்த விழியும் கொண்டலைப்போன்ற கொண்டையும் கற்
கொண் டுருண்டு முழங்கிய தண்டையும் களங்கமற்றிலங்கிய முக
மும் இளங்கனிக்கிசைந்த தனமாகிய நலமும் இங்கிதமனமும் எழி
லார்கனமும் அருந்ததிக் கொப்பாகிய கற்பும் ஆசாரபூசை ஆகமத்
திற்கொப்பும் போகவதி யென்னப்பெயர் சொல்லும் ஒரு மஹாரிஷி
யின் மகளாகிய பெண்ணரசியைப்பேசி நல்லமுகூர்த்தத்தில் தன்மக
னுக்கு விவாகநடத்தி பெண்ணும் பிள்ளையும் இல்லற வாழ்க்கையி
லிருந்து தருமங்க ளெல்லாவற்றையும் புரிந்து கிரகஸ்தாச்சிரமத்தில்
இருக்கிற விதிமுறை சொல்லி தப்பாமல் நடந்து விரதமிருந்து தரு
மத்தாட்சியும் கருமத்தாட்சியு மில்லாமல் தவமேலிட வாழுநாளை
யில்; சண்டனைவென்றிட வேண்டுமென்று உட்கொண்டு அங்ஙன
மிருக்கும் பெரியோருட னுரைத்து தானும் பெண்சாதியும் குரு
க்ஷேத்திரத்திற்குச் சென்று விசாலமான பர்ணசாலையொன்று ஏற்ப
படுத்திக்கொண்டு, அவ்விடத்திற் றவமாக நின்று அங்கே வருகின்ற
மாதவர்கள் மஹாரிஷிகள் இவர்கள் முதலாகிய பேர்களுக்குப் பாத
பூசை அர்க்கியபாத்திய உபசாரங்கள் செய்து திவ்யகந்தமூல கனி
வர்க்கங்கள் கொடுத்து வந்தனை வழிபாடிழைத்து சத்திய நித்திய
பத்தி முதலிய சாந்த வேதாந்த விரதத் தபோநிதியாகிய சுதெரிசன
மஹாரிஷியானவர் பொற்புடைமைவாய்ந்த கற்புடைமையணிந்த கா
தலியாகிய போகவதிகணவன்சொற் றவறும லிருந்தபடியால் அவளு
டன் பொருந்திவாழ்ந்து, நாளுக்கு நாள் தவமுமுயர்ந்து நான்குதிக்
கும் அடர்ந்து வரும் விருந்தினராகிய அதிதிகளுக்குப்பரிந்து உப
சரித்து பதியும் சதியும் விதியும் இதுவேயென்று தேவர்க ளெல்லா
ருங் கொண்டாடிப் புகழ்ந்து எல்லாத்தருமங்களிலும் இவர்கள்
இல்லற தருமம் சொல்லத் தரமல்லவென்று பல்லோருந் துதித்தார்

கள். இப்படிக்கிருக்கிற காலத்தில் சுதெரிசன ரிஷியானவர் தன் மனதிற் குடிகொண்டிருக்கப்பட்ட விரதமுடிவெல்லாம் தமது தருமபத்தினிக்குத் தெரியப்படுத்தினர். என் கண்ணுக்கினிமையான பெண்ணே. யாதாமொரு அதிதி இந்த ஆசிரமத்தின் வழிவந்தால் யாரோ எவரோவென் றெண்ணமல் அன்புபாராட்டி முழுகவைத்து அர்க்கியாதி பூசைபுரிந்து அட்சதை தாம்பூல சந்தனம்வைத்து தூபதீபங் கொடுத்து சுயம்பிரகாச சோதியாகிய சிவபெருமானுகவும் ஆதிமூல விஷ்ணுவாகவும் ஆத்மாக்களைப் படைக்கும் பிரம்மாவாகவும் வந்தனை வழிபாடு செய்வையல்லது வேறு மாறுபாடாய் நினையாதே. அவரை சிவசொரூபம் விஷ்ணுமயம் பிரம்மதேயசு என்று மதித்து பணிந்து துதித்து அவர்களுடைய உடல் வருத்தந் தீர்த்து உணவருத்திப் பொருந்தி ஆலவட்டம் போட்டு அடிமலரை வருடிப் பிடித்து அறுசுவையன்னம் வருந்தியுண்பித்து, அவர்கள் திருப்தியடைந்து இளைப்பாறி அவர்களாய்ப்போனல் ஆசிர்வசனம்பெற்று அடிமலரை நமது முடியுற வணங்கிக்கொள்ள வேண்டியது. இதை விட வேறு தருமம் புண்ணியம் எங்கணுமில்லை திங்கள்வதனுய் அதிதி பூசையே பூசை மற்றப் பூசை யெல்லாம் ஆசாரவயிற்றுப் பூசை இல்லறந் தேடிவந்த அதிதிகள் எந்தப் பொருளையும் விரும்பார்கள். ஒருவேளை எதைக்கேட்டாலும் சந்தோஷத்துடன் கொடுக்கவேண்டியதே முக்கியதருமம். கேட்டோருக் கிட்டோர், பெரியோர் இடாதோ ரிழிந்தவாழ்வினையுடையோர். அவர்கள் ஒருவேளை ஆநந்தமாய் உன்னை விரும்பினுலும் முகஞ்சுளியாமல் மேனி நெளியாமல் வீட்டிலொளியாமல் மேனிவிடுவதே மேன்மையும் தருமத்திற்கு வேராகும். இதன்றி நானில்லாதபோது துறந்தோர் முதலிய பேர்கள் வந்தால் இப்போது நானுனக்குத் தெரிவித்திருப்பதை பிரணவப்பொருளாகக் கொண்டு பூசித்தனுப்புவதே உனக்குக் கடைமை. என்னுடைய வார்த்தை உனக்குக் கடைப்பிடியுடைமை. இதுவே தருமமென்று, இன்னுஞ் சொல்லவேண்டிய இயற்கைகளெல்லாஞ் சொல்லி இதனுல் இல்லற தருமத்தைக் கிரமமாக நடத்தினபேர்கள் பெற்ற பேறும் பலப்பேறும் எல்லாம் எடுத்துக்காட்டி இருவருமனங் கலந்து வாழ்ந்து வந்தார்கள். ஒருநாள் பெண்சாதியை பர்ணசாலையில் வைத்து தருப்பை சமித்து மாவிலை முருக்கிலை புரசிலை கொண்டுவரும்படியாய்க் காட்டுக்குப்போனர். இந்தப்பதிவிரதா சிரோமணியானவளிருந்த இடத்திற்கு ஒரு பிராமணன் சகே

லென்று வந்தான். அவன் சாஸ்திர, வேத ஆகம புராணஞ் சகல
நூல் கற்றவன், திடமனம்பெற்றவன் அவனைப்பார்த்துதேய்ந்த
இடையுடனே முனமுஞ் சோரும்படிக்குப் பயந்து திடுக்கிட்டு திடீ
லென் றெழுந்து எதிர்சென்று நின்று உபசாரம்பேசி வேதியர்களி
ருக்கப் படுக்கப் புசிக்க விதித்திருக்கின்ற பர்ணசாலைய் பாங்கி
லழைத்துக் கொண்டுபோய், தர்ப்பாசனத்தி லுட்காரவைத்து
பாதார்ச்சனை முதலிய தூபதீப பரிசுங்கொடுத்து; அவருடைய அடி
களில் தன்முடியைப் பதித்து தண்டனிட்டு சுவாமி அடியாள் செய்
யவேண்டிய பணிவிடை இன்னதென்று கட்டளையிடவேணும்.
நாயேன் கடைத்தேறுவதற்காக எழுந்தருளிய ஞானக்கனியே
யென்று தொழுதனள். வந்த பிராமணன் சந்தோஷப்பட்டு அந்தத்
தில் மிகுந்த தோடியே கந்தற்பன் கணையால் நொந்து வந்துன்னை
யடைந்தேன் என்சிந்தை மையலைத் தீர்த்தருள் தையலே உன்ன
முதக்குடமலையையும் அதரக்கனியையும் கேட்டோடிவந்த என்
மோகத்தைத்திரும் தாகத்தைத் தாரும், என்று பலவாறாகவேண்டி
னான். அவன் சொல்லைக்கேட்ட உத்தமி சற்றுங் கலங்காமல் அந்த
இடத்தை விட்டும் விலங்காமல் பத்திரசமாய்ப் பணிந்து ஐயனே!
இதுமுற்று முணர்ந்த முனிவர்கள் சொல்லுமுறைமையோ தாங்கள்
விரும்பிக்கேட்ட தானத்தை நிதானித்தால் வானத்தில் மேலாகிய
பதவிதருமோ? இல்லை, இது உயிருக்குதவியாய் வருமோ ஐயோ
அற்பகாமத்தினால் உமது விற்பனமெல்லாம் வீணாய்ப்போய், சொற்
பனங்கண்டவர்போற், சோம்பி கற்பனையாகிய நரகத்தில் விழக்காரி
யமேன். உம்மைத்தொட்டு என்னையு மிழுக்குமே தீமைக் கேதுவா
ய காரியங்களிற் பெரியோர்கள் பிரவேசிக்கமாட்டார்கள். விருப்
பங் கொள்ளார்கள். அநித்திய தேகத்திற்கு அநித்தியந் தேடு
வது அநித்தியமே; ஆதலால், பெண்ணின் பந்தவிர்த்து இந்த இல்
லறத்தி லிருக்கப்பட்ட பதார்த்தங்களில் எதைகேட்கினுந் தருகி
றேன் பின்னை எது வேண்டினுங் கேளுமையாவென்றும் பிறன்மனை
நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறமென்றும் நீதியுரையிரு
க்க தாங்கள் இப்படிச் சொல்வது அழகாகுமாவென்று அந்தப்புனித
வதி புகல, அந்தவார்த்தையைக்கேட்ட பிராமணன் நகைத்து, இந்த
வேளையிலெனக்கு வேண்டியது இன்பம், நீ வீண்ஜம்பம்பேசுகிறாய்,
நீ என்னதந்தாலும் என்மனத்தினாலுங், காத்தினாலும், தீண்டேன்
ஒருபொருளை ஒருவரிடத்திலும் வாங்குவதில்லை என்னும் விரதமு
டையேன், இப்போது நான் மோகவிகாரங்கொண் டிருக்கின்றேன்

நீ தடை படுத்தாமல் உன்னதரபானந்தருவாயா? தரமாட்டாயா? என் பிராணன் போய்விடும்போ லிருக்கிறது உனக்கு பாவமும் பழியும் வரும் ஆகையால் சீக்கிரம் வாரும் உட்காருமென்று செப்பினன். அந்த ஆரணனுரைத்த காரணத்தைக்கேட்ட பூரணசந்திரோதயம் போன்ற வாரணதனத்தையுடைய புண்ணியக்கன்னி அநேக விதமாக எண்ணி தீர்க்காலோசனைபண்ணி கிலேச முள்ளவளாய் இனி என்னசெய்வேன் தெய்வமே! இவருரைத்த வார்த்தையோ தடுக்கக்கூடாமலிருக்கிறது நமது நாயகன் கட்டளையோ அதிதியானவர் என்னகேட்டாலுந் தடையறக் கொடுப்பதே தருமமென்று மொழிந்து தானும் இல்லை என்னுமல் எதுவுங்கொடுக்கிறேனென்பதாய் விரதங்கொண்டிருக்கின்றார் அவருடைய விரதமும் பங்கமாகப்படாது; (கற்பனைப்படுவது சொற்றிறம்பாமை) என்னும் நீதி வாக்கியப்பிரகாரம் நமது பதியினுத்தரவின்படி நடக்கிறது பழுதில்லாத தருமம், அதிதிகளின் மனது திருப்தியாக்கிறது இல்லறவாழ்க்கையினியல்பு இவைகளை கவனித்துப்பாராமல் விலக்கிவிட்டால் இதுவரையிலுந் தேடியமனைவாழ்க்கைப் பெருந்தவம் அடியோடழிந்துபோம், நாடியதைக் கொடுக்கிறது நல்லறமே இல்லறம், நாமிவருக்குடன்பட்டால் நாணம், மடம், அச்சம், பயிற்பு இந்நான்கு மடக்குணமுங் கற்புடைமையுங் கெட்டுப்போம். இதற்கியாது செய்யத்தக்கதென்று கிலேசங்கொண்டு முடிவில் ஸ்திரீகளுக்கு புருடன் தெய்வம் அவருடைய ஆக்ஞை திருமந்திரம் ஆதலால் நம்முடைய கணவன் நவின்றிருக்கின்றபடிக்கு மனஞ்சுளுக்கில்லாமல் உடன்படுவதே மஹாபதிவிரதாதன்ம மென்று மனஉறுதிகொண்டு, தன்புருஷனைத் தெய்வமாகச் சிந்தையிலிருத்தி சுவாமி, என் கர்த்தாவாகிய பர்த்தாவின் சொற்கடவாமல் நடப்பேனுகில் லோகாபவாதத் தடையாகிய இடையூறு என்னையென்ன செய்யக்கூடும் மற்றொன்றுக்கும் யான் பயப்பட வேண்டியதில்லையென்று குலமடந்தை யானவள் அந்தப் பிராமண அதிதியை நோக்கி ஓ! ஐயரே, தேவரீரிச்சை தீரும்படிக்குச் செய்யலாமென்று முல்லையரும்பைப் போன்ற தந்தங்கள் பிரகாசிக்கும் படியாய் நன்கத்து கட்டியணைத்து முத்தமாடி அதரபான மூட்டினுள். இவளருந்தக்கொடுத்த இன்பரச சரசசல்லாபங்களினுல உல்லாசமாயிருந்து அந்தப்பெண்கொடியாகிய போகவதியும் வந்தவேதியனும் ஒரு அறைக்குள் நுழைந்து இன்பமனுபவித்துக் கொண்டிருக்கும் போது அந்தவேளையில் 'காட்டுக்குப்போயிருந்த கணவன் வந்து

தான் கொண்டுவந்த தருப்பை முதலிய சமூத்துகளை ஓமவேதிகையில் வைத்துவிட்டு தன் பத்தினியாகிய உத்தமியைக் காணாமல் படபடப்புடனே அவள்பேரைச் சொல்லிக் கூப்பிட்டார். அந்த ஓசையை போகவதிகேட்டு வந்த வைதீகபிராமணன் முகத்தைப்பார்த்தாள். அந்த அதிதியானவன் கடகடவென்று பற்கடித்து நீ கடைத்தேறுவாய் பேசாதே? பேசாதே? மிஞ்சிப்பேசுவையாகில் உன்னைச் சபிப்பேனென்றான். அதைக்குறித்து யோசித்து நாமிப்போது இவருக்கு உடன்பட்டோம், இந்த அதிதியின் வாதை தீர்ந்து இவர் ஆநந்தப் படுவதற்குமுன்னே நாமுறித்துக்கொண்டுபோவது முதன்மையன்று. நல்லது நாயகனுக்கு நாமிங்கிருக்கிறோமென்று தெரியச் செல்லலாமென்றால் இந்தப்பிராமணர் சபிப்பார். ஆகையால் நம்முடைய வினைப்பிரகார முடியுமென்று பேசாமலிருந்தவிட்டாள். இப்பால், இவன் புருஷனானவன் அநேகந்தரம் கூப்பிட்டு மனந்திடுக்கிட்டு விட்டுக்குள் நுழைந்து பார்த்தபோது அவ்வீட்டிலிருந்த அதிதிப் பிராமணன், ஓய் பிராமணனே மதிமருளாதே கவலைபடாதே உன் மனைவி அதிதிபூசை பண்ணுகிறாளென்ன: இக்கோதைக்கிசைந்த மணவாளன் சொற்குறிப்பறிந்த குணவாளன் மேலானகதிசம்பாதிக்க விரும்பினவன் புண்ணியமெல்லாவற்றையும் ஓரே திரட்டாக உருட்டி தானேகைக் கொள்ளவேண்டுமென்னுங் கருத்தையுடையவன், அதிதியின் பேச்சைக்கேட்டு ஆநந்தமாய் சரீரம் புளகித்து மனங்குளிர்ந்து மேன் மேலான பாக்கியங் கண்டவன்போல் பூரித்து ஆடிப் பாடினான். வேதபாடங்களைச் சொல்லிக்கொண்டாடினான். ஜன்மசாபல்யமானேன், என் தந்தை தாய் தேடிய தவமேதவம். மற்றதெல்லாம் அவம் நானென்னென்று சொல்லுவேன். அதிதியாயெழுந்தருளிய ஆதியுமவரே யாவற்றிற்குமேலான அறிவுமவரே திரிமூர்த்தி சொரூபமவரே, எனக்கு முன் பிறந்த முதல்வருமவரே. விரதமுமவரே. விவேகமுமவரே. வெற்றியுமவரே. யுக்தியுமவரே. சக்தியுமவரே. சித்தியுமவரே யாவும் அவரேயென்றெண்ணுவது என்வழக்கம், இது நிச்சயம் இதற்குப் பஞ்சபூதமும் சூரியசந்திரரும் என்மனமும் சாட்சி. உண்மை என்பதற்கு திருஷ்டாந்தக்காட்சி, இதுவே தருமக்காணியாட்சியென்றுரைத்து ஐயா, மஹானுபாவா! அதிதிகள் ஆசைப்பட்டு விரும்பினபடிக்கு வழிபடச் சொல்லி உத்தரவு செய்திருந்தேன், முன்னம் நானுரைத்தவண்ணம் என் பெண்சாதி சொற்றவராமல் அதிதி பூசை பண்ணுகிறாள், மிகவுஞ் சந்தோஷம் சந்தோஷமென்று வாசலிற் போய் நின்

றுவாயோயாமற்றுதித்தான்; அப்போது அசரீரி இதெல்லாந்தெரி
ந்து ஓ! அதிதியே! இந்தமஹானுபாவன் சொன்னவார்த்தைகளியா
வும் சத்தியமே. உண்மைதான் அகம் புறமிரண்டும் ஒத்தவன் குற்ற
மில்லை என்றது. அந்தவேளையில் அந்தப்பதிவிரதையைப்பக்கத்தில்
வைத்துக்கொண்டு வீட்டுக்குள்ளிருந்த வேதியன், தான் எடுத்துக்
கொண்டுவந்த வேடத்தையொழித்து எமதருமராஜனாகிய எவரூப
மெடுத்து காலபாச தண்டு சூல கோலத்தைத்தாங்கி எருமைக்கடா
வாகனத்துடன் தேவதைகள் ரிஷிகள் திக்குப்பாலகர் சூழப் பிரத்
தியட்சமாயினர். உடனே போகவதியும் அவள் புருடனான புண்ணி
யவானும் பிரதக்ஷண நமஸ்காரம் புரிந்து அனேகவிதமாகத் தோத்
திரஞ்சொல்லிப் போற்றிவாழ்த்தினார்கள். நான்கு திக்குகளிலும்
தேவதைகள் புஷ்பமாரிவாரித்தூற்றினார்கள். உலகெல்லாநிறையக்
குறைதவிர்ந்தார்கள். தருமதேவதையும் உடல்குளிர்ந்து இல்லற
நடத்திய சதிபுருஷா ளிருவரையும் பார்த்து, உலகத்தில் உங்களைப்
போல் ஒருவரையுங் கண்டிலேன், உத்தமனத்தரே! உமக்குவேண்
டிய வரங்களும் தருகிறேனென்ன, சுவாமி அடியேனுக்கு எமகண்
டனை எமவாதனை இல்லாம லிருக்கும்படிக்கு வரங்கொடுக்கவேண்டு
மென்ன, அப்படியே எத்தனை காலம் இவ்வுலகிலிருக்க இச்சையோ
அத்தனைகாலமும் அன்போடிருந்து அதிதிபூசை புரிந்து பிரபஞ்சத்
தாசையின்னிட்டபோது தேவலோகத்திற்போயிருந்து போகபாக்
கியங்களை யனுபவிக்கும்படி வரங்கொடுத்தேன், இன்று முதல் என்
றென்றைக்கும் எமனுடைய உபத்திரமில்லை, என்றியம்பிபதிவிரதா
சிரோமணியாகிய போகவதி யம்மனைப் பார்த்து அம்மா உன்னு
டையதானம் நிதானத்திற்குமெச்சினேன். சந்தோஷமானேன், நீ
இன்றுமுதல் போகவதியென்னும் பெருமையுடன் வேகவதியென்
கின்ற நதியாய் புனிதமாய் தீர்த்தமகத்துவமாய் என்னாளும் வற்றா
மல் உன் புருஷனுக்குமாத்திரம் ஸ்திரீயாய் மற்றவர்களுக்கு சகல
பாபங்களையும் போக்கடிக்கின்ற புண்ணிய நதியாய்வாழ்கவென்று
வரங்கொடுத்தது, பெரியோர் முதலிய பேர்களும் புகழ்ந்து ஆசீர்வதி
க்கும்படிக்குக் கண்டுகளித்து தங்கள் தங்களேதாஸ்தானம்போய்ச்
சேர்ந்தார்கள். அந்த தருமதேவதை கொடுத்த வரத்தின்படிக்கு
எமனை ஜயித்து இன்பமாக வாழ்ந்திருந்தார்கள். விரிந்தபூமாலைபொ
ருந்தியதருமநந்தனா! இல்லறத்திற்கு எடுத்துரைத் திருக்கின்றநெறி
முறைநீதிவழியின்படி நடந்தால் காலனை வெல்லலாம், கதியையும்
பெறலாமென்று வீஷ்டுமர் பலபலவிதமாய்ப் பன்னினார்.

## 55. விசுவாமித்திரர் பிரம்மரிஷியான வரலாறு.

அப்பா, அரியோனேசூரியகுலத்திலவதரித்த காதிராஜனுடைய காதலன் கௌசிகராஜன் வெகுநாள் இராச்சியபாரம் பண்ணிக் கொண்டிருந்துகடைசியில் பிரம்மரிஷியானுன் வனதுவரலாற்றைக் கேளும். தமக்கையும்தங்கையுமிருவர், ஒருத்தி ரிஷிக்குவாழ்க்கைப் பட்டாள். மற்றொருத்தி ராஜனைக் கட்டிக்கொண்டாள். இவ்விருவருக்கும் பிள்ளை இல்லாமல் ரிஷியுடன் சொல்லி பிரார்த்தித்தார்கள். அந்தரிஷி நீங்களிண்டுபேரும்மாதவிடாய்வந்த நான் காம்நாள் கங்கையில் ஸ்நானம்பண்ணி, அக்கரையோரத்திலிருக்கின்ற இரண்டு மரத்தின் பெயரை அவைகளுக்கு உபதேசம்போற்சொல்லி; அதைத் தழுவிக்கொள்வீராகில் கர்ப்பமுண்டாருமென்றார். அவர்களவ்வாறு செய்யாமல் மறைதியினல் தங்கைக்கு குறித்த மரம் அக்காளும் அக்காளுக்கு குறித்தமரம் தங்கையும் அணிந்துவந்தார்கள், ரிஷிபார்த்து நீங்கள் நான் சொன்னபடிக்கு நடவாமல் மாறிப் போனபடியால் ரிஷி பத்தினியாகிய உன்வயிற்றில் பிள்ளை பிறந்து பிராமணகுலமென்கிற பேர்மாத்திர மிருக்க க்ஷத்திரிய கிருத்தியமாய் நடப்பான். ராஜபத்தினியான உன் கர்ப்பத்தில் க்ஷத்திரியனுகப் பிள்ளைபிறந்து பிராமண நெறிமுறை பிசகாதவனுவான். இது வினைவசத்தால் நீங்கள் தேடிக்கொண்ட நியமமென்று அனுப்பினுர். அப்படியே கருப்பமுற்றி இருவரும் பெற்றூர்கள். இது பூர்வகர்மம் இவ்விதத்தாற்பிறந்த கௌசிகராஜன் வெகுகோடி காலந் தவசுபண்ணி பிராமணனுகிறதற்கு மெத்தவும் பிரயாசப்பட்டு பிரம்மரிஷித் தொப்பாய் விசுவாமித்திரரென்று பெயர்வகித்தார். அவர் பட்டபாடெல்லாம் நீ கேட்டிருப்பாய் அதைக்குறித்து நான் பேசவேண்டியதில்லை. ஆதலால் பிராமணமகத்துவம் மகாபெரிதென்று சதுர்முகனும் சொல்லி இருக்கிறுனென்று அவர்களுக்கு அருள்புரிகின்றூர்.

## 56. க்ஷத்திரியன் பிராமணனுன பிரகரணம்.

முற்காலத்தில் வீதிவ்வியராஜனென்று யாவராலும் கொண்டாடத்தக்க ஒரு இராஜன் இராச்சியபாரம் பண்ணுகிற நாளில்,

அவனுக்குச்சமானமான பிள்ளைகள் நூறுபேர் பிறந்தார்கள். அவர்கள் நூறுபேரும் பிரபலமாய் காசிதேசத்தை ஆளப்பட்ட ராஜனுடைய குமாரர்களுடன் கனத்த சண்டை விளைவித்து அவர்களைக் கொன்றார்கள். அந்தப் பிள்ளைகளின் தந்தையாகிய காசிராஜன் பார்த்து பரத்துவாச ரிஷியினுடைய ஆசிரமத்திற்குப் போய் அவரைக் கண்டு கும்பிட்டு நின்று தோத்தரித்து தீர்க்கதண்டன் சமர்ப்பித்து தன் குமாரர்களுக்கும் வீதிவ்வியராஜன் புத்திரர்களுக்கும் யுத்தம் நேரிட்டு அந்தயுத்தத்தில் தன் பிள்ளைகளிறந்து போன விருத்தாந்தமெல்லாஞ்சொல்லி மிகுந்த குறையுடன் விசனப்பட்டார். அதனால் பரத்துவாசருக்குக் கிருபைவந்து காசி ராஜனுக்கு நீதிவசனங்களை சொல்லி எல்லாச் சோபமுந் தீர்ந்து பழமையைப் பார்க்கினும் புதுமையாய்ப் பிரபலமாய்ச் சுகம் பெறும்படியாக ஒரு யாகஞ் செய்வித்து அந்த எக்கியத்திலிருந்து ஒரு புஜபலமுள்ள சுத்த வீரனை உண்டாக்கினார். அந்தவீரன் திரிலோகத்தையுஞ் செயிக்கும் படியாகிய திடதீரன். அவனைக்கண்டு சகல பெரியோர்களும் வாழ்த்தினார்கள். அப்பேர்ப்பட்ட பிள்ளையானவன் வீதிவ்வியராஜன் பிள்ளைகள் பேரிற் பகைத்து எதிர்த்து சண்டை விளைத்து அவன் நூறு பிள்ளைகளையு நறுக்கி, அப்பால் இப்பேர்ப்பட்ட துட்டரைப் பெற்றவனெங்கே யென்று சதுரங்கப் படைகூட்டி வீதிவ்வியராஜனைத் தேடிப்போகிறபோது இந்தச் சேதியைக் கேட்ட இராஜன் ஒட்டமாயோடி பிருகு மஹாரிஷியினாசிரமத்திற் புகுந்து சுவாமி! உமது திருவடிக்கடைக்கலம் எனது பிராணனுக்க பயஸ்தங்கொடுமென்று பிரார்த்தித்தான். அவனைத் தொடர்ந்து முக்கியமாய்ச்சென்ற காசி ராஜனுடைய எக்கிய குமாரன் பிருகு மஹாரிஷியின் பர்ணசாலைக்குட்புகுந்து அவருக்குத் தகுந்த தோத்திரம் பகர்ந்து ஐயனே, எங்கள் குலத்தைக் கருவறுத்தபலத்த திருடரைப் பெற்றவன் தங்களிடத்தினுழைந்து மறைந்திருக்கிறான். அவனைக்கைப்பிடியாகக் கொண்டுபோகவேண்டும். அதற்குத் தடைசொல்லாமற் செலவுகொடுஞ் சுவாமி யென்று பாதத்தில் வீழ்ந்து கரங்குவித் திறைஞ்சினான். அதற்குப் பிருகுமஹாரிஷி இதங்கி ஓ! சகலகலையுங்கற்ற இராஜபுத்திரா உனக்குரியசத்துரு இவ்விடத்திற்கு வரக்காணோம். இந்த ஆசிரமத்திலுமில்லை இருந்தானாகில் கண்டு பிடித்துக் கொண்டுபோவென்று இரண்டுதரஞ்சொன்னார், அந்த வீரன்கேட்டு கோபங்கொண்டு குதித்துப் பார்க்கிறபோது, அந்தப் பிருகு நம்மிடத்தி

லடைக்கலமென்று அடைந்தவனை எப்படி காட்டிக் கொடுப்பது ஐயோ, அதிக பாவமாயிற்றே யென்று அருள்சுரந்து தமது தவ மகிமையால் வீதிவ்வியன் அனேகம் பிராமணரூபமாயிருக்கிறதை காசி ராஜபுத்திரனாக வந்து புகுந்த வீரன்கண்ணுக்குத்தோன்றும் படியாக நினைத்தார். அவரெண்ணிய வண்ணம் வேதபாராயணம் பண்ணிபுண்ணியனாகப் பொருந்தி இருந்தான். வந்த எக்கிய இராஜகுமாரன் அந்த ஆசிரமமெல்லாந்தேடி பகைவனைக் காணாதபடியால் மறுபடியும் பிருகுமஹாரிஷியினிடத்தில் வந்து, சுவாமிகளே அபசாரமென்று வெகுவித உபசாரமாய் வேண்டிக்கொள்ளுகிறேன். மனம் பொறுத் தருளல்வேண்டு மாதவனே என்றுவணங்கினான். அவருஞ் சந்தோஷமாய் ஆசீர்வதித்தருளினார். அவரிடத்திற் செலவுவாங்கிக் கொண்டு காசிபட்டணம் போய்ச்சேர்ந்தான். அன்று முதலாகபிருகுமுனிவர் தம்முடைய சொற்பழுதுறாமல் வீதிவ்வியனைப்பார்த்து நீ இன்று முதலென்றென்றைக்கும் பிராமணனாகவே இருந்துவிடென்று கட்டளையிட்டருளினார். பிரமாணந்தப்பாமற் செய்தபேருளினால் பெறுதற்கரிய பிராமண ஜனனப்பேறும்பெற்று மகிட்சியுடன் தவம் பண்ணிக்கொண்டிருந்து திரியாக்கினியிடத்தில் அநேகம் பிள்ளைகளை யுண்டாக்கிக்கொண்டான். அந்த ஓமாக்கினியிலுதித்த பிள்ளைகளும் பிராமண பிரம்ம குலமேயானார்கள். இதைக் குறுத்துப் பார்க்குங் காலத்தில் அப்பிள்ளைகள் அக்கினியிற் பிறந்தபடியினாலேயும் இவர்களின் தந்தை பிருகுரிஷியி னனுக்கிரகத்தினால் பிராமணனான படியினாலேயும் அவருக்குப்பிறந்த பிள்ளைகள் பிராமணராகக் கூடுமென்பது தகுதியான விதிமுறைமைதான் சந்தேகமில்லை. தருமபூபதியேயென்று பிரம்மாவுக் கீடாகிய வீஷ்மர்விடை கொடுத் தருளினார்.

"பொய்மையும் வாய்மை யிடத்தபுரை தீர்ந்த
நன்மை பயக்கு மேனில்"

## 57. தங்கள் தங்கள் எண்ணத்தை நிறவேற்றிக் கொள்வது அவர்கள் வல்லபமா அல்லது வினையின் வல்லபமா என்ற பிரசினைக்கு உத்தரம்.

ஐயா, இந்த உலகத்தில் சிலபேர் ஒவ்வொரு பிரதிக்கினை பண்ணி அந்தப் பிரதிக்கினைப் பிரகார முடித்துக்கொள்வது அவர்களுடைய வல்லமையா ? அல்லது வினையினுடைய வல்லமையா என்று

கேட்க, வீஷ்டுமர் சொல்லத் தொடங்கினார் கேளும் தருமநந்தன
யாதொருத்தர் பிரதிக்கினைபண்ணி அது முடிவுபெறுவதற்கு அதற்
குண்டான முயற்சிகள் எத்தனை இயற்றவேண்டுமோ அத்தனையுஞ்
சோம்பலில்லாமற் பண்ணினாலும் அதுமுடிவதற்கு மேல்வினை
விளைந்திருந்ததே யாகில், அந்த வினையே எல்லாவற்றையு முடிப்ப
தற்கு அனுகூலமாயிருக்கும், தீவினை இருக்குமாயின் தேடிச்செய்யு
முயற்சியெல்லாந் தீதாய்ப்போய்விடும். ஆனால் நல்வினை தீவினை
யென்று நாடி சோம்பலாய் முயற்சிசெய்யாம லிருக்கப்படாது.
முயற்சிபாராட்டாமற் போனால் மேல்வினைக்கு ஆதாரமில்லை. அது
வுங் கைகூடாது, அப்படியானால் மேல்வினை என்னமாய்ப்போமென்
று கேட்பாயாகில்; மேகத்தில் பளிச்சென்று வெளிச்சங்காட்டி
மறைந்துபோகின்ற மின்னல்போல் இவருக்குச்சற்றே கிரம மிருக்
கக்காட்டி மறைந்துபோம். இதுதான் மேல்வினையின் விளைவு ஆகை
யால் என்னேரமும் முயற்சியிலேயே இருக்கவேணும். அவரவர்கள்
முயற்சிக்குத் தகுந்ததுபோல் இருவினை விளையு மென்றறியும்.
முளைந்து பிரகாசிக்கச்செய்யு முயற்சியாவது காரியம். வினையானது
காரணம். காரணமின்றிக் காரியங்கைகூடாது. அதெப்படி யென்
றால், நன்றாய் முற்றிக்காய்ந்து தேறியவித்தானாலும் நல்ல நிலத்
தில் விதைத்து எருமுதலியதுங் கொடுத்துத் தண்ணீர்பாய்ச்சலி
னால் அந்த விதை முளைத்து கொழுமையுடன் வளர்ந்து குணமுள்ள
பலனைக்கொடுக்கும் அந்தநல்விதையை உவர்நிலத்தில் விதைத்தால்
முளையாது. தப்பிமுளைத்தாலும் பலனைத்தராது. அத்தன்மைபோல்
முயற்சிசெய்யாமற்போனால் நல்வினையுங் கெட்டுப்போம். எவ்வ
ளவு முயற்சிசெய்கின்றார்களோ அவ்வளவும் நல்வினையானது பிர
காசிக்கச்செய்யும். நெய்யிருக்கிறவரைக்கும் வர்த்தியிற்பற்றிய விள
க்குபிரகாசிக்கும். நெய்யற்றால் திரியெரிந்து நெருப்புங்கூட அவி
ந்து அப்பாற் புகையும். இன்னும் முயற்சி இருந்து ஒருவேளை வினை
இல்லாமற்போனால் அதிகபலன் கைகூடமாட்டாது முயற்சியும்
வினையும் சமத்துவமானால் மெத்தப்பிரபலிக்கச்செய்யும் இதனால்
காரணமில்லாமல் காரியமும் பண்புபெறாது. காரணமின்றிக் காரிய
முமாகாது. அதற்குத் திருஷ்டாந்தம் காற்றில்லாமல் அக்கினி
ஜொலிக்காது. நெருப்பில்லாமல் காற்றினாலேயாகம் நடக்காது.
இதை உன்னறிவினாற் றெரிந்துக்கொள்ளும் அறன்குமாரனேயென்
று வீஷ்டுமருரைத்தருளினார். அதற்கு தருமர்பணிந்து சொல்லு
கிறார்.

ஐயா! ஒருவருக்குச் சுகமிருக்குங்காலத்தில் அவருடனிருந்து விருந்து முதலியது மநுபவித்து அவர்கட்குத் துன்பம் வருங்காலத்தில் மிக்கனவாய்க்கூடிய விகிதத்தை நாடாமல் விட்டுவிடுகிறதா? அல்லது கூட இருந்து அவர்களுடைய நல்வினை தீவினைதம்முடையதென்று அனுபவிக்கிறதா ? இதற்கு விதிவழிச்சொல்ல..வேண்டுமென்ன வீஷ்டுமர் சொல்லத்தொடங்கினூர்.

## 58. ஒருவருக்கு சுகமுள்ளபோது சிநேகமும், சுகம் நீங்கினபோது விரோதமும், கூடாதென் கிறதற்கு திருஷ்டாந்தம்.

அப்பா! காசிதேசத்தில் வில்லுங்கணையுங் கைக்கொண்டு திரிகின்ற கானவனொருவன் பட்சிமுதலிய மிருகங்களைக்கொல்லுந் தொழிலிற் சற்றேனுங் கூசாதவன், பட்சிகளின்பேரில் பாணங்கள் தொடுக்கும்போ தெல்லாம் அந்தபாணங்கள் ஒருமரத்தின் மேற்போய்ப் படவும் அந்தபாணங்களில் விஷந்தோய்ந் திருப்பதனாலே அப்பாணம்பட்ட அம்மரத்தினது, பிஞ்சு, காய், கனி, இலை, பூ முதலியவெல்லாம் உதிர்ந்துபோய் மொட்டை மரமாய் வெட்டவெளியாயிற்று. அம்மரத்தில்வாசம் பண்ணிக்கொண்டு நெடுநாளாக இருந்த ஒரு கிளியானது தழைந்தமரம் உலர்ந்துபோனதைக்கண்டு சஞ்சலங்கொண்டு இம்மரத்தின் பழத்தைத் தின்று காலங்கருப்பு தெரியாமல் பிழைத்திருந்தோமே! இப்போதிந்தமரம் பட்டுப்போனது போலாயிற்றே, இது தழைத் திருக்கும்போது நாம் செழித்திருந்தோமே, இப்போதிளைத்த காலத்தில் இதைவிட்டுப் போய் விடுகிறது தருமமல்லவேயென்று, அம்மரத்திலேயே இருந்து மழைக்கு நனைந்து வெய்யலுக்குக் காய்ந்து மேனிமெலிந்து குளிரெடுத்து காற்று, இடி, மின்னல், இவைகளால் பாடுபட்டு கருத்தழியாமல், தைரியம்விடாமல், கவலைப்படாமல், சலனமுறாமல், நன்றிகுன்றாமல், பழமைபாராட்டி அறிவையும், பலத்தையும், அனுகூலமாக்கி அவ்விருட்சத்தைவிட்டுப் போகாமலிருந்தது இப்படி இருக்கிறகாலத்தில், மேகவாகனனுகிய தேவேந்திரன் இந்த விந்தையையறிந்து ஒரு கிழப்பிராமணனைப்போ லுருவெடுத்து அந்தவிருட்சத்தினிடத்திற்குவந்து விஷக்கணைகள் பட்டு வெந்துபோயிருக்கிற மரக்கிளையிலிருக்கும் ஸ்திரக்கிளியைக் கண்டு ஓ! அஞ்சுகமே! உன்னுடல்

இத்தனைவருத்த முறத்தக்கதாக இவ்விடத்திற்காய்ந்து தீய்ந்து மாய்ந்துபோன மரத்திலிருப்பானேன். வேறே தழைத்துப்பழுத்திருக்கிற மரங்களைச்சார்ந்து சௌக்கியம்பெறக் கூடாதோ? நீ ஏனிப்படி வருத்தப்படவேணும் (ஒருவீடில்லார்க்கு உலகம் வீடென்பதுபோல்) ஈஸ்வரனுலேற்படுத்தியகாடு அனேகமுண்டு. அவைகளில் வாசம்பண்ணிக் காலம்போக்கலாமே? ஐயோ! வீண்காலம் போக்கிருயே என்று வேதியன்கேட்க, கிளியானது ஓ, பிராமணரே உமக்கு நமஸ்காரம், நானிந்த மரத்தின்பேரில் நெடுநாள் என் சொந்தமரம் போலிருந்து பிராதக்காலம், மத்தியானம், சாயுங்காலம், இம்மூன்று காலங்களிலேயும் பசிநோய் தாகந்தோன்ருமற்படிக்கு இம்மரத்தின் பழங்களைச் சாப்பிட்டுக்கொண்டு பக்குவமாய் வாழ்வு பூண்டேன். இப்போது இந்த மரத்திற்கு இடையூறு வந்துவிட்டதென்று மதிகெட்ட மாந்தரைப்போல் செய்நன்றி குன்றி சிந்தை மறந்து, அயல்விருட்சத்தில் அணுகமாட்டேன். இதுவே பேரறிவாளருடைய தன்மை, உலகத்தில் ஒருவன் சுகமுஞ் செல்வமும் பெற்றிருக்கும்போது அவனுடன்கூடி சுகத்தை யனுபவித்து அவனுக்குக் கெடுதியும், வறுமையுங் கிட்டியநாளில், கடன்காரர் முதலிய பேர்களிடத்தில் அவனைக் காட்டிக்கொடுத்துவிட்டு அப்பாற்போகின்ற கயவர், கசடர், கல்லாநன்றி இல்லாதவரைப்போல் நானு நீங்கிப்போவது, ஞாயமோ தருமமோ? நாதனே! சுகத்துக் கெப்படி பகுத்து சுகித்தோமோ அப்படியே தீமைக்கும் உடன்பட்டிருக்க வேண்டும். அப்படி இராமற் போவாராகில் அவருக்குப் பழியும்பாவமும், பங்கமும் வரும். அதுவுமல்லாமல் இவன் கொடியநரகமே குளிக்கவேண்டிவரும். இந்தத் தருமசூட்சந் தெரிந்திருக்கப்பட்ட நான் வேருெரு விருட்சத்திற்குப் போகலாமாவென்று பேசிய போது, பிராமணனுகிய தேவேந்திரன் இந்த அஞ்சுகத்தைப் பார்த்து சொல்லுகிறுன்; யாவரும் விரும்பும்படியாகிய இந்த ஜகத்தில் தேகவருத்தம் பாராமலும், பசியைப் பாராட்டாமலும், நித்திரை இல்லாமலும், பழிச்சொல்லுக்குப் பயப்படாமலும், அருமையோராமலும், இருந்தார்கள் கூறுகின்ற அவமதிப்புணராமலும், நிலைதப்பாமலும், இருப்பதனுற் பயனென்ன? என்றைக்கிருந்தாலும் இறந்துபோகிற தேகம். இருக்கிறவரைக்கும் உண்ணவுறங்கவென்பதை யோர்ந்து அனுபவியாமல் வருந்துவது என்ன பிரயோசனமென்று கிழப்பிராமணன் கேட்கவும், கிளியானது ஓ! ஐயரே! நீர் வேத

வேதியர். சகல விதிமுறையுந் தெரிந்தவர் தருமசொரூபி. உன்னைவிட சத்தியகுணி வேறில்லை. நீரே இப்படி சொல்லுவீராகில் நீச்சத்துரோகிகளாகிய நன்றிமறந்தவருக்குக் கொழுக்கொம்பு போலாம் தேகமோ அழிந்துப்போகிறது செல்வமோ இந்த மரம் பட்டது போல் போய்விடும் அல்லது யிருந்தபோதிலும் தன்னுடன் வரப்போகிறதில்லை அதை யறிந்து நடப்பதே தருமமென்று கிளிசொல்ல அம்மொழிகேட்ட தேவேந்திரன் ஆநந்தமடைந்து ஐயோ, அற்பமாகிய பட்சிக்கு இவ்வளவு பேரறிவு பிறந்தது அருமையென்று அகமகிழ்ந்து தன்னுடைய ரூபத்துடன் பிரசன்னமாய், ஓ அஞ்சுகமே! நீ சுகமாயிரு. நான் தேவராஜன், உன்னுடைய நிலையுணர்வதற்காக வந்தேன்; நீ மெத்தவும் நன்னெறிபற்றி இருக்கின்றாய். அதனால் நான் கிருபைகூர்ந்தேன். உனக்கு வேண்டியதைக் கேட்பாயாகில் தடை இல்லாமல் தருகிறேனென்றான். அதைக் கிளி கேட்டு எனக்கு வரங்கொடுக்க உமக்கிஷ்ட மிருக்குமாகில், இப்போது நானிருக்கிற மரம் எப்போதும் போலவே இடையூறில்லாமலிருக்கும்படியாக அனுக்கிரகம் பண்ணுமையா வென்று கேட்டது. இந்திரன் அப்படியே அடிக்கிற காற்றிற்கும், பெய்கிற மழைக்கும் அம்மரம் பயமற்றிருக்கும்படியாய்க் கிருபைபுரிந்தருளினார். உடனே அந்த விருட்சம் முன்போற்றழைத்து கொழுந்தோடிப் படர்ந்து நெருக்கமாயடர்ந்து வானம்வரையிற் றொடர்ந்து பூத்து, காய்த்து, பழுத்து, சிரக்கம்பஞ் செய்திருந்தது. அப்பா! தருமபூபதியே! அமுதபூபனாகிய ஆகண்டலனே? இந்தக் கிளியினிடத்திலிருந்த நன்றிகுறையாத் தருமத்திற்காக முன்னின்று அதனது மனதைச் சோதித்து திறமகலாத திடத்தைக் கண்டு சந்தோஷங்கொண்டு அந்தக்கிளி கேட்ட வரத்தைக் கொடுத்துப் போனார். ஆகையால் நல்லவர்களாகிய உத்தமர்கள் சுகதுக்கத்துக்கு உடன்பட்டு நேசமாயிருப்பார்கள். மத்திமர்கள் நீர்நிறைந்த குளத்தில் பறவைதெரிந்து, இருந்து நீர் வற்றினாற் பறந்துபோம் பான்மைபோல் நீங்கிப்போவார்களென்று நன்றியறிந்த வீஷ்மர் நவின்றருளினார். பண்டிதனாகிய பாண்டுபுத்திரன் ஐயா, உலகிலுள்ள பொருள்களிலெல்லாம் அறிவே பொருளென்று பேசுகிறார்கள் அந்த அறிவினால் அறியவேண்டிய அரும்பொருளென்ன? திரிகாலமுந்தெரிந்த திவ்வியஞானியாகிய தேவரீர் தெரிவிக்கவேண்டுமென்று வணங்கி கேழ்க்க வீஷ்மர் சொல்லத் தொடங்கினார்.

## 59. அறிவே பொருளென்ற நிச்சயங்கூறல்.

கேளும் தருமநந்தனா! நீலமேக சாமளவர்ணனாகிய நெடியோன் ஸ்ரீமந்நாராயணன் கோவிந்த கோபால கேசவ வாசுதேவ கோவர்த்தனகிரிதாரனாகிய இந்தக் கிருஷ்ணமூர்த்தியின் பாதபத்மங்களைப்பற்றிப் பக்தியாய்க் காண்பதே பேரறிவாகும், இந்தப் பரவாசுதேவனது திருவடிகள் பஞ்சபூதமாகியும் பஞ்சகோசங்களாயும், ஞானேந்திரியங்களாயும், கர்மேந்திரியங்களாயும், பிராணமயமாயும், மனோமயமாயும், விஞ்ஞானமயமாயும், ஆனந்தமயமாயும், அன்னியமாயும், உன்னியமாயும், அன்னியோன்யமாயும், அறிவாயும் அவ்வறிவுக்கறிவாய், எங்கும் எல்லா ஜீவராசிகளிலும் நிறைந்து அவரவர்வினைசரியாய் தனுகரணபுரநடத்துகின்ற கர்த்தாவாகிய சாக்ஷியே, தானாகவிளங்கிய பொருளாகியும் ஓமயாகத்திற்குமையாகியும் சத்தியமும் நித்தியமும் ஞானஞ்ஞான விஞ்ஞானபதமாகியும் எல்லாவற்றிற்குமேலான மோட்சசாம்பிராஜ்ஜியத்தை விளக்குவதனால், இனி வேறு பொருளுண்டென்று விளம்பலாமோ? பசும்பொன்னாரம்பூண்ட பாக்கியனே! பாவவினாசனாகிய பரமபதநாதனும் கைலாசவாசனும் சத்தியலோகவாசியும வைகுண்டநாதனும் மயில்வாகனனும் இன்னும் வேதங்களி லியம்பியபலபேத தேவதைகளும் சுருதிச் சொரூபமும் தோற்றமாற்றமும் இந்தத் துவாரகா புரிவாசனென்று உணரத்தக்கதே அறிவிலுயர்ந்த அறிவென்று வீஷ்டுமர் சொல்ல, ரிஷீஸ்வரர் முதலாகிய முனிவர்களுங் கேட்டு புன்சிரிப்புக்கொண்டு எதிரிலிருக்கின்ற முகில்மேனியானைப் பார்த்து இவர் சிலநாளைக்குமுன்னே தேவகி தேவியார் வயிற்றிற் பிறந்தவர், யாதவர்குல ராஜ திலகனானவர் நம்மிலொருவராய் நலம்பொலத்திற்கு உடன்பட்டிருப்பவரை நான்குவேத முதல்வரென்றும் திருநாரணனென்றும் கொண்டாடுவதென்ன சொல்லுமென்று வினவ, வீஷ்டுமர் விளம்புகின்றார். ஓரிஷிகளே, தீக்கடைக்கோலிலிருந்து பிறந்த நெருப்பானது கொஞ்சமேனுங் குறையாமல் தன்னுடைய பலத்தையும் குணத்தையும் பாரினில் விரித்துத் தகிக்கும் பான்மைபோல் சந்திரகுலத்தோன்றலாகிய தருமராஜனது தபோபலத்தினால் காருண்யத்திற்கு முதன்மையாகிய கடவுள் திருவவதாரம்பண்ணி யாண்டவர்சகாயனென்றும் பார்த்தசாரதி யென்றும் பெயர்தாங்கி நமது ராஜகுலத்தி லொருவராய் வாசம்பண்ணி

சுபாசுபங்களுக்கு உடன்பட்டு பக்த பராதீனனு யிருக்கின்ருர். இவ ருடைய அனந்த கலியாணகுண லீலாவிநோதங்கள் அதிசயங்கள் திருக்கூத்துகள் ஆனந்தநடனங்கள் ஆருக்காகிலுந் தெரியுமோ? வேதாகமங்களினுலும் அறியத்தக்கதோ வென்றும் ஐம்பொறிச் சேட்டையு மடைக்கி அகோரதபஞ்செய்து அறியத்தக்க பொரு ளாயும் தத்துவங்களையும் நவநவமாக பிரித்து தன்னையறிந்துணர்ந் தறிவுக்கறிவாய் நிறைந்து ஆனந்தப்பொருளாயும், அறிந்த அறிவே பொருளாய்நின்ற அற்புதவிலாச லீலாவிபூதியைத் தோத்திரம்பண் ணி ஆனந்தப்பரவசராய் அகங்குழைந்து அன்புபாராட்டி துதிக் கும் வேளையில் அந்த வீஷ்டுமருடைய பக்திரசத்தைப் பக்கத்திலி ருந்து பார்த்திருந்த லோகவிராட்கண்யராகிய கிருஷ்ணபகவான் புன் சிரிப்புடனிருக்கவும், வேதவியாசர்முதலிய பாண்டவர்கள் ரிஷிகள் முனிவர்கள் தவசிகளியாவரும் பேரானந்தத்திற் புரண்டு புளகாங் கிதம் போர்த்துமெய்மறந்து நான்குவேதத்தின் முடிவானபரம கரு ணுநிதியே கேசவநாராயண வாசுதேவ அப்பிரமேய அரிமுகுந்த மாதவ மதுசூதன ஹரிஹரியென்று வாழ்த்திப் போற்றினுர்கள். அப்பால் தருமராஜன் பாட்டனைப் பணிந்து பதுமமுகத்தைப் பார் த்து பற்பல இரகசியங்களும் விற்பனவிவேகங்களும் தேவரீரா லறி ந்து கிருதார்த்தனுயினேனென்று பணிந்து ஐயா! இப்பவும் சற்பாத் திரமான பேருக்கும் சகலவேத சம்பன்னனுகிய பிரமக்ஞான பிரா மணனுக்கும் மற்றபிராணிகளுக்கும் யாதொருவஸ்து தருகிறேனெ ன்று சந்தோஷமுண்டாகச் சொல்லி இன்றைக்கு நாளைக்கென்று இதம்படக்கூறி அப்பால் இல்லையென்று சொன்னவனும் ஒன்றுங் கொடாமற்போனவனும் இவர்களென்ன பேறடைவார்கள் சொல் லவேண்டுமென்று வேண்ட, வீஷ்டுமர் திருவாய் மலர்ந்தருளு கின்ருர்.

## 60. வாக்குத்தானத்தின் மகிமை கூறல்.

முற்காலத்தில் ஒரு குள்ளநரியுடன் வெள்ளைக் குரங்கானது கூடி சிநேகம் பண்ணிக்கொண் டிருந்தது. ஒருநாள் நரி, மனிதர் மாமிசம் தோல் நரம்பு எலும்புகளைக் கடித்துத் தின்னும்போது, குரங்குபார்த்து ஓ நரியே! நீ பூர்வஜன்மத்தில் என்னபாவம் பண் ணினுய் நாயுந் தின்னாத நரவுடலைப் பிடுங்கித் தின்னுகிறையேஎன

அதற்கு நரியானது ஐயா குரங்கே நான் முன்பிறப்பில் ஒரு பிரா
மணனுக்குச் சிறிது திரவியங் கொடுக்கிறேனென்று ஆசைவார்த்
தை சொல்லி நாளைநாளை யென்றுசொல்லி என்னுயிர் நமனுடைய
நாளாகி நான் மோசம்போனேன். அந்தப் பாவத்தினால் இந்த ஜன
னமெடுத்துப் பூர்வக்கியானத்துடன் சொல்லுகிறேன் என்றது.
அதைக்குரங்குகேட்டு அப்படியா உன் பூர்வோத்திரமென்று விசன
ப்பட்டு போய்விட்டது. தருமராஜனே பூமியில் யாவனொருவன்
பூர்வ புண்ணியவசத்தால் பொருளுடைத்தாயிருப்பானாகில் அவனு
க்கு இடம் பொருள் ஏவல் முதலாகிய துணையுமுண்டாகுமாதலால்
அவர்கள் சாஸ்திரங்களை அறிந்த பண்டிதர்களையடுத்து அவர்களு
க்கு உபசாரத்துடன் அவர்களிடம் கல்விகேள்வியால் தருமமுதலா
கிய சத்திய் நீதிநெறி முறைபறிந்து தானதருமஞ்செய்து முயன்று
பிராமணன் முதலிய ஏழைகளுக்கு அப்போதைக்கப்போதே கொ
டுத்துவிடவேணும். அப்படிக்கில்லாமல் கொடுக்கிறேனென்று பே
ராசைகாட்டி பிற்பாடு கொடுக்காமலும் இன்றைக்கு நாளைக்கென்
றும் இழுத்தலைக் கழிப்பானாகில் அவனுக்கே பிணந்தின்னு நரியா
கிய பிறப்பு கிடைக்குமென்று நவின்றார். அப்போது தருமராஜன்
புத்தியிற் றெளிந்து பத்தியாய்ப் பணிந்து சுவாமி நான்கு வருணா
சிரமத்தின் தாழ்ந்த குலத்தன் வேதமந்திரங்களை பிரணவ சகிதமாய்
ஜபித்தால் அவனுக்கு நற்கதியும், உபதேசித்த குருவிற்கு துற்கதி
யும் உண்டாகும் தருமத்தைச் சொல்லவேண்டுமென்றுகேட்க அத
ற்கு வீஷ்மர் ஒரு திருஷ்டாந்தம் சொல்லத்தொடங்கினார்.

## 61. சூத்திரன் பிரணவ மந்திரத்தை ஜபித்ததனால் இராஜனாக வந்த வரலாறு.

கேளுந் தருமபாலனே! இமோத்கிரிச் சாரலில் எண்ணிறந்த
பிராமணர்கள் மிகவும் பொறுமையுடனே தபசு பண்ணிக்கொண்
டிருந்தார்கள். அவர்களைப்பார்த்து நான்காம் வருணத்தினனாகிய
ஒரு சூத்திரன் அந்தப் பிராமணரிடத்திற்குப் போய்ப் பணிந்து
அவர்களுக்கெல்லாம் ஆசாரியனாயிருக்கின்ற பெரியவரைக் கண்டு
செந்தாமரைக் கமலம்போன்ற திருவடியில் வீழ்ந்து வாய் புதைத்து
கைகட்டி மெய்யொடுக்கி ஐயா அடியேனுடைய பிறவி வேரறும்படி
யாக அனுக்கிரகித்து கடைத்தேறும் வழியைக் காட்டும், தவம்புரியு

மார்க்கத்தைத் கூட்டிங் தங்களைப் போலாவதற்கு வேதசாரத்தை
யூட்டும். சுவாமி சரணம், சரணம், சதுராசரணம் தவமே சரணமெ
ன்று போற்றுத் தாழ்ந்தான். அந்தப் பெரியவர் ஆசிர்வதித்து அப்
பா உனக்குத தவம் எளிதில் வாராது. இங்ஙனந் தவம்புரிவோர்க்கு
வழிபாடுபட்டுக்கொண்டு மனத்தூய்மையா யிருப்பாயாகில் அப்பு
றம் பார்த்துக்கொள்ளலாமென்று அருள்புரிந்தார். அன்றுமுதல்
பொறிபுலன்வென்ற பெரியோர்களுடைய உத்தரவின்படிக்கு பழு
தறவழுவற்ற பணிவிடை பண்ணிக்கொண்டு அந்த இடத்தைவிட்டு
மற்றோரிடத்தி லிருந்து மகாபத்தியுடையவனாய் தேவதைகள் திரு
ப்தி யடையும்படியாய் விரதங்கள் செபங்கள் நன்னெறிகள் இவைக
ளின் தவறாமல் தன்ஜாதிமுறைமை நீதி ஒருமைமுதலிய காரியங்
களைத் தள்ளி மேலாகிய விரதசீலனாய் தன் குருஸ்வாமியை: மறவா
மல் பிதுர்த்தேவதைகள் ஆசைப்படும்படியாகப் பூசைவைத்து நித்
திய கடன்முறை கழித்து கருத்துடையவனாய் கோபத்தை யறுத்து
ஆசையைவெறுத்து கிருபை காருண்ய முள்ளவனாய், திரிலோக
மும் கொண்டாடும்படிக்கு சுத்தசீலசாந்த உத்தமகுணமா யிருக்கிற
காலையில், இவனை பெரியோர்களுக்கு ஊழியம் பண்ணிக்கொண்டிரு
வென்று போதித்த பெரியாசிரியர் இவனது நன்னடைக்கைகளால்
நயந்து மிகவும் புகழ்ந்து அகமுங் குளிர்ந்து முகமு மலர்ந்து இவனி
டத்திற்கு வந்து அழைத்தார். வந்த குருவைக்கண்ட அந்தமனிதன்
வணங்கி திருவடிகளைவாழ்த்தி ஆண்டவனே! அருந்தவம் பூண்டவ
னே! நான் கடைத்தேறினே னென்று ஆசையுடன் சொல்லி ஆசா
னைப் பூசைசெய்து பெரிய ஆசனத்தி லெழுந்தருளச்செய்து, அண்
டையில் கைகட்டிக்கொண்டு நின்றான். அவனுடைய நிலையெல்லாம்
நன்றாய்ப் பரிசோதித்து ஆசார அனுஷ்டானங்களுக்குச் சந்தோஷி
த்து மகா மந்திர மர்மங்களெல்லாம் வழங்கி தாழ்வான காரிய தந்
திரங்களைத் தள்ளி நன்மார்க்கங்களெல்லாஞ் சொல்லி. பூரணபட்
சம் வைத்து இந்த முறைமைப் படிக்கு முயற்சியோடிருந்து தவம்
முற்றினால் நீ நற்கதி புகுவாயென்று அனுக்கிரகம் செய்து விட்டு
அகன்றார். அவ்வாறுரைத்த ஆசான்வாக்கியப் பிரகாரம் சூத்திரன்
சற்பாத்திரனாய் ஜெபதபங்கள் செய்து வெகுகாலமிருந்து பிரியாண
பருவ பக்குவஞ் சார்ந்து தபத்தின் பயனால் மறுபிறப்பு ஒரு மகா
ராஜாவின் புத்திரனாகப்பிறந்து, மிகுந்த கல்வி முதலிய திறத்திலும்
கடவுளை வணங்குங் கருத்திலும் பிரபலமா இருக்கின்ற பெருமை

ளை அவன் தந்தை யறிந்து சந்தோஷமடைந்து நல்ல முகூர்த்தத்தில் பட்டாபிஷேகங் கட்டி விட்டு வானப்பிரஸ்த் தாசிரமத்திற்குப் போனான். தந்தை நீங்கியவுடன் பிள்ளை நீதியாய் உலகாண்டு வருகையில், பூர்வசன்மத்தில் தனக்குத் தருமநெறி நீதி தவஞ் சொல்லி வைத்த சகலகலை வல்லவராகிய ஆசாரியன் இந்தராஜனுடைய பட்டணத்தில் அரண்மனைப் புரோகிதனுடைய பிள்ளையாய்ப்பிறந்து வளர்ந்து வந்தான். இப்படிக்கிருக்க ஒருநாள் அந்தப் புரோகிதப் பிள்ளை நால்வகைச் சேனையுள்ள இராஜனரண்மனைக்கு வரவும், அவரைக் காணவே அந்த இராஜனுக்குப் பூர்வக்ஞானம் வந்தபடியினால் சிம்மாசனம் விட்டுத் திடுமென்றெழுந்து கலகலவென்று நகைத்தான். புரோகிதப்பிள்ளை இராஜனையடுத்து கிட்டிவந்து வணக்கத்துடன் என்ன ஐயா! இராஜ பூச்சியசீலனே! என்னைக்கண்டவுடனே நகைத்த காரணமென்னமோ? என்பேரிற் குற்றங்குறைகளுண்டோ நான்செய்த அபராதம் யாதோ? சிரிப்புவந்தற்கு முகாந்திர மென்னமோ? அதை எனக்கு தயவுசெய்தருளுமென்று பயந்து கேட்க, இராஜன் புரோகிதனைப் பார்த்து ஐயா! நீங்கள் பூர்வம் இமோத்கிரிச்சாரவில் வெகுபிராமணருக்கெல்லாம் ஆசாரியரா யிருந்தவர்கள். நானொருசூத்திரன் அப்போது உம்மைச் சரணென்றடைந்தேன், என்பேரிற் கிருபைவைத்து மந்திரோபதேசம் செய்து என்னைத் தன்னியனாக்கினீர். தேவரீரருளினால் இப்பிறப்பில் இராஜனாகிவைத்ததென்று நடந்த விர்த்தாந்தங்களைச் சொன்னான். இந்த விர்த்தாந்தம் தெரிந்துக்கொண்ட புரோகிதச் சிறுவன் விசனமுற்று நாமிவருக்கு மந்திரோபதேசம் புண்ணியபாவத்தினாலே நம்முடைய தவமெல்லாமடிந்து நம்மையும் இந்தப் பிறப்பிற் கொண்டுவந்து விட்டது. நாமுபதேசித்த மந்திரத்தை இவரனுஷ்டித்த படியினாலே பூர்வக்ஞான புண்ணியகனமும் சார்வபூம சம்பிரமத்தனமும் பெற்றார். நம்முடைய பாவமிப்படியாச்சுதென்று நலிந்து, மெலிந்து, பெருமூச்சு விட்டார். அந்தப் புரோகிதனை இராஜன் வணங்கி மிகுந்த பாற்பசுக்களும் தகுந்த திரவியங்களும் பொன்மலைபோல் குவித்து சுவாமி, தாழ்ந்த குலத்தனுக் குபதேசித்த தன்மையால் தமக்கு நேரிட்ட பாவங்களை எல்லாம் இப்போதே போக்கடித்துக் கொள்ளுமென்று இராஜன்சொல்ல (காஞ்சனம் கர்மவினாசனம்) செய்யுமாகையால் இந்தாரும் இஷ்டப்படி தானம்பண்ணி நீர்வாரும் இறைவனேயென்று பிராமணன்கேட்க, எத்தனையோகோடி பொன்னும் முத்தும், பவளமும் விஸ்தார வஸ்திரங்களுங் கொடுத்து அனுப்பிவிட்டார்.

அப்பால் அந்தப்புரோகிதர் ஓரிடத்திற் போயிருந்து தருமங்களெல்லாம் புரிந்து வேதவிதியின் பிரகாரம் கருமங்களும்பிரிந்து செய்யும் யாகாதிகிர்த்தியங்களு நடத்தி தேவதார்ச்சனை பிதுர்க்கருமம் அதிதிபூசை ஆசாரமுதலியதும் அனுஷ்டித்து பூமி பிரதக்ஷணம்பண்ணி அநேக புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கி, ஐம்புலன்களும் புறம்போகாதடக்கி ஆறுபகையுமறுத்து பூர்வஜென்மப் புண்ணியத்தால் யோகத்தினின்று பூரணதேஜசையடைந்து மறுபடியும் எப்போதும் போலவே ரிஷிகுலத்தி லவதரித்து முதல்வனுனார். இராஜனும் நான் முறை செங்கோல் பிறைதவறுமல் மனுவிக்கியான மறவாமல் அரசுபுரிந்து கீர்த்தியடைந்து மேலானகதியை விரும்பிப்புகுந்தான். கேளுந் தருமராஜனே, நான் ரிஷிதரும சந்தேகங்களை உனக்கு விசேஷித்துச் சொல்லவேண்டிய நிமித்தியமில்லை, உன்விவேகத்தால் நீயறிந்துக் கொள்ளலாம் குற்றமற்ற வெற்றியைப் பெற்றவனே குறைவற்ற கல்வியைக்கற்றவனே, இழிந்த குலமானுலும் நற்குண நற்செய்கை மந்திரோபதேசத்துடனே இருந்து வழிபட்டால் மேற்பட்டகதியிற் கொண்டுபோய்ச் சேர்க்கும். தப்பினுல் அவனுக்குபதேசித்தவனை இடர்ப்படுத்தி தாழ்ந்தகதியிற் றள்ளிவிடும் ஆனதால் ஒருவருக்குபதேசம் பண்ணுவதற்கு முன்னமே அவனுடைய பருவத்தையும், செய்கையும் குலத்தின் தொகுப்பையும், குணத்தையும் நன்ருயறிந்து உபதேசிக்கவேண்டும். மற்றப்படிக்கு பொன்னுசையாலும், பேராசையாலும், தாட்சணியத்தாலும் போதிக்கக்கூடாது. தான்பெற்ற மந்திரத்தை ஒருவருக்கு முணர்த்தாமலிருக்கவேணும், மந்திரமென்பது எளிதல்ல; மந்திரம் தேவப்பிரம்ம சொரூபம். மந்திரமேமாதவம். மந்திரமே யாகம் மந்திரமே யோகம். மந்திரமே தர்மார்த்த காமமோட்சம். மந்திரமே தெய்வம். மந்திரமென்பது இரகசியம். மந்திரத்தினு லாவது மற்ருென்றினுலுமாகாது. மனத்தூய்மையுடைய மந்திரமே பெரியோர்கள் சிஷ்ய பருவ பக்குவ காலமறிந்து செப்புவார்கள், திங்கள்குலனே யென்று வீஷ்டுமர் சொல்ல தருமராஜன் கேட்டு அதனுலானந்தமடைந்து, கருணுநிதியே! இந்தச் சக்கிரதாரணுகிய ஸ்ரீ கிருஷ்ணனது வல்லமையைக் கேட்க மனமுவந்தேன். திருவாக்காலுரைத்தருள வேண்டுமென்று வணங்கிய தருமருக்கு ஆசீர்வதித்து மூலப்பிரகிர்தியின் முதலறிந்த முதல்வன் திரிகரண சுத்தியாய்ச் செப்பத்தொடங்கினுர்.

## 62. ஸ்ரீகிருஷ்ணருடைய மஹாத்மியம்.

கேளும் தருமபாலகா, அச்சுதனுக்கு மைத்துனனான அறன் காதலனே ஒருவராலும் பெருமையை யுரைத்தற்கருமையாகிய கெருடன், பூமியிற்பிறந்து, தாயாருடைய சாபந்தீர்க்கவேண்டி சத்துருவின் பிள்ளைகளாகிய சர்ப்பங்களை கொல்ல தேவாமிர்தங் கொண்டு வரும்படியாய் தெய்வலோகத்தைக் குறித்துப் போகிறபோது எதிர்த்துப்பகைத்த தேவர்களை எல்லாஞ் ஜயித்து தேவாமிர்தத்தை எடுத்துக்கொண்டு திரும்பிவருங்காலையில் ஞானோதய மூர்த்தியான கருடனுக்கெதிரிலே யானையின்பேரிலாரோகணித்து; ஆரோ ஒருவர்போல் மகாவிஷ்ணுவந்து வழிமறித்து நின்று நல்லவார்த்தை நவின்று நானாவிதவரங்களளித்து ஸ்ரீமன் நாராயணபகவான்போய்விட்டார் அப்பால், பெற்றவள் அனுபவிக்கிற ஆபத்தை தீர்த்தபிற்பாடு தந்தையான காசிபரிடத்தில்வந்து பிரதக்ஷண நமஸ்காரம்புரிந்து ஐயனே, நான்தேவாமிர்தத்திற்குப் போய்வரும்போது, மகாவிஷ்ணு குறுக்கேவந்து எனக்கு அநேகவரங்கொடுத்துப் போனாரென்று நடந்தசங்கதிகளை ஒளியாமல் நவின்றபோது, கருணைக்கடலாகிய காசிபர்கருத்துருகிக் கசிந்து கருடனைக்குறித்து அப்பா லோகாராட்டியன் தாயினுங் கிருபையுடைய தயாளன் சகலாத்மகோடிகளையும் ரட்சிக்கப்பட்டவன் பக்தபராதீனன் ஆதிமூலப்பொருளாகிய அவரேயுனக்கு காட்சிகொடுத்தாரானால், அநேகங்கோடிநாள் தவம்புரிந்தாலுங் கிடைத்தற்கருமையாகிய திருவடி; வேதங்களினாலு மறியக்கூடாத பாதம்கிடைத்தது உன்னுடைய தவமென்றுன்னி நாங்களியாவருங் கொண்டாடுகின்றோம், எத்தனையோ காலமெல்லாம் வருந்தித் தவமிழைத்த ஜீவன் முத்தர்கள் முதலிய அருந்தவமுடையவர்களும் பெறக்கூடாத பெரியபதம் பெற்றாய். இவ்வுலகமெல்லாம் அவருடைய ஆதீனம். பாலாழியிற்றுயிலும் பரந்தாமனாகிய ஸ்ரீமந்நாரயண மூர்த்தியை, கிருபைக்கடலை, அருள்மாரிபொழியு மேகத்தை, ஆபத்பந்துவை, பிரமனைத்தந்த திருநாபிக்கமலனை, சோதியாய்த்துலங்குந் துளபமணி மார்பனை, நீண்ட மேனி நெடுமாலை, வாசுதேவனை, கோவிந்தனை, அச்சுதனை, கேசவனை, வாசவனை, முராஹரியை, முகுந்தனை, மூலப்பொருளாகிய முதல்வனை, நீ தரிசித்ததே பாக்கியம், இப்பவும் அந்த மகானுபாவர் பதரிகாசிரமத்தி லிருப்பார். அவரைக் கண்டு பணி

விடைத் தொண்டுபண்ணிக்கொண்டு பாவரகிதனாயிருவென்று புத்
திரனுக்கு வேண்டிய புத்திமதிகளைப் போதித்து சுவாமியின் பிர
தாபங்களெல்லாஞ் சொல்லி யனுப்பினர். தந்தையுரைத்த மந்திர
மொழிப்படி சர்வக்ஞனும் பதரிகாசிரமத்திற்குச் சென்று ஸ்ரீ மந்
நாராயணமூர்த்தியைக்கண்டு ஆனந்தத்துடனே மயிர்க்கூச்செறிய
அனேகமாய்க் கண்ணீர்பொழிய ஆடிப்பாடிக் கோடிகோடியாக
அடிமேற் பணிந்து மனத்திலுணர்ந்து நாவுதளறத் தோத்தரித்து,
நிற்கின்ற கருடனை வைகுண்டவாசன் பார்த்து நகைமுகத்துடன்
கிருபை கூர்ந்து ஓ! பட்சிராஜனே, என்னைத் தேடிக்கொண்டு என்
மீது அன்புவைத்து வந்தமையால் என்னிடத்தில் எப்போதுமிருக்
கக் கடவதென்று அருள் புரிந்து பதரிகாசிரமம் விட்டெழுந்து
கருடனுக்கு முன்னாக நடந்தார். சுவாமி எழுந்தருளியபோது கரு
டனுங் கூடக்கடுகியோடினர். ஸ்ரீ மந்நாராயணக்கடவுள் கொத்தா
கிய கொன்றைமலரை முடித்துச் சத்தாகிய அம்பிகையை வாமபா
கத்திலமைத்து கங்கையையுந் திங்களையுந்தரித்து புலித்தோலும்
பொங்கரவமும் பொருந்திய சங்கரன் யோகத்திலிருக்கின்ற கைலை
மலையையும் சந்தனம் கமுகுமரங்கள் மலிந்த, நந்தவனத்தையுங்
கடந்து உத்தரதிசையை நாடிச்சென்றபோது அவ்விடத்தில் ஒரு
வராலு முணரக்கூடாத இருட்பூமிதோன்றவும், தவத்தைப்பெற்ற
கருடனுக்கு வழிதெரியாமல் மனத்துணிவு நீங்கிமதியருண்டு மய
ங்கினன் அந்தவேளையில் பரவாசுதேவனுடைய பக்தனான கருட
னுக்கு சூரியப்பிரகாசச் சோதியைப்போல் இருள்கெட ஒளியுண்
டாக்கினர், உடனே கருடன்கண்டு அக்ஞானத்திலழுந்தி எழுந்து
விக் ஞானசோதியில் மெய்மறந்தவர்போல், மகிழ்ந்து சர்வலோக
நாயகன் அந்த இருள்வனத்திலும் பூமியிலும் ஆகாயத்திலும் உலா
விக் கொண்டிருப்பதும் பலபுவனமும் சகலசராசரமும் அண்ட
ரண்ட பிரம்மாண்டமும் சிருஷ்டி திதி, சங்காரங்களும், முக்குண
மும் மும்மூர்த்தியும், பற்பல பேதாபேதமான சில்லறை தெய்வங்
களும் முப்பத்து முக்கோடி தேவதைகளும் நாற்பத் தெண்ணாயி
ரம் ரிஷிகளும், ஏகாதச ருத்திரரும், துவாதசாதித்தரும், அஷ்ட
வசுக்களும், திக்குப்பாலகரும், பஞ்சபூதமும்; சப்தசமுத்திரமும்,
பெரும்பாறைக் கடலும், சக்கிரவாளகிரியும், பரமபதம். கைலா
யம், சத்தியலோகம், மகமேரு முதலான குலாசலமும் மூன்று
கோடி யறுபதினாயிரம் புண்ணியதீர்த்தமும். நாவல், இறலி, குசை
கிரவுஞ்சம் புட்கரம் தேனனை கமுகு இவ்வேழுவிருட்சங்களும் பாரி

மாத்திர சுவேதமுதலான நான்குவனங்களும், நான்கு மடுவுகளும் அநேகங்கோடி பர்வதங்களும் தும்புருநாரதர் முதலாகிய சப்த ரிஷிகளும், மற்றரிஷிகளும், பிரிதிவு மண்டலத்திலுண்டான அற்புதங்க ளியாவற்றும் இவரல்லா தில்லை யென்று கண்டுகொண்டு அதிசயப்பட்டு தன்னுற்பார்க்கச் சக்தியுமில்லாமல் பிரமித்து இனி நாம் பார்த்து முடியாதென்று பகவானைச் சிந்தித்து, வந்தித்துத் தோத்தரித்து, சுவாமி தேவரீருடைய பரிபூரணலீலாவினோத விபூதியை நான்கண்டு களிக்கமாட்டுவேனோ; வேதாகமசாஸ்திரங்களும் அதை உணரமாட்டாதே நானறியாச் சிறியேன் பயப்படுவேன். இந்த மகா விலாச சொரூபத்தை மறையுமென்று நா நடுங்கிகண்களை மூடிக்கொண்டு க்ஷணநேரம் பொறுத்து கண்ணைவிழித்துப்பார்த்து கருணையங்கடலே யென்று கருதியபோது சாரங்கபாணியாய்த் தனித்திருப்பதைக் கண்டு, இதென்ன விந்தை ஆரிடத்திலிந்த அதிசயங்களைப் பார்த்தோம். (அவரே ஆலமரத்தையடக்கிய வித்துப்போலிருக்கக் கண்டோம்.) சர்வஜீவ தயாபரனென்று வணங்கிப்போற்றிய கருடனை மகாவிஷ்ணு பார்த்து இதெல்லாம் என்னுடைய மாயாவிலாசம். இதையறியத்தக்கவ பேராரென்றுரைத்து அனுக்கிரகஞ் செய்தருளினர். அப்படிப்பட்ட ஆண்டவன் எப்பேர்ப்பட்டவர்க்கு மெட்டாதவன். முத்திமுதற் பொருளென்று கற்றுணர்ந்த வீஷ்டுமர் சொன்னர். அதைக்கேட்ட தருமராஜன் புகழ்ந்து ஐயா நீண்ட அளகத்தையுடைய மாதர்களியாவரும் பாபரூபமென்று பகருகின்றார்கள், என்னிதயத்திலும் அப்படியே இருக்கின்றது. அதனுடைய விவரத்தை அடியேனுக்கு அனுக்கிரகம் பண்ணுமென்று கேட்க, வீஷ்டுமர் சொல்லத் தொடங்குகின்றார்.

## 63. ஸ்திரீகள் பாபஜென்மமா என்ற பிரசினைக்கு உத்தரம்.

கேளும் என்னருமையான தருமனே! மகதியாழ் வல்லவராகிய நாரதர் பூமிசஞ்சாரம் பண்ணி வரும்போது அவருக்கெதிரில் பெருமை பொருந்திய ரூபலட்சணமமைந்த ஒருபெண்கள் சிகாமணி செந்தாமரைமீது சிந்தாமணியைப்போல் வந்தாள். அவளது சௌந்தரியமானது இரதியோ தவவிரதியோ என்னும்படிக்கிருந்து. அவளை நாரதர் கண்டு அதிமோகங்கொண்டு ஆபரண வலங்

கார சிங்காரமா யிருக்கப்பட்ட பெண்ணைப் பார்த்து பாபசென்ம் மென்று படித்த பெரியோர்கள் விதித்திருக்கின்றார்கள். அதென் னத்தினாலென்ன, அந்த அப்ஸர ஸ்திரீயானவள், ஓ பிரம்மபுத்திர ரே நீர் கேட்டகேள்விக் கொப்பில்லை யாதொருபிசகில்லை உண்மை தான். உன் தந்தையான பிரமன் சகல் பாவங்களையுந் திரட்டிப் பெண்ணுருவாக்கினார், அந்த மகா பாவிகளுடைய சரித்திரத்தைக் கேட்க தேவரீர் செவிக்கு விருப்பமா யிருக்கின்றதோ! ஆனால் நானறிந்தமட்டுஞ் சொல்லுகிறேன் நீர் கவனமாய்க் கேளும். ஒரு வர் ஒரு காரியத்தைச் சொல்லும்போது வேறு சிந்தை கொள் ளாமல் விருப்பமாகக் கேட்டு திரும்பி யுத்தரஞ்சொல்பவன் உத்த மன். மற்றவன் செத்தவன். இதை நீர் அறிந்துகொள்ளும் ஐயா, இவ்வுலகத்தில் உமக்குத் தெரியாத விஷயங்களொன்றுமில்லை. அக்கியான கேவல பாவமே ஸ்திரீகள். அதெப்படி யென்னில். விக்ஞான மேலோங்கி எப்பேர்ப்பட்ட புருடரையும் மாயைவலை யில் வசப்படுத்திக்கொண்டு தாங்களே அவர்களுக்குப் பிராண சஞ்சீவி யென்றுஞ் சகலசுகமு மிவர்கள் தானென்றுந் தோன்றச் செய்து, எண்சாணுடம்பிலிருக்கும் புண்காணியை அவன் பார்க் கப்பார்க்க மயங்கி பிரமை கொண்டு முயங்கி கரும்பின் ருசியினுங் காமமதிகமென்று அதரோஷ்ட ரசமருந்தி அவள் காலடியேகதி யென்று, செபதப விரத நோன்பு தெய்வம் பிதுர்க்கரும முதலிய வெல்லாமறந்து, பந்து மித்திர சுற்றத்தாரையுந் துறந்து, இவளே தனது குலதெய்வமென்று சிறந்து உடல் நீரப்பணிந்து, அவள் ஆளடிமைபோல் வீழ்ந்து கிடக்கத்தக்கதாகச் செய்துக்கொள்வாள் சமுத்திரத்தையும் மழைத்துளியையும் வான் மீனையும் கருமண் ணுண்மையும் கணக்கிட்டு கண்டள்ளிக் கொள்ளலாம், பெண்களு டைய கருத்தின் அளவையும் அவர்கள் கொண்ட காமப்பெருக் கத்தையும் அளவிடப்படாது. அவர்கள். மோனமான ஞானியை யும் மோசம்போகச்செய்வார்கள். ஞானதீபத்திற்கொருபற்று, கோபத்துக்கொருகொத்து தீராத பாவத்துக்கொருவித்து, அவர் களை நம்பின ஆபத்தால் வரும் விபத்து, நரகத்திற்கொரு மந்திர மூலம், நகைமுகமோகமோ இந்திரஜாலம், நயமொழியோ செவிக் கேறிய ஆலம்தளிர்போன்ற உயிர் கிறிய சூலம், நரகக்குழியும் நவத்துவார விழியுஞ் சரியென்பதற்குச் சாட்சி. சீழ். இரத்தம், சீணம், புழு, வெப்புநீர் இவை தெக்கிக்கிடக் குங் குழி இதிலழுந் தியபேர்கள் கணக்கில்லை ஐயா நாரதரே! நெருப்பைத் தொட்

டாற் சுடும். இப்பேர்ப்பட்ட பெரும் பாவிகளை நினைத்தாற் சுடும். இத்தியாதி குரூரகுணமுடைய துரோகிகளைக் கூடினைகில் அந்தப் பாவம் இவனுக்கு ஏழேழுசென்மத்திற்கு நீங்காது. இப்படிப்பட்ட ஸ்திரிகளுடன் சேருவது மகா சௌக்கிய சுகமென்று எண்ணுவ தொன்றே ஒழிய கூத்தனுடைய நீயென்றெண்ணுவதேயல்லது சுக மென்பது கிடையாது. துக்கமென்பது இவனை விட்டகலாது. அதெப்படியென்றால், சுணங்கன் (பசையற்ற என்பைக்கடித்து தன் னுடைய உதிரத்தை சுகித்து பசியாறுவது போலாம்.) இந்த ஸ்திரி களிடத்து ஆசாபாசவிசுவாச நேசம் வைத்தாலும் முத்து முத்தா ய்ப் பேசிக் கொஞ்சினாலும் உனக்கு நான் முறியென்று கெஞ்சினா லும் நெஞ்சிலடக்கிய வஞ்சம் விலக்கார்கள். துரோகம், கபடு, தித் திரிப்பு, மோசம், கரவிடம், பொய், சண்டை, கூச்சல் இதுகளே மெய்யாயிருக்கிற பெண்போகத்திற்கு மிஞ்சிய போகம் எந்நாளு மில்லையென்று எவனொருவன் எண்ணி இருக்கின்றானோ அந்த நாள் முதலாக பாவத்திற் குடன்பட்டு துக்கங்களை யனுபவித்து, சங்கட த்தினால் வருந்தி நோயினால் நறுங்கி நொந்து நைந்து புகைந்து இருகி தலை நடுங்கிச் சத்துப்போம்போது ஸ்தூலதேகத்தை நீங்கி சூட்சம தேகமாகிய யாதனா தேகத்தில் ஆத்மாவை வருத்தி நரகத் திற் பொருத்தி எரித்து இம்சைப் படுத்துவார்கள். ஆகையால் பெ ண்களைப்பாபரூபமென்று பகருவதாம், மேலும், எந்நாளும் புருடர் களுக்கு ஸ்திரிகளால் துக்கமேயல்லது சுகமில்லை, சுகமென்கிற சிஞ் சித்போகம் சஞ்சிதபாவம், யாவனொருவனுக்கு அதிக துன்பமடை வதாய் தீவினை யுளதோ அவர்களைத்தான் பெண்ணாசைப் பேய்ப் பிடித்து பேய்போல், பித்தேறியசித்தம். மெத்தத்துடிப்பது. புண் ணியவான்கள் விஞ்ஞானப் பொருளைப்பற்றிப் பேசுவதல்லது காம த்தைக்குறித்துப் பேசார்கள். கயவர் கருமம்பெற்ற கண்களையுடை யவர் கண்ணாட்டி யென்று ஆசைமயக்கேறி மோச மையல் மீறி கண்ணோய், வெட்டை, கிரந்து, சூலை, கிரந்தி, மூலம், பவுத்திரம், அரையாப்பு, வெள்ளை, காங்கைமேலிட்டு அன்னங்கசந்து பசிமாறி அஜீரணப்பட்டு தேகம்வியர்த்து தாகமெடுத்து ஈளை இருமல் மிகுத் து பெருமைகுறைந்து பிணைதளைத்து மதிமயங்கி முடிவாகிற பரி யந்தம் மூக்கல் கக்கல் விக்கல் ஒக்களுடன் கூடியழ தலை எடுக்க வொட்டாமற் றரைமட்டமாக்கி உயிரொன்றும் பயிரைய றுக்கிற காம அரிவாளை நினைந்து அதற்குரியவர்களாகிய துரோகிகளை மறந்து,

தெய்வமே என்னை வதைக்காமற் கொண்டுபோய் விடுவென்று அக்
காலத்தில் கண்ணீர் பெருகி ஆலாலவிடமானாலும் வடவைக்கனலா
னாலும் வாசியே, அடிபாவிவேசியே நாளும் வருத்தி நலிக்குதே,
சீழுமிகுத்துவலிக்குதே திட்டென்று விழுந்துபொட்டென்று போ
காமல் சித்திரவதை செய்கிறதே, எத்தனைவிதமா இணங்கிக் கலந்தி
ருந்தாலும் இடைதிருந்த என்மனதுபோலவோ இப்படி இருந்தா
ளே, ஒன்றிருக்க ஒன்றைச் சொல்வதுபோல் வஞ்சித்தாளே, திரி
புவனங் களிலுள்ள தேவதைகளும் ஸ்திரீகள் மனதைத்தெரிந்துக்
கொள்ளமாட்டார்கள். ஆதலால் அவர்கள்மனம் வஞ்சனை குடிகொ
ண்டகப்பல், மாயையடைத்து வைத்திருக்கும் பேராசை கொண்ட
பெட்டி; பேதைமாந்தரைப் புதைக்கு மண்வெட்டி, இவைகளைப்
பாரம்பரியமாய்த் தெரிந்திருந்தும் விளக்கைப் பிடித்துக் கிணற்றில்
விழுவார்போல் மூடர்கள் நம்பி அவளெப்படி சொன்னாலும் அப்ப
டியே கேட்டு நடந்து மனோவாக்குக் காயமூன்றும் அவளுக்கு வ
மாக்கிப் படுகுழியிற்பட்ட யானைபோல் சிக்கிக்கொண்ட பேர்களி
யாரோ அவர்கள்தான் பிறவியென்கிற துக்க சமுத்திரத்தில் மூழ்
கிக் கிடக்கப்பட்ட பேர்கள். ஸ்திரீகளெல்லோரும் பாவிகள்தானோ
வென்றால், ஏகதேசத்தில் கடலிற்கல் மிதந்தாப்போல் கற்புடைய
பதிவிரதைகளாய் தன் புருஷனை தெய்வமென்று, மணவாளன்
சொல்லுக்கு மாறுபேசாத மாதர்கள் சிலருண்டா யிருக்கலாம், அப்
படிக்கில்லாவிட்டால் பெண்களென்கிற வாசனை யற்றுப்போம். ஒரு
தீக்கடைக் கோலினிடத்திற் செனித்த தீயானது அதிக சுவாலை
யாய் சோதியாய் மிகுந்தகிரணங்களுடனே வெப்பங்கொண்டு குளிர்
ந்து குழைந்து கிடக்கிற சேறுகிய ஈரத்தையும் உலரச்செய்வதெப்
படியோ அப்படிப்போல் உத்தமஸ்திரீகளாகிய பத்திகனிகளுடைய
தரிசனத்தினால் சகலபாவமும் தோஷமும் பொரிந்துபோய் விடுகி
றது அத்தன்மையுடைய (பெண்டீர் பெருஞ் சிறப்பு) ஆனதால்
அவர்களைக் குறித்து நினைக்க வேண்டுவதில்லை. இது அற்புதமே
அநேகங்கோடி ஆத்மாக்களில் சுகர், வாமதேவர் என்னப்பட்ட
சிறிதுபேர் மாத்திரம் எவ்வாறு ஞானவான் களாயிருந்து அவரைக்
கண்டு தரிசித்த பேர்களெல்லாம் ஞானேதயமாய் பிறவிக்கடலைக்
கடந்தார்களோ, அப்படிப்போல் அநேகங்கோடி பெண்களுக் குள்
ளே ஒவ்வொருத்தர் உத்தமிகளா யிருப்பதுண்டு. மற்றமாதர்க
ளியாவரும் பாவிகளே. 'பெண்களினாலே புருஷர்கெட்டுப் போவா
ர்களென்பது பொய்யல்ல. இதற்குத் திருஷ்டாந்தம் பூரணசந்திர